வெளியீடு 15-5-2006 Issued 15-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 17, 2006—தொகுதி 87—எண் 2**

**Tuesday the 17th January, 2006 —Volume 87—No. 2**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

'ative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

919
21.9.06

17–1–2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 7-41 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) | 42-171 |
| **2. அறிவிப்பு—** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 172 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—** | 172-262 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 173-198,206 |
| திரு. ஜெ. அன்பழகன் | 199-203, 205-207, 211,213-215, 219-222 |
| திரு. கோவை தங்கம் | 223-235 |
| திரு. கே. ஆறுமுகம் | 236,239,241, 242,261,262 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 263-267 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 4, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜனவரி 17, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு."

நன்மை தீமை எனும் இரண்டின் பாகுபாடுகளை ஆராய்ந்தறிந்து, இவ்வுலகத்தில் மிகுதியான அறத்தை மேற்கொள்ளும் சீரியோரின் சிறப்பே, உலகில் மிகச் சிறந்தது ஆகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 1, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

1—

### குளம் தூர்வாருதல்

***3989—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதியிலுள்ள கம்பனேரி–நாராயணப்பேரி குளத்தைத் தூர்வாரி கரையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2006 ஜனவரி 17

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விரு கண்மாய்களும் நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு நிதியின்கீழ் தூர்வாரி மேம்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒப்புடன் முகம லர்ந்து உபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே"

என்பது போல, எல்லாத் திருக்கோயில்களுக்கும் அன்னதானத் திட்டத்தைப் புன்முறுவலோடு வழங்கி, இன்றைக்கு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—இந்த 2006 பொங்கல் திருநாளைத் தொடர்ந்து மீண்டும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக அமர்வார் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களைச் சொல்ல எனக்கு வயதில்லை; அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் தங்களுக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குளத்திற்குத் தூர்வாருங்கள். (சிரிப்பு)

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எத்தனையோ அருவி மாதிரிக் கொட்டுவீர்கள் பேசி. எத்தனையோ நதிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன, வரலாற்றிலே, இந்தியாவிலே, உலக அளவிலே. ஆனால், உப நதிகள் எத்தனையோ ஓடுகின்றன. அந்த உப நதிகளில் நான் ஒன்றாகக் கருதி, இன்றைக்கு ஓடுகின்ற நதிகள் குறித்து ஒரே ஒரு கருத்தைக் கூறுகின்றேன். நாட்டிலே 59 நதிகள் ஓடுகின்றன. கங்கை, நர்மதை, மகாநந்தா, வோல்கா, நைல், அவ்வங்கா, துங்கபத்திரா, பொன்னையாறு, அமேசான், வெனீஸ், டர்வன்ட், ரோன், வைகை, யங்டி சி கியாங், ரைன், கோதாவரி, நைஜர், ஐராவதி, ரவி, கிருஷ்ணா,

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227001.
சென்னை-600 008



2006 ஜனவரி 17]

சீனம், ஜீலம், லேனா, ஆமுர், ஷானன், பெரியாறு, சட்லெஜ், பியாஸ், செயின்ட் லாரன்ஸ், பாக்மதி, டைகிரீஸ், சுவர்ணலேகா, கொலம்பியா, டீஸ்டா, கொய்னா, ஷரவதி, திரிபுரா நதிகள், மகாநதி, ஆப், மையூர், தாமிரபரணி, நைசார், மாவிலி கங்கை, பீமா, பிராஹ்மிணி, வைதரிணி, கொலரேடோ, மெக்கன்சி, சிந்து, மிசிசிபி-மிசௌரி, டார்லிங், தொவ்வா, மால்டௌ, கெடிலம், மலட்டாறு, காவிரி, யமுனை, சரஸ்வதி, பிரம்மபுத்திரா என 59 நதிகள் ஓடுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு மிகுந்த பாராட்டுக்கள். (குறுக்கீடு) எல்லா நதிகளையும் தமிழகத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** நன்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல உப நதிகள் எத்தனையோ இருக்கின்றன. அதிலே நான் ஒரு உப நதி என்பதைக் கூறிக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பனேரி குளம் 341.36 ஏக்கரும், நாராயணப்பேரி குளம் 144.56 ஏக்கரும் நிலப்பரப்பு பாசன வசதி கொண்டவையாகும். இவற்றை நம்பி விவசாயிகள் உள்ளனர். இந்தக் குளங்களைத் தூர்வாரி சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில், மேற்கண்ட இரண்டு குளங்களையும் தூர்வார நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள இரண்டு குளங்களும், கடையநல்லூர் தொகுதியிலுள்ள கம்பனேரி பெரிய குளம் மற்றும் நாராயணப்பேரி குளம் ஆகிய இரண்டும் கருப்பா நதியிலிருந்து நீர் பெறும் முறைப்படுத்தப்பட்ட system tank கண்மாய்கள் ஆகும். கம்பனேரி பெரிய குளத்தைத் தூர்வாரி மேம்பாடு செய்ய ரூபாய் 5 இலட்சமும், நாராயணப்பேரி குளத்தைத் தூர்வாருவதற்கு ரூபாய் 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் பராமரிப்புத் தலைப்பின்கீழ் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கருப்பா நதி அணை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், முறைப்படுத்தப்பட்ட பாசனக் கண்மாய்கள் மட்டும் 72 ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் 35 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நீர்ப்பாசனத்

திட்டத்தில் கண்மாய்கள் சீராகப் பராமரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மேலும், நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் பகுதி-2-ன்கீழ் 72 கண்மாய்கள் 20 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் ஒட்டுமொத்தப் பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

## மதுபானக் கடைகள்

***34513—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் புதிய உரிமம் முறைமூலம் கூடுதல் மதுபானக் கடைகள் அமைக்கப்பட்டு வருவாய் அதிகரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மதுபான மொத்த விற்பனையைத் தமிழ்நாடு வாணிபக் கழகமும், சில்லறை விற்பனையைத் தனியாரும் நடத்திக்கொண்டிருந்த நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் 29–11–2003 முதல் சில்லறை





விற்பனையையும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே நடத்த ஆணையிட்டார்கள். இப்புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் நடப்பாண்டில், அதாவது 2005–2006 நிதியாண்டில் டிசம்பர் 2005 வரை அரசுக்கு TASMAC மூலம் வருவாயாக 4,303 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இந்நிதியாண்டில், அதாவது மார்ச் 2006 முடிய 5,795 கோடி ரூபாய் அரசுக்கு TASMAC மூலம் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த 22 ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த மிக அதிகமான வருவாயாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு உரிமம் வழங்கி வருகின்ற வருவாயைவிட தற்போதைய நிலையில் அரசு இந்தக் கடைகளை நேரடியாக நிர்வகிக்கும்பொழுது அரசுக்கு வருவாய் அதிகரித்துள்ளது. இந்த மதுபானக் கடைகளின்மூலமாக அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் எவ்வாறு நிதி பெருகி இருக்கிறது என்பதையும், கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–2003 ஆம் ஆண்டில் 2,996 கோடி ரூபாயாக இருந்த வருவாய் 2003–2004–ல் 3,552 கோடி ரூபாயாகவும், 2004–2005–ல் 4,820 கோடி ரூபாயாகவும், 2005–2006–ல், நடப்பு நிதியாண்டில் TASMAC மூலம் 5,795 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து அரசினுடைய வருவாய்— மதுபான விற்பனையில் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகப்படியாக இருந்து 2,996 கோடி ரூபாயிலிருந்து நடப்பு நிதியாண்டில் TASMAC மூலம் 5,795 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். (குறுக்கீடு) திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வாணிபக் கழகத்தின்மூலமாக நடத்தப்படுகின்ற மதுபானக் கடைகளில் சில பேர் வேலை செய்கின்ற நேரத்தில் அவர்கள் பணி மாறுதல் செய்யப்பட்டிருப்பதாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் ஏறத்தாழ 6 மாத காலமாக அப்படி சில பேருக்கு அந்த உத்தரவு வழங்கி, பணியிடம் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருக்கின்றவர்களுக்கு, அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை, உடனடியாக பணிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று மட்டும் அந்த உத்தரவிலே போடப்பட்டிருக்கிறது. ஆனால், ஆறு மாதங்கள் ஆகியும் அவர்களுக்குப் பணி வழங்கப்படவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. அதை உடனடியாக அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குப் பணி வழங்குவதற்கு உறுதுணை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாக நலன் கருதி பணி மாறுதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நபர்கள் தவறு செய்யாமல் இருந்திருந்தால், அவர்கள் உடனடியாகப் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் சில்லறை விற்பனைக் கடைகள் எத்தனை உள்ளன என்பதையும், மதுபானக் கடைகளில் எந்தெந்த நிறுவனங்களின், எந்தெந்த கம்பெனிகளின் brand-கள் விற்கப்படுகின்றன என்பதனையும் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் ஒரு சில குறிப்பிட்ட கம்பெனிகளினுடைய brand-கள்தான் சில்லறை விற்பனைக் கடைகளில் விற்கப்படுகின்றன என்று அறிகிறேன். அது என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமாறு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வாணிபக் கழகம் நடத்துகின்ற மொத்த சில்லறை விற்பனைக் கடைகள் 6,747. அதில் மாநகராட்சி





எல்லைக்குள் இயங்கும் கடைகள் 937; நகராட்சி எல்லைக்குள் இயங்கும் கடைகள் 2,428; ஊராட்சி எல்லைக்குள் இயங்கும் கடைகள் 3,382; ஆக 6,747 கடைகள் மொத்த சில்லறை விற்பனைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, எந்த மதுபான உற்பத்தியாளருக்கும் சலுகைகள் இல்லை. அவர்களுடைய brand விற்கப்படுகின்ற அளவுகோலை வைத்துத்தான் அவர்களுக்கு ஆர்டர் கொடுக்கப்படுகிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிசய மரம் என்று ஒரு மரம் இருக்கிறது. அதுதான் பனை மரம். அதிலேயிருந்து கிடைக்கின்ற ஒவ்வொரு பொருளும், பனை மட்டை, ஓலை, அதிலேயிருந்து கிடைக்கக்கூடிய . . . *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுபானக் கடைகள்மூலமாக அதிகப்படியான இலாபத்தைப் பெறுகின்றபோது, சில பெரிய ஹோட்டல்களுக்கு BAR வைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டு, அதன்மூலமாக எவ்வளவு வருவாய் அரசுக்கு வருகின்றது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனி வினா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகள் அமைப்பதற்குரிய இடத்தைத் தேர்வு செய்வதற்கான முயற்சிகள் எடுப்பதைப் பற்றி ஒரு வரைமுறை அரசினிடத்திலே இருக்கிறது. அப்படி என்னுடைய தொகுதியிலே மேலவாசல் என்ற கிராமத்தில் பெண்கள், பேருந்து நிலையத்திற்கு வருவதற்குக்கூட அச்சப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதேபோலப் பல இடங்களில் இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே அப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்யாமல், மக்களுக்குப்

பாதிப்பு இல்லாத வகையிலே இடங்களைத் தேர்வு செய்து, அந்தக் கடைகளை நடத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில்லறை விற்பனைக் கடை தொடங்கப்படுவதற்கு முன்பாக, வரையறைக்குட்பட்டு, ஆட்சேபனை இல்லாத பகுதியில்தான் கடை ஆரம்பிக்கப்படுகிறது. இருப்பினும், கடை ஆரம்பித்த பிறகு ஏதாவது இம்மாதிரியான ஆட்சேபனைகள் வருகின்றபோது, உடனுக்குடன் அந்தக் கடைகள் அந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, வேறு பகுதிக்கு மாற்றிக் கொடுப்பதற்கு அரசு எந்நேரமும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கும், கோயில்களுக்கும் அருகில் மதுபானக் கடை இருக்கக் கூடாது என்ற தடை இருந்தும்கூட, பல இடங்களில், குறிப்பாக, கோவை நகரில் பள்ளிகளுக்கு அருகில் மதுபானக் கடைகள் இருப்பதை அரசு அறியுமா? அவற்றை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கூடங்களுக்கு அருகிலும், இந்து அறநிலையத் துறைக்குக் கட்டுப்பட்ட கோயில்களுக்கு அருகிலும் மதுபானக் கடைகள் வழங்க அனுமதி மறுக்கப்படுகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, எக்கடையாவது, கல்விக்கூடங்களுக்கு அருகிலோ அல்லது திருக்கோயில்களுக்கு அருகிலோ இருக்கிறது என்று அரசின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வருவார்களேயானால், உடனடியாக அந்தக் கடை மாற்று இடத்திற்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TASMAC கடைகளில் வேலை செய்கிற ஊழியர்களிடம் அதிகமான வேலை வாங்கப்படுகிறது என்றும், ஆனால் அதற்குத் தகுந்த அளவில் ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும்



அந்த ஊழியர்களிடையே ஒரு குமுறல் இருந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை மாற்றி, அவர்களுடைய வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைப்பதற்கோ, அல்லது 8 மணி நேரத்திற்கு அதிகமாக வேலை செய்வதற்குத் தகுந்த over time ஊதியம் கொடுப்பதற்கோ அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையில் சேர்க்கப்படுகின்ற பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில்தான் சேர்க்கப்படுகின்றார்கள். மேற்பார்வையாளர்களுக்கு மாதச் சம்பளமாக 3,000 ரூபாய் வழங்கப்படுகிறது. விற்பனையாளர்களுக்கு மாதச் சம்பளமாக 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மதுக்கூடத்தில் இருக்கின்ற உதவியாளர்களுக்கு 1,500 ரூபாய் வழங்கப்படுகின்றது. மேற்கொண்டு பணியாளர்கள் நலன்களுக்குப் பல்வேறு வகையான ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பணியாளர்களுக்கு, மாநகராட்சிப் பகுதியில் அந்தக் கடையில் விற்பனை செய்யப்படுகின்ற இலக்குக்கு மேல் உள்ள விற்பனைத் தொகைக்கு 1 சதவிகிதமும், பிற பகுதிகளில் 0.75 சதவிகிதமும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகின்றது. இதன்படி இந்த ஆண்டு, நடப்பாண்டு, ஊக்கத் தொகையாக மட்டும் 15.62 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதிகபட்சம் மாதம் ஒன்றுக்கு ஒரு பணியாளருக்கு 5,000 ரூபாய் என்று ஊக்கத் தொகையாக மட்டும் அவர்கள் பெற்று வருகின்றார்கள். போனஸ் மற்றும் கருணைத் தொகையாக 10 சதவிகிதம் என்ற அளவில் இந்த ஆண்டு 7.91 கோடி ரூபாய் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் ரூ.1.65 லட்சம் அவர்கள் குடும்பத்திற்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஈமக்கிரியைக்காக ரூ.5,000 வழங்கப்படுகிறது. பணியாளர்கள் அவர்தம் குடும்பத்துடன் அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை பெற, ஒரு நபருக்கு ரூ.600 வீதம் மருத்துவத் துறைக்கு TASMAC செலுத்துவதன்மூலம் நடப்பு ஆண்டில் மட்டும் 1.80 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. விபத்து மற்றும் ஊனம் பணியில் இருக்கும்போது ஏற்பட்டால், அதற்கான மருத்துவச் செலவுத் தொகை முழுவதும் ஈடு செய்யப்படுகிறது. இதய நோய் போன்ற நோய்களுக்கு சிறப்பு அறுவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் பணியாளர் செலவு

செய்யும் தொகையில் ரூ.1 இலட்சம் வரை TASMAC வழங்குகிறது. தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுத் தொகைக்காக TASMAC ஆண்டொன்றிற்கு, பணியாளர்களுக்கு ரூ. 11.85 கோடி ரூபாய் செலவு செய்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கூடுதல் மதுபானக் கடைகளைத் துவக்குவதனாலே அரசாங்கத்திற்குக் கூடுதல் வருவாய் கிடைப்பது என்பது உண்மையானது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. வேல் முருகன். (குறுக்கீடு) மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. வேல் முருகன்.

**திரு. ஜி.கே. மணி:** கூடுதல் தொகையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூடுதல் வருமானம்தான் அந்தக் கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** கூடுதலாகத் துவக்கப்பட்ட கடைகளை மூடுவதற்கு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். அதற்கு விளக்க உரை எல்லாம் இல்லாமல் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் கடைகள் துவக்கப்படுவதனாலே மக்களுக்குப் பாதிப்பு என்பதால், கூடுதலாகத் துவக்கப்பட்ட கடைகளை மூடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் துளி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.



அளவும் நியாயம் இல்லை. தனியார் சில்லறை விற்பனையை நடத்திக் கொண்டிருக்கின்றபோது தனியார்கள் தங்களுக்குள் ஒரு வாணிபக் கூட்டினை வைத்துக் கொண்டு, அதிக அளவில் யாரும் கடைகளை எடுக்காதபடி அவர்கள் தடை செய்துகொண்டிருந்தார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்து, அரசே தனியார் நடத்திக் கொண்டிருந்த கடைகளை, சில்லறை விற்பனைக் கடைகளை நடத்தும் என்று ஆணையிட்டதன் அடிப்படையில், கடந்த காலத்தில் தனியார்கள் நடத்திக் கொண்டிருந்தபொழுது தங்களுக்குள் வாணிபக் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு, அரசுக்கு வருகின்ற மிகப் பெரிய வருவாயை, கடந்த 22 ஆண்டு காலமாக அவர்கள் மிகப் பெரிய அளவில் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் என்பதுதான் உண்மை.

இன்றைக்கு நிலைமை, ஒன்று, அதிகப்படியான கடைகளை கிராமப்புறங்களில் நாம் ஆரம்பித்ததன் காரணமாக கள்ளச் சாராயம் முழுவதுமாக அந்தப் பகுதிகளில் தடை செய்யப்பட்டிருக்கின்றது. மேற்கொண்டு, மொத்த விற்பனை ஒரு மாதத்திற்கு, தனியார் சில்லறை விற்பனையை நடத்திக்கொண்டிருந்தபோது 11 இலட்சம் கேஸ் பெட்டிகள் விற்றுக்கொண்டிருந்த நிலை மாறி இன்றைக்கு சில்லறை விற்பனையை அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், கிட்டத்தட்ட 22 இலட்சம் கேஸ் பெட்டிகள் ஒரு மாதத்திற்கு விற்றுக்கொண்டிருக்கின்றன. ஜனத்தொகை ஒன்றும் தமிழ்நாட்டில் கூடி விடவில்லை. தனியார் நடத்தியபோது இருந்த ஜனத்தொகைதான் இப்போது அரசு நடத்துகின்றபோதும் இருக்கின்றது. இதிலிருந்து, இந்த இடைப்பட்ட நாட்களில் அரசுக்கு அதிகப்படியாக ஓர் ஆண்டுக்கு 1,400, 1,500 கோடி ரூபாய் அதிகப்படியாக வருகின்ற வருவாய் கடந்த 20 ஆண்டுகளில் வேறு வழிகளில் சென்று கொண்டிருந்தது. அதனை அரசு தடுத்து நிறுத்தி, தனியாரிடமிருந்த சில்லறை விற்பனைக் கடையை அரசு நடத்துவதன்மூலம் இலாபம் ஈட்டப்பட்டு, அந்தப் பகுதிகளில் கள்ளச் சாராயம் முழுவதுமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

3—

## தமிழ் மென்பொருள்

***31371—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் தேடு மென்பொருள் கண்டுபிடிக்க அரசு என்னென்ன நடவடிக்கையினை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் தேடு மென்பொருள் அண்ணா பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழக அறிவு தகவு ஆராய்ச்சி மையத்தின் (Anna University – Knowledge Data Centre) இணையதளத்தில் இடப்பட்டுள்ளது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினி இணையதளத்தில் தேடி, வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கு, ஆங்கிலத்தில் Yahoo, Google என்ற தேடு மென்பொருள் பெரும்பாலோரால் பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று, தமிழிலும் உலகத் தகவல்களை அறிந்துகொள்ள தமிழ் தேடு மென்பொருள் தமிழக அரசின் இணையதளத்தில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் இணைய மாநாட்டு i.e., T.I.–2003. வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டை சென்னையிலே நடத்தி, தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்கின்ற ஒரு கொள்கையோடு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னித் தமிழ், கணினித் தமிழிலும் உருவாகவேண்டும் என்கின்ற வகையில் தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியை ஏற்படுத்தி, அந்த நிதியின்கீழ் பல்வேறு மென்பொருட்களை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே மென்பொருட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை 2, 3 தலைப்புகளாக நாம் பிரிக்கும்போது, நிறைவேற்றப்பட்ட மென்பொருட்கள், நடந்தேறி வரும் மென்பொருட்கள் குறித்த திட்டங்கள், சான்று அளிக்கப்பட்ட தமிழ்





மென்பொருட்கள், சோதனையில் உள்ளவை என்கின்ற அந்தத் தலைப்புகளில் சொல்லும்போது, இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கணினியிலே தமிழ் மென்பொருளை உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்காக, இரண்டு நிமிடங்கள் ஆனாலும்கூட, அதைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

Windows–க்குரிய தமிழ் இடைமுகம்– i.e., Tamil Interface to MS–Windows, தமிழ் எழுத்துரு அறிவி–Tamil Optical Character Recognition, தமிழ் இணையத் தள உலாவி–அதாவது, Web Browser, இயந்திர உதவியுடன் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்–Machine–aided English to Tamil Translation. தமிழில் பேச்சு உருவாக்கம், Speech Synthesizer in Tamil, தமிழில் வின்டோஸ்–Localising Windows, Tamil Word Net to enhance machine translation—இயந்திர மொழிபெயர்ப்பை மேம்படுத்தும் தமிழ்ச் சொல்வலை, Tamil Linux, தனியாள் கணினி, அதாவது,Tamil Linux PC, இவையெல்லாம் நிறைவேற்றப்பட்ட மென்பொருட்கள்.

நடந்தேறி வரும் திட்டங்கள், அதாவது, மென்பொருள் குறித்து நடைபெற்று வருகின்ற மென்பொருள் குறித்த திட்டங்கள். Java based Tamil Text to Speech Synthesizer, ஜாவா அடிப்படையிலான தமிழ்ப் பேச்சுருவாக்கி; Tamil Database Management Package–தமிழ் தகவுதள மேலாண்மைப் பொறி, தமிழ்க் கையெழுத்து அறிந்துகொள்ளும் எழுத்துரு அறிவி மென்பொருள் பகுதி–I–i.e., Optical Character Recognition for handwritten Tamil Text, தமிழ்ப் பேச்சிலிருந்து தமிழ்ப் பண்கள் உருவாக்கம்–Speech to Text Synthesizer in Tamil, செல் பேசியில் தமிழ்ப் பயன்பாட்டிற்காக Linux–ல் தகவல் அமைத்தல்–Linux localisation in mobile phones, மின்னணு அகராதி, அதாவது, Development of Electronic Dictionary, வட்டார மொழிகளை கைச்சாதனங்களில் (hand–held devices) பயன்படுத்த வலிமை சேர்த்தல்–Value added services in regional languages in hand–held devices; சான்றளிக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள் என்று சொல்லும்போது சில தனியார் நிறுவனங்கள் அவர்கள் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற வகையிலே மென்பொருளை அவர்கள் உருவாக்குகின்றபட்சத்திலே, தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அது சிறந்த மென்பொருள் என்று சான்றளிக்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளது.

அந்த அடிப்படையிலே சான்றளிக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள், சுரபி, தமிழ் இடைமுகப்புத் தளம், சங்கப் பலகை,

[2006 ஜனவரி 17

தமிழ் விசைப் பலகை, Tamil Word 2001, Ankur–Tamil '99 சொல் செயலி, Ponvizhi, அதாவது, ஒளிவழித் தமிழ் எழுத்துரு அருவி, Indoword, தமிழ்ச் சொல் செயலி, Windik, தமிழ் அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், Shakthi Tamil அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், Ankur பன்மொழி அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், TVSS–E MSP 455 XL Classic அச்சுப்பொறி, Web HQ 107, அதாவது, அச்சுப்பொறி Windows XP மற்றும் Linux எழுத்துரு மற்றும் சோதனையில் உள்ளவை என்று சொல்லும்போது, Epson LQ 300, இதுபோன்ற பல்வேறு தமிழ் மென்பொருட்கள் நிறைவேற்றப்பட்டு, இப்போது ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு எவரெவர் தயாரிக்கின்றார்களோ. அவர்களுக்குச் சான்றளிக்கப்பட்டு, கன்னித் தமிழைக் கணினித் தமிழாக உருவாக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் முயற்சி எடுத்து, இன்றைக்கு உலகம் முழுவதும் தமிழைக் கணினியிலே அறியக்கூடிய வகையில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 10–25*

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து, இந்தியாவில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உருவாக்கியுள்ளதை இந்தியாவின் குடியரசுத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் அம்மாவின் அரசைப் பாராட்டி, நற்சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளார்கள். அதேபோன்று, தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு, சாதி, மதக் கலவரம் மற்றும் வெடிகுண்டு சப்தமில்லாத மாநிலம் தமிழ்நாடு என்று மேதகு ஆளுநர் அவர்களும், வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அம்மாவின் அரசைப் பாராட்டுகின்ற இந்த நல்ல தகவல்களை கிராமப்புற மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் கணினிமூலம் விவரங்களை அளிக்க அரசு என்ன திட்டம் வைத்துள்ளது, எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டதைப்போல, இத்தகைய மென்பொருட்கள் உருவாக்கப்படும்போது, நிச்சயமாக எல்லாக் கிராமங்களிலும் கன்னித் தமிழ், கணினித் தமிழிலே உருவாக்கப்பெற்று, பாமர மக்களும் கணினி



2006 ஜனவரி 17]

மூலமாகத் தமிழை அறிய முடிகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவேதான், அரசு இதற்கு 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மென்பொருள் குறித்த விவரங்களை மொழியாக்கம் செய்து, திண்டுக்கல் துரைப்பாண்டியன் என்கின்ற இளைஞர் குறுந்தகடாக வெளியிட்டிருக்கிறார். மதுரை பத்திரிகையாளர் கழகம் அதனைப் பாராட்டி வெளியீடு செய்திருக்கிறது. இதுபோன்ற இளைஞர்களுடைய முயற்சிக்கு ஊக்கம் தருவதற்கான சிறப்புத் திட்டம் உண்டா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அவர்களை ஊக்கப்படுத்தும். அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை அணுகினால், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**4—**

## நியாய விலைக் கடை

***5446—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் சில நியாய விலைக் கடைகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ள கடைகளைப் பிரித்துத் தனியாக நியாய விலைக் கடையை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப

[2006 ஜனவரி 17

அட்டைகளுடன் செயல்படும் நியாய விலைக் கடைகளைப் பிரிப்பது குறித்து மனுக்கள் வருமானால், மனுக்களின் தேவைக்கேற்றவாறும், மக்களின் தேவைக்கேற்றவாறும் பரிசீலிக்கப்படும் என்ற பதிலினைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத தேசத்திலேயே நியாய விலைக் கடைகளில் உள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமிக்க ரேஷன் அரிசி, ஒரு கிலோவிற்கு ரூ.3.50 பைசாவிற்கு வழங்குகின்ற எங்களுடைய பாரதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது தொகுதியான பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகள் உள்ள ரேஷன் கடைகள் சில பகுதிகளிலே செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. சில பகுதிகளில் அமைந்துள்ள ரேஷன் கடைகளுக்கு நெடுந்தூரத்திலேயிருந்து ஏழையெளிய மக்கள், பல பகுதிகளிலிருந்து வருகை தந்து, ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் அவருடைய பதிலுரையிலே, விண்ணப்பம் வருகின்றபோது அது பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியினுடைய காலக்கட்டத்திலே திருக்கோயில்கள், தர்காக்கள், தேவாலயங்கள் உட்பட அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் அன்னதானத் திட்டம் அறிவிக்கப்பட்டு, தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தப் பெருமக்களுக்கெல்லாம் ஒரு நேரம் வயிறார உண்ண உணவு கொடுத்து வரும் எங்களது அன்னமிட்ட தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களுடைய சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2006 ஜனவரி 17]

**5—**

## நியாய விலைக் கடை

***30519—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், சின்னையா சத்திரத்திற்குப் புதிய அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்த வினா தொடுக்கப்பட்ட காலம் 29-10-2002. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, புதுக்கோட்டை மாவட்டம், கூழியான்விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் சின்னையா சத்திரம் என்ற பகுதிநேர நியாய விலைக் கடை 173 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது என்கின்ற நல்ல தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உணர்ந்துகொண்டு செயலாற்றிக்கொண்டிருக்கின்ற மிகச் சிறந்த அரசு, இந்த 5 ஆண்டுகளாக சிறப்பாகச் செயலாற்றுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வண்ணமாக, கோரிக்கையை நிறைவேற்றியதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்குப் பணிவோடு தொகுதி மக்களுடைய சார்பிலே நன்றிகளைப் பணிவாக வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில்தான் மகளிர் இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற அந்தப் பணியைக்கூட மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாக ஏற்று நடத்துகின்ற அந்தச் சிறப்பை ஊக்குவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள நியாய விலைக் கடைகளிலே எத்தனை நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் ஏற்று நடத்தப்படுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2006 ஜனவரி 17

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 மகளிர் சுய உதவிக் குழுக்கள் நியாய விலைக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன என்ற தகவலைச் சொல்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குப் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே நீண்ட காலமாக இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தேன். பாலக்கோடு, சோழவந்தான், மன்னார்குடி, கரூர், சேலம்–2 ஆகிய தொகுதிகளில் என்ன special ரக அரிசி வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வழங்கப்படுகிற அரிசி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, சிறப்பான அரிசியாக, மக்கள் உண்டு மகிழ்வதற்குத் தக்க அரிசியாகத்தான் வழங்கப்படுகிறது என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**6—**

## திருக்கோயில் சீரமைப்பு

***65518—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்–2–வது தொகுதி, சின்ன திருப்பதி திருக்கோயிலைச் சீர் செய்ய அரசு முன்வருமா?



2006 ஜனவரி 17]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன். சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், சின்ன திருப்பதி, அருள்மிகு வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் பல்வேறு உபயதாரர்களைக் கொண்டு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருக்குடமுழுக்கு நடைபெறவேண்டுமென்ற ஆகம விதிகளுக்கு ஏற்ப, 12–7–2000 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம்–2–வது தொகுதிக்குட்பட்ட சின்ன திருப்பதி கோயிலிலே பராமரிப்புப் பணிகள் மிக நீண்ட நாட்களாகச் செய்யப்படாமல் உள்ளன. குறிப்பாக, இப்போது குடமுழுக்குச் செய்திருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே, அந்தக் கோயிலானது மிகப் பழமை வாய்ந்த கோயில். அந்தக் கோயிலிலே உள்ள தெப்பக்குளம், மக்கள் பயன்படுத்தி வந்த தெப்பக்குளம், மிக நீண்ட நாட்களாக தூர்வாராமல் இப்போது செயல்படாமல் உள்ளது. ஆகவே, அரசு அதற்கு நிதியினை ஒதுக்கி, அந்தத் தெப்பக்குளத்திற்குச் சுவர் கட்டி, அந்த மக்கள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும். அதேபோல், இப்போது தேர் செய்வதற்கான பணி நடந்துகொண்டிருக்கின்றது. அந்தத் தேர் வலம் வரும் பாதை மிக மோசமான நிலையில் உள்ளதால், அரசு அதற்கு நிதி ஒதுக்கி அந்தத் தேர் வலம் வரும் பாதையை கான்கிரீட் சாலையாக அமைத்துத் தருவதோடு, அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடத்திலே கோயில் நிர்வாகம் திருமண மண்டபம் கட்டி இருக்கிறது. அந்தத் திருமண மண்டபத்தை மக்கள் அதிகம் பேர் பயன்படுத்தப்படுகின்ற சூழ்நிலை இருந்தாலும்கூட, அங்கே போதிய கழிப்பிட வசதி இல்லாமலும், உணவு அருந்தக்கூடிய dining hall இல்லாமலும் அந்த மண்டபம் பயன்படாமல் இருக்கிறது. ஆகவே, அரசு அதற்கு உடனடியாக நிதியினை ஒதுக்கி, அந்தத் திருமண மண்டபத்திற்குத் தேவையான கழிப்பிட வசதியையும் செய்து, உணவு செய்யக்கூடிய பாத்திரங்களையும், உணவு அருந்தக்கூடிய dining hall-ஐயும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலில் ஏற்கெனவே இருந்த மரத் தேர் பழுதுபட்டு உள்ளதை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி

அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றதற்குப் பிறகு, 15.5 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக மரத் தேர் செய்யப்பட்டு, அதனுடைய பணிகள் முடிவடைகின்ற அளவிற்கு இருக்கின்றது.

கூடிய விரைவில் திருப்பணி வேலைகள் முடிவடைந்தவுடன் புதிய தேரின் வெள்ளோட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், இந்த ஆலயத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு கடந்த 14-1-2006 ஆம் நாள் அங்கே அன்னதானத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு-மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அங்கே அன்னதானத் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் சுமார் 3,000 சதுர அடியில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தின் வடக்கு மற்றும் மேற்குப் பக்கம் தடுப்புச் சுவர்கள் 2002-2003 ஆம் ஆண்டு 98 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிதிமூலம் இத்திருக்குளத்தைத் தூர்வாருவதற்கு நடவடிக்கைகள் அம்மா அவர்களுடைய அரசால் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே நவீனக் கழிப்பிடங்கள் வேண்டுமென்று கேட்டார்கள்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அனைத்து ஆலயங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், நவீனக் கழிப்பிட வசதிகளும் செய்துதர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு அந்தப் பணிகள் செய்து தரப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபத்திற்கு தேவையான கழிப்பிட வசதியும், உணவு அருந்தக்கூடிய dining hall-ம் வேண்டும். வெறும் திருமண மண்டபம் என்று வைத்துக்கொண்டால்- அது மிகவும் பிரபல்யமான கோயில் என்பதால் அங்கு திருமண நாட்கள் வந்தால் மிக அதிகமான கூட்டம் வருகிறது. ஆகவே, அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். அதேபோன்று, அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக சுமார் நான்கரை ஏக்கர் நிலம் உள்ளது. அதிலே பல தொண்டு நிறுவனங்கள் இன்றைக்கு மரச் செடிகளை வைத்து மிக அருமையாகப் பாதுகாத்து வருகிறார்கள். ஆனால், அதற்குப் போதிய வேலி அமைத்துத் தந்தால் மேலும்





பாதுகாப்பாக இருக்கும். சேலத்திலே அனைத்துக் கோயில்களிலும் மிக அதிகமான வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, போதிய நிதி வசதி சேலம் மாவட்டத்திலே இருக்கிற காரணத்தினாலே, அந்தப் பணிகளையெல்லாம் செய்துதர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அனைத்து ஆலயங்களிலேயும் திருமண மண்டபங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துதந்து கொண்டிருக்கிறது. சேலத்திலே இருக்கின்ற அந்த ஆண்டவனுடைய ஆலயத்திற்குச் சொந்தமான திருமண மண்டபத்திலேயும் உடனடியாக வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன திருப்பதி அருள்மிகு வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் அன்னதானத் திட்டத்தைத் துவக்கி வைத்து கோடானு கோடி நெஞ்சங்களில் கோயிலாக வீற்றிருக்கும் தமிழகத்தினுடைய தாயாக விளங்கும் முதல்வர் அம்மா அவர்களுக்கு, பகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இத்திருக்கோயிலில் நீதி போதனைகள், உபன்யாசம் சொல்லிக் கொடுக்க ஆணை பிறப்பித்ததற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும், சேலம் மாநகரில் அருள்மிகு குமரகுரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில், அருள்மிகு கோட்டை அழகிரிநாதர் திருக்கோயில், அருள்மிகு சித்திரச்சாவடி சுப்பிரமணியர் திருக்கோயில் போன்ற ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தைத் துவக்கி வைத்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சேலம் மாநகர் மக்களின் சார்பாக எங்களுடைய நன்றியை மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கின்றோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சின்ன திருப்பதி 'வெங்கடேசப் பெருமாள் கோயிலில் யாத்திரிகர் மண்டபம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்த யாத்திரிகர் மண்டபத்தைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2006 ஜனவரி 17

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகக் கண்டறியப்பட்டு யாத்திரிகர் மண்டபத்தைப் புதுப்பிப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. சுந்தசாமி.

**திரு. கா. சுந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், சின்ன திருப்பதி கோயிலுக்கு பக்தர்கள் ஏராளமான பேர் வருகின்றார்கள். அப்படி அதிக அளவில் பக்தர்கள் வரும் சூழ்நிலையில், தற்போது ஒரே ஒரு அர்ச்சகர் மட்டும்தான் இருக்கின்றார். பக்தர்கள் அதிகமாக வருவதைக் கணக்கில் கொண்டு, கூடுதலாக அர்ச்சகர் ஒருவரை நியமிக்க அரசு, முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக ஆய்வு செய்து, அர்ச்சகரை நியமிப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

7—

## சத்துணவு மையம்

***59689—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் சத்துணவு மையம் மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நியமனம், பணி மாற்றம் போன்ற நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2006 ஜனவரி 17]

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் சத்துணவு மையம் மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நியமனம், பணி மாற்றம் நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகளை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்டு, அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற்று, இன்று வரை சிறப்பாகச் செயல்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்தின் நிர்வாகத்தை, நேரடியாக மாவட்ட நிர்வாகமே கவனித்து வருவதால், குக்கிராமங்களிலுள்ள சத்துணவு மற்றும் பால்வாடி மையங்களில் ஏற்படும் சிறு பிரச்சினைகளைத் தீர்க்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது. அதனைப் போக்கிட ஏதுவாக, நிர்வாக நலன் கருதி, சத்துணவு மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணி நியமனம், பணி மாறுதல் மற்றும் நிர்வாகத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறியதைப்போல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணி மாற்றங்கள், நியமனம் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆங்காங்கு, ஒவ்வொரு பகுதியிலும், அவ்வாறு பிரச்சினைகளோ, அல்லது தவறுகளோ ஏற்பட்டால், அரசின் சார்பாக, அங்கு தவறுகள் செய்பவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களின் பணி நியமனம், பணி மாறுதல்களை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்குக் கொண்டுவரும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. இருப்பினும், இது தொடர்பாக அரசு கொள்கை அளவில்தான் முடிவெடுக்க வேண்டும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

8—

**ஊக்கத் தொகை**

***20015—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்பவருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் மகளிருக்கு, மைய அரசு ஊக்கத் தொகையாக ரூ.115/–ம், அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ.135/–ம் வழங்கி வந்தது. கடந்த 1–6–2001 முதல், இத்தொகைகள் முறையே ரூ.200/– மற்றும் ரூ.175/– என உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளக்கூடிய பெண்களுக்கு, மத்திய அரசு ரூ.300/– என்று முன்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதிலே, அந்தந்த மருத்துவமனையிலே, நிர்வாகச் செலவுக்காக ரூ.150/–ஐ எடுத்துக்கொள்வதாகவும், அதேபோல், ஆண்களுக்கு ரூ.200/– என்று முன்பு வழங்கப்பட்டு வந்தது; அதிலே, ரூ.150/–ஐ கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதி ரூ.50/–ஐ நிர்வாகச் செலவுக்காக அந்த மருத்துவமனை எடுத்துக்கொள்வதாகவும் அறிகிறேன். மத்திய அரசாங்கம் அளிக்கக்கூடிய முழுத் தொகையையும் கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம்தான் இதற்கான ஒரு வரையறையை வைத்திருக்கிறது. பொதுவாக எடுத்துக்கொண்டால்,



பெண்கள் அறுவை சிகிச்சை செய்துகொள்வதாக எடுத்துக் கொண்டால், பயனாளிகளுக்கு ரூ.85/–ம், சாப்பாட்டிற்கு ரூ.35/–ம், போக்குவரத்திற்கு ரூ.20/–ம், அதுபோக, மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.15/–ம், ஆக மொத்தம் ரூ.155/– ஆக இருந்தது. இப்போது அதை 1–6–2001–ல் உயர்த்தி, பயனாளிகளுக்கு ரூ.200/–ம், மருந்துக்கு ரூ.90/–ம், இதர வகைக்காக ரூ.10/–ம், ஆக மொத்தம் ரூ.300/– ஆகக் கொடுக்கப்படுகிறது. அதேபோல, அந்த அறுவை சிகிச்சையிலே, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.3/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.2/–ம், மருந்துக்கு ரூ.40/–ம், இதர வகையான செலவுகளுக்கு ரூ.10/–ம், அதேபோல, மாநில அரசின் சார்பாக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.1/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.3/–ம், நிர்வாகப் பணியாளருக்கு ரூ.2/–ம், உதவி மருத்துவருக்கு ரூ.4/–ம், ஆக மொத்தம் ரூ.300/– வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய வரையறைத் திட்டம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

9—

**ஊட்டி டீ**

*** 29766—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் INDCOSERVE மூலம் தயாரிக்கப்படும் ஊட்டி "டீ" தரம் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் INDCOSERVE என்ற தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம், குறைந்த விலையில் தரமான தேயிலைத் தூளைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், 28–8–2001 அன்று புதிய தேயிலைத் தூளை அறிமுகம்

செய்து, ஊட்டி டீ என்று பெயரிட்டு, தரமான தூளை விநியோகம் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, இப்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஊட்டி டீ விற்பனை செய்யப்படுவதற்குமுன், தரமுள்ளதா என்று, நிறம், மணம், சுவை உள்ளதா என்று, பகுப்பாய்வு சோதனைக் கூடத்தில், இரசாயன சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலையை பெரிய தனியார் கம்பெனிகள் விலைக்கு வாங்கி, இலாபம் சம்பாதிக்கின்ற வகையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். அதேபோல, INDCOSERVE மூலம் தயாரிக்கப்படும் ஊட்டி டீ-யை ஏற்றுமதி செய்ய அரசுக்கு யோசனை இருக்கிறதா, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போல, INDCOSERVE நிறுவனத்துடன் வெளிநாட்டில் விற்பனை செய்வதற்கு யாராவது வந்து ஒப்பந்தம் செய்வார்களேயானால், அரசு கண்டிப்பாக ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி டீ தமிழகத்திலேயுள்ள நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இப்பொழுது அந்த டீ-யைப் பொது மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள். ஆனால் நியாய விலைக் கடைகளில் பெரும்பாலும் ஊட்டி டீ-யைக் கேட்டால், இல்லை என்று சொல்கின்றார்கள். எனவே, நியாய விலைக் கடைகளில் தட்டுப்பாடு இல்லாமல் ஊட்டி டீ-யை விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் தந்துகொண்டிருக்கின்றார். ஊட்டி டீ எவ்வளவு தேவை என்று அந்தந்த மாவட்டக் கூட்டுறவுத் துறை அதிகாரிகள்மூலமாக indent பெறப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் தயார் செய்து,





அவரவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இல்லையென்கின்ற தகவல் இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. 'எச்.எம். ராஜு'.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, INDCOSERVE மூலம் வாங்கப்படும் ஊட்டி டீ-யினுடைய தரம் குறித்து, இப்பொழுது மாவட்டத்திலுள்ள சிறு, குறு விவசாயிகள் தரம் உள்ள தேயிலையை, பசுந்தேயிலையை கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்குத் தருவதனால், மற்ற மாநிலங்களிலிருந்து தேயிலைத் தூள் வாங்கி, அத்துடன் ஊட்டி தேயிலைத் தூளைச் சேர்த்து விற்பதைக் காட்டிலும் மாவட்டத்திலுள்ள INDCOSERVE மூலமாக, கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின்மூலமாக நல்ல தரமுள்ள தேயிலைத் தூள் இருப்பதால், அவற்றை வாங்கி விற்பதன்மூலமாக செலவுத் தொகை குறைவாக இருக்கும். இதை நமது அரசு நடைமுறையில் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, வெளிமாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய டீ தூள் அளவை இப்பொழுது குறைத்து, அதற்குப் பதிலாக தரமுள்ள டீ நம்முடைய மாநிலத்திலேயே, ஊட்டியிலேயே பெறவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, அசாம் டீ 25 விழுக்காடு, எஸ்டேட் டீ 25 விழுக்காடு, தனியார் டீ 2 முதல் 3 விழுக்காடு, INDCO டீ 35 முதல் 38 விழுக்காடு, டான் டீ 18 விழுக்காடு, இந்த அளவிலே கலப்பினம் செய்து, அதற்குப் பிறகு INDCOSERVE நிறுவனத்தால் இன்றைக்குத் தரமுள்ள தேயிலைத் தூள் விற்பனை செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டியிலே கிடைப்பதைப்போல, சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியிலே, இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு மிகத் தரமான காபிக் கொட்டை அங்கே கிடைக்கின்றது. ஆகவே, அரசு அதைக் கொள்முதல் செய்து, அங்கே தொழிற்சாலை அமைத்தால், அந்த மக்களுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். அரசு இதைப் பரிசீலனை செய்து, ஏற்காட்டிலே காபி ஏற்றுமதி

செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அந்த ஊரகத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலை உருவாவதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுத்துத் தந்து, அதன்மூலம் ஊரகப் பகுதிகளில் தொழிலைப் பெருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை, ஏற்காடு பகுதியிலே இருக்கக்கூடிய காபி வியாபாரிகள், இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்ய முன்வருவார்களேயானால் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *10*, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**10—**

## சோப்பு தொழிற்சாலை

***46100—திரு. ப. அரசன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியம்மூலம் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

*முற்பகல் 10-50*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், "வேலையற்றோர் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள்" என்று. ஒரு அரசு வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது மிக முக்கியமான கடமைகளிலே ஒன்றாகும். அந்த வகையில், வேலைவாய்ப்பை மணமேல்குடி பகுதியிலே உருவாக்குகிற வகையில், மிகக் குறைந்த செலவிலே சோப்பு தொழிற்சாலையை உருவாக்கிட முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியத்தின்மூலமாக சோப்பு தொழிற்சாலை தொடங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின்மூலம் தற்போது *24* சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மணமேல்குடி நகரின் அருகில் உள்ள கண்டனூர் என்கிற இடத்தில் வாரியத்தின் சார்பிலேயே சோப்பு அலகின்மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களின் தேவைகளை அறிந்துதான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது கண்டனூரில். அதுமட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அருகிலேயே திருச்சி மாவட்டம், சமயபுரத்திலே இருக்கிறது, நாஞ்சிக்கோட்டையிலே இருக்கிறது. ஆக, தேவைகளை வைத்துத்தான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தேவை அதிகமாக இருக்கிறபோது, மணமேல்குடி அருகிலே இருக்கிற கண்டனூரிலேயே உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *11*, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**11—**

## நில ஆர்ஜிதம்

***50040—திரு. சி. சண்முகவேலு:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலை வட்டம், கரட்டூர் ஊராட்சி, ஆதி திராவிட மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்குவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். கோயம்புத்தூர்

மாவட்டம், உடுமலை வட்டம், கரட்டூர் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க, கரட்டூர் அருகிலுள்ள புங்கமுத்தூர் கிராமத்தில் க.ச. எண் 244/1பி, 4பி மற்றும் 5 காலைகளில் 1.51.0 ஹெக்டேர் நிலம் கையகம் செய்து 63 பயனாளிகளுக்கு 25–10–2005 அன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, உடுமலை வட்டம், புங்கமுத்தூர் ஊராட்சி, கரட்டூர் கிராமத்தில் 63 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். உள்ளபடியே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு வகைகளிலே ஏழை, எளிய ஆதி திராவிட மக்களுக்குப் பட்டாக்களை முறையாகக் கொடுத்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பதற்கு இணங்க, வீட்டுமனைப் பட்டாக்கள் என்னுடைய தொகுதியில் கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் ஆதி திராவிட மக்களுக்கு, உடுமலை ஊராட்சியில் மட்டும், அந்தியூர் ஜெ.ஜெ. நகர், வாளவாடி ஜெ.ஜெ. நகர், செல்லப்பாளையம் ஜெ.ஜெ. நகர், பூலாங்கிணறு ஜெ.ஜெ. நகர், வல்லக்குண்டாபுரம், ஜல்லிப்பட்டி, மானுப்பட்டி, தீபாலப்பட்டி, மலையாண்டி கவுண்டனூர், மருள்பட்டி ஜெ.ஜெ. நகர், பாலப்பம்பட்டி ஜெ.ஜெ. நகர், ஜக்கம்பாளையம் ஜெ.ஜெ. நகர், கணபதிபாளையம், போடிபட்டி, கல்லாபுரம், வேல் நகர் மற்றும் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாப்பாகுளம் ஜெ.ஜெ. நகர், சாலரப்பட்டி ஜெ.ஜெ. நகர், கிருஷ்ணாபுரம் ஜெ.ஜெ. நகர், சாமராயப்பட்டி ஜெ.ஜெ. நகர், பெருமாள்புதூர் ஜெ.ஜெ. நகர், கொமரலிங்கம் ஜெ.ஜெ. நகர், கும்பம்பாளையம், மயிலாபுரம் ஜெ.ஜெ. நகர், மடத்தூர், குளத்துபாளையம் போன்ற பல கிராமங்களில், வழங்கப்பட்டதோடு என்னுடைய தொகுதியில் மட்டும், பல ஆயிரம் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி உள்ளது. எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு ஆதி திராவிட மக்களின் சார்பிலே கோடானு கோடி நன்றியை எங்கள் தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகாறும் இல்லாத அளவிற்கு ஏழை மக்களுக்குப் பட்டா வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் திரும்பவும் நன்றியைத் தங்கள் மூலமாகக் கூறிக்கொள்வதிலே மிகப் பெருமை அடைகிறேன். மேலும், எங்களது உடுமலை நகரத்திற்குட்பட்ட பகுதியிலே மாரியம்மன் கோயில் நிலம் தேர்வு செய்ததிலே 413 பேருக்கு வீட்டுமனைப் பட்டா தற்போது





கொடுக்கக்கூடிய நிலையிலே உள்ளது. அந்த இடங்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 413 இலட்சம்–ஒவ்வொரு வீடும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலே திரும்பவும் நன்றியை எங்கள் தொகுதி மக்களின் சார்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இன்னும் என்னுடைய தொகுதியிலே ஒரு சில கிராமங்கள்–ஏ.கே. புத்தூர் கிராமம், மடத்துக்குளம் கல்கரை கிராமத்திலும், வாளவாடியிலே உள்ள வேலூரிலும் நில ஆர்ஜிதப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன. அதை விரைந்து கொடுக்கவும், உயர் நீதிமன்றத்திலுள்ள செல்லாண்டியம்மன் கோயில் பூமி பள்ளபாளையம் கிராமத்திற்கு உட்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு விரைந்து நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கவும் துரித நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"

என்கின்ற வள்ளுவன் வாக்கினைப்போல, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மட்டும் 180 கோயில்களிலே அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதன் வாயிலாக, அவினாசியிலே கருவலூர் மாரியம்மன் கோயிலிலும், அன்னூர் மண்ணீஸ்வரர் கோயிலிலும் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சிக்கு எனது தொகுதிவாழ் மக்களின் சார்பாக எனது கோடானு கோடி நன்றி மலர்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதிக்குட்பட்ட மங்கரசுபாளையம் ஊராட்சியில் சுமார் 7 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர்

[2006 ஜனவரி 17

நலத் துறைமூலமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இலவசப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நடப்பு நிதியாண்டில் விரைவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை அரசுக்கு வரப்பெறவில்லை; வந்தால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**12—**

## பேருந்து வசதி

***18914—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப் பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கூட்டுச் சாலை வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் அங்கு நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கிறது. திருவண்ணாமலையிலிருந்து நடுப்பட்டு கிராமம் வரை நகரப் பேருந்து ஒன்று சமீபத்தில் புதிதாக இயக்கப்பட்டது. இப்பேருந்தினை நடுப்பட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள க.ஆண்டாப்பட்டு கிராமம் வரை, சாலை சரிசெய்யப்பட்டவுடன் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 17]

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாப்பட்டு வழியாக அனைத்துப் பேருந்துகளும் செல்கின்றன, ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். திருவண்ணாமலை-திருக்கோவிலூர் சாலையிலே, இந்த ஆண்டாப்பட்டு என்பது மையப் பகுதியிலே இருக்கிற ஊர். ஆனால் அந்த State Highways Road–லேயிருந்து ஆண்டாப்பட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னால் 2 கிலோ மீட்டர் தூரம். இறுதியாக அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கொளக்கடி, நடுப்பட்டு, அது பக்கத்திலே ஒரு கிலோ மீட்டரிலே ஆண்டாப்பட்டு இருக்கிறது என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஒரு கிலோ மீட்டர் ரோடு என்பது சரி செய்யப்பட்டுவிட்டது. எனவே, அரசு உடனே அந்த route–ஐ அனுமதிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பதில் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். அந்தச் சாலை சரி செய்யப்பட்டவுடன், பேருந்தினை இயக்குவதற்கு அரசிடம் ஏற்கெனவே செயற்குறிப்பு இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலை வசதிப் பணி முடிவடைந்தவுடன்—உறுப்பினர் சொல்வதுபோல, அந்தச் சாலை வசதிப் பணி முடிந்து, சரி செய்யப்பட்டிருந்தால், பேருந்தை உடனடியாக இயக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** குற்றச்சாட்டு இல்லை, குற்றச்சாட்டு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எ.வ. வேலு:** ** நான் சொல்வது, பாதை சரி செய்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. பாதை சரி செய்தால், 'விடுகிறேன்' என்று அமைச்சர் சொல்கிறார். பாதை சரி செய்து 6 மாத காலம் ஆகிவிட்டன. எனவே, ஆண்டாப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதை சரியாக இருந்தால் பஸ்ஸை விடுகிறோம் என்று சொல்கிறார். (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2006 ஜனவரி 17

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய பால் வளத் துறை அமைச்சர்கூட கோரிக்கை வைத்து, சென்ற மாதம் அது இயக்கப்பட்டது. அந்த நேரத்தில் அந்தப் புதிய பேருந்து இயக்கப்படுகின்ற நேரத்தில் அந்தச் சாலை சரி செய்யப்படாமல் இருந்தது. அதற்குப் பின்பு, அந்தச் சாலை சரி செய்யப்பட்டுவிட்டதாக இப்போதுதான் உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, சாலை முன்பே சரி செய்யப்படவில்லை. இப்போது சரி செய்யப்பட்டிருந்தால்—புதிய பேருந்துகளை இயக்கியதற்குப் பின்பு, ஓரிரு மாதங்களுக்குள்தான் அது சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும், உடனடியாக அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**13—**

### மின் கணக்கெடுப்பு

***50030—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மின் நுகர்வு கணக்கீட்டாளர்கள் குறிப்பிட்ட கால அளவிற்குள் கணக்கெடுப்பு செய்யாமல் தாமதமாகக் கணக்கெடுப்பதால் நுகர்வோருக்குக் கூடுதல் கட்டணம் விதிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.



2006 ஜனவரி 17]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் நுகர்வோர் கணக்கீட்டாளர்கள் பணியிடம் முழுவதுமாக நிரப்பப்பட்டு உள்ளதா? அல்லது காலிப் பணியிடம் இருப்பின், புதிய நியமனம் செய்வதற்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தில் கணக்கீட்டுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மொத்தம் 5,745. இதில் 5,565 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 180 பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. இருந்தாலும், இந்த 180 பணியிடங்களும் இப்போது கருணை அடிப்படையில், பணியில் இருக்கும்போது இறந்த தொழிலாளர்களுடைய...

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** பணியில் இருக்கும்போது இறக்கும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு, வாரிசுகளுக்குப் பணிகள் வழங்குவதற்காக அந்தப் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு மின் வாரியத்தில் இந்தக் கணக்கீட்டுப் பணியினைக் கையாளுவதற்கு கணினிமயமாக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் இப்பொழுது அந்தப் பணிகளைக் கணினிமயமாக்குவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, இதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு—பணியிலே காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[2006 ஜனவரி 17

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல்கள் 1 மற்றும் 2) @

### பட்டியல் 1

1—

### "கிராமோதயா யோஜனா" திட்டம்

**வினா எண் 70098—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் "பிரதம மந்திரியின் கிராமோதயா யோஜனா" திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து 2004-2005 ஆம் ஆண்டு வரை பிரதம மந்திரியின் கிராமோதயா யோஜனா திட்டம் மைய அரசின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. 2005-2006 ஆம் ஆண்டு துவக்கம் முதல் இத்திட்டத்தை மைய அரசு கைவிட்டுவிட்டது. எனவே, தற்பொழுது பெண்ணாகரம் தொகுதியில் மேற்காணும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறு ஏதுமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

2—

### சட்டக் கல்லூரிகள் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 81181—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதை நிரப்பும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பாக, பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதல்களுக்கேற்ப தமிழ்நாடு சட்டக் கல்விப் பணி விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உரிய திருத்தம் வெளியிடப்பட்டவுடன் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக அக்காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

3—

### கூட்டுறவுச் சிறப்பங்காடிக் கிளைகள்

**வினா எண் 31196—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் கட்டுப்பாடற்ற பொருட்களை ரூ.1 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்த பொன்னி கூட்டுறவுச் சிறப்பங்காடிக் கிளைகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், பொன்னி கூட்டுறவுச் சிறப்பங்காடிக் கிளை நியாய விலைக் கடைகளில் ஏப்ரல் 2002 முதல் டிசம்பர் 2004 வரையிலான காலத்திற்கு, கட்டுப்பாடற்ற பொருட்களை ரூ.1 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்த கடைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | மாதம் | ரூ.1 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்த கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 2002 | 8 |
| 2. | மே 2002 | 19 |
| 3. | ஜூன் 2002 | 24 |
| 4. | ஜூலை 2002 | 16 |
| 5. | ஆகஸ்ட் 2002 | 27 |
| 6. | செப்டம்பர் 2002 | 13 |
| 7. | அக்டோபர் 2002 | 5 |
| 8. | நவம்பர் 2002 | 6 |
| 9. | டிசம்பர் 2002 | 8 |
| 10. | ஜனவரி 2003 | 7 |
| 11. | பிப்ரவரி 2003 | 7 |
| 12. | மார்ச் 2003 | 8 |

| வ.எண் | மாதம் | ரூ.1 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்த கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 2003 | 9 |
| 2. | மே 2003 | 9 |
| 3. | ஜூன் 2003 | 9 |
| 4. | ஜூலை 2003 | 12 |
| 5. | ஆகஸ்ட் 2003 | 9 |
| 6. | செப்டம்பர் 2003 | 11 |
| 7. | அக்டோபர் 2003 | 17 |
| 8. | நவம்பர் 2003 | 11 |
| 9. | டிசம்பர் 2003 | 12 |
| 10. | ஜனவரி 2004 | 12 |
| 11. | பிப்ரவரி 2004 | 11 |
| 12. | மார்ச் 2004 | 15 |
| 13. | ஏப்ரல் 2004 | 11 |
| 14. | மே 2004 | 12 |
| 15. | ஜூன் 2004 | 11 |
| 16. | ஜூலை 2004 | 11 |
| 17. | ஆகஸ்ட் 2004 | 13 |
| 18. | செப்டம்பர் 2004 | 13 |
| 19. | அக்டோபர் 2004 | 10 |
| 20. | நவம்பர் 2004 | 8 |
| 21. | டிசம்பர் 2004 | 6 |



4—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 46377—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை, போடிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், போடிப்பட்டி கிராமம், போடிப்பட்டி புதூரில் உள்ள 236 குடும்ப அட்டைதாரர்களில் 143 குடும்ப அட்டைதாரர்கள் போடிப்பட்டி பள்ளியின் எதிரில் அமைந்துள்ள அங்காடியிலும், 93 குடும்ப அட்டைதாரர்கள் போடிப்பட்டி ரெவின்யூ நகரில் அமைந்துள்ள அங்காடியிலும் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகிறார்கள். தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளில் தாய்க் கடையிலிருந்து புதிதாக அமையவிருக்கும் பகுதிநேரக் கடைக்குக் குறைந்தது 2 கிலோ*

மீட்டர் தொலைவு இருக்க வேண்டும், மற்றும் பகுதிநேரக் கடை நடத்துவதற்கு இலவசமாகக் கட்டடம் ஊர் மக்களே வழங்க வேண்டும். ஆனால், இந்நேர்வில் புதிதாகப் பகுதிநேரக் கடை அமைக்க கோரப்பட்ட பகுதி தாய்க் கடையிலிருந்து 3/4 கிலோ மீட்டர் தொலைவே உள்ளதாலும், மற்றும் பகுதிநேரக் கடை நடத்த இலவசக் கட்டடம் வழங்க இயலாது என ஊராட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாலும், போடிப்பட்டி புதூர் பகுதியில் புதிதாக பகுதிநேரக் கடை திறக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

5—

### மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்

**வினா எண் 63806—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் கூடுதலாக 2 மண்ணெண்ணெய் பங்க்குகள் திறக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள நியாய விலைக் கடைகளிலிருந்து குறைந்தபட்சம் 5,000 முதல் 10,000 வரை குடும்ப அட்டைகள் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்துடன் இணைக்கப்படுகிறது. அப்போதுதான் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்து தற்சார்புடன் (Viable) செயல்பட இயலும். ஆனால், சீர்காழி நகரத்தில் மொத்தம் 8 கூட்டுறவு அங்காடிகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 5,762 குடும்ப அட்டைதாரர்கள் இணைக்கப்பட்டு, இவர்கள் அனைவரும் சீர்காழியில் உள்ள கூட்டுறவு மண்ணெண்ணெய் விநியோக நிலையம்மூலம் மண்ணெண்ணெய் பெற்று வருகின்றனர். சீர்காழி நகரத்தில் மொத்தம் 5,762 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தற்போதுள்ள நியாய விலைக் கடைகளுக்கும், மண்ணெண்ணெய் விநியோக மையத்திற்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டருக்குள் இருப்பதாலும், சீர்காழி நகரத்தில் மேலும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் எண்ணம் அரசிடம் இல்லை.



6—

### கீழவாடியில் அங்காடி

**வினா எண் 64364—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, மாதிரவேளூர் ஊராட்சியில் இயங்கி வரும் கூட்டுறவு அங்காடியைப் பிரித்து கீழவாடியில் அங்காடி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதிரவேளூர் ஊராட்சியில், கீழவாடியில் புதிதாகப் பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் டபிள்யூ. ப்பி. 10661/97 மற்றும் 17048/97 நிலுவையில் உள்ளதால், வழக்குகளின் முடிவு தெரிந்த பின்பே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

### மண்ணெண்ணெய் பங்க் அமைத்தல்

**வினா எண் 65892—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் பகுதி, வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி நகரம் ஆகிய இடங்களில் மண்ணெண்ணெய் பங்க் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2006 ஜனவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள நியாய விலைக் கடைகளிலிருந்து குறைந்தபட்சம் 5,000 முதல் 10,000 வரை குடும்ப அட்டைகள் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்துடன் இணைக்கப்படுகிறது. அப்போதுதான் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்து தற்சார்புடன் (Viable) செயல்பட இயலும். ஆனால், சீர்காழி நகரத்தில் மொத்தம் 8 கூட்டுறவு அங்காடிகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 5,762 குடும்ப அட்டைதாரர்கள் இணைக்கப்பட்டு, இவர்கள் அனைவரும் சீர்காழியில் உள்ள கூட்டுறவு மண்ணெண்ணெய் விநியோக நிலையம்மூலம் மண்ணெண்ணெய் பெற்று வருகின்றனர். சீர்காழி நகரத்தில் மொத்தம் 5,762 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தற்போதுள்ள நியாய விலைக் கடைகளுக்கும், மண்ணெண்ணெய் விநியோக மையத்திற்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டருக்குள் இருப்பதாலும், சீர்காழி நகரத்தில் மேலும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் எண்ணம் அரசிடம் இல்லை.*

**8—**

### புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 66937—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) டிசம்பர் 2004 மற்றும் ஜனவரி 2005 ஆகிய மாதங்களில் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எவ்வளவு பேர் புதிதாகக் குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்து இருந்தார்கள்?*

*(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்குப் புதிய குடும்ப அட்டைகளை அரசு வழங்கி உள்ளது?*



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் டிசம்பர் 2004 மற்றும் ஜனவரி 2005 ஆகிய மாதங்களில் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.*

**9—**

### கூட்டுறவுச் சங்கக் கிடங்குகள்

**வினா எண் 67685—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் கூட்டுறவுப் பொருட்களை வைக்க எத்தனை கிடங்குகள் உள்ளன?*

*(ஆ) அவை சொந்தக் கட்டடங்களா?*

*(இ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறை தொகுதியில் கூட்டுறவுப் பொருட்களை வைக்க 16 கிடங்குகள் உள்ளன.*

*(ஆ) 16 கிடங்குகளும் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான கிடங்குகள் ஆகும்.*

*(இ) கிடங்குகள் விவரம்:*

*வால்பாறை தொகுதியில் உள்ள அங்கலக்குறிச்சியில் 2 கிடங்குகளும், கோட்டூர் மலையாண்டிப்பட்டினத்தில் 3 கிடங்குகளும், அரசூரில் 2 கிடங்குகளும், தென்சித்தூரில் 1, அர்த்தநாரிப்பாளையத்தில் 1, வி. காளிபுரம் 2, சேத்துமடை 3 மற்றும் வேட்டைக்காரன்புதூரில் 2-ம், ஆக 16 கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றின் மொத்தக் கொள்ளளவு 1,583 மெட்ரிக் டன்.*

10—

[2006 ஜனவரி 17

## சிறு கடன்கள் வழங்குதல்

**வினா எண் 67686—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை நகர்ப்புறக் கூட்டுறவு வங்கியில், வேட்டைக்காரன்புதூர் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கோட்டூர் கூட்டுறவு வங்கிகளில் சிறு வியாபாரம் செய்ய சிறு கடன்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கியில் தவணை தவறிய கடன்கள் நிலுவை ரூ. 103.05 இலட்சமாக உள்ளது. அதனால் இதர கடன்கள் வழங்கும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. தவணை தவறிய கடன்களை வசூலிப்பதற்கு சட்டப்பூர்வ நடவடிக்கை மற்றும் வசூல் பணிக்குக் குழு அமைக்கப்பட்டு, வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வங்கியின் நிதிநிலை சீரானவுடன் தொடர்ந்து சிறு வணிகம் செய்ய வங்கியால் கடன் வழங்கப்படும்.*

கோட்டூர் கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்ட கடன்கள் தவணை தவறி நிலுவையிலுள்ளதால் சிறு வணிகக் கடன்கள் வழங்கப்படவில்லை. கடன்கள் வசூல் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வங்கியின் சொந்த நிதி அதிகரிக்கப்பட்டதும் சிறு வணிகக் கடன் வழங்கப்படும்.

வேட்டைக்காரன்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடும் நிதிப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டு உள்ளது. தவணை தவறியுள்ள கடன்கள்மீது தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு முழுமையாக வசூல் செய்ய வங்கியின் தனி அலுவலருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. வங்கியின் சொந்த நிதி பற்றாக்குறையாக உள்ளதால் இவ்வங்கியில் சிறு வியாபாரம் செய்ய



2006 ஜனவரி 17]

கடன் வழங்கப்படவில்லை. வங்கியின் நிதிநிலை சரி செய்யப்பட்ட பின்னர் சிறு வியாபாரம் செய்யக் கடன்கள் வழங்கப்படும்.

11—

## பணியை நிரந்தரமாக்குதல்

**வினா எண் 68126—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரம் நகரக் கூட்டுறவுக் கடைகளில் (urban stores) பணிபுரியும் தினக்கூலித் தொழிலாளிகளின் பணியை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுப் பண்டகசாலையில் தற்போது பணிபுரியும் 84 நபர்களில் 18 நபர்கள் மட்டுமே முறையாகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். மீதமுள்ள 66 நபர்களில் 12 நபர்கள் கல்வி/வயதுத் தகுதியில்லாமலும், வேலைவாய்ப்பகத்தைக் கலந்தறியாமல் நியமனம் செய்யப்பட்டவர்கள். பிரதமப் பண்டகசாலை மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பணி நிலைத் திறன் குறித்து அரசால் வெளியிடப்பட்ட ஆணைகளுக்குச் சில பணியாளர் சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடையாணை நீக்கப்பட்ட பிறகு, புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுப் பண்டகசாலையில் பணியாற்றும் தற்காலிக மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களில் கல்வி/வயதுத் தகுதியில்லாமல் பணியாற்றும் 12 நபர்களைத் தவிர்த்து மற்றவர்களின் பணியினை நிரந்தரம் செய்வது குறித்து சென்னை உயர் நீதிமன்ற மேல்முறையீட்டு மனு எண் 2501 மற்றும் 2502/2001 ஆகியவற்றில், 24-10-2002 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2006 ஜனவரி 17

12—

### குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 71509—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் கூட்டுறவுத் துறையின்மூலம் "பூ" மற்றும் பழ வகைகளைப் பாதுகாக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலையில் கூட்டுறவுத் துறையின்மூலம் "பூ" மற்றும் பழ வகைகளைப் பாதுகாக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

13—

### வேலைவாய்ப்பு

**வினா எண் 73947—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவுப் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து வருகின்றனர். 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டங்களின் விதிகள், விதி எண் 149(2)-ன்படி கூட்டுறவு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பணி நியமனங்கள் யாவும் வேலைவாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், அரசாணை (டி) எண் 216, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 1-9-1998-ன்படி வேலைவாய்ப்பகப் பதிவு மூப்பின் அடிப்படையில் மட்டுமே பணி நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி அரசாணையின்படி கூட்டுறவு நிறுவனங்களில் நேரடி நியமனத்தின்போது, அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியலிலிருந்து பணியிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதியினைப் பெற்றுள்ளவர்களுக்கு, மொத்தப் பணியிடங்களில் 85 சதவீதமும், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு 15 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதன் அடிப்படையில், கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.



2006 ஜனவரி 17]

14—

### பட்டயப் பயிற்சி நிலையம்

**வினா எண் 75027—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி நகரில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் அமைக்கத் தற்சமயம் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2006 ஜனவரி 17

15—

## நுகர்வோர் நீதிமன்றம்

**வினா எண் 75480—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியில் நுகர்வோர் நீதிமன்றம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

16—

## நுகர்வோர் நீதிமன்றம்

**வினா எண் 79023—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகாவில் எடப்பாடியில் நுகர்வோர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

17—

## நிதியுதவி

**வினா எண் 12460—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 17]

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள கைவினைஞர்களுக்குச் சொந்தமாகத் தொழில் துவங்க கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் எத்தனை பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அந்த நிதியுதவி எந்தெந்த வகையான தொழிலுக்கு வழங்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள கைவினைஞர்களுக்குச் சொந்தமாகத் தொழில் துவங்க இதுவரை கதர் வாரியத்தால் நிதியுதவி ஏதும் வழங்கப்படவில்லை.

(2) மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு அறிமுகப்படுத்தியுள்ள விளிம்புத் தொகைத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் 116 கிராமத் தொழில்களுக்குக் கிராமப்புற மக்கள் பயனடையும் வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை விளிம்புத் தொகை மானியம் வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

(3) விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் தனி நபராகவோ, அல்லது கூட்டாகவோ முறைப்படி விண்ணப்பித்தால் சொந்தமாகத் தொழில் துவங்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் வழங்க வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

(4) மேற்படி திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டிற்குக் கதர் ஆணையக் குழு ரூ. 743.90 இலட்சம் ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தினைச் செயல்படுத்திட வாரியத்திற்குக் குறியீடு நிர்ணயித்துள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

18—

## கைமுறைக் காகித அலகு

**வினா எண் 73878—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அத்தாணியில் கைமுறைக் காகித அலகு தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

வாரியத்தின்கீழ் தொடர்ந்து இலாபத்தில் இயங்காத 15 கைமுறைக் காகித அலகுகள் அரசு ஆணை (நிலை) எண் 199, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர் (பி2) துறை, நாள் 12-11-1999-ன் ஆணைக்கிணங்க 1-12-1999 முதல் நிரந்தரமாக மூடப்பட்டு விட்டன.

(2) மேலும், வாரிய அலகில் உற்பத்தியாகும் கைமுறைக் காகிதப் பொருட்களின் விலை வெளிச் சந்தையில் விற்கப்படும் விலையைவிடக் கூடுதலாக இருப்பதால் அரசுத் துறை மற்றும் தனியார் துறைகளிடமிருந்து போதிய தேவை நமூனாக்கள் பெறப்படாமல், உற்பத்தித் திறன் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது.

(3) தற்போது வாரியத்தில் கடுமையான நிதி நெருக்கடி உள்ளதால் புதியதாக எந்தவொரு கைமுறைக் காகித அலகினையும் திறந்து நடத்திட வழிவகைகள் இல்லை.

**19—**

**கடனுதவி**

**வினா எண் 75793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்கக் கடன் உதவி வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கு சுய தொழில் துவங்கக் கடன் வழங்கிட வங்கிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டு, கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—





| வருடம் | எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| *2002-03* | *26* | *6.94* |
| *2003-04* | *26* | *7.28* |
| *2004-05* | *28* | *8.90* |

**20—**

**ரெக்சின் பை தொழிற்சாலை**

**வினா எண் 76683—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக, கதர் மற்றும் ரெக்சின் பேக் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திடம் தற்போது எந்த ஒரு தொழில் செய்வதற்கும் நேரடியாக நிதியுதவி வழங்கும் திட்டம் ஏதுமில்லை. கதர் கிராமத் தொழில் ஆணையம்மூலமாக விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் நிறுவப்படும் அனைத்து புதிய கிராமத் தொழில் திட்டங்களுக்கும் (கிராமங்களில் நிறுவப்படும் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்கின்ற அல்லது எத்தகைய சேவையும் செய்கின்ற மின் சக்தி கொண்டோ, அல்லது மின் சக்தியின்றியோ இயங்கக்கூடிய வேலைவாய்ப்புப் பெறும் அல்லது கைவினைஞரின் ஒருவருக்கான நிலைத்த முதலீடு ரூ. 50,000/-க்கு மிகாமலும் இருக்கின்ற தொழில்கள்) உயர்ந்தபட்சமாக ரூ. 25.00 இலட்சம் வரை மானியத்துடன் கடன் வழங்கப்படும். ரூ. 10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு 25 சதவீத விளிம்புத் தொகை மானியம் வழங்கப்படும்.

(2) விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக, கதர் மற்றும் ரெக்சின் பேக் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களாயின், தொழிலுக்கான திட்ட அறிக்கையை அளித்து, அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலமாக மானியத்துடன்கூடிய கடன் பெறலாம்.

[2006 ஜனவரி 17

21—

## கடனுதவி

**வினா எண் 22910—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ நிறுவனம் தனது பயனாளிகளுக்காகக் கடன் உதவி அளிக்கும்படி வங்கிகளுக்குப் பரிந்துரை செய்த விண்ணப்பங்கள் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை?

(ஆ) கேட்டுள்ள கடனுதவி எவ்வளவு?

(இ) இதில் எத்தனை விண்ணப்பங்களுக்குக் கடனுதவி வங்கிகளால் அளிக்கப்பட்டுள்ளது?

(ஈ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) 2001-02 ஆம் ஆண்டில், மொத்தம் 50,786 விண்ணப்பங்கள்மீது மொத்தம் ரூ. 7,778.17 இலட்சம் கடன் உதவி கோரி வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன. இதில் 31,616 விண்ணப்பதாரர்களுக்கு மொத்தம் ரூ.585.50 இலட்சத்திற்கு வங்கிகள் கடன் உதவி வழங்கியுள்ளன.

22—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 31573—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள சோமந்துறை ஊராட்சியில் குடியிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொள்ளாச்சி வட்டம், சோமந்துறை கிராமம் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்க நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நில எடுப்பு நடவடிக்கை முடிவடைந்ததும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

23—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 38522—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள சோமந்துறை ஊராட்சி ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி வட்டம், சோமந்துறை ஊராட்சி ஆதி திராவிட மக்களுக்கு க.ச. 87/2பி1 மற்றும் 88/3பி1 ஆகிய சாலைகளில் 2.17.0 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் வீடற்ற ஆதி திராவிட மக்களுக்குத் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

24—

## புதிய சமையற்கூடம்

**வினா எண் 44590—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எஸ். கண்ணனூர் பேரூராட்சி, நரசிங்கமங்கலத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் நலத் துவக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் கட்டித்தர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எஸ். கண்ணனூர் பேரூராட்சிக்குட்பட்ட நரசிங்கமங்கலம் ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளிக்குப் புதிய சமையற்கூடம் கட்டப்பட்டு இயங்கிவருகிறது.

25—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 60292—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் மலைவாழ் மக்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில எடுப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டவுடன், மேற்படி மலைவாழ் மக்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும்.



2006 ஜனவரி 17]

26—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 60625—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சூராடிமங்கலம் ஊராட்சியில் இருளர், கூடை முடைபவர், முடி திருத்துபவர் ஆகிய ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், நெ. 78, சூராடிமங்கலம், மதுரா, சின்னக்காட்டுப்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 51 நபர்களுக்கு 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதில் 20 நபர்களுக்கு 2004-2005 ஆம் நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுப் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

27—

## நிதியுதவி

**வினா எண் 61962—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் துவங்குவதற்காகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மத்திய அரசிடம் இருந்து நிதியுதவி பெறப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் துவங்குவதற்காகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மத்திய அரசிடம் இருந்து நேரிடையாக நிதி ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும், மத்திய அரசினால் வழங்கப்படும் சிறப்பு மத்திய நிதியில் (SCA) இருந்து மேற்கண்ட தொழிற்பேட்டைகள் அமைத்திடத் தமிழ்நாடு அரசால் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது:

| | |
|---|---|
| 1. கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையம் தொழிற்பேட்டை | ரூ. 9.22 கோடி |
| 2. ஈரோடு தொழிற்பேட்டை | ரூ. 21.03 கோடி |
| மொத்தம் .. | ரூ. 30.25 கோடி |

**28—**

**நிலம் கையகம்**

**வினா எண் 63405—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், போடிப்பட்டி ஊராட்சியின் திருமூர்த்தி ஆரை பின்புறமுள்ள நாய்க்கர் இடத்தை ஆதி திராவிடர்களுக்கு நிலம் கையகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் எதுவும் தற்போது நிலுவையில் இல்லை. எனவே, நிலம் கையகம் செய்யக் கருத்துரு பரிசீலனையில் இல்லை.



**29—**

**சிற்றுந்து வாங்கக் கடனுதவி**

**வினா எண் 67590—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் சிற்றுந்து வாங்க, தாட்கோ மூலம் கடனுதவி கேட்டு ஆதி திராவிடப் பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் தாட்கோமூலம் சிற்றுந்து வாங்கக் கடனுதவி கோரி ஆதி திராவிடப் பட்டதாரிகள் ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

**30—**

**இலவச நோட்டுப் புத்தகம்**

**வினா எண் 71564—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன்மலையில் உள்ள உறைவிடப் பள்ளிகளில் படிக்கும் மலைவாழ் மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் திட்டப்படி அனைத்துப் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி, 2005-2006 ஆம் கல்வி

[2006 ஜனவரி 17

ஆண்டிற்கு 2005 ஜுலை மாதத்தில் கல்ராயன்மலை பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

31—

### செவிலியர் பயிற்சி

**வினா எண் 82848—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தாட்கோ மூலம் 2001-2002 ஆம் ஆண்டு செவிலியர் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், தாட்கோமூலம் 2001-2002 ஆம் ஆண்டு செவிலியர் பயிற்சி ஏதும் அளிக்கப்படவில்லை.

32—

### பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 20384—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், விக்கிரமங்கலம் பஞ்சாயத்து, நரியம்பட்டி கள்ளர் சீரமைப்புப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, நரியம்பட்டி அரசுக் கள்ளர் துவக்கப் பள்ளிக்கு, 2004-2005 ஆம் ஆண்டு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் இரு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு, ஜுலை 2005 முதல் பயன்பாட்டில் உள்ளது.



2006 ஜனவரி 17]

33—

### சத்துணவுக் கூடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 20956—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நக்கலம்பட்டி பஞ்சாயத்து முத்துப்பாண்டி பட்டியிலுள்ள அரசு கள்ளர் துவக்கப் பள்ளி சத்துணவுக் கூடத்தைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, முத்துப்பாண்டி பட்டி அரசு கள்ளர் துவக்கப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கூடம் உசிலம்பட்டி ஊராட்சிமூலம் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு, புதிய கட்டடத்தில் ஜனவரி 2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

34—

### கோழிகளை வளர்த்தல்

**வினா எண் 54331—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெருப்புக் கோழிகள் வளர்க்க தனியார்களை ஊக்கப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நெருப்புக் கோழிகள் வளர்க்க தனியார்களை ஊக்கப்படுத்தும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

[2006 ஜனவரி 17

35—

## புதிய கட்டடம்

**வினா எண் 63422—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, அம்மனாங்கோயில் ஊராட்சி, புதுப்பேட்டை கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கிளை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, அம்மனாங்கோயில் ஊராட்சி, புதுப்பேட்டை கிராமத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு அம்மனாங்கோயில் ஊராட்சி 0.50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ. 19.70 இலட்சம் செலவில் NABARD திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

36—

## கால்நடை துணை சுகாதார நிலையம்

**வினா எண் 64739—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சாமியத்தில் உள்ள கால்நடை துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சிக்கு உட்பட்ட சாமியம் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், அவ்விடத்தில் கால்நடை கிளை நிலையத்தை தரம் உயர்த்துவது குறித்த வினா எழாது.

37—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 69625—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியம், ஆலடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் ஒன்றியம், ஆலடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

38—

## கால்நடை துணை மருத்துவ நிலையம்

**வினா எண் 69652—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியில் கால்நடை துணை மருத்துவ நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ளதால் சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**39—**

## கோழித் தீவனத் தொழிற்சாலை

**வினா எண் 69895—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூரில் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசுத் தரப்பில் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.



**40—**

## கவுதாரி வளர்ப்புப் பண்ணை

**வினா எண் 70000—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை பகுதியில் கவுதாரி வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கவுதாரி வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டமேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**41—**

## காடை வளர்ப்புப் பண்ணை

**வினா எண் 70001—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை சிங்கோனாவில் காடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை சிங்கோனாவில் காடை வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

[2006 ஜனவரி 17

42—

### துணை கால்நடை மருத்துவமனை

**வினா எண் 71616—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, மண்டகொளத்தூர் கிராமத்திற்குத் துணை கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பெரணமல்லூர் தொகுதி, மண்டகொளத்தூரில் கால்நடை கிளை நிலையம் எதுவும் செயல்படாததால், கட்டடம் கட்டுவது குறித்துக் கேள்வி எழவில்லை. இந்தக் கிராமம் கொம்மனந்தல் கால்நடை கிளை நிலைய எல்லைக்குட்பட்ட கிராமம் ஆகும். கொம்மனந்தல் கால்நடை கிளை நிலையம் நிரந்தரக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

43—

### துணை கால்நடை மருத்துவமனை

**வினா எண் 71617—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, மடம் கிராமத்திற்குத் துணை கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மடம் கிராமத்திற்கு அருகில் கால்நடை கிளை நிலையங்கள் கோட்டுப்பாக்கம் 3 கிலோ மீட்டர் தொலைவிலும், மலையூர் கால்நடை



2006 ஜனவரி 17]

கிளை நிலையம் 4 கிலோ மீட்டர் தொலைவிலும் செயல்பட்டு வருவதால் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

### கால்நடை துணை மருத்துவமனை

**வினா எண் 79892—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், இராயாணம்பட்டி கிராம விவசாய மக்களுக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிதாகக் கால்நடை கிளை நிலையம் அமைக்க விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ள நிலையில், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், இராயாணம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

### கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 81060—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பிலிக்கல்பாளையத்தில் கால்நடை கிளை மருத்துவமனை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாகக் கால்நடை கிளை நிலையம் அமைக்க விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ள நிலையில், கபிலர்மலை ஒன்றியத்திலுள்ள பிலிக்கல்பாளையத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**46—**

## கால்நடை துணை நிலையம்

**வினா எண் 81097—திரு. ப. மோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியம், பெரிய சிறுவத்தூர் மற்றும் ஈரியூர் ஊராட்சிகளில் கால்நடை துணை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிதாகக் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ளதால், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள பெரிய சிறுவத்தூர் மற்றும் ஈரியூர் ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**47—**

## ஆடு வளர்த்தல்

**வினா எண் 81846—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூர் சிறப்பு ஊராட்சிப் பகுதி மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஆகிய இடங்களில் ஆடு வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை, கோட்டூர் சிறப்பு ஊராட்சிப் பகுதி மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஆகிய இடங்களில் ஆடு வளர்க்கத் தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பேதும் இல்லை.

(ஆ) எழாது.

**48—**

## கால்நடை மருத்துவமனை துவங்குதல்

**வினா எண் 84015—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதிதாகப் பகுதிநேர கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியில் பகுதிநேர கால்நடை நிலையம் துவக்கிடத் தற்போது சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**49—**

## வணிக வரி நிலுவைத் தொகை

**வினா எண் 24059—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) தமிழகத்தில் வசூலாகாமல் நிலுவையிலுள்ள வணிக வரித் தொகை எவ்வளவு?

(ஆ) அவை எப்போது வசூலிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 30-6-2004 முடிய பழைய வரி நிலுவை மற்றும் நடப்பு வரி நிலுவை ரூ.8,566.19 கோடி ஆகும்.

(ஆ) வரி ஏய்ப்புச் செய்வோர் பலர் வியாபாரத்தை நிறுத்திவிட்டு வெளிமாநிலங்களுக்குத் தலைமறைவாகச் சென்றதாலும், அவர்களின் இருப்பிடத்தை அறிய இயலாமையும், வரி பாக்கியினை வசூலிக்க இயலாமைக்கான காரணங்களாகும். நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையாக இருப்பதாலும், வரி பாக்கியினை வசூலிக்கத் தடையாணைகள் உள்ளதாலும் வரி பாக்கியினை வசூலிக்க இயலவில்லை. நிலுவை வசூலினைத் துரிதப்படுத்தும் நோக்கில், ''சமாதானத் திட்டம்'' அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், Settlement Commission ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வரி நிலுவை பற்றி வணிக வரி ஆணையரும், சார் நிலை அலுவலர்களும் ஆய்வுகளை மேற்கொண்டு, வரியினை வசூலித்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இம்முயற்சிகளினால் வரி நிலுவை கணிசமாகக் குறைய வாய்ப்பு உள்ளது.

**50—**

## தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயமாக்குதல்

**வினா எண் 27156—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டில் (பி.இ.) தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயமாக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டில் (பி.இ.) தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயமாக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**51—**

## பொறியியல் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 47826—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் கல்வியாண்டில் சேலத்தில் புதிதாகப் பொறியியல் கல்லூரி துவங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

**52—**

## பல்கலைக்கழகம்

**வினா எண் 67919—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின்

[2006 ஜனவரி 17

கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்தன. தற்போது சேலம், ஈரோடு, தருமபுரி மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள், சேலத்தில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள பெரியார் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. எனவே, ஈரோட்டில் மீண்டும் ஒரு புதிய பல்கலைக்கழகம் துவங்க அவசியம் எழவில்லை.

**53—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 69369—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் முதுநிலைப் பட்டப் பிரிவில் புதிய பாடங்கள் துவங்கப்பட்டுள்ளதற்கேற்ப கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

**54—**

## தேர்வு மையம்

**வினா எண் 74266—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளியை பிளஸ் 2 தேர்வு மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளியை பிளஸ் 2 தேர்வு மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**55—**

## கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 74496—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி அரசு கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டட வசதிகள் செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

**56—**

## பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 74502—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம் துவங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம் துவங்கத் தற்போது கருத்துரு எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

57—

### தினப் படித் தொகையை அதிகப்படுத்துதல்

**வினா எண் 74773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிளஸ் 2 அரசு பொதுத் தேர்வுக்குச் செல்லும் மேற்பார்வை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தினப் படித் தொகையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கு மேற்பார்வைப்பணி மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு அரசாணை எண் 88, பள்ளிக் கல்வித் துறை, நாள் 26-3-99-ல் மார்ச் 1999 தேர்வு முதல் உள்ளூர் ஆசிரியராயின் ரூ.40/-ம், வெளியூர் ஆசிரியராயின் ரூ.60/-ம் உழைப்பூதியமாக வழங்கப்படுகிறது. உழைப்பூதியத் தொகையை உயர்த்துவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

58—

### ஆசிரியர்களுக்கு மேற்பார்வைப் படி

**வினா எண் 74775—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 17]

எஸ்.எஸ்.எல்.சி. அரசுத் தேர்வுக்கு மேற்பார்வையாளராகச் செல்லும் ஆசிரியர்களுக்கு மேற்பார்வைப் படி ரூ.50/-ஐ அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுக்கு மேற்பார்வையாளராகச் செல்லும் ஆசிரியர்களுக்கு மேற்பார்வைப் படி அரசாணை எண் 88, பள்ளிக் கல்வித் துறை, நாள் 26-3-1999-ன்படி, உள்ளூர் ஆசிரியராயின் ரூ.30/-ம், வெளியூர் ஆசிரியராயின் ரூ.50/-ம் மார்ச் 1999 தேர்வு முதல் வழங்கப்படுகிறது. இத்தொகையை உயர்த்துவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

59—

### தேர்வு மையம்

**வினா எண் 75150—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, நாலாட்டின்புத்தூர் சாரதா அரசு மேல்நிலைப் பள்ளியை பிளஸ் 2 தேர்வு மையமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கிராமப்புறப் பள்ளியினைப் பொறுத்தமட்டில் புதிய தேர்வு மையமாக அமைக்கக் குறைந்தபட்சம் மாணவ/மாணவியரின் எண்ணிக்கை 125 இருத்தல் வேண்டும். ஆனால், கோவில்பட்டி தொகுதி, நாலாட்டின்புத்தூர் சாரதா அரசு மேல்நிலைப் பள்ளியில் மார்ச் 2005-ல் 68 மாணவ/மாணவியர்கள் மட்டும் கோவில்பட்டி லட்சுமி மில்ஸ் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு எழுதியுள்ளனர். மேலும், இப்பள்ளியைத் தேர்வு மையமாக அமைக்க அப்பள்ளியின்

[2006 ஜனவரி 17

தலைமையாசிரியரிடமிருந்து கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, இப்பள்ளியைத் தேர்வு மையமாக அமைக்கக் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

60—

## தொழில்நுட்பக் கல்லூரி

**வினா எண் 81133—திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, ஆலங்குளத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகாசி தொகுதி, ஆலங்குளத்தில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை. சிவகாசி தொகுதியினை உள்ளடக்கிய விருதுநகர் மாவட்டத்தில் தற்போது நான்கு அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளும், நான்கு சுய நிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் நடைபெற்று வருகின்றன. அவைகளில், சென்ற கல்வியாண்டில் (2004-2005) ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மொத்தமுள்ள 2,730 இடங்களில் சுமார் 23% இடங்கள் காலியாக இருந்தன. இந்த நிலையில், புதிய அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம் துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

## திருமலை நாயக்கர் மகாலைப் புதுப்பித்தல்

**வினா எண் 81193—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை திருமலை நாயக்கர் மகாலைப் புதுப்பிக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மதுரை திருமலை நாயக்கர் மகாலைப் புதுப்பிக்கும் பணி ரூ.100 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டன. 1-1-2005 முதல் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

62—

## கல்லூரிகளுக்குக் கணினி வழங்குதல்

**வினா எண் 81196—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2004-2005 ஆம் ஆண்டில் எத்தனை கல்லூரிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குப் புதியதாகக் கணினி ஏதும் வழங்கப்படவில்லை.

63—

## கலைக் கல்லூரிக்குத் தேர்வு எழுதும் அரங்கம்

**வினா எண் 81404—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசு கலைக் கல்லூரிக்குத் தேர்வு எழுதும் அரங்கம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**64—**

## டேனிஷ் கோட்டையைப் புதுப்பித்தல்

**வினா எண் 81457—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையைப் புதுப்பிக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) பணி எப்போது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 11-வது நிதிக் குழு மானியத்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.3.15 இலட்சம் மற்றும் அரசால் வழங்கப்பட்ட ரூ.3.5 இலட்சம் ஆகியவற்றின்மூலம் பொதுப் பணித் துறை வாயிலாகத் தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை புனரமைக்கப்பட்டு, பணிகள் 31-3-2005-க்குள் முடிக்கப்பட்டன.

**65—**

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

**வினா எண் 64740—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், மங்கைமடம் ஊராட்சியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியத்தில் அமைந்துள்ள மங்கைமடம் ஊராட்சியில் உள்ள 250 கறவை மாடுகள்மூலமாக நாள் ஒன்றுக்கு 400 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பால் முழுவதும், அருகில் உள்ள சட்டநாதபுரம் மற்றும் காவேரிப்பூம்பட்டினம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அக்கிராமத்தில் எவரும் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க முயற்சிக்கவில்லை. மேலும், இக்கிராமத்தில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு, செயலிழந்த நிலையில் தற்போது கலைக்கப்பட்டுவிட்டது. எனவே, அதனை மீண்டும் செயல்படுத்த யாரும் முன்வரவில்லை. இக்கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**66—**

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 66004—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில், குறிப்பாகப் புதுப்பட்டினத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் கிராமத்தில் 200 கறவை மாடுகள்மூலம் சுமார் 500 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது. அவ்வூர் மக்கள் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க

[2006 ஜனவரி 17

விரும்பவோ, முயற்சிக்கவோ இல்லை. இக்கிராமம் ஒன்றியப் பால் வழித்தடத்தில் அமையவில்லை. மேலும், இக்கிராமம் நகரை விட்டு மிகவும் உள்ளே அமைந்துள்ளதால், போக்குவரத்து வசதி மிகக் குறைவாக உள்ளது. இக்கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் லாபகரமாகச் செயல்பட வாய்ப்பில்லை. எனவே, சீர்காழி தொகுதி புதுப்பட்டினத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**67—**

**பால் பண்ணை அமைத்தல்**

**வினா எண் 66485—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் பால் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் ரொட்டிக்கடை மற்றும் சோலையார் நகர் ஆகிய இரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு, போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால், அச்சங்கங்கள் தற்சமயம் செயலிழந்துள்ளன. மேலும், வால்பாறை பகுதி நகரியமாகச் செயல்படுவதால் அங்கு கால்நடைகளை வைத்துப் பராமரிக்கப் போதிய வசதிகள் இல்லை என்பதால், தற்சமயம் வால்பாறையில் பால் பண்ணை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**68—**

**ஆவின் பால் விற்பனை**

**வினா எண் 67994—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஆவின் பாலகம் அமைக்க திரு. எம். செல்வம் என்பவருக்கு 9-3-2005-ல் அனுமதியளித்தும், எடப்பாடி நகராட்சி இட அனுமதியளிக்காததால், இன்னும் ஆவின் பாலகம் துவங்க முடியவில்லை. எடப்பாடி நகராட்சி இட அனுமதி அளித்தவுடன், எடப்பாடி பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்து, ஆவின் பால் விற்பனை அதிகரிக்கப்படும்.

**69—**

**பால் உற்பத்தி அதிகரிப்பு**

**வினா எண் 71052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஸ்டெப் திட்டத்தின்கீழ் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்துவதன்மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஸ்டெப் திட்டத்தின்கீழ் சேலம், ஈரோடு, தருமபுரி, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 2002-2003 ஆம் ஆண்டு முதல் 2004-2005 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளில் மொத்தக் குறியீடான 145 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள்மூலம் தற்பொழுது நாளொன்றுக்கு சுமார் 27,724 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

[2006 ஜனவரி 17

70—

## மீனவர்களுக்கு வீடுகள்

**வினா எண் 38697—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள உள்நாட்டு மீனவர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் மீனவர் கிராமத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் 43 வீடுகளும், 2003-2004 ஆம் ஆண்டில் 13 வீடுகளும் ஒப்பளிக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

71—

## குளங்களில் மீன் வளர்ப்பு

**வினா எண் 59373—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள வாலங்குளம், உக்கடம், குறிச்சிக்குளம் மற்றும் முத்தனங்குளங்களில் மீன்களை அதிகமாக வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்குளங்கள் பொதுப் பணித் துறையைச் சார்ந்த குளங்களாகும். அரசாணை எண் 332, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை (மீன்-4), நாள் 17-11-1993-ன்படி இம்மாதிரியான குளங்களில் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் மீன்பாசிக் குத்தகை மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. குத்தகைதாரருக்கு மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள், மீன் வளர்ப்பில் பயிற்சி போன்றவை மீன் துறையின்மூலம் மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருகிறது.



2006 ஜனவரி 17]

72—

## தொகுப்பு வீடு கட்டுதல்

**வினா எண் 63762—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கடைக்காடு மீனவர் கிராமங்களில் மீன்வளத் துறைமூலம் தொகுப்பு வீடு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கடைக்காடு மீனவர் கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

73—

## மீனவர்களுக்கு காலனி வீடுகள்

**வினா எண் 64750—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, கீழமூவர்க்கரை, கூழையார் கிராமம் மற்றும் சாவடிக்குப்பம் பகுதிகளில் மீனவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, கீழமூவர்க்கரை, கூழையார் கிராமம் மற்றும் சாவடிக்குப்பம் பகுதி மீனவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

[2006 ஜனவரி 17

## மீனவ மக்களுக்கு இலவச வீடு

**வினா எண் 67257—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார், மடத்துக்குப்பம், மேலமூவர்க்கரை, கொடியம்பாளையம், ஓடைகொட்டாய்மேடு மற்றும் கொட்டாய்மேடு மீனவ மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார், மடத்துக்குப்பம், மேலமூவர்க்கரை, கொடியம்பாளையம், ஓடைகொட்டாய்மேடு மற்றும் கொட்டாய்மேடு மீனவ மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

## மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள்

**வினா எண் 69382—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட மோர்தானா நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட மோர்தானா நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் தனியான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 17]

76—

## மீன் ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 82937—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடியில் மீன் ஆராய்ச்சி நிலையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கட்டுமாவடியில் மீன் ஆராய்ச்சி நிலையம் தொடங்கும் எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 90348—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி கடற்கரையோரக் கிராமப் பகுதிகளில் சிறு படகு கட்டுமானத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்தின் கடற்கரையோரக் கிராமப் பகுதிகளில் சிறு படகு கட்டுமானத் தொழிற்சாலை ஒன்று துவக்கி, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

## சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 82438—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள அக்காமலை புல்வெளி, மீன்பாறை நல்லமுடி, பூஞ்சோலை, ஹைஃபாரஸ்ட், எடமலையார் பள்ளதாக்குக்

காட்சியுள்ள பகுதி, இறைச்சிப்பாறை நீர்வீழ்ச்சி, சின்னக்கல்லார் நீர்வீழ்ச்சி, குரங்கு நீர்வீழ்ச்சி, டாப்சிலிப், பிர்லா நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களைச் சுற்றுலாப் பகுதிகளாக அறிவிக்க இந்நிதியாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையிலுள்ள அக்காமலை புல்வெளி, மீன்பாறை நல்லமுடி, பூஞ்சோலை, ஹைஃபாரஸ்ட், எடமலையார் பள்ளத்தாக்குக் காட்சியுள்ள பகுதி, இறைச்சிப்பாறை நீர்வீழ்ச்சி, சின்னக்கல்லார் நீர்வீழ்ச்சி, குரங்கு நீர்வீழ்ச்சி, டாப்சிலிப், பிர்லா நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களைச் சுற்றுலாப் பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அரசு எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாப் பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால், தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம், அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, நிதி நிலைமை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு சுற்றுலாத் தலங்களில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**79—**

### பயிற்சிப் பள்ளி

**வினா எண் 50463—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வேலைவாய்ப்புக்காக நடத்தும் பயிற்சிப் பள்ளியை வால்பாறையில் நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.





**80—**

### உறுப்பினர் சேர்க்கை

**வினா எண் 74335—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பயன்பெற 3 பீடித் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

**81—**

### முத்திரையிடப்படாத கருவிகள்

**வினா எண் 77850—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2004 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் முத்திரையிடப்படாத எடை அளவுக் கருவிகள் பயன்படுத்தியதாக எவ்வளவு பேர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது?

(ஆ) அவர்கள்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் எடையளவுச் சட்டத்தின்கீழ் 1661 கடைகள்/நிறுவனங்கள்மீது முரண்பாட்டிற்கான இசைவுத் தீர்வு நடவடிக்கை நோட்டீஸ் அளிக்கப்பட்டது. இசைவுத் தீர்வுக் கட்டணமாக ரூ.4,57,170/- வசூலிக்கப்பட்டது.

[2006 ஜனவரி 17

82—

## மருத்துவ வசதி

**வினா எண் 80531—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ. மருத்துவ வசதியை விரிவாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அமைப்பு சாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துகொண்டுள்ள தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமானால், வேலையளிப்பவர்களும் பங்கீட்டுத் தொகை செலுத்த வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலோர் சுய தொழில் புரிபவராக உள்ளனர். பெரும்பாலான அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலையளிப்பவர்கள் கிடையாது. மேலும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இடம் விட்டு இடம் பெயரும் நிலை உள்ளது. வாரியத்தில் பதிவு செய்துகொண்டுள்ள தொழிலாளர்களுக்கு, வாரியத்திலிருந்து வேலையளிப்பவரின் பங்கீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டுமெனில், தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொள்ளும்போது அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ மருத்துவ வசதியை விரிவுபடுத்தி செயல்படுத்துவதற்குச் சாத்தியம் இல்லை.

83—

## பீடித் தொழிலாளர்களுக்கு உதவி

**வினா எண் 80543—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உதவித் திட்டங்களைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பீடித் தொழிலாளர்களுக்கான அனைத்து நலத் திட்டங்களையும் ஹைதராபாதில் உள்ள மத்திய அரசின் நல ஆணையர் மூலம் மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் வழங்கப்படும் மானியத் தொகை ரூ.40,000/- உடன் பீடித் தொழிலாளர்கள், அவர்கள் வீடு கட்டும்பட்சத்தில் மாநில அரசின் மானியமாக ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய 2005 ஆம் ஆண்டு திருத்திய ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர் மூலமாக அதிக அளவில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 81211—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் கூடுதலாகத் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் ஏற்கெனவே ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், இரண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருவதாலும், இம்மாவட்டத்தில் மேலும் இரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 27 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருவதாலும், மேட்டூரில் கூடுதலாகத் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

[2006 ஜனவரி 17

85—

### தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 81953—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடியில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், 21 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருவதால், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

86—

### தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 81955—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 10 தொழிற் பிரிவுகளைக் கொண்டு 344 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. அறந்தாங்கியில் வெஸ்லி ஐடிசி என்ற தனியார் தொழிற்பயிற்சி மையம் 38 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. அறந்தாங்கி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி



2006 ஜனவரி 17]

நிலையமும், வெஸ்லி ஐடிசி உட்பட 21 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்குவதால், அறந்தாங்கி நகரில் மேலும் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

87—

### குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடுத்தல்

**வினா எண் 83443—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில், குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் "அனைவருக்கும் கல்வித்" திட்டத்தின்படி கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில், 382 குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களை சிறப்புப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் 744 சிறுவர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் இருந்து முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டனர். மேலும், இம்மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்காகத் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலர்கள் சட்ட விதிமுறைகளை அமலாக்கம் செய்து வருவதுடன், தொழில் மற்றும் ஏனைய நிறுவனங்களில் குழந்தைகள் பணியமர்த்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டால், அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு பள்ளிகளில் சேர்க்கப்படுவதுடன், வேலையளிப்பவர் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. மேலும், மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழு அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் கூட்டாய்வு மேற்கொண்டு வருகின்றனர். மேலும், அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் அனைவரையும் கண்டறிந்து, 2005 ஆம் ஆண்டுக்குள் அவர்கள் அனைவரையும் வேலையிலிருந்து விடுவித்து மறு வாழ்வு அளிப்பதுடன், அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் இனி ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்ற நிலையை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இம்மாவட்டத்தைக் குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டமாக அறிவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2006 ஜனவரி 17

88—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 83534—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மற்றும் கோட்டூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றைத் துவங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறை மற்றும் கோட்டூர் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 1,284 இருக்கைகளுடன் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 31 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் இம்மாவட்டத்தில் தொழிற்கல்வி பயில விரும்பும் மாணவ, மாணவிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளன. எனவே, வால்பாறை மற்றும் கோட்டூரில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

89—

## கணினிமயமாக்குதல்

**வினா எண் 83930—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தைக் கணினிமயமாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 239, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 2-12-2003-ல் வழங்கப்பட்ட ஆணையினைத் தொடர்ந்து கோயம்புத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ரூ.5 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டது.



2006 ஜனவரி 17]

90—

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 83952—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் ஆதி திராவிடர் மாணவ, மாணவிகளுக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் தனியார் தொழிற்பயிற்சி மையமான அத்திப்பாக்கம் ஐடிசி 128 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. மேலும் இங்கு இரண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளதாலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில், அத்திப்பாக்கம் ஐடிசி உட்பட 13 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருவதாலும், அவைகளில் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் சேர்ந்து பயிற்சி பெற வாய்ப்புள்ளதாலும், மேலும் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஆதி திராவிடர் மாணவ, மாணவியருக்குத் துவங்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

91—

## பூங்கா அமைத்தல்

**வினா எண் 50789—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பூங்கா ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான வட்டாட்சியர் அலுவலகம் அருகில் உள்ள 1 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்கா அமைக்கும்பொருட்டு, பல்வேறு நிறுவனங்களிடம் அணுகியதில் எந்த ஒரு நிறுவனமும் முன்வராத காரணத்தால் பூங்கா அமைக்கும் திட்டம் எதுவும் நகராட்சியிடம் இல்லை.

**92—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 58258—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள ஷேக்கல்முடி சாலையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை, ஷேக்கல்முடி சாலை, பாரி அக்ரோ தேயிலை நிறுவனத்திற்குச் சொந்தமான பகுதியாகும். அச்சாலை நகராட்சிக்குச் சொந்தமானது அல்லவென்பதால், அச்சாலையினை நகராட்சிமூலம் சீரமைக்க வாய்ப்பில்லை.

**93—**

## தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 62173—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை முடிஸ் பேருந்து நிலையத்திலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை முடிஸ் பேருந்து நிலையம் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான இடமாகும். அந்நிறுவனத்தின்மூலம் பேருந்து நிலையம் அருகில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளனர். அந்த இடம் வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லையாதலாலும், அப்பேருந்து நிலையத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வால்பாறை நகராட்சியில் நடவடிக்கை ஏதுமில்லை.

**94—**

## சிமெண்ட் தளம்

**வினா எண் 68011—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரத்தில் அரச மரத் தெரு மற்றும் சிவனார் தெரு இணைப்புச் சாலைக்கு சிமெண்ட் தளம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரத்தில் அரச மரத் தெரு மற்றும் சிவனார் தெரு இணைப்புச் சாலைக்கு சிமெண்ட் தளம் அமைக்கத் தற்போது திருப்பத்தூர் நகராட்சியில் போதிய நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால், தொலைநோக்குத் திட்டத்தில் மேற்படி பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

95—

## சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 68035—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகராட்சி, 23-வது வார்டு, டாக்டர் வரதராஜன் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகராட்சி, 23-வது வார்டு, 330 மீட்டர் நீளமுள்ள டாக்டர் வரதராஜன் தெருவில் 270 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 60 மீட்டர் நீளத்திற்குத் தார்ச் சாலை நல்ல நிலையில் உள்ளது. எனவே, மீதமுள்ள 60 மீட்டர் நீளத்திற்குத் தார்ச் சாலையினை மாற்றி சிமெண்ட் சாலை அமைக்கத் தேவையில்லை.

96—

## கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல்

**வினா எண் 68927—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தொகுதி, காசிபாளையம் நகராட்சி, சேனாதிபதிபாளையத்தில் கழிவு நீர்க் கால்வாய் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காசிபாளையம் மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட 19-வது வார்டில் உள்ள சேனாதிபதிபாளையம் பகுதியில் 200 குடும்பங்கள் உள்ளன. வீதிகளுக்கு வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாகக் கழிவு நீர் வடிகால் அமைக்க வேண்டியது இல்லை.

97—

## புதியதாக நவீனக் கழிப்பிடம்

**வினா எண் 68929—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு தொகுதி, சூரம்பட்டி மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட அணைக்கட்டுப் பகுதியில் புதியதாக நவீனக் கழிப்பிடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு தொகுதி, சூரம்பட்டி மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட அணைக்கட்டுப் பகுதியில் புதியதாக நவீனக் கழிப்பிடம் கட்ட இட வசதி இன்மையால் அத்தகைய கருத்துரு ஏதுமில்லை.

98—

## வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள்

**வினா எண் 78139—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227001
சென்னை-600 008

[2006 ஜனவரி 17

மாணவ, மாணவியர்களுக்கு தேசப பற்றை உருவாக்க கல்லூரி, பள்ளிகளில் தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை செய்தித் துறைமூலம் படமெடுத்து வெளியிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவினால் 35 மி.மீ. பிலிமிலும், வீடியோவிலும் தயாரிக்கப்படும் செய்திப் படங்கள் மற்றும் தேசத் தலைவர்கள் குறித்து எடுக்கப்படும் விளக்கப் படங்கள் ஆகியவை திரையரங்குகள், தொலைக்காட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வேன்கள்மூலம் பொது மக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்படுகின்றன. அத்தகைய படங்கள், கல்லூரி மற்றும் பள்ளிகளில் வீடியோ வேன்கள்மூலம் திரையிடப்பட வேண்டும் என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் தேசத் தலைவர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் போன்ற சான்றோர்களுக்கு அரசால் நிறுவப்பட்டுள்ள நினைவகங்களுக்குப் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். காந்தியடிகள் மற்றும் பிற தலைவர்கள் பிறந்த நாள் விழாக்களில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவைகளை நடத்துவதன்மூலம் தேசத் தலைவர்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளை மாணவ, மாணவியர் அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

**99—**

### கடன் உதவி

**வினா எண் 78145—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கடன் உதவி வழங்கி வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசினால், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு, சுலபத் தவணை முறையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள்/ குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் திட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் மாநில பாரத வங்கி ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கடன் உதவி வழங்கி வீடு கட்டித்தரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**100—**

### விளம்பரம் செய்த தொகை

**வினா எண் 79244—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2004 ஆம் ஆண்டு தமிழக அரசு, அரசின் செயல் திட்டங்களை விளக்குவதற்காக விளம்பரம் செய்த செலவுத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2004-2005 ஆம் நிதி ஆண்டில் தமிழக அரசின் செயல் திட்டங்களை விளக்குவதற்காக விளம்பரம் செய்த வகையில் ஏற்பட்ட செலவினத் தொகை ரூ. 4,27,59,426 ஆகும்.

[2006 ஜனவரி 17

பட்டியல் 2

1—

சுற்றுலா மாளிகை

**வினா எண் 69731—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

2—

சிறுசேமிப்புமூலம் வசூல்

**வினா எண் 77845—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2004-2005 ஆம் ஆண்டிற்காக சேலம் மாவட்டத்திற்கு சிறுசேமிப்புத் துறை மூலம் வசூலிக்க எவ்வளவு தொகையை அரசு நிர்ணயம் செய்தது?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) 2004-2005 ஆம் ஆண்டிற்காக சேலம் மாவட்டத்திற்கு சிறுசேமிப்புத் துறைமூலம் வசூலிக்க அரசு நிர்ணயம் செய்த தொகை ரூ. 240 கோடி (ரூபாய் இருநூற்று நாற்பது கோடி மட்டும்) ஆகும்.

(ஆ) ஆம். இலக்கு எய்தப்பட்டது. 2004-2005 ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களின்மூலம் சேலம் மாவட்டத்தில் மொத்த வசூல் தொகையாக ரூ. 478.94 கோடியும், நிகர வசூல் தொகையாக ரூ. 298.63 கோடியும் வசூல் செய்யப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட நிகர இலக்கைவிட ரூ. 58.63 கோடி கூடுதலாகும்.



2006 ஜனவரி 17]

3—

கிளை நீதிமன்றம் ஏற்படுத்துதல்

**வினா எண் 62268—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் கிளை நீதிமன்றம் ஒன்றை அரசு ஏற்படுத்த ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் கிளை நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

4—

கோதுமை மற்றும் அரிசி வழங்குதல்

**வினா எண் 61071—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் வேளாண் வங்கிகள் மூலமாக 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு கோதுமை மற்றும் அரிசி வழங்கப்பட்டது.

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட 41 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 234 நியாய விலைக் கடைகளுக்கு அத்தொகுதியின் தலைமைச் சங்கமான அறந்தாங்கி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் அரிசி மற்றும் கோதுமை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:—

(அளவு மெட்ரிக் டன்னில்)

| வ.எண் | வருடம் | அரிசி | கோதுமை |
|---|---|---|---|
| 1. | 2001-2002 | 13,124 | 116 |
| 2. | 2002-2003 | 10,877 | 125 |
| 3. | 2003-2004 | 10,335 | 113 |

5—

## கல்விக் கடன் வழங்குதல்

**வினா எண் 70732—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி நகர்ப்புறக் கூட்டுறவு வங்கி, கோட்டூர், அங்களக்குறிச்சி, முடிஸ், சோலையார், சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர் ஆகிய வங்கிகளில் 2005-2006 ஆம் ஆண்டுக்குக் கல்விக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள் முடிஸ்,



சோலையார் டேம் ஆகியவற்றில் 85% செயல்படாச் சொத்துக்கள் நிலுவை உள்ளதால் 2005-2006 ஆம் ஆண்டில் கல்விக் கடன் வழங்க இயலாத நிலையில் இவ்வங்கி உள்ளது.

சேத்துமடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 2005-2006 ஆம் ஆண்டில் கல்விக் கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வங்கியின் அறிவிப்புப் பலகையில் கல்விக் கடன் வழங்குவது தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி கோட்டூர் மற்றும் ஆனைமலை ஆகிய கிளைகள்மூலம் வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கல்விக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

## கோயில்களுக்கு மின்சார வசதி

**வினா எண் 71020—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி, கருமாத்தூர் முனுசாமி கோயிலுக்கு உட்பட்ட 10 உப கோயில்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நலிவடைந்த திருக்கோயில்களில் ஒரு விளக்குத் திட்டம் ஏற்படுத்தும்பொருட்டு, 2000-2001 மற்றும் 2001-2002 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் சேர்த்து, மொத்தம் 2,000 திருக்கோயில்களுக்கு மட்டும் இலவச மின்சாரத் திட்டம் அரசால் அனுமதிக்கப்பட்டு, 2,000 திருக்கோயில்கள் தெரிவு செய்யப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. இதன் பின்பு இத்திட்டம் அரசால் நீடிக்கப்பெறாத நிலையில், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி, கருமாத்தூர் முனுசாமி கோயிலுக்கு உட்பட்ட 10 கோயில்களுக்கு இலவச மின்சாரத் திட்டம் செயல்படுத்த வழி இல்லை.

7— [2006 ஜனவரி 17

### ஒரு கால பூஜை

**வினா எண் 72363—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் உள்ள திருக்கோயில்களில் ஒரு கால பூஜைத் திட்டத்தின்மூலம் எத்தனை கோயில்கள் பயனடைந்துள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் 77 திருக்கோயில்கள் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றன.

8—

### நிலுவைத் தொகை வசூலித்தல்

**வினா எண் 82916—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்களுக்கு வரவேண்டிய வாடகை நிலுவைத் தொகையை வசூலிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து குத்தகைப் பாக்கிகளை வசூலிப்பதற்கு வருவாய் நீதிமன்றங்கள் வாயிலாகவும், மற்றும் சிவில் நீதிமன்றங்கள் வாயிலாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. குத்தகைப் பாக்கிகளை வசூலிப்பதில் திருக்கோயில்களுக்கு மட்டும் சிறப்பான திட்டம் ஏதுமில்லை.



2006 ஜனவரி 17]

9—

### மூன்று சக்கர வாகனம் வழங்குதல்

**வினா எண் 14709—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் விண்ணப்பித்த ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் மூன்று சக்கர வாகனம் வழங்க அரசு சார்பில் என்ன திட்டம் தீட்டப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

மூன்று சக்கர சைக்கிள்கள், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் அனுப்பும் தேவையின் அடிப்படையிலும் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. மூன்று சக்கர சைக்கிள் வேண்டி விண்ணப்பிப்பவர்களுக்குக் காத்திருப்போர் பட்டியலின் வரிசைப்படி மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்படுகிறது. எடப்பாடி தொகுதியில் கடந்த மூன்றாண்டுகளில் 16 பேர் விண்ணப்பித்ததில், 12 பேர் பயனடைந்துள்ளனர். நான்கு விண்ணப்பங்கள் தகுதியற்றவை.

10—

### ஊட்டச் சத்து நல மையம்

**வினா எண் 41819—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அம்மணசமுத்திரம் பகுதி மற்றும் தனி கிராமத்தில் ஊட்டச் சத்து நல மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அம்மணசமுத்திரம் கிராமத்தில் 1-3-2004 முதல் மையம் துவங்கப்பட்டு, இலவசக்

கட்டடத்தில் இயங்கி வருகிறது. தளி கிராமத்தில், 1982 முதல் திட்டம் செயல்பட்டு வந்தாலும், 12-2-2005 முதல் தளி அங்கன்வாடி மையம் தனியாக இயங்கி வருகிறது.

11—

### பால்வாடி மையத்திற்கு உட்காரும் வசதிகள்

**வினா எண் 58744—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, ரொட்டிக்கடை பால்வாடி பள்ளியில் உட்கார்ந்து படிக்க, பெஞ்சுகள் மற்றும் பாய்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, ரொட்டிக்கடை பால்வாடி மையத்தில் தற்போது பெஞ்சுகள் இல்லை. அதற்குப் பதிலாக கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பிளாஸ்டிக் சேர்கள் 35 எண்ணிக்கை பெறப்பட்டு, பயன்பெறும் அனைத்துக் குழந்தைகளும் உட்காரப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், தற்போது மையத்திற்குப் பாய்கள் பொது மக்கள் அன்பளிப்பு மூலமாகப் பெறப்பட்டு, குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

12—

### ஊட்டச் சத்து மையக் கட்டடம்

**வினா எண் 70082—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் ஊட்டச் சத்து மையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதி, 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்' (S.S.A.) கீழ், தேர்வு செய்யப்பட்டு, 1-8-2003 முதல் இலவசக் கட்டடத்தில் மையம் செயல்பட்டு வருகிறது.

13—

### எலும்பு சிகிச்சை நிபுணர் நியமனம்

**வினா எண் 48606—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியத்திலுள்ள தொழுநோய் மருத்துவமனையில் காலியாக உள்ள எலும்பு சிகிச்சை மருத்துவர் பணியிடம் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சானடோரியத்தில் உள்ள தொழுநோய் மருத்துவமனையில் எலும்பு சிகிச்சை நிபுணர் நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருகிறார்.

14—

### நடமாடும் மருத்துவமனைப் பிரிவு துவக்குதல்

**வினா எண் 54259—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல், வள்ளுவக்குடி, குன்னம் மற்றும் மாங்கனாம்பட்டு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நடமாடும் மருத்துவமனைப் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடமாடும் மருத்துவமனை செயல்படுகிறது. திருமுல்லைவாசல், வள்ளுவக்குடி, குன்னம் மற்றும் மாங்கனாம்பட்டு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவமனைப் பிரிவு துவங்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**15—**

**கூடுதல் மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 61939—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவர் பணியிடங்களில் இரண்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருவதால், கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் ஏதும் இல்லை.



2006 ஜனவரி 17]

**16—**

**துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 63959—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, தென்னாம்பட்டினம் ஊராட்சி, கோணயாம்பட்டினத்திலுள்ள அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், கோணயாம்பட்டினம் கிராம மக்கள்தொகை 682 ஆகும். இக்கிராமத்திற்கு 4 கி.மீ. தொலைவில், ஏற்கெனவே திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றது. மேலும், இந்த ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். கோணயாம்பட்டினம் கிராமத்திற்கும், திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், கோணயாம்பட்டினத்திலுள்ள அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறு இல்லை.

**17—**

**மருத்துவர்களை நியமித்தல்**

**வினா எண் 65617—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) சங்கராபுரம் தொகுதி, புதுப்பட்டு அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, புதுப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவர் பணியிடங்களிலும் ஒப்பந்த மருத்துவ ஆலோசகர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருகின்றனர்.

**18—**

## குழந்தைகள் நல மையம்

**வினா எண் 69261—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் ஆரம்ப சுகாதார குழந்தைகள் நல மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் கிராமத்தில் ஏற்கெனவே கோட்டூர்-1, கோட்டூர்-2 மற்றும் கோட்டூர்-3 ஆகிய மூன்று துணை சுகாதார நிலையங்களும், ஒரு வட்டம் சாரா மருத்துவமனை 59



2006 ஜனவரி 17]

படுக்கை வசதிகளுடனும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கோட்டூரில் ஆரம்ப சுகாதார குழந்தைகள் நல மையம் ஒன்று ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

**19—**

## பட்டுத் துணிகளின் உற்பத்தி

**வினா எண் 19049—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1990 ஆம் ஆண்டு முதல் கதர் வாரியத்தின்மூலம் பட்டுத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனை, ஆண்டுவாரியாக எவ்வளவு?

(ஆ) விற்பனையின்மூலம் கிடைத்த இலாபம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கதர் வாரியத்தின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுத் துணிகளின் உற்பத்தி, விற்பனை விவரங்கள் கீழ்வருமாறு:—

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1990-1991 | 804.04 | 801.99 |
| 1991-1992 | 924.84 | 967.17 |
| 1992-1993 | 1,263.84 | 1,150.45 |
| 1993-1994 | 1,526.49 | 1,439.97 |
| 1994-1995 | 1,682.20 | 1,647.06 |
| 1995-1996 | 2,000.00 | 1,606.70 |
| 1996-1997 | 2,036.79 | 1,148.08 |

[2006 ஜனவரி 17

| | | |
|---|---|---|
| 1997-1998 | 1,575.01 | 2,402.53 |
| 1998-1999 | 1,592.66 | 1,011.60 |
| 1999-2000 | 1,220.16 | 1,166.01 |
| 2000-2001 | 980.20 | 810.00 |
| 2001-2002 | 867.51 | 966.40 |
| 2002-2003 | 1,062.56 | 837.86 |
| 2003-2004 | 732.57 | 1,004.03 |

கதர் வாரிய இலாப நட்டக் கணக்கில் கதர் ரகங்களுடன் பட்டு விற்பனையையும் சேர்த்து மொத்தத் தொகை கணக்கில் எடுக்கப்பட்டு வருவதால், பட்டு விற்பனையில் மட்டும் இலாபம் எவ்வளவு எனப் பிரிக்கப்படவில்லை. இருப்பினும் அனைத்து கதர் ரகங்களிலும் விற்பனையின்மூலம் கிடைத்த இலாப நட்ட விவரங்கள் கீழ்வருமாறு:—

| வருடம் | நிகர இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) | நட்டம் |
|---|---|---|
| 1990-1991 | 96.73 | |
| 1991-1992 | 15.49 | .. |
| 1992-1993 | 13.33 | .. |
| 1993-1994 | 3.24 | .. |
| 1994-1995 | 12.71 | .. |
| 1995-1996 | 7.72 | .. |
| 1996-1997 | .. | .. |
| 1997-1998 | 25.83 | 241.59 |
| 1998-1999 | | .. |
| 1999-2000 | .. | 598.47 |
| 2000-2001 | .. | 877.57 |
| 2001-2002 | .. | 1,127.62 |
| 2002-2003 | .. | 1,373.00 |
| 2003-2004 | .. | 947.04 |
| | .. | 903.11 |



2006 ஜனவரி 17]

**20—**

**சம்பளம் வழங்குதல்**

**வினா எண் 50386—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்குக் காலதாமதமாகச் சம்பளம் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கதரங்காடிகளின் விற்பனையை ஓரளவாவது முன்னேற்ற வேண்டும் என்ற நிலையில் 2003 ஜூன் மாதம் முதல் கதரங்காடிகளின் மாத விற்பனை, அங்கு பணிபுரியும் ஊழியர்களின் மாத ஊதியம் மற்றும் பிற செலவினங்களைக் காட்டிலும் ஐந்து மடங்கும், அதற்கு மேலும் நடைபெற்றிருக்க வேண்டுமெனவும், அவ்வாறு நடைபெறவில்லையெனில், ஐந்து மடங்கு விற்பனை எந்த நாளில் நடைபெறுகிறதோ, அந்த நாளில்தான் பணியாளர்களுக்குச் சம்பளம் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கதரங்காடிகளின் செலவினங்களைப்போல் 5 மடங்கு விற்பனையை எய்தும் கதரங்காடிகளில் பணிபுரிபவர்களுக்கு (Break Even Point) அந்தந்த மாதங்களில் சம்பளம் வழங்கப்பட்டுவிடுகிறது. அவ்வாறு செலவினங்களைப்போல் 5 மடங்கு விற்பனையை எய்தாத கதரங்காடிகளில் பணிபுரிபவர்களுக்கு 5 மடங்கு விற்பனை எய்தப்படும் (Break Even Point) நாளில் சம்பளம் வழங்கப்படுகிறது.

**21—**

**சிறு தொழில் கடன்கள்**

**வினா எண் 75735—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் எவ்வளவு வழங்கப்பட்டன?

(ஆ) எந்தெந்த இனங்களுக்கு வழங்கப்பட்டன என அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 1994-1995 ஆம் ஆண்டு முதல் கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் கடன்கள் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு அறிமுகப்படுத்தியுள்ள கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகைத் திட்டம் என்ற ஒரு திட்டம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 116 கிராமத் தொழில்களுக்குக் கிராமப்புற மக்கள் பயனடையும் வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வங்கிகள் அளித்த கடன்களுக்கு 25% முதல் 30% வரை விளிம்புத் தொகை மானியம் மட்டும் வாரியத்தினால் விடுவிக்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மானியத் தொகையாக ரூ. 17,63,600 விடுவிக்கப்பட்டுள்ளது. 93 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

(ஆ) சிறு தொழில் துறையைப் பொறுத்தவரை, பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 772 நபர்களுக்கு ரூ. 245.30 இலட்சம், வங்கிகளின்மூலம் படித்த இளைஞர்களுக்கு சுய தொழில் துவங்குவதற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம்:

| வ. எண் | தொழில் விவரம் | நபர்கள் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வியாபாரத் தொழில்கள் | 363 | 119.70 |
| 2. | சேவைத் தொழில்கள் | 290 | 83.50 |
| 3. | உற்பத்தித் தொழில்கள் | 87 | 35.20 |
| 4. | வேளாண் சார் தொழில்கள் | 32 | 6.90 |
| | மொத்தம் | 772 | 245.30 |



2006 ஜனவரி 17]

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலமாக 2003-2004 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 38 நபர்களுக்கு ரூ.951.20 இலட்சம் சிறு தொழில் தொடங்குவதற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**22—**

## கைவினைப் பொருட்கள் கண்காட்சி

**வினா எண் 77891—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வருடந்தோறும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத் தலைநகரில் அமைந்துள்ள பூம்புகார் விற்பனை நிலைய வளாகத்திற்குள்ளேயே வருடந்தோறும் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம், கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைக் காலங்களில் கைவினைப் பொருள் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) நடப்பாண்டிலும் ஏழு கைவினைப் பொருள் கண்காட்சிகள் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

**23—**

## சிறு தொழில்கள் துறைமூலம் கடனுதவி

**வினா எண் 80301—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மண்பாண்டத் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு, சிறு தொழில்கள் துறைமூலம் கடன் மற்றும் சலுகைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மண்பாண்டத் தொழிலாளர்களால் தயாரிக்கப்படும் அழகுமிகு வண்ண மட்பாண்டப் பொருட்கள் மாநிலம் முழுவதும் உள்ள கதர் அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

(2) மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏனைய கிராமத் தொழில்களுடன் விளிம்புத் தொகைத் திட்டம் கதர் ஆணைக் குழுவினால் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வங்கிகள்மூலம் வழங்கப்படும் கடன் தொகையில் 25 முதல் 30 விழுக்காடு விளிம்புத் தொகை மானியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விளிம்புத் தொகைத் திட்டத்தினைச் செயல்படுத்திட வாரியம் நடவடிக்கை எடுத்து மண்பாண்டத் தொழிலாளர்களை ஊக்குவித்து வருகிறது.

**24—**

## கதரங்காடி தொடர்ந்து இயக்குதல்

**வினா எண் 81174—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த காதி கிராஃப்டைத் தொடர்ந்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் தற்போது கதரங்காடி தொடர்ந்து இயங்கி வருகிறது.

**25—**

## பட்டு நெசவு மையம் ஆரம்பித்தல்

**வினா எண் 81301—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, காடையாம்பட்டியில் பட்டு நெசவு மையம் ஒன்றை கதர்த் துறையின்மூலம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் கதர் வாரியத்தின்மூலம் எட்டு இடங்களில் கதர்ப் பட்டு உப கிளைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே, புதியதாக சேலம் மாவட்டத்தில் எடப்பாடி தொகுதியில் காடையாம்பட்டி எனும் இடத்தில் மற்றுமொரு பட்டு நெசவு மையம் ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் தற்போது கதர்த் துறையில் இல்லை.

**26—**

## காந்தி ஆசிரமத்தை இலாபத்தில் இயக்குதல்

**வினா எண் 81346—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் நலிவடைந்த நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இலாபகரமாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளுக்கான மாநில அரசு கதர்த் தள்ளுபடி மானியத் தொகை ரூ. 57,12,888 வழங்கப்பட்டுள்ளது. மேலும், இச்சங்கத்தின் நலன் கருதி 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளுக்கு, முறையே ரூ. 7,94,000 மற்றும் ரூ. 10,06,000 முன் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சங்கத்திற்கு மாநில அரசால் வழங்கப்பட வேண்டிய கதர்த் தள்ளுபடி மானியத் தொகை எதுவும் நிலுவையில் இல்லை. இச்சர்வோதயச்

[2006 ஜனவரி 17

சங்கம், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின்மூலம் அங்கீகரிக்கப்பட்டு உள்ளதால், இச்சங்கத்தின் இலாப நட்டக் கணக்குகள் யாவும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுமூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனவே, இச்சங்கத்தை இலாபத்தில் இயக்க அரசால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை.

**27—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 83401—திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை, தாயில்பட்டி, சத்திரப்பட்டி மற்றும் கீழராஜகுலராமன் கிராமம் ஆகிய இடங்களில் அரசு தொழிற்பேட்டைகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை, தாயில்பட்டி, சத்திரப்பட்டி மற்றும் கீழராஜகுலராமன் கிராமம் ஆகிய இடங்களில் அரசு தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும். தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் கருத்தாய்வு செய்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 20671—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 17]

(அ) தாம்பரம் தொகுதி, மேற்குத் தாம்பரம், கடப்பேரி ஆதி திராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

## . தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல்

**வினா எண் 23827—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்படி மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இதற்காக எவ்வளவு தொகை அரசினால் செலவு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 29, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11-2-2005-ல், சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் ரூ.95.30 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) செலவினத்தில் தடுப்பணைகள் கட்டித்தருவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ITDP பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகள் கோரும் முன்மொழிவுகள் ஏதும் நிலுவையில் இல்லை.

[2006 ஜனவரி 17

30—

## நடுநிலைப் பள்ளியினைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 34901—திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பசூர் என்ற பகுதியிலுள்ள ஆதி திராவிட நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

## தொடக்கப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 47210—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழ்வரக்குடி, பட்டவிளாகம் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம், மாதிரி வேளூர்-எருக்கூர் ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2006 ஜனவரி 17]

32—

## மழை நீர் சேகரிப்புத் தொட்டி

**வினா எண் 57868—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதிரி வேளூர் ஊராட்சி, வரவக்குடி மற்றும் எருக்கூர் ஊராட்சிகளில் உள்ள அரசினர் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளிகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதிரி வேளூர் ஊராட்சியிலுள்ள அரசினர் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி ஏற்கெனவே அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

33—

## தாட்கோமூலம் கடனுதவி

**வினா எண் 65386—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த கிறிஸ்தவர்களும் தாட்கோ மூலம் பயன்பெற அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தாட்கோ நிறுவனத்தின்மூலம் இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் மானியத்துடன் கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ ஆதி திராவிடர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளதால் தாட்கோமூலம் கடனுதவி வழங்க வழிவகை செய்யப்படவில்லை.

[2006 ஜனவரி 17

34—

## இலவசப் பாட நூல் திட்டம்

**வினா எண் 67591—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் ஆதி திராவிட நலத் துறை மூலம் வழங்கும் இலவசப் பாட நூல் திட்டத்தினால் மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2005-2006 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ—மாணவியர்களுக்குக் கீழ்கண்டவாறு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

3-6-2005 அன்று பாட நூல்கள் வழங்கப்பட்ட விவரம் ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளில்:—

| வ. எண். | பள்ளியின் பெயர் | 1-வது | | 2-வது | | 3-வது | | 4-வது | | 5-வது | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவிகள் | மாணவர் | மாணவிகள் | மாணவர் | மாணவிகள் | மாணவர் | மாணவிகள் | மாணவர் | மாணவிகள் | மாணவர் | மாணவிகள் |
| 1. | கண்ணம் பள்ளி | 10 | 10 | 5 | 8 | 1 | 9 | 9 | 2 | 10 | 4 | 35 | 33 |
| 2. | கே. புதூர் | 5 | 1 | 3 | 5 | 6 | 2 | 2 | 1 | 1 | 2 | 17 | 11 |
| | **மொத்தம்** | **15** | **11** | **8** | **13** | **7** | **11** | **11** | **3** | **11** | **6** | **52** | **44** |



2006 ஜனவரி 17]

இதனைத் தவிர 141 பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு பாட நூல் வழங்கப்பட்டுள்ளது:—

| வகுப்பு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 6 ஆம் வகுப்பு | 178 | 176 |
| 7 ஆம் வகுப்பு | 186 | 128 |
| 8 ஆம் வகுப்பு | 188 | 188 |
| 9 ஆம் வகுப்பு | 182 | 145 |
| 10 ஆம் வகுப்பு | 140 | 131 |
| 11 ஆம் வகுப்பு | 66 | 51 |
| 12 ஆம் வகுப்பு | 76 | 41 |
| **மொத்தம்** | **1,016** | **860** |

35—

## கடன்கள் விவரம்

**வினா எண் 75705—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு?

(ஆ) விவரங்களை இனம்வாரியாக அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7,766 நபர்களுக்கு ரூ. 125.61 இலட்சங்கள் மானியமாகவும், ரூ. 234.71 இலட்சங்கள் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இனம்வாரியான விவரங்கள்:—

| வ. எண். | திட்டத்தின் பெயர். | பயனடைந் தோர். | மானியம் | மொத்த வங்கிக் கடன். |
|---|---|---|---|---|
| 1. | தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் (F.A. to Individuals) | 434 | 30.86 | 88.24 |
| 2. | சுய உதவிக் குழுக்கள் (F.A. to SHGS) | 551 | 13.07 | 26.25 |
| 3. | சுழல் நிதித் திட்டத்தின்மூலம் சுய உதவிக் குழுக்கள் (R.F. to SHGS) | 3,957 | 25.70 | 64.24 |
| 4. | பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் (E.D.P. to SHGS) | 2,290 | 8.82 | 8.82 |
| 5. | மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி (Collectors Discretionary Fund) | 281 | 18.36 | 18.36 |
| 6. | தனி நபர்க்குப் பயிற்சித் திட்டம் (V.G.P. to Individuals) | 253 | 28.80 | 28.80 |
| | மொத்தம் | 7,766 | 125.61 | 234.71 |

36—

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 83056—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் தாட்கோமூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



37—

## பணி நிரந்தரம்

**வினா எண் 47839—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பகிர்மானத் திட்டத்தில் எத்தனை பணியாளர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள்?

(ஆ) அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் வாரியத்தில் நிரந்தரமற்ற பல்வேறு சில்லறைப் பணிகள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர்களிடம் அளிக்கப்படுகின்றன. ஒப்பந்ததாரர்கள் அந்த வேலையை முடிப்பதற்குத் தேவையான பணியாட்களை அமர்த்திக்கொண்டு வேலையினை முடிக்கிறார்கள். அந்த வேலை முடிக்கப்பட்ட பின், அதற்குண்டான குறிப்பிட்ட தொகை ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. வாரியம் நேரிடையாக எந்த ஒரு ஒப்பந்தத் தொழிலாளியையும் பணி அமர்த்துவதில்லை. எனவே, வாரியத்தில் மின் பகிர்மான வட்டத்தில் எத்தனை ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியில் உள்ளனர் என்ற புள்ளிவிவரம் வைத்திருக்க வாய்ப்பில்லை.

(ஆ) ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யும் கருத்துரு எதுவும் மின் வாரியத்தின் பரிசிலனையில் இல்லை.

38—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 51987—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மயிலாடுதுறை முதல் மகேந்திரப்பள்ளி வரை அரசுப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கைத் தடத்தில் பகுதி, பகுதியாகப் பேருந்து வசதி உள்ளது. மயிலாடுதுறை—கொள்ளிடம் (வழி) சீர்காழி தடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மூலம் 161 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 92 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. கொள்ளிடம்—மகேந்திரப்பள்ளி (வழி) கோதண்டபுரம் தடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மூலம் 20 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 12 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேலும், கொள்ளிடம்—அளக்குடி வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள்மூலம் 20 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 51 சதவீதம் மட்டும் உள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் நேரிடைப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

## புதிய மின் மாற்றி அமைக்கும் திட்டம்

**வினா எண் 54005—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, போர்குடி மற்றும் அரசர்குளம் கிழக்கு கிராமங்களுக்குப் புதிய மின் மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, போர்குடி கிராமத்தில் குறை மின்னழுத்தம் (90 வோல்ட்) இருப்பது கண்டறியப்பட்டு, புதிய மின் மாற்றி அமைக்கும்



2006 ஜனவரி 17]

பணி முடிக்கப்பட்டு, 19-7-2004 அன்று இயக்கி வைக்கப்பட்டது. தற்பொழுது, மின்னழுத்தம் 237 வோல்ட் என்ற நிலையில் உள்ளது. மேலும், அரசர்குளத்தைச் சேர்ந்த சித்தக்கண்ணியில் குறை மின்னழுத்தம் (180 வோல்ட்) இருப்பது கண்டறியப்பட்டு, புதிய மின் மாற்றி அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, 9-12-2004 அன்று இயக்கி வைக்கப்பட்டது. தற்பொழுது, மின்னழுத்தம் 240 வோல்ட் என்ற நிலையில் உள்ளது.

**40—**

## மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 55458—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, குமாரநத்தம் கிராமத்திலிருந்து மருவத்தூர் ரயில்வே கிராஸிங் (ரயில்வே கேட்) வரை மின் விளக்குக் கம்பம் அமைத்து (E.B. light post) மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, குமாரநத்தம் கிராமத்திலிருந்து மருவத்தூர் ரயில்வே கிராஸிங் ரயில் கேட் வரை புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், இவ்வாண்டு அரசு தெரு விளக்குகள் திட்டத்திலும் மேற்கண்ட ஊராட்சி இடம் பெறவில்லை. புதிய தெரு விளக்குகள் வேண்டி மருதங்குடி ஊராட்சியிடமிருந்து மின் பாக்கியில்லாச் சான்றிதழ் மற்றும் மின் நீட்டிப்புப் பணிக்கு ஆகும் முழுச் செலவினைச் செலுத்தும் சம்மதத்துடன் விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

## கட்டுமானப் பிரிவு அலுவலகக் கட்டடம்

**வினா எண் 55926—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கிவரும் மின் வாரிய அலுவலகம் மற்றும் மின்சாரத் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகம் ஆகியவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கிவரும் மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டவும், மற்றும் சீர்காழி தொகுதி மின்சாரத் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் வைத்தீஸ்வரன்கோயில் துணை மின் நிலைய வளாகத்தில் கட்டவும் வாரிய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு ஆவன செய்யப்படும்.

42—

## உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 58420—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரத்தில் மின் வாரியத்தின் உதவி மின் பொறியாளர் அலுவலகம் ஊரின் மையப் பகுதியில் தனியாருக்குச்





சொந்தமான கட்டடத்தில் ரூ. 1,050 வாடகையில் 1-3-1997 முதல் இயங்கி வருகிறது. வாரியத்தின் கடும் நிதி நெருக்கடி காரணமாக, சுப்பிரமணியபுரத்தில் உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

43—

## மின் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகக் கட்டடம்

**வினா எண் 58421—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் மின் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின்சார வாரியத்தின் நிதி நெருக்கடி காரணமாக, அறந்தாங்கி நகரில் மின் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

44—

## உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 58422—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் மின்சார வாரிய உதவி மின் பொறியாளர் அலுவலகம் நகரின் மையப் பகுதியில் தனியாருக்குச்

சொந்தமான கட்டடத்தில் ரூ. 800 வாடகையில் 1-3-1995 முதல் இயங்கி வருகிறது. வாரியத்திற்குப் போதிய நிதி இல்லாத காரணத்தால் ஆவுடையார்கோவில் உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

45—

## மின் விநியோகம்

**வினா எண் 58516—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மதகம் ஊராட்சி, ஒக்கூர் ஊராட்சி, திருப்புவனவாசல் ஊராட்சி, கதிராமங்கலம் ஊராட்சி, புத்தாம்பூர் ஊராட்சி மற்றும் கானாடு ஊராட்சி முதலியவற்றில் சீரான மின் விநியோகம் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மதகம் ஊராட்சி, திருப்புவனவாசல் ஊராட்சி, கதிராமங்கலம் ஊராட்சி மற்றும் கானாடு ஊராட்சி ஆகிய பகுதிகளில் சீரான மின் விநியோகம் செய்யப்படுகிறது. 14-8-2004 அன்று இந்தப் பகுதிகளில் இருந்த மின்னழுத்தத்தை மின் வாரிய அதிகாரிகள் அளவீடு செய்தபொழுது, ஒருமுனை மின்னழுத்தம் 220 வோல்ட் இருப்பது கண்டறியப்பட்டது. ஒக்கூர் ஊராட்சிப் பகுதியைப் பொறுத்தமட்டில் ஒருமுனை மின்னழுத்தத்தை அளவீடு செய்தபொழுது, 160 வோல்ட் மட்டுமே இருப்பது தெரிய வந்ததால், இந்தப் பகுதியில் மின் கம்பிகள் அளவை அதிகப்படுத்துவதற்கு ரூ. 23,000-க்கான மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, மின் கம்பிகளை மாற்றும் பணிகள் 14-9-2004-ல் முடிக்கப்பட்டது. தற்பொழுது, மின்னழுத்தம் 230 வோல்ட் என்ற அளவில் மேம்பாடு அடைந்துள்ளது. இதேபோல, புத்தாம்பூர்



ஊராட்சியில் ஒருமுனை மின்னழுத்தம் 160 வோல்ட் மட்டுமே இருப்பது தெரிய வந்ததால், மின்னழுத்தக் குறைபாட்டைச் சரி செய்ய இந்தப் பகுதியில் அதிக அளவு மின் கம்பிகளாக மாற்றுவதற்கு ரூ. 37,670-க்கான மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, மின் கம்பிகளை மாற்றும் பணிகள் 14-9-2004-ல் முடிக்கப்பட்டன. தற்பொழுது ஒருமுனை மின்னழுத்தம் 205 வோல்ட் என்று மேம்பாடு அடைந்துள்ளது.

46—

## கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா எண் 60056—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி-நாகப்பட்டினம் மற்றும் சீர்காழி-அன்னல்கோயில்-பூம்புகார் ஆகிய வழித்தடங்களில் கூடுதல் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) (1) சீர்காழி-நாகப்பட்டினம் (வழி) அன்னல்கோயில், கருவிழுந்தநாதபுரம், காரைக்கால் தட நீளம் 68.50 கிலோ மீட்டர் ஆகும். இத்தடத்தில் கழகப் பேருந்துகள்மூலம் 37 நடைகளும், பாண்டிச்சேரி கழகப் பேருந்துமூலம் 1 நடையும், தனியார் பேருந்துகள்மூலம் 3 நடைகளும் என தினசரி 41 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சீர்காழி வழியாக, கழகப் பேருந்துகள்மூலம் 24 நடைகளும், பாண்டிச்சேரி போக்குவரத்துக் கழகப் பேருந்துமூலம் 8 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 6 நடைகளும் என, தினசரி 38 நடைகள் காரைக்கால் வரை இயக்கப்பட்டு வருகின்றன.

(2) சீர்காழி-அன்னல்கோயில், கருவிழுந்தநாதபுரம், மேலையூர், பூம்புகார் தடத்தின், நீளம் 24.0 கிலோ மீட்டர் ஆகும்.

[2006 ஜனவரி 17

இத்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி, பகுதியாகப் பேருந்து வசதி உள்ளது:—

| தடம் | இயக்கப்படும் நடைகள் விவரம் கழகம் | தனியார் | இதர போக்கு வரத்துக் கழகம் | மொத்த நடைகள் |
|---|---|---|---|---|
| சீர்காழி-கீழமூவர்க்கரை (வழி) அன்னல்கோயில், நாங்கூர், மங்கைமடம் கழகப் பேருந்து ஏ 16. | 14 | - | - | 14 |
| சீர்காழி-பூம்புகார் (வழி) மங்கைமடம், மேலையூர் கழகப் பேருந்துகள் தடம் எண் ஏ5, ஏ5பி மற்றும் ஏ5சி | 16+16+10=42 | 18 | - | 60 |
| மங்கைமடம்-மயிலாடுதுறை (வழி) மேலையூர் கழகப் பேருந்து தடம் எண் ஏ34 | 12 | - | - | 12 |
| சீர்காழி-கருவிழுந்தநாதபுரம் (வழி) அன்னல்கோயில், அல்லிவிளாகம் | 61 | 9 | 9 பாண்டிச்சேரி போக்குவரத்துக் கழகம் | 79 |
| கருவிழந்தநாதபுரம்-மேலையூர் | 41 | 8 | 1 (விழுப்புரம் கோட்டம்) | 50 |
| மேலையூர்-பூம்புகார் | 29 | 1 | 1 | 31 |

(ஆ) கோரிக்கைத் தடத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானவையாகும். எனவே, கோரிக்கைத் தடங்களில் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



2006 ஜனவரி 17]

47—

## பேருந்து வசதி

**வினா எண் 61150—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியிலிருந்து காரைக்குடி வரை (வழி) புதுவாக்கோட்டை, கம்மங்காடு, நால்ரோடு கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் சென்று வர பேருந்து வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணத்தைச் சார்ந்த தடம் எண் 22, பேருந்து எண் டி.என். 55/என் 0035, காலை 7-25 மணிக்கு அறந்தாங்கியிலிருந்து புறப்பட்டு கருவிடச்சேரி, இடையார், புதுவாக்கோட்டை, கம்மங்காடு, வீரமங்கலம், வாணியன் குடியிருப்பு ஆகிய ஊர்கள் வழியாக ஆவுடையார்கோவில் செல்கிறது. இதனைப் பயன்படுத்தி மாணவர்கள் கம்மங்காடு பள்ளிக்கும், ஆவுடையார்கோவில் உயர்நிலைப் பள்ளிக்கும் செல்கிறார்கள். மேலும், இப்பேருந்து ஆவுடையார்கோவிலிலிருந்து அதே வழித்தடத்தில் திரும்பி வருவதால் இடைப்பட்ட கிராம மாணவ, மாணவிகள் அறந்தாங்கி உயர்நிலைப் பள்ளிக்கு வரவும் இந்த நடையைப் பயன்படுத்துகிறார்கள். தடம் எண் 22, பேருந்து எண் டி.என். 55/என் 0035 அறந்தாங்கியில் மாலை 17-20 மணிக்குப் புறப்பட்டு கீரமங்கலம் வழியாக கொத்தமங்கலம் செல்கிறது. அறந்தாங்கியில் படித்து வரும் மேற்படி வழித்தட கிராம மாணவ மாணவியர்கள் பள்ளி விட்டுத் திரும்பி வீடு செல்ல இந்த நடையைப் பயன்படுத்தி வருகிறார்கள். தடம் எண் 8, பேருந்து எண் டி.என். 55/என் 0033 அறந்தாங்கியிலிருந்து காலை 7-25 மணிக்குப் புறப்பட்டு நாகுடி புறங்காடு, ஏகனிவயல், கண்டிச்சங்காடு, நிலையூர் வழியாக செல்லப்பன்கோட்டை வரை செல்கிறது. மேலும், அதே பேருந்து மாலை 16-30 மணிக்குப் புறப்பட்டு அறந்தாங்கியிலிருந்து கருவிடச்சேரி, இடையார், புதுவாக்கோட்டை, கம்மங்காடு, செங்கரை நால்ரோடு, பீர்க்கலைக்காடு, சாக்கோட்டை வழியாக புதுவயல்

செல்கிறது. மேற்படி வழித்தட கிராம மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் செல்லவும், பள்ளியிலிருந்து வீடு திரும்பவும் இந்த நடைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, கோரிக்கைத் தடத்தில் அறந்தாங்கி, கருவிடச்சேரி, இடையார், புதுவாக்கோட்டை, கம்மங்காடு, செங்கரை, நால்ரோடு மற்றும் புதுவயல் வழித்தடத்தில் இரண்டு நடைகளும், அதே வழித்தடத்தில் கம்மங்காடு வழியாக ஆவுடையார்கோவிலுக்கு இரண்டு நடைகளும், ஆக மொத்தம் நான்கு நடைகள் பள்ளி சென்று வர ஏதுவாக இயங்கி வருகிறது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் நேரிடையாகவும், பகுதி, பகுதியாகவும் இயங்கிவரும் நடைகளே போதுமானதாகக் கருதப்படுவதால், கோரிக்கை வழித்தடத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் சென்று வர கூடுதல் பேருந்து வசதி செய்துதரும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 61828—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம்-திருவேங்கடம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் கணபதிபட்டி, அய்வாய்ப்புலிபட்டி, காடிலிங்கபுரம் வழியாக இயக்கப்படுமா*?*

*(ஆ)* ஆம் எனில், எப்போது*?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கணபதிபட்டி தெற்கு அய்வாய்ப்புலிபட்டி, அய்வாய்ப்புலிபட்டி, காடிலிங்கபுரம் ஆகிய கிராமங்கள் குருவிகுளம்-திருவேங்கடம் பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக அமைந்துள்ளவை ஆகும். குருவிகுளம்-திருவேங்கடம் பிரதான சாலையின் தூரம் 10 கிலோ மீட்டர் ஆகும். சட்டமன்ற வினாவில் கூறப்பட்ட கிராமங்கள் வழியே பேருந்துகள் இயக்கப்படும்பட்சத்தில்





3 கிலோ மீட்டர் கூடுதல் ஆகும். மேற்கூறிய கிராமங்களுக்குத் திருநெல்வேலி வட்டார சங்கரன்கோவில் பணிமனைமூலம் தடம் எண் 23, சங்கரன்கோவில்-திருவேங்கடம் என்ற நகரப் பேருந்துமூலம் தினசரி 4 சுற்றுகளும், தடம் எண் 61 புறநகர்ப் பேருந்துமூலம் சங்கரன்கோவில்-திருநெல்வேலி என தினசரி 3 சுற்றுகளும், ஆக மொத்தம் தினசரி 7 சுற்றுகளில் பேருந்து வசதி செய்துதரப்பட்டுள்ளது. இக்கிராமங்களிலுள்ள மக்களின் பயன்பாட்டிற்குத் தற்போது இயக்கப்படும் பேருந்து வசதிகளே போதுமானவை ஆகும்.

**49—**

## விபத்து நிவாரண மையம்

**வினா எண் 63986—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி நகர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை 45ஏ-யில் சீர்காழியிலும், சட்டநாதபுரத்திலும் விபத்து நிவாரண மையம் அமைக்க அரசு முன்வருமா*?*

*(ஆ)* ஆம் எனில், எப்போது*?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தற்போது, நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 45A தடத்தில் ஏற்கெனவே 'அக்கூர்' என்ற இடத்தில் ஒரு மையமும், கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட 'தம்பிக்குநல்லான் பட்டினம்' எனும் இடத்தில் ஒன்றும், ஆக இரு அவசர விபத்து சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன. சட்டநாதபுரம், சீர்காழி ஆகிய இரு இடங்களும் தற்போது இயங்கி வரும் இரு அவசர விபத்து சிகிச்சை மையங்களில் இருந்து முறையே, 18, 31.8 கி.மீ. தூர இடைவெளியில் உள்ளன. எனவே, மற்றுமொரு அவசர சிகிச்சை மையம் அமைக்க வலுவான காரணங்கள் இல்லை.

[2006 ஜனவரி 17

**50—**

**மின் வாரியப் பணியாளர்களுக்குத் தனி மருத்துவமனை**

**வினா எண் 64485—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணமேல்குடி, ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கி நகரில் பணியாற்றும் மின் வாரியப் பணியாளர்களுக்குத் தனியாக மருத்துவமனை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தலைமை மருந்தகத்துடன் சேர்த்து 23 பெரிய மருந்தகங்கள், மற்றும் கிளை மருந்தகங்கள் குளுமையான மலைப் பகுதிகள், தொடர்பில்லாத தனிமைப்படுத்தப்பட்ட இடங்கள் மற்றும் அனல் மின் நிலையங்கள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பல்வேறு மின் உற்பத்தி வட்டங்கள் மற்றும் சில மின் பகிர்மான வட்டத் தலைமையிடங்களிலும் இயங்கி வருகின்றன. எனவே, மணமேல்குடி, ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கியில் பணியாற்றும் மின் வாரியப் பணியாளர்களுக்குத் தனி மருத்துவமனைகள் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**51—**

**மின் வசதி**

**வினா எண் 65225—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், மண்ணாடிப்பட்டி ஊராட்சி, புதூர் புங்கனை கிராமத்தில் வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின்சார வசதி செய்துதரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், மண்ணாடிப்பட்டி ஊராட்சியில் உள்ள புதூர் புங்கனை கிராமத்தில், மொத்தம் 120 குடிசை வீடுகள் உள்ளன. அவற்றில் 117 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 3 குடிசை வீடுகளுக்கு மின் வசதி கேட்டு, விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. இது தவிர, மண்ணாடிப்பட்டி ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் 20 எண்ணிக்கை உள்ளன. அவற்றிற்கும் மின் இணைப்புக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தகுதி வாய்ந்த குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

**52—**

**மின் இணைப்புக் கம்பிகளை மாற்றுதல்**

**வினா எண் 67184—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் உள்ள பழுதடைந்த கட்டடங்களில் உள்ள மின் இணைப்புக் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு இரண்டு தாழ்வழுத்த மின் இணைப்புகள்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரண்டு மின் இணைப்புகளிலும் மீட்டருக்குச் செல்லும் மின் இணைப்புக் கம்பிகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, மாற்றப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. மருத்துவமனையின் உட்பக்கமுள்ள ஒயரிங் வெகுநாட்களுக்கு முன் செய்த காரணத்தால் பழுதடைந்த நிலையில்

[2006 ஜனவரி 17

இருப்பது தெரிய வருகின்றது. அவை பொதுப் பணித் துறையின் மின் பிரிவின் பராமரிப்பில் உள்ளதால், அவற்றை அவர்கள் மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். இது குறித்த அறிவிப்பு ஒன்றும் மருத்துவமனை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**53—**

## மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 67186—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனையில் மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனைக்கு ஒருமுனை மின்னழுத்தம் 240 வோல்ட் அளவிற்குக் குறையாமல் மின் விநியோகம் செய்யப்படுவதாலும், தற்போது மின் விநியோகம் செய்யப்பட்டுவரும் மின் மாற்றி அரசு மருத்துவமனைக்கு வெகு அருகில் (150 மீட்டர்) உள்ளதாலும், அங்கு புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**54—**

## மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 65276—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 17]

கழுகுமலை சீர் மரபினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் சீர் மரபினர் மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. அங்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் இயங்குகின்றன. அரசாணை (நிலை) எண் 72, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்: 18-7-2005-ல் 416 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. அவற்றில் இவ்விரு விடுதிகளும் இடம் பெற்றுள்ளன.

**55—**

## மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 73587—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, வந்தவாசி வட்டம், நெடுங்குளம் ஊராட்சியில் செயல்படும் அரசினர் மாணவர் விடுதிக்கு அரசு புதிய கட்டடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் தொகுதி, வந்தவாசி வட்டம், நெடுங்குளம் ஊராட்சியில் செயல்படும் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 72, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்: 18-7-2005-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2006 ஜனவரி 17

56—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 38569—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வேலாடிப்பட்டி ஊராட்சி கால்நடை மருத்துவமனைக்குப் புதிதாக மருத்துவமனை கட்டித்தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், வேலாடிப்பட்டி கால்நடை மருந்தகம் வாடகை இல்லாத தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மருந்தகத்திற்கு NABARD திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, தீர்மானப் புத்தகம் மற்றும் சிட்டா அடங்கல் பெறப்பட்டுள்ளது. இப்பணி 2005-2006, திட்டம் 2-ல் சேர்க்கப்பட்டு, NABARD திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஒதுக்கீடு பெறப்பட்டதும், கட்டடம் கட்டப்படும்.

57—

## கருத்தரங்குகள்

**வினா எண் 56552—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த மாவட்டம் மற்றும் கிராமந்தோறும் கருத்தரங்குகள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 ஜனவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் 2003-2004 ஆம் ஆண்டில் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஒன்றும், 2005-2006 ஆம் ஆண்டில் உதகமண்டலத்தில் ஒன்றும், ஆக 2 கருத்தரங்குகள் தேசிய அளவில் நடத்தப்பட்டுள்ளன. இதேபோன்று ASCAD (Assistance to States for Control of Animal Diseases) திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் கருத்தரங்கு ஒன்றும், கிராம மற்றும் வட்டார அளவில் 254 விழிப்புணர்ச்சி முகாம்களும், மாவட்ட அளவில் 18 விழிப்புணர்ச்சி முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், மாதம் ஒன்றுக்கு ஒரு முகாம் வீதம் 12 முகாம்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் (385 ஊராட்சி ஒன்றியங்களில்) நடத்தப்படுகிறது. இம்முகாம்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெவ்வேறு கிராமங்களில், கால்நடை மருத்துவ வசதிகள் இல்லாத குக்கிராமங்களில் உள்ள கால்நடை விவசாயிகள் பயனடையும் வகையிலும், அதனைச் சுற்றியுள்ள அனைத்துக் கிராம கால்நடை விவசாயிகளும் பயன்படும் வகையில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இம்முகாம்களில் கறவை மாடுகள் வளர்க்கும் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும்பொருட்டு, தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர, தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமைமூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

58—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 68360—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வடிவம்பட்டி என்ற ஊர் எதுவும் இல்லை. புதுக்கோட்டை கோட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வடுகப்பட்டி கிராமம் உள்ளது. எனவே, வடுகப்பட்டி என்பது கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். வடுகப்பட்டி கிராமத்திற்கு அருகில் 3 கி.மீ. தூரத்தில் கந்தர்வக்கோட்டை கால்நடை மருத்துவமனையும், 4 கி.மீ. தூரத்தில் கோமாபுரம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைகள்மூலம் வடுகப்பட்டி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்குப் போதுமான சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அரசு தற்பொழுது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆதலால், புதுக்கோட்டை மாவட்டம், வடுகப்பட்டி கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருந்தகம் துவக்கத் தற்போது வாய்ப்பில்லை.

**59—**

## துணை கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 71618—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, மன்சூராபாத் கிராமத்திற்குத் துணை கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் தொகுதி, மன்சூராபாத் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் மற்றும் கால்நடை மருந்தகம் எதுவும் செயல்படாத



நிலையில், கட்டடம் கட்டுவது குறித்த கேள்வி எழவில்லை. எனினும், பெரணமல்லூர் தொகுதி, மன்சூராபாத் கிராமத்திற்கு அருகில் 2½ கிலோ மீட்டர் தொலைவில் பாடகம் கிளை நிலையமும், 5 கி.மீ. தொலைவில் பூதமங்கலம் கால்நடை மருந்தகமும், மற்றும் 6 கி.மீ. தொலைவில் அவலூர்பேட்டை கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மன்சூராபாத் கிராமத்தில் கால்நடை கிளை நிலையமோ, அல்லது கால்நடை மருந்தகமோ அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**60—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 74257—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை வி. புதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை வி. புதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**61—**

## எக்ஸ்ரே கருவி பழுதுபார்த்தல்

**வினா எண் 74742—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கால்நடை பாலிகிளினிக்கில் உள்ள எக்ஸ்ரே கருவி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் கால்நடை பாலிகிளினிக்கில் பழுதடைந்திருந்த எக்ஸ்ரே கருவி 9-2-2005 முதல் சீரமைக்கப்பட்டுத் தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) எழாது.

62—

## தரமான மருந்துகள் வழங்குதல்

**வினா எண் 74743—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் டைக்லோபினாக், ஆக்ஸிடெட்ராக்சைக்ளின், அம்மோனியம் குளோரைடு போன்ற மருந்துகள் தரம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உரிய தரமுடன் மருந்துகள் வழங்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் அறிவுரைப்படி கால்நடை மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் டைக்லோபினாக் சோடியம் தற்போது இத்துறையால் வாங்கப்படுவதில்லை. ஆக்ஸிடெட்ராக்சைக்ளின் தரச் சான்று பெறப்பட்ட பின்பு வாங்கப்படுகிறது. அம்மோனியம் குளோரைடு இத்துறையால் வாங்கப்படுவதில்லை. தரமான மருந்துகள் மட்டுமே தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் இத்துறையால் வாங்கி, வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் வாங்கப்படும் மருந்துகளின் தரச் சான்று பெறப்பட்ட பின்பே மருந்துக் கிடங்கிலிருந்து மருந்துகள் கால்நடை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. தரமான மருந்துகள் மட்டுமே கால்நடை நிலையங்களில் ஏற்கப்படுகின்றன. தரக் குறைவானவை என அறியப்படும் மருந்துகள், உடன் மருந்துக் கிடங்குகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிடும். இதற்கான அறிவுரைகள் இத்துறை சார்ந்த அலுவலர்களுக்கு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.



63—

## கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி

**வினா எண் 75701—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்துத் தயாரிப்பு நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்த மருந்துகளின் மதிப்பு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்துத் தயாரிப்பு நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்த மருந்துகளின் மதிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆண்டுவாரியாக | 2002-03 | 2003-04 | 2004-05 |
| 2. | உற்பத்தி செய்த மருந்துகளின் மதிப்பு ரூ. | 2,16,50,575 | 2,00,25,152 | 3,60,78,981 |

64—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 78485—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஊராட்சியைச் சேர்ந்த சித்தூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடையாணை இன்னமும் அமலில் உள்ளது. ஆதலால், சித்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**65—**

## கோழி வளர்ப்புப் பண்ணையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 81435—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி, பொட்டனேரி ஊராட்சியிலுள்ள ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் கோழி வளர்ப்புப் பண்ணை விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம், மேச்சேரி இன செம்மறி ஆடுகள் இனப் பெருக்கம் மற்றும் உற்பத்தி மேம்பாட்டிற்காகச் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையின் நிலப்பரப்பு, நீர் வளம் மற்றும் ஆடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இப்பண்ணையை மேலும் விரிவுபடுத்தத் தற்பொழுது வாய்ப்பில்லை. மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் கோழிப் பண்ணை ஏதும் செயல்படாத நிலையில், இப்பண்ணையின் நில மற்றும் நீர் வளத்தைக் கருத்தில் கொண்டு, புதிதாகக் கோழிப் பண்ணை அமைக்க வாய்ப்பு ஏதுமில்லை.





**66—**

## மாட்டுப் பண்ணை அமைத்தல்

**வினா எண் 84127—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் மாட்டுப் பண்ணை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியின் அருகில் புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையும், ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையும் நன்கு செயல்பட்டு வருகின்றன. அவையே போதுமானவையாகக் கருதப்படுவதால், அறந்தாங்கி நகரில் மாட்டுப் பண்ணை அமைக்கச் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**67—**

## குடிநீர்

**வினா எண் 58703—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி சிங்கோனா, பெரியகல்லார் ரோட்டில் குழாய் இருந்தும் பழுது அடைந்துள்ளதால் தண்ணீர் வருவது இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பெரியகல்லார் பகுதி, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. ஆனைமலை இந்திராகாந்தி வன உயிரின சரணாலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இப்பகுதிகளில் காட்டு யானைகள் மற்றும் காட்டெருமைகளின் நடமாட்டத்தால் குடிநீர்க் குழாய்களுக்குச் சேதம் ஏற்பட்டாலும், அவை அவ்வப்பொழுது சரி செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது இப்பகுதியில் உள்ள குடிநீர்க் குழாய்கள் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தால் பழுது நீக்கம் செய்யப்பட்டு, குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

68—

## கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

**வினா எண் 25586—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தனியார் கல்லூரிகளில் அதிகமான நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டு மாணவ, மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இட ஒதுக்கீடு செய்வது முறைப்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாநகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள தனியார் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அதிகமான நன்கொடைகள் பெற்றுக்கொண்டு மாணவ, மாணவியருக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுவதாகப் புகார் மனு எதுவும் வரப்பெறவில்லை.



(ஆ) தனியார் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இட ஒதுக்கீடு முறை அரசு விதிகளின்படி முறைப்படுத்தப்பட்டுள்ளது.

69—

## கணினிக் கல்வி

**வினா எண் 63748—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உதவி பெறும் கிருஷ்ணமூர்த்தி உயர்நிலைப் பள்ளி, எல்.எம்.சி. மேல்நிலைப் பள்ளி மற்றும் சியாமளா பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் கணினிக் கல்வி கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிகள் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளாகும். அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் கணினிக் கல்வி கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

70—

## ஆசிரியர்கள் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 65798—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், வாளவாடி, சிவசக்தி காலனி, உடுக்கம்பாளையம் உயர்நிலைப் பள்ளியில் போதிய தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2006 ஜனவரி 17

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) இம்மூன்று பள்ளிகளுக்கும் தலைமையாசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. ஆசிரியர் பணியிடங்கள் பள்ளித் தேவைக்கேற்ப நிரப்பப்பட நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது. புதிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டதும், கூடுதல் பணியிடங்கள் அந்தந்தப் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

71—

**அலுவலகம் இட மாற்றம்**

**வினா எண் 82067—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எட்டயபுரம் நகரில் செயல்பட்டுவரும் வணிக வரி அலுவலகத்தைத் தற்காலிகக் காவல் நிலையம் செயல்பட்டு வந்த கட்டடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

எட்டயபுரம், மேல ரத வீதியில் காவல் நிலையம் இயங்கி வந்த அரசுக் கட்டடத்தினை ரோந்துக் காவல் துறையினர், தற்காலிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கட்டடத்தின் உறுதிப்பாடு மோசமானதாகவும், மழை நீர் உட்புகும் நிலையில் பழுதடைந்து, செயல்படக்கூடிய நிலையில் இல்லை. எனவே, எட்டயபுரம் துணை வணிக வரி அலுவலர் அலுவலகத்தைத் தற்காலிகக் காவல் நிலையம் செயல்பட்டு வந்த கட்டடத்திற்கு மாற்றம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2006 ஜனவரி 17]

72—

**பால் உற்பத்தியாளர் சங்கம்**

**வினா எண் 69349—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.எல்.சி.யின்மூலம் பால் உற்பத்தியாளர் சங்கம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெய்வேலி நகரியத்தில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மட்டுமே வசித்து வருவதாலும், அவர்களில் பெரும்பாலோர் வெளி மாநிலத்தவர் என்பதாலும், கறவை மாடுகள் மிகவும் குறைவாக உள்ளதாலும், மேய்ச்சல் நிலங்கள் இல்லாததாலும், நெய்வேலி நகரியத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் துவக்க இயலாது.

73—

**பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம்**

**வினா எண் 70353—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வாடகையில் இயங்கிவரும் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் திட்டத்தின்மூலம் அவ்வப்போது சில சங்கங்களுக்குக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. மீதமுள்ள சங்கங்களுக்குப் படிப்படியாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2006 ஜனவரி 17

74—

### பால் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**வினா எண் 71519—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பணியாண்டப்பள்ளி ஊராட்சி, பாரதி நகரில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணியாண்டப்பள்ளி ஊராட்சி, பாரதி நகரில் 80 வீடுகளும், 30 பசு மாடுகளும், பணியாண்டப்பள்ளி வருவாய்க் கிராமத்தில் 450 வீடுகளும், 50 பசு மாடுகளும் உள்ளன. இந்த இரண்டு ஊர்களையும் சேர்த்து, பாரதி நகரில் சங்கம் அமைக்க வாய்ப்புகள் உள்ளதால், வேலூர்-திருவண்ணாமலை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநரின் இசைவு பெற்று, சங்கத்தைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

### பால் கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 80867—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் செயல்படாதவை எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 9,242 ஆகும். அவற்றில் 7,538 பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

(ஆ) செயல்படாத பால் கூட்டுறவுச் சங்கங்கள் 1,704 ஆகும்.



2006 ஜனவரி 17]

76—

### கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 75730—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்தியக் கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகம் உள்ளதா?

(ஆ) அதில் எத்தனை மாணவர்கள் பயிலுகிறார்கள்?

(இ) அவர்களுக்கு அரசு எந்தெந்த வகையில் உதவி செய்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்தியக் கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகம் இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

77—

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 80358—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் உள்ள விசைத்தறித் தொழிலாளர்களுக்கு அரசு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடியில் உள்ள விசைத்தறித் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

**கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 81173—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோ-ஆப்டெக்ஸ் பெண்ணாகரம் விற்பனை நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து விற்பனை குறைந்து, தொடர்ந்து நட்டத்தில் இயங்கியதால், 31-01-1998-ல் பெண்ணாகரம் விற்பனை நிலையம் மூடப்பட்டது. பெண்ணாகரத்தில் கடந்த தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் தற்காலிக விரிவாக்கச் சில்லறை விற்பனை நிலையம் ஆரம்பித்து விற்பனை செய்யப்பட்டது. அதுபோல், வரும் தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற விழாக் காலங்களில் தற்காலிக விரிவாக்கச் சில்லறை விற்பனை நிலையம் ஆரம்பித்து, அப்பகுதி மக்களின் துணித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பெண்ணாகரத்தில் இயங்கி வந்த மூடப்பட்டுள்ள கடையை மீண்டும் திறப்பதற்கு வியாபார ரீதியில் இயலவில்லை.

79—

**விசைத்தறிக் கூடம் அமைத்தல்**

**வினா எண் 81462—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் விசைத்தறிக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் உள்ள விசைத்தறித் தொழிலாளர்களுக்குப் புதிய விசைத்தறிக் கூடம் அமைக்கும் திட்டச் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

80—

**மீனவர் துயர் துடைப்பு நிதி**

**வினா எண் 59765—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதியில் 13 மீனவர் கிராமங்களிலுள்ள மகளிருக்கு மீனவர் துயர் துடைப்பு நிதி வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதியில் உள்ள 13 மீனவர் கிராமங்களைச் சேர்ந்த 1,306 மீனவ மகளிருக்கு 2004-05 ஆம் ஆண்டு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 15,36,000 வழங்கப்பட்டுள்ளது.

81—

**இலவச வீடுகள்**

**வினா எண் 61570—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, விஜயபுரம், மங்களநாடு, வேதியக்குடி, வேட்டனூர் மற்றும் பாண்டிக்குடி கிராமங்களில் வசிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, விஜயபுரம், மங்களநாடு, வேதியக்குடி, வேட்டனூர் மற்றும் பாண்டிக்குடி ஆகிய மீனவர் கிராம மக்களிடமிருந்து வீடுகள் வேண்டி, விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. எனவே, இக்கிராமங்களில் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

**82—**

### தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம்

**வினா எண் 64843—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் அலங்கார மீன் வளர்ப்புத் தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**83—**

### மீன்கள் விற்பனை

**வினா எண் 67204—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள சோலையார் அணை, ஆழியார் அணையில் பிடிக்கும் மீன்களை வெளிச் சந்தையில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சோலையார் அணையில் தற்பொழுது பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மக்களுக்கே விற்பனை செய்வதற்குப் போதுமானதாக உள்ளதால், வெளிச் சந்தையில் விற்பதற்கு வாய்ப்பில்லை. ஆழியார் அணை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவ்வணையிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மீன் விற்பனை மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படும் இம்முறையை வெளிச் சந்தை விற்பனையாகக் கருதலாம். ஆழியார் அணையிலிருந்து பிடிக்கப்படும் மீன்களில் உள்ளூரில் பொது மக்களுக்கு விற்பனை செய்தது போக, எஞ்சிய மீன்கள், வால்பாறை, பொள்ளாச்சி மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டிலுள்ள மீன் விற்பனை அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டு, அவையும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

(ஆ) எழாது.

**84—**

### இலவசத் தொகுப்பு வீடுகள்

**வினா எண் 67250—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சி, சாவடிக்குப்பம், பழையார், தொடுவாய், திருமுல்லைவாசல், கீழமூவர்க்கரை மற்றும் மடவமேடு மீனவர் கிராம மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சி, சாவடிக்குப்பம், பழையார், தொடுவாய், திருமுல்லைவாசல், கீழமூவர்க்கரை மற்றும் மடவமேடு மீனவர் கிராம மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

85—

### மீன் அங்காடி

**வினா எண் 73478—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சோலையார் அணையில் 2005-2006 ஆம் ஆண்டில் மீன் அங்காடி ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சோலையார் அணையில் 2005-2006 ஆம் ஆண்டில் மீன் அங்காடி ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

### சமுதாயக் கூடங்கள் கட்டுதல்

**வினா எண் 74832—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, வடக்கு புதுக்குடி, தெற்கு புதுக்குடி, கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம், பொன்னகரம் ஆகிய கிராம மீனவ மக்கள் இயற்கைச் சீற்றங்களின்பொழுது பாதுகாப்புடன் இருக்க சமுதாயக் கூடங்கள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டித்தருவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



87—

### மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம்

**வினா எண் 74387—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தல், அய்யம்பட்டினம், குமரப்பன்வயல், பாலக்குடி, ஆவுடையார்பாளையம் ஆகிய கிராம மீனவ மக்கள் இயற்கைச் சீற்றங்களின்பொழுது பாதுகாப்புடன் இருக்க சமுதாயக் கூடங்கள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டித்தருவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

### கடல் மீன் வளர்ப்புப் பண்ணைத் திட்டம்

**வினா எண் 75696—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 2003-2004, 2004-2005 ஆம் ஆண்டுகளில் கடல் மீன் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் செயல்படுத்துவதற்காக மேற்கொண்ட செலவினம் எவ்வளவு?

(ஆ) இம்முறையினால் அரசுக்கு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, ஏகாட்டூர் கிராமத்தில் (வாணியஞ்சாவடி) அமைந்துள்ள அரசு மாதிரி இறால் பண்ணையில் கடல் மீன் வளர்ப்புப் பணி (கொடுவா மீன்) மேற்கொள்ள ஏதுவாக, கடந்த 2003-2004 ஆம் ஆண்டில், பகுதி-இரண்டு

திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வளர்ப்புக் குளத்தில் 5,000 எண்ணிக்கை கொடுவா மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டன. இம்மீன் குஞ்சுகளை வளர்த்திட வளர்ப்புக் குளங்கள் பராமரிப்பு, மீன்களுக்குத் தீவனம், நீர் ஏற்றத் தேவையான டீசல் ஆகிய செலவினங்கள் மேற்கொண்ட வகையில், இதுவரை ரூ.1.91 இலட்சம் செலவினம் [பொன்னேரி (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) மீன் துறை உதவி இயக்குநரால்] மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனினும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வளர்ப்புக் குளத்தில் இருப்பு செய்யப்பட்ட கொடுவா மீன் குஞ்சுகளில் வளர்ந்த கொடுவா மீன்களை மட்டும் தேர்வு செய்து, பகுதி அறுவடை (Partial Harvest) கடந்த 20-08-2005 அன்று மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 11,026/- அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எஞ்சிய மீன்கள் வளர்ச்சியுற்றவுடன் முழுவதுமாகப் பிடிக்கப்பட்ட பின்பே மொத்த வருமானம் தெரிய வரும். இது ஆராய்ச்சி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசுத் திட்டமாகும்.

**89—**

## கலங்கரை விளக்கம் அமைத்தல்

**வினா எண் 82938—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடாவில் கலங்கரை விளக்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடாவில் கலங்கரை விளக்கம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.



**90—**

## மருந்துகள், மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்குதல்

**வினா எண் 83681—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை சிங்காநல்லூர், வரதராஜபுரத்தில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை என்கிற குறைபாடு இல்லை. சிங்காநல்லூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலை மற்றும் நடமாடும் மருந்தகங்களில் மருத்துவர் பதவி ஏதும் காலியாக இல்லை. கோயம்புத்தூர், வரதராஜபுரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 54 மருத்துவர் பதவிகளில் 48 பதவிகளில் மருத்துவர்கள் தற்சமயம் பணிபுரிந்து வருகிறார்கள். அங்கு காலியாகவுள்ள 6 மருத்துவர்கள் (மூத்த குடிமை மருத்துவர் 5 + உதவி மருத்துவர் 1) பதவிகள் நிரப்ப, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரால் (தொ.அ.ஈ.) தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**91—**

## விடுதி கட்டுதல்

**வினா எண் 83933—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் தொழிலாளர் நலத் துறை சார்பாகத் தங்கும் விடுதி ஒன்று கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறையில் தொழிலாளர் நலத் துறை சார்பாகத் தங்கும் விடுதி ஒன்று கட்டப்படுவதற்கான பிரேரணை ஏதும் தற்போது இல்லை. ஆனால், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்குச் சொந்தமாக வால்பாறையில் சிங்காரவேலர் ஓய்வு இல்லம் என்ற பெயரில் 2-09-1987 முதல் ஓய்வு இல்லம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு தொழிலாளர்களும், அவர்கள் குடும்பத்தாரும், பொது மக்களும் தங்கிப் பயன் பெறுகின்றனர்.

**92—**

### மருத்துவமனை துவக்குதல்

**வினா எண் 84241—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நூறு தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றும் தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

நம் மாநிலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்/மருத்துவமனைகள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் செய்யப்படும் ஆய்வு முடிவின்படி (Survey) துவங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்/மருத்துவமனைகள் திறக்க வரையறைகள் வகுத்துள்ளது. தற்சமயம் 3,000 காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் உள்ள இடங்களில் ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் துவக்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் காப்பீட்டாளர்களுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் மருத்துவச் சிகிச்சை அளிப்பது இம்மாநில அரசின் பொறுப்பாகும். 1,000 தொழிலாளர்கள் உள்ள, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் அமல்படுத்தப்படாத இடங்களில், தனிப்பட்ட ஈட்டுறுதி மருத்துவர்களைக் கொண்டு, அவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அம்மருத்துவர்களின் சொந்த மருந்தகங்களில்



இத்தொழிலாளர்களுக்கு அவசரச் சிகிச்சை தரும் ஏற்பாடு செயல்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள், தாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகிலோ, அல்லது வசிக்கும் இடத்திற்கு அருகிலோ உள்ள ஈட்டுறுதி மருத்துவரை அணுகி மருத்துவச் சிகிச்சை பெறலாம்.

**93—**

### அரசின் நலத் திட்டங்கள்

**வினா எண் 78134—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களை உடனுக்குடன் மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏற்ற வசதிகளை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அவைகளின் சார்பில் அரங்குகளை அமைத்து, அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கக்கூடிய வகையில், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் மாவட்டங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நேரங்களில், பல்வேறு நிகழ்ச்சிகள்மூலமும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கிராமங்களில் நடைபெறும் மக்கள் குறை கேட்பு நிகழ்ச்சிகளிலும் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், பல்வேறு துறைகளின்மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணிகளைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயல்படுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கள், அனைத்து

மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் கூட்டம், மாதம் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்தும் நடைமுறைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டங்கள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளும் விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் குறித்துப் பொது மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பாக செய்தித் துறை சார்பில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்த அவ்வப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**94—**

## விளக்கப் படங்கள்

**வினா எண் 79247—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் திரைப்படங்களை அரசின் சார்பில் தயாரித்து வெளியிடத் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வெளியிடப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் விளக்கப் படங்கள் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**95—**

## விளையாட்டு விழா

**வினா எண் 82224—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வால்பாறை நகராட்சிமூலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை விளையாட்டு விழா சிறப்பாக நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகராட்சி நிர்வாகத்தால் விளையாட்டு விழா நடத்துவது நடைமுறையில் இல்லை.

**96—**

## கராத்தே போட்டி நடத்துதல்

**வினா எண் 59378—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் கராத்தே போட்டியை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் கராத்தே போட்டியை நடத்திடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**97—**

## விடுதி வசதியுடன்கூடிய விளையாட்டுப் பள்ளி

**வினா எண் 70173—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 17

(அ) தருமபுரியில் விடுதி வசதியுடன்கூடிய விளையாட்டுப் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரியில் விடுதி வசதியுடன்கூடிய விளையாட்டுப் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**98—**

**விளையாட்டு மையம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 72345—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கரூர், ஆவுடையார்கோவில் மற்றும் பெருமருதூரில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் மற்றும் பெருமருதூரில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**99—**

**விளையாட்டு மையம்**

**வினா எண் 72350—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 17]

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம், மீமிசல் மற்றும் திருப்புவனவாசலில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம், மீமிசல் மற்றும் திருப்புவனவாசலில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**100—**

**விளையாட்டு மையம்**

**வினா எண் 72356—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நாகுடி மற்றும் அத்தாணியில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, நாகுடி மற்றும் அத்தாணியில் விளையாட்டுக் கருவிகளுடன்கூடிய விளையாட்டு மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2006 ஜனவரி 17

## 2. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. ப. இராஜரெத்தினம்
2. திரு. அ. அன்வர் ராஜா
3. திருமதி சி.எம். சூரியகலா
4. திரு. லா. சந்தானம்
5. டாக்டர் தே. குமாரதாஸ்
6. முனைவர் செ.கு. தமிழரசன்

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"*

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல். திருமதி செ. சுந்தராம்பாள்.

---

@ 269 முதல் 312 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2006 ஜனவரி 17]

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டம் ஆளுநருக்கு வழங்கியுள்ள உரிமையின் அடிப்படையிலேயே இந்த மாமன்றம் கூட்டப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு புத்தாண்டின் தொடக்கத்திலும் இந்தப் பேரவையைக் கூட்டி உரை நிகழ்த்தும் பெருமையையும், உரிமையையும் மேதகு ஆளுநர் பெற்றிருக்கின்றார். மேதகு ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவைக்கு வந்து ஆற்றிய உரைக்காக, அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு இந்தப் பேரவை கடமைப்பட்டிருக்கிறது. எனவே அதற்கான தீர்மானத்தை முன்மொழிந்து, அதன்மீது என் கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தாய்தன்னை மகவு மறந்தாலும், பெற்ற பிள்ளையைத் தாய் மறந்தாலும், கற்ற நெஞ்சம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும், வண்டுகள் தேனை மறந்தாலும், வண்ணத் தமிழ்நாட்டு மக்களை ஒரு வினாடியும் மறவாமல் தொண்டாற்றி வரும் எங்கள் தூய தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்னடிகளை வணங்குகிறேன். கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு முன் இந்தத் தமிழகத்தின் நிலையோ மாலுமி இல்லாத கப்பலாக, நீரில்லா குளத்துத் தெப்பமாக, ஆலயம் இல்லாத சிற்பமாக, சித்திரை மாதத்து வெப்பமாக, தாயில்லாக் குழந்தையாகத் தமிழகம் தத்தளித்தபோது, தாங்கிப் பிடிக்க ஒருவர் வந்தார். அவர்தான் தாயுள்ளம் கொண்ட எங்கள் தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நல்லதையே சிந்தித்து, ஓய்வறியாமல் உழைத்து, சதிகளை முறித்து, தீமைகளை அழித்து, நாளும் மக்களுக்கு நன்மை பயக்கும் நலத் திட்டங்களைத் தந்து, வறுமையை ஒழித்து, வளங்களைப் பெருக்கி, மக்கள் வாழ்வாதாரத்தை மேம்பட உயர்த்தி, தாயினும் சாலப்பரிந்து வாழும், தமிழக மக்களுக்கு எல்லாமாகத் திகழும் மனித நேயத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா,

(மேசையைத் தட்டும் ஒலி) ஓராயிரம் நிலவின் புன்னகை தாங்கி — ஓர் ஆயிரம் நிலவின் புன்னகை தாங்கி, ஆலய தெய்வத்தின் கருணை சிந்தி, அன்னையாய் வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தாய் இருக்கும் திசை நோக்கி, என்னுடைய நன்றியினை அவர் காலடியில் சமர்ப்பித்து என் உரையைத் துவக்குகிறேன்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல். தமிழக மக்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசை அசைக்க முடியாத அதிகப் பெரும்பான்மையுடன் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினார்கள். இரண்டாம் முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்ற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கருத்தை சட்டமன்றத்திலே சூளுரைத்தார்கள். "என்னை நம்பி வாக்களித்த ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே என்னுடைய குறிக்கோள்" என்றார். "இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற அயராது உழைப்பேன்" என உறுதியளித்தார். ஆட்சியிலே அம்மா அவர்கள் அமர்ந்தவுடனேயே எத்துணை, எத்துணை இடர்ப்பாடுகள், எத்துணை, எத்துணை தொல்லைகள், இயற்கைச் சீற்றங்களின் பாதிப்புகள் ஒரு புறம், சதிகாரக் கொடுமதியாளர்களின் சூழ்ச்சிகள் மறு புறம். அத்தனைக்கும் மத்தியிலே தன்னந்தனியாக நின்று, நிலையான அரசைத் தந்து, தங்களை நெஞ்சிலே வைத்துப் பூஜிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு 15 அம்சத் திட்டம் தந்து, பசி நோக்காது, கண் துஞ்சாது, கடுமையாக உழைத்து, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டிய ஆற்றல்மிகு தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இந்த நாலரை ஆண்டு காலங்களில் சாதித்திருக்கின்ற சாதனைகளைச் சொல்வது என்றால், இந்த நாள் ஒன்று போதாது. 40 நாட்களுக்கும் மேல் ஆகும். ஏனென்றால், நீங்கள் நாலரை ஆண்டுகளில் சாதித்திருக்கின்ற சாதனை, 40 ஐந்தாண்டு கால ஆட்சியாளர்கள் சாதிக்க வேண்டிய சாதனையைச் சாதித்திருக்கின்றீர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

இந்த அவையிலே ஒரு சில கருத்துகளைப் பதிய வைக்க நான் விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை. மருத்துவத் துறையைப் பொறுத்து, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நோயற்ற நிலையைத்



தமிழகத்திலே உருவாக்க அரும்பாடுபட்டு வருபவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதனால் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அத்துணை மாநிலங்களிலும், தமிழ்நாடு மருத்துவத் துறையில் முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்குக் காரணம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலே. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில் 106 சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நோயாளிகள் நவீன மருத்துவ வசதியைப் பெறுகின்ற நிலைக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் இந்த மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இந்த நாலரை ஆண்டு கால ஆட்சியில் தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய இடங்களில், ஒவ்வொரு கல்லூரியிலும் 300 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ஏழை, எளிய மக்கள் பயனடைகின்றார்கள்.

ஆங்கில மருத்துவத்திற்கு மட்டுமல்லாமல், ஆயுர்வேதத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரியை கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ரூபாய் 3 கோடி செலவில் நிறுவ உத்தரவிட்டுள்ளார்கள். 597 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 62 அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசர கால மகப்பேறு சிகிச்சை, தாய் மற்றும் பிறந்த குழந்தைகளைப் பேணும் பணிகளுக்காக, தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்படி, கடந்த நாலரை ஆண்டுகளில் குடும்ப நலத் துறையில் ஏற்பட்ட மிகப் பெரிய சாதனைப் புரட்சியால், குறிப்பாக 2001 ஆம் ஆண்டில், 87.9 சதவிகிதமாக இருந்த குழந்தை பிறப்பு சதவிகிதத்தை, 2005 ஆம் ஆண்டு 94.3 சதவிகிதமாக உயர்த்திய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இன்றைக்கு மகப்பேறு மருத்துவமனைகள் அனைத்தும் பல வசதிகளுடன், உள்கட்டமைப்புடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், வருங்காலத்தில் குழந்தை பிறப்பு சதவிகிதம், நூற்றுக்கு நூறு சதவிகிதம் உயிருடன், நல்ல ஆரோக்கியத்துடன் குழந்தைகள் பிறக்கக்கூடிய ஒரு சூழ்நிலையைக் கருணையுள்ளம் கொண்ட எங்கள் தாய் அவர்கள் ஏற்படுத்துவார்கள் என்பதை இந்த நேரத்தில் உறுதியிட்டுக் கூறுகின்றேன்.

தமிழ்நாட்டில் மருத்துவமனைக்கு அன்றாடம் சிகிச்சை பெற பல இலட்சக்கணக்கான புற நோயாளிகளும், தங்கி உள் நோயாளிகளாகச்

சிகிச்சை பெறுபவர்களும் இருக்கின்றார்கள். மத்தியத் தொகுப்பு மையம் ஒன்றை ஏற்படுத்தி, அங்கு நோயின் தன்மைக்கேற்ப தேவையான மருந்துகள், கொள்முதல் செய்து, மாநிலம் முழுவதுமுள்ள மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றன. முன்பெல்லாம் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் சிகிச்சைக்குச் செல்லும்போது மருத்துவர்கள் மருந்துகளுக்குச் சீட்டு எழுதிக் கொடுத்து, தனியார் மருந்துக் கடைகளுக்குச் சென்று வாங்கி வரச் சொல்வார்கள். வறுமையில் வாடுகின்ற ஏழை மக்கள், காசில்லாத காரணத்தால் மருந்துச் சீட்டைக் காற்றிலே பறக்கவிட்டு, நேராக நோயுடன் வீட்டுக்குச் சென்று முடங்கிய காலங்கள் உண்டு. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஏழை, எளிய நோயாளிகள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக விலை மதிப்பு மிகுந்த மருந்துகளைத் தட்டுப்பாடின்றி மருத்துவத் துறையின்மூலம், மருத்துவமனை வாயிலாக ஏழை, எளிய நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கி, எண்ணற்ற உயிர்களைக் காக்கும் சிறப்பு மிக்க முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான்.

முற்பகல் 11–10

இங்கே முக்கியமான ஒரு சாதனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சுனாமியால் பாதிக்கப்பட்டு, தங்களுடைய அனைத்துக் குழந்தைகளையும் இழந்து வாழ்வில் பிடிப்பற்று விரக்தியுடன் இருந்த பெற்றோர்களுக்கு, கருத்தடை செய்துகொண்ட பெண்களுக்கு, அவர்கள் திரும்பவும் குழந்தை பெற்றுக்கொள்ளும் வகையில் இலவச மாற்று அறுவை சிகிச்சை வாயிலாகக் குழந்தைகள் பிறக்க வழிவகை செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய அறுவை சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் செய்துகொண்டால், அப்பெற்றோர்களுக்கு அரசின் சார்பில் அந்த அறுவை சிகிச்சைக்கு ஆகும் செலவான ரூ. 25,000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய ஒரு நடவடிக்கையை ஒட்டுமொத்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட, குழந்தைகளை இழந்த பெற்றோர்களுக்கு இந்தோனேஷியா போன்ற நாடுகளில்கூட இப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சென்னை அரசு பொது மருத்துவமனையில் ஏழு மாடிகள் கொண்ட எழிலார்ந்த இரண்டு கட்டடங்களை ரூ. 104.47 கோடி செலவில் உருவாக்கி,



முழுவதுமாக stainless steel-இலான உலகத் தரம் வாய்ந்த 14 நவீன அறுவை சிகிச்சை அரங்குகளுடன் 1,634 படுக்கைகள் கொண்ட அதி நவீன மருத்துவமனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். இம்மருத்துவமனையில் தலைசிறந்த மருத்துவர்களை நியமித்து, தனியார் மருத்துவமனையில் கடந்த காலங்களில் Package System–களில் இலட்சக்கணக்கில் பணம் கட்டி நோய்களுக்கு மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்த நிலை மாறி, அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்த நிலை மாறி, ஏழையெளிய மக்கள் அரசு பொது மருத்துவமனைகளில் இலவசமாக அறுவை சிகிச்சை செய்துகொள்கின்ற கண்கொள்ளாக் காட்சியை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் பார்க்க முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதையறிந்து அண்டை மாநிலத்து நோயாளிகளும் சென்னையை நோக்கி வருகின்ற நிகழ்வுகள் இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்திலேதான் நடந்துகொண்டிருக்கின்றன. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இதுவரை 1,295 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 26,93,107 ஏழையெளியவர்கள் பயனடைந்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் முனைப்பான சீரிய திட்டத்தினால் இந்தியாவின் மருத்துவத் தலைநகர் தமிழ்நாடு என்பதையும், ஆசியாவின் மருத்துவ நுழைவாயிலாகத் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் கூற நான் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தீவிரவாதம். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழகத்திலே புரையோடிப் போய், கெட்டுப் போயிருந்த சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தன்னையே இந்த நாட்டுக்கு முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார். 1991–லிருந்து 1996 வரை பல்வேறு நடவடிக்கைகளால் தீவிரவாத நடவடிக்கைகளையும், சமூக விரோத சக்திகளையும் அழித்து, நல்லாட்சியை நாட்டு மக்களுக்கு அளித்தார். இன்று உலகம் முழுவதும் தீவிரவாதம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. அறிவியல் துறையில் தலைசிறந்த நாடாக இருக்கின்ற அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில்கூட, எந்த நேரத்தில் எந்த ஆபத்து வருமோ என்று மக்கள் பயந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலைமை. இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், பல்வேறு மாநிலங்களில் இன்றைக்கும் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாத

நிலை. சமூக விரோதிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த அளவில் விடுதலைப் புலிகளைக்கூட கட்டுப்படுத்தி, அவர்களின் நிழலைக்கூட இந்தத் தமிழ் மண்ணிலே பரவ விடாமல் (மேசையைத் தட்டும் ஒலி) வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திக் காட்டிய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்லாண்டு காலமாக மூன்று மாநிலங்களுக்குச் சவாலாக இருந்த, உலக நாடுகளின் கவனத்தையே ஈர்த்திருந்த வீரப்பன் என்ற சமூக விரோதியை வீழ்த்திக் காட்டியவர் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களை எடுத்துக்கொண்டால், ஒவ்வாரு மாநிலத்திலும் தீவிரவாதிகள், தாதாக்களின் அட்டகாசங்களும், சாதி, மதக் கலவரங்களும் அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தத் தமிழ் மண்ணில்தான் தாதாக்கள் சாம்ராஜ்யம் இல்லை, தீவிரவாதிகளின் ஆட்சி இல்லை. முழுமையாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சட்டத்தின் ஆட்சிதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவைப் பொறுத்த அளவில் பெருநகரங்கள் என்று கூறப்படுகின்ற சென்னை, புது டெல்லி, கொல்கத்தா, மும்பை போன்ற நகரங்களில் பல்வேறு மொழி, இனம், கலாச்சாரம் கொண்ட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் உள்ள பெருநகரங்களான நான்கு நகரங்களில் டெல்லியை எடுத்துக்கொண்டால், அங்கே பாராளுமன்ற வளாகத்திற்குள்ளேயே தீவிரவாதிகள் தங்கள் திறமைகளைக் காட்டியிருக்கிறார்கள். மும்பையை எடுத்துக்கொண்டால் தாதாக்கள் சாம்ராஜ்யம் இன்றைக்கும் நிலவிக்கொண்டிருக்கிறது. கொல்கத்தாவை எடுத்துக்கொண்டால், அந்நகரம் வங்காள தேசத்திலிருந்து வரக்கூடிய தீவிரவாதிகளுக்குச் சரணாலயமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் சென்னை மாநகரை எடுத்துக்கொண்டால், தீவிரவாதிகளின் தொல்லைகளோ, தாதாக்களின் சாம்ராஜ்யமோ, சமூக விரோத சக்திகளோ இல்லாத, அமைதி தவழும் மாநகரமாக சென்னை மாநகரத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் பன்னாட்டு நிறுவனங்களான Nokia, B.M.W., Flextronics போன்ற நிறுவனங்கள் தொழில் தொடங்க சென்னைக்கு வருகிறார்கள். இந்த மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையிலே தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



*முற்பகல் 11–15*

சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்கின்ற வகையிலே காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக 479 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவான திட்டம் வகுக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு (குறுக்கீடு) இல்லை, அதை நான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். மேற்கு வங்காளத்திலே தீவிரவாதிகளின் சரணாலயமாக அது இருக்கிறது என்ற குறிப்பு ஒன்று, முன்னாள் இராணுவ ஜெனரல் எழுதிய குறிப்பு அடங்கிய புத்தகம் ஒன்று என்னிடம் இருக்கிறது. வேண்டுமானால் அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதை நான் தருகிறேன். இதனால் 2001–ல் 71 சதவிகிதமாக இருந்த குற்றக் கண்டுபிடிப்பு விகிதம் 2005–ல் 86 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 416 கோடி செலவில் 10 ஆயிரம் வீடுகள் கட்டி காவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சி தமிழகத்தில் நடைபெறுவதற்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இந்த நான்கரை ஆண்டுகளில் சமூக விரோத சக்திகள் எங்கும் கலவரத்தில் ஈடுபட்டதில்லை. அதேபோல் சாதிச் சண்டைகள் இந்தத் தமிழகத்தில் சுத்தமாக இல்லவே இல்லை. அம்மாவினுடைய ஆட்சியில் தமிழகத்தில் எங்குமே வன்முறை வெறியாட்டங்கள் நடந்ததில்லை. வறியவர்களானாலும், வலியவர்களானாலும் சட்டத்தின் வாயிலாக நீதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையினை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் தீவிரவாதம், சட்டம்—ஒழுங்குச் சீர்குலைவு எங்கு ஏற்பட்டாலும் அதை இரும்புக் கரம் கொண்டு அடக்கும் இந்தியாவின் இரும்புப் பெண்மணியாய் மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணாதிக்க வர்க்கத்தில் அடிமையாய் இருக்கும் பெண்களை மேம்படுத்த, ஆணுக்கு நிகர் பெண் என்ற நிலையை சமுதாயத்தில் உருவாக்கிட, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெண்கள் நலம் பேணிடப் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அதிலே பெண்கள் கமாண்டோ

படை. பெண்கள் சிறப்புக் காவல் படை, சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்கின்ற காவல் நிலையங்களுக்குப் பெண் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். தீயணைப்புத் துறையில் உயர் பதவியில் பெண்கள், போக்குவரத்துத் துறையில் பெண் மார்ஷல்கள், பெண் காவலர்கள், போக்குவரத்துத் துறையில் பெண் ஓட்டுநர்கள், மகளிர் நீதிமன்றங்கள், இப்படிப் பெண்கள் சமூகம் உயர்ந்த நிலைக்கு வர வேண்டுமென்பதற்காகப் பல்வேறு பணிகளை அரசுத் துறைகளில் ஒதுக்கி சிறப்புச் சேர்த்திருக்கிற தலைவியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்ணினப் பேரொளியாக இன்று தமிழகத்திலே உயர்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணினம் விடுதலை பெறவேண்டும் என்று போராடிய தந்தை பெரியார், அண்ணல் டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கண்ட கனவுகளை நிறைவேற்றுகின்ற வகையில், பெண்ணினம் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு, 1992 ஆம் ஆண்டிலேயே அம்மா அவர்கள் சீரிய சிந்தனையிலே உதித்திட்ட சீரிய திட்டம்தான் மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான திட்டமானது இன்றைக்கு ஆல்போல் தழைத்து அருகுபோல் பெருத்து, 3 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள், 50 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கறவை மாடுகள் வாங்குதல், கோழிப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் மற்றும் சிறு வணிகக் கடைகள், கூட்டு விவசாயத் தொழில் செய்தல், பழச்சாறு உற்பத்தி செய்தல், ஊறுகாய், அப்பளம், மெழுகுவர்த்தி, ஊதுவத்தி ஆகிய தொழில்களில் ஈடுபட்டு, இன்றைக்குக் கிராமப்புறத்திலே ஒரு அமைதியான தொழிலாளர் புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள் இந்த மகளிர் சுய உதவிக் குழுவினர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் வருவதற்கு முன்பு, குடும்பக் கஷ்டங்களுக்காகக் கடன் பெறவேண்டுமானால் கந்து வட்டிக்காரர்களிடம் 100 ரூபாய்க்கு வாரம் 10 ரூபாய் தரவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, திரும்பச் செலுத்த முடியாமல் தற்கொலை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வங்கிகள்மூலமாகக் குறைந்த வட்டிக்கு சுய உதவிக் குழுவினருக்குக் கடன் பெற்றுத் தந்து, அவர்கள்



வாழ்வில் வளம் சேர்த்து, உயிர் பலியினைத் தடுத்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களேயே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும் மகளிர் சுய உதவிக் குழுவினை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்கள் தயாரித்த பொருட்களையே வாங்குவார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டாதவர்களே இன்றைக்கு இல்லை. சமீபத்தில் நாகப்பட்டினத்திற்கு வருகை புரிந்திருந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன்கூட இந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களை வாங்கி வெகுவாகப் பாராட்டிச் சென்றிருக்கின்றார் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். ஒரு மராட்டிய எழுத்தாளர் கண்டேகர், தேசியக் கொடியிலுள்ள மூவர்ணப் பகுதிகளை பெண்கள் வாழ்க்கைக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கின்றார். அதில் முதல் பகுதி, தந்தை என்ற ஆண் மகனை நம்பி வாழ்கின்ற வாழ்க்கை. இரண்டாம் பகுதி, கணவன் என்ற ஆண் மகனை நம்பி வாழ்கின்ற வாழ்க்கை. மூன்றாம் பகுதி, கணவனை இழந்து கைம்பெண்ணாக இருக்கின்ற சூழ்நிலையில் மகன் என்ற ஆண் மகனை நம்பி வாழ்கின்ற வாழ்க்கை. அன்றைக்கு பெண்ணைப் பற்றி அந்த எழுத்தாளர் கூறிய நிலை அன்றைக்கு இந்த நாட்டிலே இருந்தது. ஆனால், இந்தத் தமிழகத்திலே இன்று அந்த நிலை முழுவதுமாக மாறி, தேவைப்பட்டால் ஆண் மகனுக்கே வாழ வாழ்க்கை தருவேன் என்கிற அளவிற்கு, இன்றைக்குத் தமிழகத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழு என்ற அமைப்பின்மூலம் பெண்களைச் சொந்தக் காலில் நிற்க வைத்து, சுயமாகப் பொருள் ஈட்டும் ஒரு புதிய பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தியவர், பெண் இனத்தின் உயிர்நாடியாகத் திகழ்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டத்தால், கிராமப்புறத்தில் ஓர் அமைதியான பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன்

என்று சூளுரைத்து, அதற்காக 15 அம்சக் கொள்கைத் திட்டத்தைப் பிரகடனப்படுத்தினார் மாண்புமிகு அம்மா அவர்கள். ஓர் ஆண்டுப் பலனா, நெல்லை நடுங்கள், பத்து ஆண்டுப் பலனா, மரத்தை நடுங்கள், நூறு ஆண்டுப் பலனா, கல்வியைத் தாருங்கள் என்பது பொன்மொழி. தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உருவாகவேண்டும் என்று சொன்னால், அதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது கல்விதான். ஆதலால்தான் அதில் அதிகக் கவனம் செலுத்தி, தமிழக வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் பகுதியை இந்தக் கல்விக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செலவிட்டு வருகின்றார்கள். கல்வித் துறையைப் பொறுத்த அளவில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங்கிக்கொண்டு இருக்கின்றது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது ஏதோ அலங்கார வார்த்தைக்காகக் கூறப்பட்டது அல்ல. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1,274 புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், அனைத்துப் பள்ளிகளுக்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். போதுமான பள்ளிக் கட்டடங்கள், மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான அறிவியல் கூடங்கள், உடல் ஆரோக்கியத்திற்காக பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார மேம்பாட்டிற்காக நவீனக் கழிப்பிட வசதி போன்ற அனைத்து வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவர் இல்லங்கள், புதிய விடுதிகள் மற்றும் ஏற்கெனவே செயல்பட்டிருந்த வாடகை விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்களாக 1,362 கட்டடங்களை 465 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய நூறு விழுக்காடுகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டி முடித்து இமாலயச் சாதனை செய்தவர் எங்கள் இதய தெய்வம் என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இடையறாப் பணிகள் ஆற்றி, இமயமாய் உயர்ந்து நிற்கும் ஏற்றமிகு எங்களது மாண்புமிகு அம்மா அவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் ஏழை, எளிய மாணவர்களின் பெற்றோர்களின் ஏழ்மை



நிலையை உணர்ந்து, எந்தவிதமான கோரிக்கையையும் யாரும் வைக்காமலேயே தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் நானே தாயாகவும், ஆசானாகவும் இருந்து காப்பாற்றுவேன் என்று, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மாணவர்களுக்கும் 83 கோடி ரூபாய் செலவில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களை, இலவசமாக, குறித்த காலத்தில் வழங்கிய கல்வித் தாய் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொலைதூரம் சென்று படிக்க, குறித்த நேரத்தில் செல்ல இயலாமல் வருந்திக்கொண்டிருந்த ஏழையெளிய மாணவ, மாணவியர்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு எங்கள் அம்மா அவர்கள் அந்த மாணவர்களின் கல்வித் தரம் உயர்வடைய, அவர்களின் குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்ற இலட்சியத்தின் அடிப்படையில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கின்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் இதுவரை ரூபாய் 114 கோடி செலவில் 6 இலட்சத்து 35 ஆயிரம் மிதிவண்டிகளை வழங்கி அளப்பரிய சாதனையைப் படைத்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

12 ஆம் வகுப்புத் தேர்வில் இந்த அரசு தரக்கூடிய ஆக்கத்தாலும், ஊக்கத்தாலும் எளிதில் வெற்றிபெறும் கிராமப்புற மாணவர்கள் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளுக்குள்ளே நுழைய ஒரு அகழியாக இருந்தது நுழைவுத் தேர்வு. இந்த அகழிக்கு மேலே நுழைவுத் தேர்வு ரத்து என்கிற ஒரு அற்புதமான பாலத்தை உருவாக்கி, கிராமப்புறத்து மாணவ, மாணவியர்கள் பூஞ்சோலைக்குள் தென்றல் நுழைவதுபோல, விடியும் வேளையில் வெளிச்சம் புகுவதுபோல, நுழைவுத் தேர்வை ரத்து செய்து, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் உள்ளே நுழைய வழிவகை செய்தவர் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர்கள் வேலைவாய்ப்புத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வெளியிலே அரசியல் ஆதாயத்திற்காக அறிக்கை கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்புவதில் என்றுமே பின்வாங்கியதில்லை. அதற்கு உதாரணமாகத்தான், கல்வித் துறையில்

மட்டும் கடந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் மாணவச் செல்வங்களின் கல்வித் தரத்தை உயர்த்திட காலிப் பணியிடங்களில் 58 ஆயிரத்து 282 ஆசிரியர்களை நியமனம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் தரத்தினை உயர்த்திய உன்னதத் தலைவி எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழைக்குக் கல்வி எட்டாக் கனி என்ற நிலையை மாற்றி, ஏழைக்கும், கல்விக்கும் இடையே இருந்த குறுக்குச் சுவர்களைத் தகர்த்திட, மேற்கூறிய கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே கல்வியில் தமிழகத்திற்குத்தான் முதலிடம் என்னும் நிலையை உருவாக்கிய கலைமகளாம் எங்கள் தாயைப் போற்றுகிறோம், வணங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிறைந்த நாடு இந்தியா. 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். விவசாயிகளைப் பற்றிக் கூறும்போது சொல்வார்கள். காணி நிலம் இல்லை, கலப்பை சாற்ற இடமில்லை. சோற்றுப் பானைக்கு மாற்றுப் பானை இல்லை. உடுத்தும் உடைக்கும் மாற்று உடை இல்லை எனும் நிலையில் ஏழ்மையின் கடைசி விளிம்பில் போராடிக்கொண்டிருப்பவன்தான் விவசாயி என்று கூறுவார்கள். ஒரு தாய்க்குப் பல குழந்தைகள் இருந்தாலும், நலிந்த, நோயுற்ற குழந்தையின்மேல்தான் தாயின் முழு அன்பும், கருணையும் பாயும் என்பதற்கு உதாரணமாக, அந்த விவசாயக் கூலிகளின் வாழ்வை உயர்த்த, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட திட்டம்தான் முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு, குறு விவசாயக் கூலிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று யாரும் கோரிக்கை வைக்காமலே, நீண்ட நெடுங்காலமாக வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு, 15–8–2005—சுதந்திர தினத்தன்று மாண்புமிகு அம்மா அவர்கள், இதே கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திரக் கொடியை ஏற்றி வைத்து அறிவித்த திட்டம்தான் முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைப் பிரகடனப்படுத்தியபோது எள்ளி நகையாடியவர்கள் உண்டு. இந்த மாபெரும் திட்டத்தால் இன்றைக்கு ஒரு கோடியே 37 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் சிறு, குறு விவசாயிகள் பாதுகாப்பு அடைகின்றனர். இந்த முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்



திட்டத்தில் உறுப்பினராகச் சேருவதற்குச் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையான ரூபாய் 10–ஐயும், ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி 13 கோடியே 70 இலட்சம் ரூபாயையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ளவர்கள் விபத்தில் இறக்க நேரிட்டால் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி, விபத்தில் உடல் உறுப்பு இழப்பு ஏற்பட்டால் இழப்பின் தன்மைமைக்கேற்ப ஒரு இலட்சம் ரூபாய் வரை இழப்பீட்டு உதவி, இயற்கை மரணத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் உதவித் தொகை, மேலும் ஈமச்சடங்குச் செலவிற்கு ரூபாய் 2,500. முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களின் மகன்கள், மகள்கள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 10 ஆம் வகுப்பு, பிளஸ் 2, இளங்கலை வகுப்பு, முதுகலை வகுப்பு, சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், தொழிற்கல்வி, மேல் படிப்பிற்கு உதவித் தொகைகள், திருமண உதவி, பிரசவ உதவித் தொகை. அதுமட்டுமல்லாமல், ஓடியாடி உழைத்து 60 வயதடைந்த, வேலை செய்ய இயலாத, ஆதரவற்ற நிலையில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் மாதம் ரூபாய் 200 ஓய்வூதியம். இது ஒரு சமுதாய மாற்றப் புரட்சி. கிராமத்திலேயிருந்து விவசாயத்தை விட்டுவிட்டு நகரத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு அம்மா அவர்களின் புரட்சிகரமான இந்த முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தினால், நகரத்தை விட்டு மீண்டும் கிராமத்திற்கே சென்று கொண்டிருக்கின்ற மகத்தான திட்டம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம்.

*முற்பகல் 11–30*

கடந்த ஆட்சிக் காலத்தில்கூட விவசாயிகளைக் காப்பாற்றிட ஒரு திட்டம் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தில் 5 சதவிகித விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமே பதிவு பெற்றிருந்தார்கள். அவர்களுக்குப் போதிய நிதியையும் ஒதுக்கவில்லை. அவர்கள் உறுப்பினர்களாவதற்குக்கூட ரூபாய் 100 என்ற கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டணத்தை அந்த உழவர் பெருமக்களேதான் கட்ட வேண்டும் என்ற ஒரு சட்டமும் இயற்றப்பட்டிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த இந்த முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்குப் போதிய நிதியையும் ஒதுக்கி, அறிவிக்கப்பட்ட 5 மாதத்திற்குள் பல்லாயிரம் பயனாளிகள்

பயனடைந்து இருக்கிறார்கள். திட்டம் தீட்டுவதிலேயும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலேயும், வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு குறி வைத்த இலக்கை அடையும் வேகத்தில் எப்படி அடையுமோ—(மேசையைத் தட்டும் ஒலி) வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு குறி வைத்த இலக்கை அடையும் வேகத்தில் எப்படி அடையுமோ, அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லில் இருந்து புறப்பட்ட இந்தத் திட்டம் செயலாக்கம் பெற்று, இன்று விவசாயிகளுக்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பயன் தந்துகொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு ஆதாரமாக, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 5 மாதத்திற்குள்ளாக உயிரிழந்த, விபத்தினால் உயிரிழந்த 95 விவசாயிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் என்று 95 விவசாயக் கூலிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இயற்கை மரணம் அடைந்த 3,112 விவசாயிகளின் குடும்பத்திற்குத் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் மொத்தம் 3 கோடியே 11 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-8-1967 ஆம் நாள் மன்னார்குடி விவசாயக் கருத்தரங்கிலே அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகின்றபோது, "விவசாயிகளுக்குத் திருப்தி ஏற்படட்டாலொழிய, அவர்கள் வாழ்வில் நிம்மதி ஏற்படட்டாலொழிய, அவர்கள் வயிற்றுப்பாட்டுக்கு வழி செய்தாலொழிய நாடு முன்னேற்றம் அடைந்ததாகக் கூற முடியாது; விவசாயிகளைத் திருப்தியோடு வைத்துக்கொள்ள வேண்டும்; உரம் போட்டு விளையாத நிலம்கூட விவசாயிகளின் உடலிலிருந்து விழும் வியர்வையால் விளையும்; உழவர்களைப் பசியின்றிச் செய்துவிட்டுப் பாருங்கள், உற்பத்தி பெருகும்" என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறினார். இன்றைக்குப் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பிகள் என்று நாட்டிலே உலா வந்து கொண்டிருப்பவர்கள், உண்மையிலே அண்ணாவின் கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிட்டவர்கள். ஒரு விவசாயி எப்படி இருக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் எடுத்துக் கூறினாரோ, அதைப்போல இன்றைக்கு அண்ணா அவர்களின் கனவினை நனவாக்குகின்ற வகையில் முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்கள்தான் உண்மையான திராவிட இயக்கத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) வாரிசு என்று இந்த மாமன்றத்தில் நான் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோதெல்லாம் விளையாட்டுத் துறைக்கு முதலிடம் கொடுத்து உலகத் தரம் வாய்ந்த விளையாட்டுத் திடல்களை சென்னையிலே அமைத்தார்கள். சென்னை மாநகரத்தில் Chennai Open Tennis போட்டி, Hockey போட்டிகள், கால்பந்தாட்டப் போட்டி, நீச்சல் போட்டி, ஓட்டப் பந்தயம் போன்ற போட்டிகள் மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டுத் திடல்களில் இன்றைக்கு சென்னையிலே நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஊரகப் பகுதிகளில் இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் வாழ்கின்ற மக்களின் மகிழ்ச்சிக்காக அரசு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிகள் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்தைப் போலவே கிராமப்புறப் பகுதிகளிலும் இதுபோன்ற சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிகள் நடைபெற்றால் மக்கள் மகிழ்ச்சியாகக் கண்டு களிக்கவும், வர்த்தக வளர்ச்சி பெருகவும் வாய்ப்பாக அமையும் என்பதால், இதை அருள்கூர்ந்து அம்மா அவர்கள் பரிசீலிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கிற, வாழ்ந்து கொண்டிருக்கிற இன்றைய சூழ்நிலையில், கற்பனைக்கு எட்டாத இயற்கையின் தாக்குதல்கள் இரண்டு சென்னையில் நடந்தேறி இருக்கின்றன. அதில் ஒன்று, ஆழ்கடலே இடம் பெயர்ந்து, வாழும் தரைப் பகுதிக்குக் குடி பெயர்ந்ததுபோல, ஈர அலைகளால் உயிர்களை அள்ளித் தின்ற கோரச் சம்பவம், நம் தலைமுறை காணாத ஆழித் தாண்டவம், அதுதான் சுனாமி. மற்றொன்று, கூரை வெள்ளமே பிய்த்துக்கொண்டு கொட்டிய பேய் மழை, தமிழக வரலாறு காணாதது. தமிழக ஆறுகளும் இதுநாள் தாங்காதது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு பாதிப்புக்களிலிருந்தும் நாட்டு மக்களைக் காப்பாற்றுகின்ற பணியினைச் செய்து, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலக நாடுகளுக்கு வழிகாட்டியாகச் செயல்பட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–35*

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவர்களுக்கு மிக விரைவாக மறு வாழ்வை அளித்து, இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சர்வதேச அமைப்பான Fritz நிறுவனம் அண்மையில் நிகழ்த்திய ஆய்வு, தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின்போது மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான பணியினைப் பெரிதும் பாராட்டியுள்ளது. ஆனால், இங்கே இருக்கின்ற கல் மனம் படைத்தவர்கள், பொறாமைக் குணம் கொண்டவர்கள் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இன்றைக்கு பிதற்றித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வட கிழக்குப் பருவ மழை ஆரம்பமானது. அந்த மழை 100 ஆண்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய பேய் மழை. அடுத்தடுத்துக் குறைந்த காற்றழுத்த மண்டலம் ஏற்பட்டு, புயலாக மாறி, தமிழகத்தைத் தாக்கி சின்னாபின்னப்படுத்தியது. இது ஏதோ சில நாட்கள் பெய்து ஓயும் நிலை மாறி, 2 மாத காலம் தமிழகத்தைத் தொடர் மழையால் துவம்சம் செய்தது. இந்தப் பேய் மழையால் 22 மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. இதைச் சீர்செய்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் மழை, புயல், சூறாவளிக் காற்றால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும், மழை, சூறாவளி, புயலைவிட வேகமாக சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரிலே ஆறுதல் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய அரசு இயந்திரங்களை முடுக்கிவிட்டு, போர்க் கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றினார்கள்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தொகுதியிலும் வெள்ள நிவாரண மீட்பு நடவடிக்கை எடுத்து, அந்தந்தப் பகுதிகளில் மீட்பு நிவாரண நடவடிக்கைகளை ஆற்றுகின்றபோது, எங்களுக்குத் தோன்றிய எண்ணம், ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு தலைமைச் செயலகமே உருவாகிவிட்டதோ என்ற நிலை ஏற்படுகின்ற அளவுக்கு மீட்பு நிவாரணப் பணிகள் நடந்தன. மீண்டும் அந்த மக்கள் மழை ஓய்ந்த ஓரிரு நாட்களிலேயே இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியதை நாங்கள் எங்கள் கண்கூடாகக் காண முடிந்தது. ஆனால், ஒரு சில தலைவர்களோ இன்றைக்கு நீலிக் கண்ணீர் வடித்துக்கொண்டு, நாங்களும் இருக்கிறோம் என்று அடையாளம் காட்டிக்கொள்வதற்காக ஏதாவதொரு இடத்திற்குச் சென்று மக்கள் அருகில் நின்று குறை கேட்பதுபோல நடித்துவிட்டு, அதோடு வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கின்ற நிலையிலே இருக்கிறார்கள். இவ்வளவு மழை பெய்து மக்கள் பாதிக்கப்பட்டாலும், அவர்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாதவாறு உடனடியாக நிவாரணம் தந்து மக்களைக் காத்துச் செயல்பட்டவர் என்பதால்தான் இந்தியாவின் மூத்த குடிமகன் அப்துல் கலாம் அவர்களும், பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அளப்பரிய நிவாரணப் பணிகளைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இயற்கை இடர்ப்பாடுகளால் பீகார் பாதிக்கப்பட்டவுடன், பீகார் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்த குரல் எழுப்பி, மத்திய அரசு உடனடியாக 3,268 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. அதேபோன்று, காங்கிரஸ் ஆளுகின்ற மகாராஷ்டிர மாநிலத்தில் 2, 3 நாட்கள் பெய்த மழைக்கே, அந்த மாநிலத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்த குரல் எழுப்பி, உடனடியாக மத்திய அரசு 1,100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. ஆனால், தமிழ்நாட்டில் இரண்டு மாதங்கள் பெய்த தொடர் மழையால் 22 மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13,685 கோடி ரூபாய் நிதி உதவியும், 2.58 இலட்சம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் போன்றவற்றை மத்திய அரசிடம் பல முறை கடிதங்கள் வாயிலாகக் கேட்டும், பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே சென்று சந்தித்தும், நிலைமைகளை எடுத்துக் கூறியதற்குமிணங்க, ரூபாய் 1,000 கோடி நிதி உதவியும், 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும்தான் வழங்கியிருக்கின்றார்கள். நாங்கள் கேட்பதெல்லாம், தமிழகத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 39 எம்.பி.க்களில் 12 பேர் மத்திய அமைச்சர்கள். இவர்கள் இந்த நிவாரண உதவி கிடைப்பதற்கு இதுவரை என்ன செய்தார்கள்? எங்களுக்குக் கிடைத்த செய்தியின்படி, பிரதமரே கொடுக்க நினைத்தாலும், இவர்கள் தடுக்க நினைப்பதாகத்தான் எங்களுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) ஜி.கே. மணி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

* **திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதுவரையில் பேசியதில் நாங்கள் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 12 அமைச்சர்களும் வெள்ள நிவாரணத்திற்காக என்ன செய்தார்கள் என்று சொல்லிவிட்டு, பிரதமரே கொடுக்க முன்வந்தாலும் அதைத் தடுக்கத்தான் நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். இதற்கு என்ன ஆதாரம்? நான் உறுதியாகச் சொல்கிறேன். தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்து, தீர்மானம் நிறைவேற்றியபோதே, தமிழக முதலமைச்சர் என்ன நிவாரண நிதி கேட்டிருக்கிறாரோ, அதை முழுமையாகத் தர வேண்டும் என்றுதான் அன்றையதினம் தீர்மானத்தை நிறைவேற்றினோம். மத்திய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து, தமிழக அரசு கேட்கின்ற நிவாரணத் தொகையை முழுமையாக அளியுங்கள் என்று வேண்டுகோள் கொடுத்திருக்கிறார்கள், விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதை மறைத்துவிட்டு, பழி சொல்வது, பழி கூறுவது உண்மையிலே பொருத்தமானது அல்ல. அதைத் திரும்பப் பெறவேண்டும்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திமுக. தலைமையிலான எதிர்க்கட்சிகள் அடங்கிய கூட்டணி, அதாவது, மத்தியிலே ஆளுங்கட்சிகளாக இருக்கின்ற கூட்டணிக் கட்சிகள் இங்கே ஒரு கூட்டம் நடத்தி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக முதலமைச்சர் கோரியிருக்கின்ற உதவியை முழுவதுமாக வழங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கோரி, தீர்மானம் நிறைவேற்றியதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால், இந்தத் தீர்மானத்தை அவர்களே அங்கம் வகிக்கும் மத்திய அரசு மதிக்கவில்லையா? இவர்கள் தீர்மானம் நிறைவேற்றினால் மத்திய அரசு அதைக் குப்பையில் தூக்கிப் போட்டு விடுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியல்ல. இவர்கள் என்ன கோரினாலும், மத்திய அரசைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும், தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, இவர்கள் உண்மையிலேயே



என்ன கூறினாலும், செய்ய வேண்டிய நிலையில்தான் மத்திய அரசு இருக்கிறது. ஆகவே, பாசாங்கு செய்கிறார்கள், வழக்கம்போல் கண்துடைப்பு நாடகம் நடத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டி, தீர்மானத்தை நிறைவேற்றி, பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும் கொடுத்துவிட்டு, அங்கே பிரதமரைப் பார்த்து, ஜெயலலிதா கேட்கும் உதவியைக் கொடுத்துவிடாதீர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தேர்தல் வரப் போகிறது. நீங்கள் முழுவதுமாக அவர்கள் கேட்கின்ற உதவியைக் கொடுத்தால், அந்த அம்மாவிற்கு மிக நல்ல பெயர் வந்துவிடும், மக்கள் மத்தியில் செல்வாக்குக் கூடிவிடும், ஆகவே கொடுக்காதீர்கள் என்று உண்மையில் அங்கே தடுத்திருக்கிறார்கள். அதனால்தான் மத்திய அரசு எவ்வளவு கோரியும், கேட்ட உதவியை வழங்கவில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆற்காடு வீராசாமி, அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே இல்லை. (குறுக்கீடு) சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற கலையைக் கற்றவர்கள் அவர்கள் என்பதை இந்த நாடே நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும், அப்புறம் பேசுங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை, அடுத்து உங்கள் இயக்கம் சார்பாகப் பேசும்போது சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் ஒரு பொறுப்புள்ளவர். அவர் சொல்லும்போது நாங்கள் அதை மறுக்கவில்லை என்றால் எப்படி? நாங்கள் மக்களை ஏமாற்றவோ, அல்லது திசை திருப்பவோ எப்போதும் விரும்பியதில்லை. (குறுக்கீடு) சொல்கிறேன், தயவுசெய்து. ஒரு கேள்வி கேட்டார்கள். இங்கே தீர்மானம் நிறைவேற்றி மத்திய

அரசாங்கத்திற்கு அனுப்பினால் அதைக் குப்பைத் தொட்டியிலே போட்டு விடுவார்களா என்று கேட்டார்கள். ஒரு நல்ல கேள்வி அது. நாங்களும் மத்திய அரசாங்கத்திடம் பல முறை கேட்டபோது, நிதியமைச்சரே தமிழ்நாட்டிற்கு வந்து அவர் சொன்னதெல்லாம், 13,800 கோடி ரூபாய் முதலமைச்சர் கேட்டிருக்கிறார்கள். அதற்கு எந்தெந்த இனத்திற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று விவரமான அறிக்கை அனுப்பினால் நாங்கள் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறோம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இனத்தின்கீழ் எவ்வளவு உதவி வேண்டும் என்பதை விரிவாக, அவர்கள் கேட்ட முழு விவரங்களையும் எப்போதோ மத்திய அரசிற்கு அனுப்பியாகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மையானால், இதுவரை நாங்கள் கேட்ட உதவியை மத்திய அரசு ஏன் முழுவதுமாக வழங்கவில்லை? முழுவதுமாக விடுங்கள், பாதிகூட ஏன் வழங்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** திரு. சேகர்பாபு பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது. அவர் பேசியதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தெந்த சேதத்திற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று பட்டியலிட்டு, அவர்கள் மத்திய அரசுக்குத் தந்திருக்கின்ற பட்டியல் அனைத்துப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளிவந்திருக்கின்றது. மாண்புமிகு



உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பத்திரிகை, தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்து வருகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் சார்பாக, எதிர்க்கட்சியின் கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய நிலையினை நினைக்கும்பொழுது எனக்கு ஒரு கதைதான் நினைவுக்கு வருகின்றது. திருமால் வாமன அவதாரம் எடுத்து வந்து, மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டபொழுது, மகாபலி சக்கரவர்த்தி, தருகிறேன் என்று வாக்களித்திருக்கிறார். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர், இந்த மன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிகளுடைய கூட்டணி அத்தனையும் இந்த நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கிற வகையில் நேராகப் போய் பிரதமரிடத்திலே "நீங்கள் கொடுக்காதீர்கள், தேர்தலை முன்னிட்டு, பெயர் வந்துவிடும் என்று சொன்னார்கள்" என்று சொன்னார்கள். முதலமைச்சர் சொன்னார்கள். ஆகையினாலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சொல்லி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** எங்கள் கட்சியிலிருக்கிறவர்கள் கட்சியைவிட நாடு பெரிது என்று கருதுகிறவர்கள். (குறுக்கீடுகள்) இத்தகைய இழிச் செயலை என்றைக்கும் செய்யமாட்டார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இறுதியாகச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுவரை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. ஆனால்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்த ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலும் அதிகமாக மாநில அரசு செலவழித்து இருக்கிறது. அந்த விவரம் ஆளுநர் உரையிலேயே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

- **திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய நிலையினை நினைக்கும்பொழுது எனக்கு ஒரு சிறு கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. திருமால் வாமன அவதாரம் எடுத்து வந்து, மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டபொழுது, மகாபலி சக்கரவர்த்தி, தருகிறேன் என்று வாக்களித்திருக்கின்றார். ஆனால், அவருடைய அமைச்சர் சுக்ராச்சாரியார், தரவேண்டாம் என்று தடுக்கிறார். மகாபலி சக்கரவர்த்தி, தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற, கெண்டியிலே நீரெடுத்து வாமனருக்குத் தரும்பொழுது, வண்டு உருவம் எடுத்து சுக்ராச்சாரியார் கெண்டியின் துவாரத்தை அடைத்துக்கொண்டார். இதையறிந்த வாமனர் ஒரு புல்லை எடுத்து, துவாரத்தின் வழியாகக் குத்தியவுடன் சுக்ராச்சாரியாரின் கண் பறிபோயிற்று. அதுபோல, துன்பப்படுகின்ற மக்களின் துயர் நீக்குவதற்கு எந்த உதவியும் செய்யாவிட்டாலும், கொடுக்க நினைப்பதைத் தடுப்பவர்களுக்கு, வரும் தேர்தலில் சுக்ராச்சாரியாருக்கு ஏற்பட்ட நிலை *(மேசையைத் தட்டும் ஒலி)* வாக்குச் சீட்டு என்ற ஆயுதத்தால், *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்கள் வாக்குச் சீட்டு என்ற ஆயுதத்தால் தடுப்பவர்களுக்கும் ஏற்படுத்துவார்கள், தமிழகத்து மக்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெளிவோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே நிலவிக்கொண்டிருக்கின்ற அரசியல் சூழ்நிலை, இந்த நான்கரை ஆண்டுகளிலே அம்மா அவர்கள் நிறைவேற்றி இருக்கின்ற சாதனை சகாப்தங்கள், அது பொது விநியோகத் திட்டத்திலே வழங்கப்படுகின்ற அரிசியினுடைய விலையாக இருந்தாலும் சரி, போக்குவரத்திற்குப் பெறுகின்ற கட்டணமாக இருந்தாலும் சரி, வீடுகளில் உபயோகப்படுத்துகின்ற மின்சாரத்திற்கான கட்டணமாக இருந்தாலும் சரி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் மிகக் குறைந்த அளவு கட்டணம் பெறப்படுகிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



*முற்பகல் 11–50*

இந்த 5 ஆண்டுகளை எடுத்துக்கொண்டால், 3 ஆண்டுகளாகத் தமிழக அரசு எந்தவிதமான வரிச் சுமையையும் இந்த மக்கள்மீது திணிக்காமல், போடப்பட்டிருக்கின்ற அனைத்துத் திட்டங்களுக்கும், செலவினங்களுக்கும் யாருடைய கையையும் எதிர்பார்க்காமல், 6,000 கோடி ரூபாயாக இருந்த வணிக வரி வசூல் வருவாயை இன்றைக்கு 13,500 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்திய பெருமை, வரியே போடாமல் வரி வருவாயை உயர்த்திய பெருமை ஒருவருக்கு உண்டு என்றால், அது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி *(மேசையைத் தட்டும் ஒலி)* அம்மா அவர்களுக்குத்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய வீராணம் தந்த புனிதத் திருமகள்!

பொறுமையில் மண்மகள், புரட்சித் தலைமகள்!

கருவறைக் குழந்தைகளின் நலம் காத்த பூமகள்!

அனாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்த தாயிவள்!

கல்வியை வழங்கிய காலக் கலைமகள்!

சத்துணவும், சீருடையும் தந்த தமிழ்த் தலைமகள்!

நான்காம் தமிழ் தந்த அறிவியல் புதுமகள்!

தேன்மொழியை செம்மொழியாக்கிய தெய்வத் திருமகள்!

வீரப்பன் கொடுமையை வீழ்த்திய வீரமகள்!

வில்லன்களை, ரவுடிகளை ஒடுக்கிய தீரமகள்!

ஆலயம் அனைத்திலும் அன்னமிட்ட அருள்மகள்!

அர்ச்சகர்கள் ஊதியத்தை உயர்த்திய தவமகள்!

மென்பொருள் தொழிற்துறையை மேன்மைபெறச் செய்தவர்!

வன்முறையை ஒடுக்கிய வாய்மையின் வரமகள்!

இலவச வேட்டி—சேலை வழங்கிய தமிழ்த் திருமகள்!

அகவிலைப்படி உயர்த்திய அறிவினில் சுடர்மகள்!

இதயம் காப்போம் திட்டம் தந்த கருணை மாமகள்!

ஏழைகளின் உயிர் காக்கும் மருத்துவத் தாயிவள்!

தமிழகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் இதய தெய்வமாய் வீற்றிருப்பவர் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலறுந்த நரி ஒன்று—வாலறுந்த நரி ஒன்று, வைகுண்டம் தெரிகிறது என்று வழிகாட்டியதைப் போல—வாலறுந்த நரி ஒன்று, வைகுண்டம் தெரிகிறது என்று வழிகாட்டியதைப் போல, புறக்கணிப்பு, வெளிநடப்பு என்று வராண்டா கையொப்ப நாயகர் வழிகாட்டி, இன்றைக்கு எதிர்க்கட்சியினரும் ஒரு வித விசித்திரமான ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பது விந்தையாக இருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அவர்களுடைய வாதத் திறமையால் சட்டமன்றத்தில் எதிர்கொள்ளும் திராணியற்ற ஒரு தலைமையைப் பின்பற்றும் எதிர்க்கட்சிகளுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வாதத் திறமையால், சட்டமன்றத்தில் எதிர்கொள்ளத் திராணியற்ற ஒரு தலைமையைப் பின்பற்றும் எதிர்க்கட்சிகளுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு அழுக்கு மஞ்சள் பையை அக்குளில் திணித்துக்கொண்டு—ஒரு அழுக்கு மஞ்சள் பையை அக்குளில் திணித்துக்கொண்டு, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடட்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** திருவாரூரில் இருந்து தனியாகத் திசை தேடி ஓடி வந்த ஒருவர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடிக்கப் போகிறார். (குறுக்கீடுகள்) பேச்சை முடிக்கப் போகிறார், பேச்சை முடித்துவிடட்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இன்று, Bill Gates-க்கே கடன் கொடுக்கும் கோடீஸ்வரராகக் கொக்கரிப்பது எப்படி? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடிக்கப் போகிறார், முடித்துவிடட்டும்.



**திரு. பி.கே. சேகர்பாபு:** ஒரு அழுக்கு மஞ்சள் பையை அக்குளில் திணித்துக்கொண்டு, திருவாரூரில் இருந்து தனியாகத் திசை தேடி வந்த ஒருவர், இன்று Bill Gates-க்கே கடன் கொடுக்கும் கோடீஸ்வரராகக் கொக்கரிப்பது எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடட்டும். பேச்சை முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த 40 ஆண்டுகளில் கொள்கை ரீதியாகக் கட்சியைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, வர்த்தக ரீதியாகத் தன் குடும்பத்தைக் கோடீஸ்வரர்களாக்கிய வணிக வளர்ச்சி இது என்று இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) பேச்சை முடித்துவிடட்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அன்று புரட்சித் தலைவர் கணக்குக் கேட்ட காரணத்தால் கட்சியிலிருந்து நீக்கிய விளைவையும், கண்ணியம் மிகுந்த அம்மா அவர்களை இந்த அவையிலே அவமானப்படுத்தியதன் எதிர்விளைவுகளையும், அடுத்தடுத்து பெற்ற தோல்விகளிலிருந்து பாடங்கள் கிடைத்தும் தேறாத இவர்களைக் காலம்தான் திருத்தப் போகிறது, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் கடைத் தெருவிற்குக் கொண்டு வந்து நிறுத்தப் போகிறது. இவர்களை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். பேச்சை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நிறைவுபடுத்திச் சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இவர்களை (குறுக்கீடுகள்) இவர்களை, கூச்சலிடும் இவர்களை, (குறுக்கீடுகள்) கூச்சலிடும் இவர்களைக் காலம்தான் திருத்தப் போகிறது, மீண்டும் கடைத் தெருவில் கொண்டு வந்து நிறுத்தப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னதான் நீங்கள் கூட்டணி வைத்துக் கூத்தடித்தாலும், தன்னந்தனியாக—தன்னந்தனியாக, எங்கள் தாய் ஒருவர் போதும், மக்களின் செல்வாக்கோடு உங்களைப் புறமுதுகிட்டோடச் செய்வதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் புதுப் பாட்டை மீண்டும் பாடச் செய்வார். ஆயிரம் கூட்டணி சேர்ந்து கூப்பாடு போட்டாலும், தமிழ் மக்களுடன் கூட்டணி அமைத்த எங்கள் அம்மா அவர்கள் தொடர்ந்து தமிழகத்தின் முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) அமோக வெற்றியுடன் இங்கே வீற்றிருப்பார். ஆயிரம் கூட்டணி

சேர்ந்து கூப்பாடு போட்டாலும், தமிழ் மக்களுடன் கூட்டணி அமைத்த எங்கள் அம்மா அவர்கள் தொடர்ந்து தமிழகத்தின் முதல்வராக அமோக வெற்றியோடு இங்கே மீண்டும் வீற்றிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) 'சுற்றி நில்லாதே போ பகையே, துள்ளி வருகுது வேல்' என்றான் எழுச்சிக் கவிஞன் பாரதி. தமிழகத்தைக் கைப்பற்றி, தங்களின் குடும்பச் சொத்தாக்கிக் குதூகலம் காணலாம் என்று பகல் கனவு காணுகின்ற பகைவர் கூட்டம் புறமுதுகிட்டு ஓடப் போவது நிச்சயம். இனி வரும் தேர்தலில் இது நடைமுறை சத்தியம்! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

புறப்பட்டு விட்டது புரட்சித் தலைவியின் போர்ப் படை. வெற்றிக் களம் காண, புல்லுருவிகளை, ஒட்டுண்ணிகளை, தமிழகத்தை வட்டமிடும் வஞ்சக வல்லூறுகளை ஓட ஓட விரட்டப் போவது இனி நிச்சயம்! (மேசையைத் தட்டும் ஒலி) அதர்மம் என்னதான் கூச்சல் போட்டாலும், தர்மம் எப்போதுமே வெல்லும் என்பதை வலியுறுத்தி, இந்த 'ஏய்' என்று குரல் கொடுப்பவர்களை ஏற்கெனவே நாங்கள் அதிகமாகப் பார்த்தவர்கள் என்பதையும் கூறி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது என்னைப் பேச அழைத்தமைக்கு மீண்டும் ஒரு முறை அவர் பாதம் பணிந்து நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய பேச்செல்லாம் சபையிலே இருக்கக்கூடிய தகுதியுடையது என்று தாங்கள் கருதினால், இந்தக் கடைசி Assembly கூட்டத்திலாவது, ஜனநாயகம் நிலைநிறுத்தப்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசுகிறார்.

**திரு. துரைமுருகன்:** எங்களுக்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) எங்களுக்கு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசுகிறார். அவர் கருத்தைச் சொல்கிறார். உங்கள் உறுப்பினரை உங்கள் கருத்தைச் சொல்லச் சொல்லுங்கள்.



**திரு. துரைமுருகன்:** எங்களுக்கு ஒன்றுமில்லை. ஆனால் நியாயமா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரவர்களுடைய இயக்கம் வெற்றி பெறும் என்று கூறுவதும், எங்களுடைய இயக்கம்தான் ஆட்சி அமைக்கும் என்று சொல்வதும், அது ஒன்றும் பஞ்சமாபாதகம் அல்ல.

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சரைப் புகழ்வதற்கும், அந்தக் கட்சி வெற்றி பெறும் என்று சொல்வதற்கும், நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று சொல்வதற்கும் அவருக்கு உரிமை உண்டு. அதில் ஒன்றும் நான் குறுக்கிட மாட்டேன். ஆனால் கலைஞர் அவர்களைப் பற்றி இவ்வளவு இழிவாகப் பேசினாரே, இந்தச் சபையிலே அந்தச் சொற்கள் இருக்கலாமா என்பதை மட்டும் கேட்கிறேன். நீங்கள் இருக்கலாம் என்று கருதினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் சொன்னதற்கு நீங்கள்தான் புதிய விளக்கங்கள் எல்லாம் சொல்கிறீர்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, நீங்கள்தான் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னதற்கு நீங்கள்தான் புதிய விளக்கங்களைச் சொல்கிறீர்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் ஒரு சொல் சொன்னதை எடுத்தீர்களே, ஒரே ஒரு ஆசை சார் எனக்கு. வேறு ஒன்றும் வேண்டாம். இந்த 5 வருடத்தில், நாங்கள் சொல்லி, அவர்கள் பேசியதிலிருந்து ஒரு வார்த்தையை நீங்கள் எடுத்து விட்டீர்கள் என்ற வரலாற்றைப் படைத்துவிட்டீர்கள் என்றால், அது இந்தச் சபைக்குப் பெருமை, அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அன்பழகன் பேசட்டும். (குறுக்கீடு) துரைமுருகன் எப்போதும் நகைச்சுவையாகப் பேசியே பழக்கப்பட்டவர்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது சில கருத்துகளை எடுத்து வைக்க எனக்கு வாய்ப்பினை வழங்கிய எங்கள் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நான் ஆரம்பிக்கிறேன். இந்த கவர்னர் உரையைத் தயாரிக்க நீங்கள் மிகவும் சிரமப்பட்டு இருப்பீர்கள் என்று தெரிகிறது. காரணம், ஆண்டுக்காண்டு பக்கங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இந்த ஆண்டு அதிகப் பக்கங்கள். ஆனாலும்கூட, தமிழிலே 54 பக்கங்களும், ஆங்கிலத்திலே 45 பக்கங்களும் வந்திருக்கிறது. கூட்டிப் பார்த்தால் 9 என்ற எண் வருகிறது. 9 எண் வர வேண்டும் என்பதற்காகவே ஆண்டுதோறும் இதுபோன்ற உரை நிகழ்த்துவதற்கு அரசு அதிகாரிகளும், இந்த அரசும் மிகுந்த சிரமப்பட்டு இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். இந்தக் காரியங்களைச் செய்வதில் காட்டுகிற அக்கறையை தமிழ்நாட்டு மக்கள்மீது நீங்கள் காட்டியிருந்தால், நிச்சயமாக மக்கள் முன்னேற்றம் அடைந்திருப்பார்கள். இந்த ஆளுநர் உரையிலே நிறைவுக் கூட்டத் தொடர் என்று நீங்கள் இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். ஆம், இது இந்த ஆட்சிக்கு நிறைவுக் கூட்டம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் என்னதான் கஜானாவைக் காலியாக்கி, சலுகைகளை வாரி, வாரி வழங்கினாலும், ஏழைகளைக் கட்டிப் பிடித்து ஃபோட்டோவுக்கு pose கொடுத்தாலும், உங்களின் 5 ஆண்டு காலக் கொடுமைகளை மக்கள் மறக்கமாட்டார்கள். மன்னிக்கமாட்டார்கள். இன்னும் 3 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. அந்தத் தேர்தலில் எங்கள் அணி அமோக வெற்றி பெற்று, ஆளுகிற வரிசையில் நின்று, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முழுமையானதொரு பட்ஜெட்டை இந்த நாட்டு மக்களுக்கு வழங்குவார்கள்; உங்களை எதிர்க்கட்சி வரிசையிலேகூட அல்ல, 1996–லே என்ன நிலைமை ஏற்பட்டதோ, அந்த நிலைமை 2006 ஆம் ஆண்டு உங்களுக்கு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான்... *(குறுக்கீடுகள்)*

நண்பகல் 12–00

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிப்பது உங்கள் தலைவருக்குக் கை வந்த கலை. வனவாசத்திலே கவியரசர்



கண்ணதாசன் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். சாவிற்குச் செல்லும்போது பிணமகனாகவும், திருமண வீட்டுக்குச் செல்லும்போது மணமகனாகவும் நடிக்கின்ற கலை உங்கள் தலைவருக்கு மட்டும்தான் தெரியும்; வேறு யாருக்கும் தெரியாது.

**திரு. இ. புகழேந்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, வனவாசம் புத்தகத்தை எல்லாம்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடுகள்)*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக்கு மக்கள் goodbye சொல்லத் தயாராகிவிட்டார்கள். தமிழ்நாட்டிலே சமீபத்திலே ஏற்பட்ட வெள்ளம், அதற்காக நீங்கள் வழங்கிய வெள்ள நிவாரண நிதியைப் பற்றி இங்கே பேசினீர்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையிலே, வெள்ளத்தால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் 2,000 ரூபாய், நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், அனைத்து மக்களுக்கும் சென்னையிலே வழங்கினார்களா என்றால், நிச்சயமாக அவர்கள் வழங்கிடவில்லை.

14 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய இந்தச் சென்னை மாநகரில் சில பகுதிகளில்தான் முழுமையான அளவிற்கு இந்தப் பணி நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற தொகுதிகளில் இந்தப் பணம் வழங்குவது நிறுத்தப்பட்டு, ஆளுகிற கட்சியைச் சார்ந்தவர்கள் பெறுகிற வகையிலே அது நடைபெற்றது. அது மாத்திரமல்ல. சென்னை நகரிலே *(குறுக்கீடுகள்)* மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள்...

[2006 ஜனவரி 17

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடு) இல்லை. ஆளும் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது ஒரு குற்றச்சாட்டு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அது தவறு அல்லவா? அது தவறான தகவல்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடுகள்) இல்லை. அதற்கு ஆதாரமாகத்தான் சொல்கிறார்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றிலேயே, கட்சி வித்தியாசம் பாராமல், எந்த பாரபட்சமும் இன்றி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவி வழங்கிய ஒரே அரசு இதுதான் என்று (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. தொண்டர்களே பாராட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 17]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இருங்கள். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேசிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. எதிர்க்கட்சிகளுக்குச் செய்தோம் என்று சொல்கிறீர்களே, அதற்கு நான் ஆதாரம் சொல்கிறேன். (குறுக்கீடு) அதற்கு ஆதாரம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிவாரணப் பணிகளை முழுமையான அளவிற்கு முடுக்கிவிட்டு, சென்னையில் இருக்கின்ற 14 தொகுதிகளுக்கும் பாரபட்சமின்றி, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்ற ஒரு மனப்பான்மையில் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே தாலுகா வாரியாக, அதாவது, கோட்டை–தண்டையார்பேட்டை தாலுகாவிற்கு ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து அறுநூற்றுப் பத்து பேருக்கு, அதாவது, கிட்டத்தட்ட 39 கோடியே 72 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்;

புரசைவாக்கம்–பெரம்பூர் தாலுகாவிற்கு ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 528 பேருக்கு, 29 கோடியே 90 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய்;

[திரு. டி. ஜெயக்குமார்] [2006 ஜனவரி 17

மாம்பலம்–கிண்டி தாலுகாவிற்கு ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 349 பேருக்கு, 26 கோடியே 86 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய்;

மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி தாலுகாவிற்கு; 80 ஆயிரத்து 863 பேருக்கு, மொத்தம் 16 கோடியே 17 இலட்சத்து 26 ஆயிரம்;

எழும்பூர்–நுங்கம்பாக்கம் தாலுகாவிற்கு ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று பேர். உங்களுடைய தொகுதிக்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவை ஏற்று அந்தத் தாலுகாவில், உங்களுடைய தி.நகர் தொகுதிக்கு 34 ஆயிரத்து 576 பேருக்கு, 6 கோடியே 91 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, point of order. பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே "31 இலட்சம் குடும்பங்களுக்கு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையில் "31 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே 13 இலட்சம், 14 இலட்சம், தாலுகா, தாலுகாவிற்கு என்று சொல்லியிருக்கிறார். அதுவே 50 இலட்சத்திற்கு மேலே வருகிறது. இதுதான் என்ன என்று கேட்கிறேன்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 13 இலட்சம் இல்லை. (குறுக்கீடு) அவர் பயனாளிகளைத்தான் குறிப்பிடுகிறார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வரை 6,66,803 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பயனாளிகளைத்தான் குறிப்பிடுகிறார். திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அரசன், என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்)



2006 ஜனவரி 17]

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. அரசன் சொல்லட்டும்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. அன்பழகன், பேசட்டும். திரு. அரசன், உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** தமிழகத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பை வெளியிட்டார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். திரு. அன்பழகன் பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், அப்புறம் கேளுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசி முடித்ததற்குப் பின்னர் பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதல்வரும் விளக்கினார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், அவர் பேசி முடித்தவுடன் கேளுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நம்முடைய அமைச்சர் அவர்களும் விளக்கியிருக்கிறார்கள். தாலுகா வாரியாக எவ்வளவு பேருக்குத் தந்திருக்கிறோம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த

ஆட்சியைக் கேட்க விரும்புகிறேன். சென்னை நகரில் 14 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். திரு. சேகர்பாபு, என்ன? (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் எத்தனை ரேஷன் அட்டைகள், எத்தனை பேருக்கு நீங்கள் வழங்கினீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். திரு. சேகர்பாபு, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேச வந்ததை clarify பண்ணத்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** உண்மை, உண்மை. (குறுக்கீடுகள்) இல்லை, தவறான கருத்து. (குறுக்கீடுகள்) தவறான கருத்து. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையிலே இருப்பதைத்தான் சொல்கிறார். அது ஒன்றும் தப்பில்லை. (குறுக்கீடுகள்) அவர் கருத்தைச் சொல்லட்டும்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மக்களுக்கும் நிவாரண உதவியை வழங்குவதாகத் தெரிவித்தார்கள் என்று உறுப்பினர் கூறினார். புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்த அளவில், பாதிக்கப்பட்ட பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குத்தான் நிவாரண உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்தார்கள், இன்று வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு மாத்திரம்தான் இந்த உதவி வழங்கப்படுவதாகக் கூறினார்கள். வட சென்னையைப் பொறுத்த அளவிலே, முழுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதி. (குறுக்கீடுகள்) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியை எடுத்துக்கொண்டால், 95 சதவிகிதம் மக்களுக்கு முழுமையாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உறுப்பினர்களென்றால், பெரம்பூர் தொகுதி திரு. மகேந்திரன் எந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் கேட்கிறேன். 14 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அமைச்சரிடத்திலே புள்ளிவிவரம் இருக்கும். ஒவ்வொரு தொகுதியிலும் எத்தனை ரேஷன் கார்டுகள்? எத்தனை பேருக்கு நீங்கள் நிவாரணம் வழங்கினீர்கள் என்ற அந்தப் புள்ளிவிவரத்தைச் சொன்னாலே, எந்தெந்தத் தொகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மை நாட்டு மக்களுக்குத் தெரியும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது, இப்போது பேசிக்கொண்டிருப்பது அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜெ. அன்பழகன்:** என்ன? என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த ஆதாரமும் இல்லாமல் தாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஆளுநர் உரைமீது பேசுவதாக இருந்தால் பேசுங்கள். தேவையில்லாமல், மாலை நேரப் பொதுக் கூட்டத்திலே பேசுவதைப்போலப் பேசுவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். திரு. சேகர்பாபு பேசினார். அவர் முழுக்க, முழுக்கப் புள்ளிவிவரங்களோடு பேசினார். கடைசியில் அவர் சொன்ன சில கவிதை வரிகளுக்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்தீர்கள். இவர் ஆரம்பத்திலிருந்தே பொதுக் கூட்டத்திலே பேசுவதைப்போலப் பேசுகிறார். இப்படிப் பேசுவதாக இருந்தால் நான் பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) இப்படிப் பேசுவதாக இருந்தால் பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, எதிர்க்கட்சி என்றால் குழப்பம் விளைவிப்பதற்காக வருவது அல்ல. சட்டமன்றத்திலே குழப்பம் விளைவிப்பதற்காக வருவது எதிர்க்கட்சியினுடைய கடமை அல்ல. கருத்துகளைச் சொல்லவேண்டும். தொகுதிகளுக்குச் சரியாக வழங்கவில்லை என்று

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்னார். அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்தைப் படித்தார்கள். அவர் புள்ளிவிவரத்தினுடைய அடிப்படையிலே பேசட்டும். ** என்று இப்படியெல்லாம் பேசியது முறையற்றது. பேச அனுமதிக்கமாட்டேன். *(குறுக்கீடுகள்)* உங்களுடைய வாய்ப்பு முடிந்துவிட்டது. திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)* திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)* திரு. கோவை தங்கம், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* கொடுத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தி ஆளுநர் உரையிலே சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லாமல், அவையிலே குழப்பம் விளைவிக்கவேண்டும் என்கிற உள்நோக்கத்தோடு, அவையைத் திசை திருப்ப வேண்டுமென்கிற உள்நோக்கத்தோடு, வீண் வம்புகளை வளர்க்க வேண்டும் என்கிற உள்நோக்கத்தோடு திரு. ஜெ. அன்பழகன் பேசிய காரணத்தால், அவருடைய நேரம் முடிந்துவிட்டது. திரு. கோவை தங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன். *(குறுக்கீடுகள்)* திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–10*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப்போல, ஏதாவது ஆளுநர் உரையை மீறிப் பேசியிருந்தால், ஆளுநர் உரையைத் தொடர்ந்து, அது பற்றிப் பேசுங்கள் என்று நீங்கள் ஆணையிடுவதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஆளுநர் உரைக்கு உள்ளேயே போகவில்லை. *(குறுக்கீடுகள்)* ஆளுநர் உரையைப் பற்றியே பேசவில்லை. ஆளுநர் உரைக்கு உள்ளேயே போகவில்லை. *(குறுக்கீடு)* அவர் ஆரம்பத்திலேயிருந்து ஒன்பது என்ற எண் வருவதற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று, *(குறுக்கீடுகள்)* ஆளுநர் உரைக்குச் சம்பந்தம் இல்லாத விவகாரங்களை, அதை முறையாகப் படிக்காத காரணத்தால், ஆளுநர் உரைக்குச் சம்பந்தம் இல்லாத செய்திகளைச் சொன்னார். *(குறுக்கீடு)* ஆளுநர் உரையிலே இருப்பவைகளைப் பற்றிய விமர்சனங்கள் எதையும் சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஆளுநர் உரையின் மேலேதான் சேகர்பாபு பேசினார். *(குறுக்கீடுகள்)* அதிலுள்ள கருத்துகளைச் சொன்னார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேகர்பாபுவும் ஆளுநர் உரையை மீறிப் பேசினார், நாங்கள் குறுக்கிடவில்லை. அரசியலிலே, ஆளுநர் உரையிலே இருக்கக்கூடியவற்றை விமர்சனம் செய்யக்கூடிய உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நான் சொல்வது, ஆளுநர் உரையை மீறி அரசியல் பேசினால் நீங்கள் அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையை மீறித்தான் அவர் அரசியல் பேசினார். *(குறுக்கீடுகள்)* ஆளுநர் உரையை மீறித்தான் பேசினார். உங்களுக்கு goodbye சொல்லத் தயாராகிவிட்டார்கள்; இது நிறைவான—இதோடு சட்டசபை முடிகிறது, என்றெல்லாம் இப்படிப் பேசுவது முறையற்றது. திரு. ஜெ. அன்பழகன் பேசிய அனைத்தும் ஆளுநர் உரையிலே சம்பந்தப்பட்டவைகள் அல்ல. *(குறுக்கீடுகள்)* ஆளுநர் உரைக்குத் தொடர்புள்ளவைகளும் அல்ல. ஆளுநர் உரையோடு எந்த வகையான தொடர்பும் கொண்டவைகள் அல்ல. முறைகேடாக, வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கின்ற வகையில் அவர் பேசிய காரணத்தால், ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைச் சொல்லி, ** அவருடைய வாய்ப்பும் இதோடு முடிகிறது. *(குறுக்கீடு)* திரு. கோவை தங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)* திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் பேசிய ஏழு நிமிடமும் ஆளுநர் உரையிலே பேசவில்லை. எத்தனையோ முறை—நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதுவரைக்கும் இந்த அவையிலே பேசாமல் இல்லை. திரு. துரைமுருகன் அவர்கள் இதுவரைக்கும் பல முறை பேசியிருக்கிறார்கள். அவர் பேசத் தொடங்கியதிலிருந்து கடைசி வரைக்கும் நான் நீக்கியிருக்கிறேனா? எவ்வளவோ கிண்டல் செய்திருக்கிறார், நான் நீக்கி இருக்கிறேனா? தாங்கள் பேசியிருக்கிறீர்கள் போன முறை. ஆளுநர் உரையைப் பற்றிப் பேச ஆரம்பிக்கின்றபோதே, எடுக்கிறபோதே இந்த ஆட்சிக்கு goodbye

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லத் தயாராகிவிட்டார்கள், இதோடு முடிகிறது என்றெல்லாம் இப்படி அமங்கலமாகப் பேசுவது என்பது ஆளுநர் உரைக்குத் தொடர்பற்றது. வாய்ப்பு முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஒரு ஆளுங்கட்சியின்மீது எதிர்க்கட்சிக்காரர்கள் குற்றச்சாட்டுகள் சொல்வார்கள். ஒன்றை நான் கேட்கிறேன். அவர் ஆளுநர் உரைமீது பேசினாரா என்று தாங்கள் கோபப்படுகிறீர்கள், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நண்பர் ஆளுங்கட்சி வரிசையிலே பேசியவர், கலைஞர் அவர்கள் திருவாரூரிலிருந்து வந்தார் என்று பேசினாரே, அது ஆளுநர் உரையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவர் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்படியெல்லாம் ஆத்திரப்பட்டுப் பேசக் கூடாது, அவையிலே குழப்பம் விளைவிக்க நினைக்கக் கூடாது. ஆத்திரப்பட்டுப் பேசக் கூடாது. தயவுசெய்து அமருங்கள். திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களுக்கு இதுவே கடைசி சட்டமன்றக் கூட்டத் தொடராக இருக்கலாம். ஆகவே, அவருக்கு வழங்கப்படுகின்ற வாய்ப்பைத் தாங்கள் இதோடு நிறுத்திவிடாமல், அவருக்கு மேலும் ஒரு ஐந்து மணித் துளிகள் பேச வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், பேசுங்கள். இங்கே பாருங்கள், சட்டமன்ற விதிமுறைப்படி, துரைமுருகன், உங்களுக்குத்தான் சொல்கிறேன். எனினும், சொல்லவிருக்கும் குற்றச்சாட்டுக்கள் பேரவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவோ, அல்லது பொது நலனுக்கு ஒவ்வாததாகவோ அல்லது பேரவைமுன் இருக்கும் அலுவல்களைக் குறித்து நேரிடையாகத் தொடர்பு இல்லை என்றோ பேரவைத் தலைவர் கருதுவாரேயானால், அதனை எந்த நேரத்திலும் நீக்கலாம்; எந்த உறுப்பினரையும் தடை செய்யலாம். அன்பழகன், இதைப் புரிந்துகொண்டு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை நான் அப்படியே ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை நீங்கள் சபைக் குறிப்பிலிருந்து எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** ஆனாலும், முதலமைச்சர் அவர்கள் அன்பழகனுக்கு இதுதான் கடைசி சட்டசபையாக இருக்கும், ஆகையினாலே ஒரு ஐந்து நிமிடம் கொடுங்கள் என்று சொன்னார். நான் என்ன நினைக்கின்றேன் என்று கேட்டால், நமக்கும் இதுதான் கடைசி சட்டசபை, ஆகையினாலே ஒரு ஐந்து நிமிடம் கொடுத்துப் பெருந்தன்மையாக நடந்துகொள்வோம் என்று முதலமைச்சர் முன்வந்ததற்காக நன்றி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஜனநாயக நாடு. அவரவர் கருத்தைச் சொல்ல அனைவருக்கும் உரிமையுண்டு. பகல் கனவு காண தி.மு.க.வினருக்கு உரிமையுண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. அன்பழகன் ஏதோ பகல் கனவு கண்டு, கண்டதையெல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். பேச அனுமதிக்கலாம். அதனால் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் சொன்ன பிறகாவது பேச அனுமதித்ததற்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்குக் கடைசி சட்டசபைக் கூட்டத் தொடர் என்று சொன்னார். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அவருடைய வாய்ப்பு பறிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன் எப்படிப் பேசுவார் என்பதற்கு இது ஒரு உதாரணம். ஆகவே, தாங்கள் இனிமேல் பேசுவதற்கு அனுமதியில்லை. திரு. கோவை தங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்போது பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையாக ஆளுநர் உரையிலே அவர் பேசட்டும், இன்னும் ஒரு ஐந்து மணித் துளிகள் பேசட்டும் என்று பெருந்தன்மையாக அனுமதித்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு நானும் அனுமதி அளித்தேன். ஆனால் அவர் பேசத் தொடங்குகிறபோதே—ஏனென்றால், அவர் பேசுகிற முறை எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும்—எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆரம்பத்திலேயிருந்து—அதே முறையிலேதான் பேசிக் கொண்டிருக்கிறார். இது சட்டமன்றத்திற்கு உகந்த முறை அல்ல. அதை மாலை நேரப் பொதுக் கூட்டங்களிலே பேசலாம். அங்கே போய்ப் பேச்சுக் கச்சேரியை வைத்துக்கொள்ளுங்கள். அடுத்து திரு. கோவை தங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு கொடுத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால் ஜெ. அன்பழகனுடைய வாய்ப்பு இத்தோடு முடிகிறது. திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** ஜனநாயக முறையில் கருத்துச் சொல்கிற உரிமை இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏன் மறுக்க வேண்டும்? அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) இல்லையா? திரு. ஆறுமுகம், பாட்டாளி மக்கள் கட்சி ஆறுமுகம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றை யாரும் மாற்ற முடியாது. பர்கூரில் தோற்றது உண்மை. அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதன் பிறகு மீண்டும் எழுந்து வந்து, எல்லா எதிர்ப்புகளையும் தவிடுபொடியாக்கி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும்



உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். ஆகவே, தாங்கள் மீண்டும் அவரை மன்னித்து, ஐந்து மணித் துளிகள் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே நீங்கள் ஆறாவது பக்கத்தில் வெள்ள நிவாரணத்திற்காக, அதனுடைய புனரமைப்புப் பணிகளுக்காக மொத்தம் 1,079 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியுள்ளதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே, 566 கோடி ரூபாயை, மக்களுக்கு பணம் என்கிற பெயரில் உதவி வழங்குவதற்கும், 513 கோடி ரூபாயை, சாலைகள், பாலங்கள் கட்டுவதற்கும் ஒதுக்கியிருப்பதாகவும், ஆக மொத்தம் ரூ.1,079 கோடி நிதி ஒதுக்கியதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, மத்திய அரசு உங்களுக்கு ஒதுக்கிய 1,000 கோடி ரூபாய் இதிலே சேர்கிறதா? இல்லை, அது அல்லாமல், தமிழக அரசு மாத்திரமே இந்த 1,079 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறதா என்பதை நிதியமைச்சர்மூலமாக நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்துள்ளது. தனியார், இந்த அரசாங்கத்திலே இருக்கிற அலுவலர்கள், அமைச்சர்கள் ஆகியோர் தந்த அந்த நிதி, ஏறத்தாழ 50 கோடி ரூபாய்—49.7 கோடி ரூபாய் இதுவரையிலே முதலமைச்சருக்கு வந்துள்ளதாகவும் ஒரு செய்தி வந்திருக்கிறது. அப்படியென்று சொன்னால், 1,050 கோடி ரூபாய் இதுவரையிலே உங்களுக்குப் பணம் வந்திருக்கிறது. வந்த பணத்திலே தமிழ்நாடு அரசு செயல்பட்டிருக்கிறது. ஆகவே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, மத்திய அரசு ஒதுக்கிய 1,000 கோடி ரூபாய் இதிலே இருக்கிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12–20

அது மாத்திரமல்ல. இந்த கவர்னர் உரையிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், 1,000 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியிருக்கிறது என்று. ஆனால், ஒரு நன்றி சொல்லவில்லை. பணம் கேட்கிறீர்கள்; மேலும் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். ஆனால், ஒரு நன்றியை மத்திய அரசுக்கு நீங்கள் சொல்லவில்லை. ஆக, இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், இந்தப் பெருமழை, வெள்ளம், இவைகளெல்லாம் வந்து, அதற்கு இந்த ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட தொகை, வெறும் 29 கோடி ரூபாய்தான்

தமிழ்நாடு மாநில அரசு ஒதுக்கியிருக்கிறது என்பது, இந்த கவர்னர் உரையிலே ஆதாரபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆக, மத்திய அரசு வழங்கிய நிதியைத்தான் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள்.

அது மாத்திரமல்ல. சுனாமி வந்தபோதுகூட, சுனாமிக்கு மத்திய அரசு நிதி வழங்கியதை இதே கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். 812 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது மாத்திரமல்ல, உலக வங்கி போன்ற பல பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து 2,618 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். 2,618 கோடி ரூபாயையும், மத்திய அரசு வழங்கிய 812 கோடி ரூபாயையும் சேர்த்தால், 3,430 கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கம் என்ன செலவு செய்திருக்கிறது என்று சொன்னால், 1,136 கோடி ரூபாயை சுனாமி பாதித்த பகுதிகளுக்கு செலவழித்ததாகவும் கணக்குக் காட்டியிருக்கிறீர்கள். இன்னொரு 832 கோடி ரூபாயை சீரமைப்புப் பணிகளுக்காகவும், வாழ்வாதார உதவிகளுக்காகவும் அனுமதித்ததாகச் சொல்லியிருக்கிறீர்களே தவிர, செய்திருப்பதாகச் சொல்லவில்லை. ஆக, இந்த இரண்டையும் கூட்டிப் பார்த்தால்கூட, 1,968 கோடி ரூபாய்க்குத்தான் சுனாமிக்கு நீங்கள் செய்திருக்கிற கணக்கு வருகிறது. ஆக, உங்களிடம் இருக்கிற 3,430 கோடியில் இந்த 1,968 கோடி ரூபாய் செலவு போக, மீதி 1,462 கோடி ரூபாய் இந்தத் தமிழ்நாடு அரசாங்கத்திடம் இருக்கிறதா? அல்லது, வேறு திட்டங்களுக்கு ஏதேனும் அந்தப் பணத்தைச் செலவழித்திருக்கிறீர்களா என்பதை நிதி அமைச்சர் புள்ளிவிவரத்தோடு சொல்வார், எப்போதும் சொல்வார், இப்போதும் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன். ஆக, சுனாமி நிதியிலேகூட, இன்னும் மிச்சம் பணம் இருக்கிறது. சுனாமிக்கு வெளியிலே அறிக்கை விடுகிறீர்கள், மத்திய அரசு செய்யவில்லை, நாங்கள் கேட்ட தொகையைத் தரவில்லை என்றெல்லாம்கூட நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இந்த கவர்னர் உரையிலே, மீதம் இருக்கிற கணக்குத்தான் எங்களுக்கு வந்திருக்கிறது.

அது மாத்திரமல்ல. இங்கே பேசுகிறபோது, சாதனைகளை எடுத்துச் சொல்லி, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். நியாயமாக ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஆட்சியின் சாதனைகளைச் சொல்லத்தான் செய்வார்கள். நான் அதை மறுக்கவில்லை. எதிர்க்கட்சியிலே இருக்கிற எங்களுக்கும் பணி இருக்கிறது. இந்த ஆட்சியிலே என்ன வேதனைகள் ஏற்பட்டன என்பதை நாங்கள் பட்டியலிட்டே தீரவேண்டும். நாட்டு



மக்களிடத்திலே எதிர்க்கட்சியினுடைய கடமையை நாங்கள் செய்திடவேண்டும். நான் அதிகம் பேசிட விரும்பவில்லை. ஏனென்றால், நம்முடைய அவைத் தலைவர் எப்பொழுதுமே பரந்த மனப்பான்மை உள்ளவர். ஆகவே, நான் அதிக நேரம் பேசுவது அவருக்குப் பிடிக்காது என்றாலும்கூட, தனிப்பட்ட முறையிலே என்னை மிகவும் நன்றாக அறிந்தவர். ஏனென்றால், எங்களோடு அவர் இருந்தபோது, என்மீது மிகுந்த பாசம் வைத்திருந்தவர். ஆகவே, நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள்மீது மட்டுமல்ல, உங்கள் அப்பாமீதும் பாசம் வைத்திருந்தேன். உங்கள் அப்பாவை எனக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நன்றி. ஆகவே, நான் நீண்ட விளக்கமாகக் கூட அல்ல. சில தலைப்புச் செய்திகளாகச் சொல்கிறேன். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்த, இந்த ஆட்சியில் நடந்த வேதனைகளை நான் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை. ஆகவே, முதலமைச்சர் சொன்னார். எதை வேண்டுமாலும் பேசட்டும், நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்று சொன்னார்கள். இந்த ஆட்சியிலே என்ன போட்டீர்கள்? ஆரம்பத்திலே பாலம் வழக்கு, பொடா வழக்கு, தடா வழக்கு, எஸ்மா வழக்கு, டெஸ்மா வழக்கு, குண்டர் சட்டம், தடுப்புச் சட்டம், இவைதான் இந்த ஆட்சியிலே போடப்பட்டன. ஐந்தாயிரம், ஆறாயிரம் அரசு ஊழியர்களைச் சிறையில் அடைத்தீர்கள். சுப்ரீம் கோர்ட் வரையிலே சென்று, ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர் ஒரு விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் சொல்லிய பின்பு நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பக்கம் 8–ஐ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்க்க வேண்டும். ஆழிப் பேரலை தாக்கியபோது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு concrete proposal–ஐ மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதாவது, முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, சுத்தப்படுத்தி, அதன்மூலம் கடல் அரிப்பைத் தடுக்க வேண்டும், ஆழிப் பேரலையால் தாக்கப்படாமல் காப்பதற்கு சுற்றுச்சுவர், அதாவது, தடுப்புச் சுவர் எழுப்பப்பட வேண்டும்.

மறுவாழ்வுப் பணிகள்—வீடுகள், சாலைகள், அணுகு சாலைகள், பாலங்கள், இணைப்புச் சாலைகள் போன்றவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று கிட்டத்தட்ட 9 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே மத்திய அரசாங்கத்திற்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அதற்கு மத்திய அரசாங்கம் வெறும் 812 கோடி ரூபாய் மட்டுமே அளித்திருக்கின்றது. ஆனாலும்கூட, நம்முடைய அம்மா அவர்கள் நிதியை, அந்த அளவிற்குக் கஷ்டம் இருந்த சூழ்நிலையிலும்கூட 1,136 கோடி ரூபாயை அனுமதித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லாவிதப் பயன்களும் சென்றடைய வேண்டுமென்கின்ற மனப்பான்மையோடு, தாராள மனப்பான்மையோடு அளித்தார்கள். மத்திய அரசு நிதி உதவி அளிக்காதபட்சத்தில் கிட்டத்தட்ட ரூ.2,618 கோடி அளவிற்கு உலக வங்கியிடமிருந்து, ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து, அதேபோன்று வேளாண்மை வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் நிதியிலிருந்து 2,618 கோடி ரூபாயைக் கடனாக, அதுவும் மாநில அரசாங்கம் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும், கடனாகப் பெற்று மீனவர்களுக்கு எல்லாத் திட்டங்களும் அளிக்கப்பட வேண்டுமென்கின்ற வகையிலே இந்த நிதி உதவியைப் பெற்று திட்டங்கள் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு—நிதியமைச்சருக்குக் கேட்ட கேள்வி, அப்படியானால் நாங்கள் பெற்ற கடன், அதாவது, உலக வங்கி மற்றும் ஆசிய வங்கியிடமிருந்து 2,618 கோடி ரூபாய் கடனாகப் பெற்றிருக்கக்கூடிய அந்தக் கடனை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்று' அம்மா அவர்கள் கேட்டார்கள். இதுநாள் வரை அந்தக் கேள்விக்குப் பதிலே சொல்லாதது வெட்கக்கேடாக இருக்கின்றது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. கூட்டுப் பொறுப்பு என்பதை நான் அறிவேன். **

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே மிகத் தெளிவாக இது குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. மைய அரசைப் பொறுத்தவரைக்கும் எந்த அளவிற்கு உதவினார்கள் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், மாநில அரசு 1,136 கோடி பெறுமான திட்டங்களுக்கான ஆணையைப் பிறப்பித்தது. இதில் 880 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, 658 கோடி ரூபாய்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



செலவழிக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமல்ல, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம் ஆகியவை முறையே 1,858 கோடி, 629 கோடி, 131.4 கோடி ரூபாய் அளவிற்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகளுக்காக உதவி செய்ய முன்வந்திருக்கின்றன. இதுவரை உலக வங்கி, அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின் உதவியுடன் 263 கோடியும், ஆசிய வளர்ச்சி வங்கி, சுனாமி அவசர உதவித் திட்ட உதவியுடன் 569 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டன. இவை பல்வேறு நிலைகளில் இவ்வாறு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், வீடுகள் புனரமைப்புத் திட்டத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தரும் வரை அவர்கள் தற்காலிகக் குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்டனர். இதுவரை 40 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுவிட்டது. மேலும், அரசு இதுவரை 15,379 தற்காலிகக் குடியிருப்புகளையும் கட்டியுள்ளது. மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர்கூட 18,035 குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறார்கள். அரசு மேலும் ஒரு 5.46 கோடி ரூபாய்க்கு இதற்காக ஒப்புதலை வழங்கியிருக்கிறது. இயற்கைப் பேரிடரைத் தாங்கும் வகையில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 45,892 வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட 7,670 வீடுகளுக்குப் பழுதுபார்க்கும் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீடு கட்டும் பணிக்குத் தேவைப்படும் 614 எக்டேர் நிலங்களில் 28 கோடி ரூபாய் செலவில் 512 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. 35,046 புதிய வீடுகள் கட்டித்தர கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, அதில் 5,435 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 3,957 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு விட்டன. இந்தக் குடியிருப்புகளுக்கு முழு அளவில் தேவையான சாலை வசதி, தெரு விளக்கு, சுகாதார வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றைச் செய்து தருகின்ற பணிகளும் 57 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும், குறிப்பாக, எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களுக்கும் எளிதாகப் புரிகின்ற வகையில் ஒரு விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மைய அரசு சுனாமி நிவாரண நிதியாக வழங்கியது 812 கோடி ரூபாய் மட்டுமே.

சுனாமி நிவாரணத்திற்காக தமிழக அரசு இதுவரை வழங்கியுள்ள தொகை 1,136 கோடி ரூபாய் ஆகும். அதாவது, மைய அரசு தமிழகத்திற்கு வழங்கிய தொகையைவிட 324 கோடி ரூபாய் அதிகமாகத் தமிழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) தனது நிதியிலிருந்து சுனாமி நிவாரணப் பணிகளுக்காக வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், இன்னும் 5 மணித் துளிகளில் முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது, நிதி அமைச்சர் சொன்னதைப்போல, கடன் வாங்கியிருப்பது 2,618 கோடிக்கு வாங்கி இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதிலே செலவு செய்யப்பட்டிருக்கிற தொகை, அதுவும் administrative sanction மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை 832 கோடி ரூபாய் என்று இருக்கிறது. மீதமுள்ள தொகை எங்கே இருக்கிறது என்றுதான் உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்கான பதிலை நிதி அமைச்சரும் சொல்லவில்லை, முதலமைச்சரும் சொல்லவில்லை. அதைத்தான் எங்களுடைய உறுப்பினர் கேட்கிறார். நீங்கள் வாங்கி இருக்கிற கடன்–அவர் என்ன சொல்கிறார் என்றால்–நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்கிறார். கடன் வாங்கி செலவு செய்ததைப் பற்றிக் கேட்கவில்லை. செலவு செய்தது போக மீதித் தொகையை என்ன செய்தீர்கள் என்று நிதிநிலை அறிக்கையில் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி நிவாரணத்திற்காகத் தமிழக அரசு வழங்கி உள்ள தொகை 1,136 கோடி ரூபாய். மத்திய அரசு வழங்கியுள்ள தொகை 812 கோடி ரூபாய். பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கடன் உதவி 2,275 கோடி ரூபாய். ஆசிய வளர்ச்சி வங்கியின் மானியம் 343 கோடி ரூபாய். முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வரப்பெற்றுள்ள நன்கொடை 156.27 கோடி ரூபாய். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். நீங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடு) திரு. அன்பழகன் பேசுங்கள். உட்காருங்கள். வாய்ப்புக் கொடுத்தேன். சொல்லிவிட்டீர்கள். சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். அவர் பேசட்டும். அன்பழகனைப் பேச விடுங்கள். அன்பழகன், பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி இருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விக்கு இன்னும் முழுமையான பதில் இல்லை அதில். இருந்தாலும், சுனாமி நிதியிலும், அதைப்போல வெள்ள நிவாரண நிதியிலும் நிரம்பப் பணம் இருந்தும்கூட...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் குழந்தையைப்போல் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஒட்டுமொத்தமாகத் தமிழக அரசு வழங்கியுள்ள நிதி, மத்திய அரசு வழங்கியுள்ள நிதி, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்கள் கடனாக வழங்கியுள்ள உதவி ஆகிய அனைத்துத் தொகைகளையும் குறிப்பிட்டேன். இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளோம். நிறையப் பணிகள் இப்பொழுது நடைமுறையில் செயலாக்கத்தில் இருக்கின்றன. அந்தப் பணிகள் இன்னும் முடியவில்லை. ஆகவே, ஏதோ மீதமுள்ள தொகையை தமிழக அரசு வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை மாண்புமிகு உறுப்பினர் இங்கே உருவாக்க முயற்சி செய்தால், அது தவறானது. பெறப்பட்ட அந்த நிதி அனைத்தும் சுனாமி நிவாரணப் பணிகளுக்காகத்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து பெற்றது கடன்தான். அந்தக் கடனைத் தமிழக அரசுதான் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள், இறந்து போனவர்கள் குடும்பங்களுக்கெல்லாம் தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை சென்னையிலே 51 குடும்பங்கள் பெறவேண்டிய சூழல் இருந்தபோது, பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்த cheque திரும்ப வந்திருக்கிறது. அவர்கள் அந்த ஆதாரத்தை என்னிடத்திலே

தந்திருக்கிறார்கள். நான் அதை வேண்டுமானால் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அவர் கூறுகின்ற அந்த பாதிக்கப்பட்ட நபர், திருமதி கனகவல்லி என்பவருக்கு விஜயா வங்கியில் வழங்கப்பட்ட காசோலை 5-1-2006 அன்று அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் அவர்கள் பெற்றிருந்தால் மகிழ்ச்சி. ஆனால் அந்தப் பணம் திரும்ப வந்திருக்கிறது. அந்த cheque திரும்ப வந்திருக்கிறது. அதிலே என்ன இருக்கிறது என்று சொன்னால், பணம் இல்லை, வங்கியிலே அரசாங்கக் கணக்கிலே பணம் இல்லை என்று தெளிவாக வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை. இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜயா வங்கியில் கொடுக்கப்பட்டு, அது திரும்பவும் பாரத ஸ்டேட் வங்கியின் கணக்குக்கு மாற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட திருமதி கனகவல்லிக்கு 5-1-2006 அன்று கொடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் கனகவல்லிதானே? (குறுக்கீடு) அவர் பெயர் கனகவல்லிதானே?

பிற்பகல் *12-35*

**திரு. ஜெ. அன்பழகன்:** அந்தப் பணம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்று புகார் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பத்திரிகையில் வந்த செய்தியைக் கொண்டு பேசுகின்றார். பாதிக்கப்பட்ட நபர் திருமதி கனகவல்லி அவர்களுக்கு, 5-1-2006 அன்று காசோலை வழங்கப்பட்டு, அவரும் வாங்கிச் சென்றுவிட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. துரைமுருகன்:** ஒரேயொரு கேள்வி, தெரியாததைக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தினுடைய பணத்தைப் போய் ஸ்டேட் பாங்க் இருக்கும்போது விஜயா வங்கியில் போய் ஏன் டெபாசிட் பண்ணுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பல்வேறு கணக்குகளில் வங்கிக் கணக்குகள் வைக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு உடனடியாக அந்த வங்கிமூலம் காசோலை கொடுக்கப்பட்டது. பிறகு, பாரத ஸ்டேட் வங்கிக்கு மாற்றப்பெற்று, அனைவருக்கும் பாரத ஸ்டேட் வங்கியின்மூலம் காசோலைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கி முடிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்வது வேறு, நான் சொல்வது வேறு. என்னிடத்தில் வந்திருக்கிற புகார், ஷகிலா என்பவர், அவருக்குத் தந்திருக்கிற cheque, விஜயா வங்கியில்; அந்த விஜயா வங்கியில் பணம் இல்லை என்று சொல்லி, திரும்ப வந்திருக்கிறது. நேற்று வரையிலே அவர்கள் பணம் பெறவில்லை. உண்மை இது. அரசாங்கம் இனிமேலாவது அவர்களுக்குப் பணத்தைத் தர வேண்டும். ஏற்கெனவே அவருடைய கணவர் இறந்து, அந்தக் குடும்பம் தாங்கொணாத் துயரத்தில் இருக்கிறது. ஆகவே, இப்போதாவது இந்த அரசு விழித்துக்கொண்டு, அவர்களுக்குப் பணம் வழங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. சாதனைகளைச் சொல்லும்போது, நாங்கள் வேதனைகளைச் சொல்லும்போது இடையே குறுக்கிட்டீர்கள். அரசு ஊழியர்கள் பிரச்சினையிலே, இந்த அரசாங்கம் ஒரே நாளில் ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) முடிந்துவிட்டது. போதும், பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் சொன்னது 5 நிமிடம், நான் 10 நிமிடங்களுக்கு மேலே கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** சரி, முடித்துவிடுகிறேன். 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ஆளுங்கட்சிக்கு ஒரு மணி நேரம், எனக்கு இன்னும் 5 நிமிடம் கொடுங்கள். 5 minutes, முடித்து விடுகிறேன். 5 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** உரையை முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் இன்னும், இந்த கமிஷன் போட்டிருப்பது குறித்துப் பேசவில்லை. இரண்டே நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எப்படியிருந்தாலும், என்னுடைய பேச்சை எடுத்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, இரண்டு நிமிடம் நான் பேசுவதைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். **

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெருந்தன்மையை எப்படிப் பயன்படுத்தக்கூடியவர் என்பது இதிலிருந்து புரிகிறது. அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம்.

**திரு. ஜெ. அன்பழகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, கோவை தங்கம். (குறுக்கீடுகள்) கோவை தங்கம், பேச ஆரம்பியுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு— (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** இந்த அவையில் யாரைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லக் கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஆளுங்கட்சி உறுப்பினர் கலைஞரைப் பற்றிச் சொன்னபோது, அதை அவைக் குறிப்பிலே ஏற்றிவிட்டீர்கள். ஆனால், மாண்புமிகு அன்பழகன் சொன்னதை நீங்கள் மறுக்கிற காரணத்தால், எங்களுக்குள்ள உரிமையை நீங்கள் தடை செய்கிற காரணத்தால், நாங்கள் சபையிலிருந்து இன்றைக்கு வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச வேண்டியதைப் பேசிவிட்டீர்கள். அவ்வளவுதான், போங்கள். திரு. கோவை தங்கம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கும், எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அண்ணன் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

ஆளுநர் உரையில் பக்கம் 18–ல், "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நல்ல பயனளித்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் 99 சதவீதம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் உள்ள எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்மூலம் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இதே சட்டமன்றப் பேரவையிலே பல முறை வற்புறுத்திப் பேசியுள்ளேன். ஆகவே, இனிமேலாவது வருகின்ற 2005–2006 ஆம் ஆண்டிலே தொழிற்சாலை ஒன்றைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல பக்கம் 19–ல், நீலகிரி மாவட்டத்தில் 28 கோடி ரூபாய் இவ்வரசின்மூலம் தேயிலை பயிரிடுவோர்களுக்கு மானியம் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். ஆனால் வறுமையில் வாடும், கொட்டுகின்ற பனியிலும், வெய்யிலிலும், மழையிலும் ரத்தம் சிந்திப் பாடுபடும், யானை, சிறுத்தை, புலி, காட்டெருமை போன்ற வன விலங்குகள் மத்தியிலே உயிரைப் பணயம் வைத்துப் பணிபுரியும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நலன் கருதி ஒரு வார்த்தைகூட ஆளுநர் உரையிலே குறிப்பிடாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஏற்கெனவே பெற்றுவந்த சம்பளத்தைத் தொழிலாளர்கள் இழந்துள்ளார்கள். அரசு நியமித்த சிறப்பு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே அவர் கேள்வி நேரத்தின்போது, கேள்வி கேட்கிறபோதே பதில் அளித்திருக்கின்றேன். தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்வாரேயானால், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பல முறை இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே பதிலை இந்த அவையிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் வறுமையிலே வாடுகிறார்கள், குளிரிலே வாடுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் இதுவரை இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும் செய்யாத அளவிற்கு வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கின்ற ஆட்சி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல, இதுவரை வங்கியிலே கடன் வசதி தேயிலை விவசாயிகளுக்குச் செய்து தரப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஏல மையங்களிலே இடைத்தரகர்களிடத்திலே வாங்கக்கூடிய பணத்திற்கு 18 சதவிகிதத்திலிருந்து 24 சதவிகிதம் வரை அவர்களுக்கு வட்டி வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது வங்கியின்மூலமாகப்



பெறப்படும் கடனுக்கு 10.25 சதவிகிதம் வட்டி அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல உற்பத்திச் செலவு என்பது, கிலோ ஒன்றுக்கு, Teaserve மூலம் விற்பனை செய்யப்படும்போது வெறும் 44 பைசாதான். ஆனால், சாதாரண ஏல மையத்திலே விற்கப்படுகிறபோது கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் 23 பைசா. 79 பைசா சலுகையை சிறு தேயிலை விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு Teaserve மூலம் ஏற்பாடு செய்திருக்கிறது. சாதாரணமாக சிறு தேயிலை விவசாயிகளின் நலனைக் கருதி அவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையிலே 28 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மானியமாக 2001–லே இருந்து இதுவரை—

2001–2002 — ரூ. 31 இலட்சத்து 75 ஆயிரம்

2002–2003 — ரூ. 73 இலட்சத்து 13 ஆயிரம்

2003–2004 — ரூ. 1 கோடியே 46 இலட்சத்து 60 ஆயிரம்

2004–2005 — ரூ. 34 இலட்சத்து 85 ஆயிரம்

2005–2006 வரை ரூ. 21 இலட்சத்து 19 ஆயிரம்

ஆக, தேயிலை விவசாயிகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மானியமாகவே, அவர்களை அந்தத் தொழிலிலே ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்குப் பாதுகாப்புக் கருதி அறிவிக்கப்பட்ட திட்டத்தின்மூலமாக 28 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொழிலாளர்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றேன். தேயிலை விவசாயிகளைப் பற்றி நான் இங்கு பேசவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் மானியம் வழங்கியதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அங்கே 68 ஆயிரம் சிறு விவசாயிகள் நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்றார்கள். அங்கே

நீலகிரி மாவட்டத்திலே இருக்கின்ற 68 ஆயிரம் சிறு விவசாயிகளைப் பற்றி நான் பேசவில்லை. வால்பாறையில் இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிருவாகம் சம்பளத்தைக் குறைத்து வழங்கி வருகின்றது. மூன்றரை ஆண்டுகாலமாக சிறப்பு நீதிமன்றம் தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கவில்லை என்ற கருத்தினை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

* **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *31-12-2001* ஆம் நாள் வரை தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் மற்றும் ஊக்கத் தொகை, தொழிற்சங்கங்களுக்கும் மற்றும் தோட்ட நிறுவனங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்டு வந்தன. இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து, தினசரி ஊதியம் ரூ. 76.85 பைசாவை ரூ. 60.00 ஆகக் குறைக்கப் போவதாக நிருவாகங்கள் அறிவிப்புக் கொடுத்தன. தொழிற்சங்கங்கள் இது குறித்துத் தாவா எழுப்பின. இப்பிரச்சினைபற்றி தொழிலாளர் ஆணையர் மட்டத்திலும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பேச்சுவார்த்தை நிலுவையில் இருக்கும்பொழுது நீலகிரி மற்றும் கூடலூர் பகுதிகளிலுள்ள தோட்ட நிறுவனங்களும், அங்கு இயங்கிவரும் தொழிற்சங்கங்களும் ஊதியக் குறைப்பு ஒப்பந்தங்கள் செய்துகொண்டனர். இந்த ஊதியக் குறைப்பு ஒப்பந்தங்களுக்கு இந்த அரசு எந்தவிதத்திலும் தொடர்புடையது அல்ல. வால்பாறை பகுதியிலுள்ள தோட்ட நிறுவனங்களும், தொழிற்சங்கங்களும் இவ்வாறு ஒரு ஊதியக் குறைப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். ஆனால், இந்த ஒப்பந்தத்தைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கோவை மாவட்ட ஆட்சியர்முன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, தொழிலாளர்கள் பிடித்தம் ஏதுமின்றி சம்பள முன்பணம் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தனர். மேற்கண்டவாறு தோட்ட நிறுவனங்களும், தொழிற்சங்கங்களும் ஊதியக் குறைப்புக்கான ஒப்பந்தம் செய்துகொண்டாலும், ஊதியக் குறைப்புப் பிரச்சினை சிறப்பு தொழிற்தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை சிறப்பு தொழிற்தீர்ப்பாயத்தின்முன் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பாயத்தின் முடிவை தொழிலாளர்கள் எதிர்நோக்கலாம். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எக்காலத்திலும் தொழிலாளர்களின் ஊதியக் குறைப்பினை ஏற்றுக்கொண்டதில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய கருத்துக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்கும் வித்தியாசம் இருக்கின்றது. சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு காலதாமதம் ஆகின்றது. ஒரே சாட்சி மட்டும் 8 மாதங்கள் ஆகிவிட்டன. நிருவாகத்தின் சார்பாக ஒரு சாட்சி மட்டும் 8 மாதங்களாகக் காலம் கடத்திக் கொண்டு வருகின்றார். அதைத்தான் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏன் அரசு அதிகாரிகள், இந்த சிறப்பு நீதிமன்ற விவகாரத்தில் தலையிட்டு அந்தத் தீர்ப்பினை உடனடியாக வழங்குவதற்கு ஆலோசனை வழங்கி, ஏன் இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கு, நேரடியாக ஒரு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யக் கூடாது என்பது என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் பிரச்சினைக்குள் செல்வதும், நீதிமன்றத் தீர்ப்பு குறித்து நாம் வலியுறுத்துவதும் முறையாகாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை சென்ற மாதம் இரண்டு முறை அவர்களுடைய அலுவலகத்திலே சென்று பார்த்திருக்கின்றேன். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு தொழிலாளர் நலத் துறை செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், இணை ஆணையாளர் போன்றவர்களை நான் பல முறை நேரடியாகப் பார்த்துச் சொல்லியிருக்கின்றேன். 2002 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தைப் பற்றி நான் இங்கே பேச வரவில்லை. 23-10-2005-ல் வால்பாறையிலே மிகப் பெரிய அளவில் மறியல் போராட்டம் நடைபெற்றது. தொழிலாளர்கள் நடத்திய அந்த மறியல் போராட்டத்திற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இப்போது ஏற்படுத்திய புதிய ஒப்பந்தம். அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், 2001-ல் ஒரு தொழிலாளியினுடைய சம்பளம் நாளொன்றுக்கு ரூ. 76.85. இப்போது மீண்டும் 0.15 பைசாவை சேர்த்துக் கொடுத்துவிட்டு, தொழிலாளர்களுக்கு வேலைப் பளுவை உயர்த்தியிருக்கிறது.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 76 ரூபாய் 85 பைசா ஊதிய ஒப்பந்தத்திலே

I.N.T.U.C. தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.N.T.U.C. தொழிற்சங்கம் கையெழுத்துப் போட்டாலும் தப்பு, தப்புதான். I.N.T.U.C. தொழிற்சங்கம் போட்ட கையெழுத்தை எதிர்த்துத்தான் நானும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ஹேமச்சந்திரன், எம்.எல்.ஏ., தலைவர் வி.கே. லட்சுமணன், எம்.எல்.ஏ., குன்னூர் எம்.எல்.ஏ. போன்றவர்கள் எல்லாம் அந்த மறியல் போராட்டத்திலே கலந்துகொண்டு–7,000 பேர்கள் கலந்துகொண்டார்கள்–பெண்கள் மட்டும் 1,046 பேர்கள் கைதாகியிருக்கின்றார்கள் அன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்கள் தொழிற்சங்கம்தானே, திரு. கோவை தங்கம்?

**திரு. கோவை தங்கம்:** எந்தத் தொழிற்சங்கம் செய்தாலும் தொழிலாளர்களுக்கு விரோதமாகக் கையெழுத்துப் போட்டால், எந்தத் தொழிற்சங்கம் கையெழுத்துப் போட்டாலும் தப்பு, தப்புதான். ஆனால், அந்த மறியலுக்குப் பிறகு நிர்வாகம், குறைத்து தேயிலை ஒரு கிலோவுக்குப் பறித்தால் 40 பைசா பிடித்தம் செய்தார்கள். ஆனால், அந்த மறியலுக்குப் பிறகு 30 பைசா ரத்துச் செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேதனையோடு உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். 16 கிலோ பறித்து வந்த அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை, இப்போது நிர்வாகம் 33 கிலோவாகப் பறிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்து வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அநியாயம், அக்கிரமத்தை ஏன் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நிர்வாகம் 16 கிலோ தேயிலை பறிப்பதற்குப் பதிலாக 30 கிலோ தேயிலை பறிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வேலை வாங்குவதாகத் தெரிவித்தார்கள். இதுகுறித்து இந்தத் துறையில் முறையீடுகள் பெறப்பட்டன. நிர்வாகங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியோருடன் விசாரணை



செய்யப்பட்டது. தொழிலாளர்களின் விருப்பத்திற்கு எதிராக ஒப்பந்தங்களை மீறி அதிக அளவில் தேயிலை பறிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது தொழிலாளர்களின் பணி நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஊக்க ஊதியம் தொடர்பான தொழில் தாவா, சிறப்பு தொழிற்தீர்ப்பாயத்தின் முன்னர் நிலுவையில் இருப்பதால், இந்த மாற்றங்கள் குறித்து தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் சிறப்பு தீர்ப்பாயத்தில் புகார் செய்து நிவாரணம் காணலாம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு ஐந்து மணித் துளிகளில் முடியுங்கள், திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இப்போதுதான் பேச ஆரம்பித்தேன், பேரவைத் தலைவர் அவர்களே... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. கோவை தங்கம்:** ஒரு ஐந்து நிமிடம்கூட பேசி இருக்க மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பேசிவிட்டீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தப் பேரவையிலே குறிப்பிட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்–தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களை நான் பல முறை விளக்கிச் சொல்லியிருக்கின்றேன். 20 சட்டமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, நானும் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் நேரடியாகக் கொடுத்திருக்கின்றோம்—இந்தப் பிரச்சினையிலே அவர்கள் தலையிட்டால், நேரடியாக நிர்வாகத்தையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசினால், 10 நிமிடத்திலே இந்தப் பிரச்சினையை முடித்துவிட முடியும். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் நிர்வாகத்தையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசாததால் தமிழ்நாட்டில் இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இதில் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தலையிட்டு—தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 10

ஆண்டுகளுக்கு முன்பு 76 ரூபாய் 85 பைசா பெற்றுவந்தார்கள். பத்தாண்டுகளுக்குப் பிறகு, 15 பைசா சேர்த்துக் கொடுக்கப்பட்டு வேலைப் பளுவை உயர்த்தியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திலே கொண்டு இதைத் தீர்ப்பதற்கு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடிப்பதற்கு முன்வர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் 99 சதவீதம் பேர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். வால்பாறையிலேயிருந்து கோவைக்கு 100 கிலோ மீட்டர் தூரம் வந்து படிப்பதற்கு வசதியில்லாத அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகளுக்காக வால்பாறையிலே ஒரு கல்லூரி வேண்டுமென்று இந்த அவையிலே கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 2 கோடியே 38 இலட்சம் ரூபாயில் வால்பாறையில் கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக, அரசு பரிசீலனை செய்வதாகக் கூறினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே கல்லூரி அமைப்பதற்கு பாரதியார் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இப்போது 14 ஏக்கர் பூமியை ஒதுக்கியிருப்பதாகப் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வால்பாறையிலே ஒரு கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பக்கம் 31–ல், 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.400 கோடி செலவில் ஊராட்சி மன்றம், சிறப்பு ஊராட்சிச் சாலைகள் அமைப்பது, 401 கோடி ரூபாயில் நகராட்சி சாலைகளை மேம்படுத்தும் என்று அறிவித்துள்ளீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், கடந்த நான்கரை ஆண்டு காலமாக, பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட தொகுதியில் ரூ.20 இலட்சம், ரூ.25 இலட்சம், ரூ.30 இலட்சத்தில் கடமலைப் பாலம், நடுமலைப் பாலம், நெல்லித் துறை மண்ணம் பாலம் ஆகிய 3 பாலங்களுக்காக நான் சுமார் 20 முறை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரை நேரிலே பார்த்து மனுக் கொடுத்திருக்கிறேன். ஆனால் ஒரு காரியமும்...



*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோரிய அந்தப் பாலங்கள் NABARD திட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்பட்டு இருக்கிறது. அவர்களிடமிருந்து அனுமதி பெற்றபின் உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கரை ஆண்டு காலமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதே பதிலைச் சொல்வது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நான்கரை ஆண்டு காலமாக இதே பதிலை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். மிக வேதனையோடு நான் குறிப்பிடுகிறேன். வெறும் ரூ.20 இலட்சம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்கிற வேலையா இது என்பதை நான் மிக வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். பல முறை நேரடியாக அவர்களைப் பார்த்தபோதெல்லாம் இன்றே முடித்துவிடுகிறேன், நாளையே முடித்துவிடுகிறேன் என்று நான்கரை ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். இப்பொழுதாவது எழுந்து உடனடியாக அந்தப் பணத்தை ஒதுக்கீடு செய்கிறேன், வேலையைச் செய்வதற்கு உத்தரவிடுகிறேன் என்று அவர் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சொல்லவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமாக இருக்கிறது.

அதேபோல பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 31–ல்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NABARD வங்கிக்கு 120 கோடி ரூபாயில் 250 பாலங்களின் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பாலங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கூடிய விரைவில், இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணிக்கு அனுமதி கிடைக்கும். கிடைத்தவுடன் உறுதியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. கோவை தங்கம்:** அதற்குள் தேர்தல் வந்துவிடும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 39–ல் சுற்றுலா சார்பாக எப்போதும் இல்லாத அளவிற்கு, 2001–2006 ஆண்டுகளில் எப்போதும்

இல்லாத அளவிற்கு நிதியொதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வால்பாறை தொகுதியில் ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சோலையாறு அணை, நீராறணை, Top Slip, குரங்கருவி, மிகப் பெரிய பாலாஜி கோயில் போன்ற இன்னும் பல்வேறு இயற்கைக் காட்சிகள் உள்ள வால்பாறைக்கு இதுவரை, 2001-2006 வரை எந்தவிதமான நிதியொதுக்கீடும் செய்யப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 47-ல் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை நகருக்குச் செல்லுகிற பாதை பொள்ளாச்சியிலிருந்து, நீண்ட காலமாக, 50 ஆண்டு காலமாகக் கவனிக்கப்படாமல் இருந்த பாதையைச் செப்பனிட்டு அகலப்படுத்துவதற்காகவும், சுற்றுலாவை மேம்படுத்துவதற்காகவும் 7½ கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து இப்போது அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் அறிவார்கள். பேசும்போது அதற்காக நன்றியைக் கூறுவார்கள் என்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நிதியொதுக்கி இருந்தால், முதலிலே எடுத்தவுடனேயே நான் நன்றி சொல்லி இருப்பேன். இதே அவையிலே பல முறை நான் நன்றி சொல்லி இருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதை சென்ற மாதம்கூட வால்பாறைக்குச் சென்று வந்த வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதற்காக அவர்கள் நன்றி கூறுவார்கள் என்று நான் கருதுகின்றேன்.

**திரு. கோவை தங்கம்:** நான் வாரத்திற்கு 2 முறை, 3 முறை வால்பாறைக்குச் செல்கின்றவன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, பக்கம் 47-ல் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஊக்கம் கொடுத்து...



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் வால்பாறை தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். 7½ கோடிக்கு நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது அதற்கான பணிகள் மிக வேகமாக சுற்றுலாவை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நடைபெற்றுக் கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா, அறியமாட்டார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நீங்கள் நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக சாலைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் கேட்பது, ரூ.20 இலட்சம் பாலம், ரூ.25 இலட்சம் பாலம், ரூ.30 இலட்சம் பாலம், இந்த மூன்றையும் நான்கரை ஆண்டு காலமாக எனக்குப் போடவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, பக்கம் 47-ல் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஊக்கம் கொடுத்து உதவி புரிந்து வருகிறீர்கள்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒரு தொகுதிக்காகச் செல்கிற பாதைக்கு மட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7½ கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து சாலையை அகலப்படுத்தி, புதிதாகப் பல பாலங்களை அந்த வழியில் அமைத்துக் கொடுப்பதற்கான ஆணையினை வழங்கி இப்போது பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை, மலைப் பாதைப் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? அறிந்திருந்தால் அதற்கான நன்றியை இப்போது தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், அடிக்கடி...

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம் அடிக்கடி நன்றி சொல்லக்கூடியவர். இப்பொழுது என்னவோ குரல் வேறு மாதிரித் தெரிகின்றது.

**திரு. கோவை தங்கம்:** இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகுந்த வேதனையோடு இங்கே பேசுகின்றேன். மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஊக்கம் கொடுத்து உதவி புரிந்து வருகிறீர்கள். பாராட்டுகிறேன். ஆனால், மத்திய அரசு 75% மானியம், இந்த மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்குவது அரசுக்குத் தெரியும். ஆனால், ஆளுநர் உரையிலே ஒரு வரியைக்கூட நீங்கள் அதைச் சுட்டிக்காட்டாமல் இருப்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. அதைப்போல, பக்கம் 48, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. ஆறுமுகம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள். நிறைவு செய்யுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் (குறுக்கீடு) கோவை மாவட்டத்தில், (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மூடிய மில்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் திறப்பதற்கு இந்த ஆளுநர் உரையில் எந்த ஒரு திட்டத்தையும், செயல்பாட்டையும் அறிவிக்காதது வருத்தத்தை அளிக்கிறது. அதைப்போல, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற திட்டம் எதையும் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடவில்லை. சுமார் 57 இலட்சம் இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, (மணியடிக்கப்பெற்றது) இல்லை, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். ஒரே வார்த்தையிலே முடித்துவிடுகிறேன்.

அதேபோல, ஒரு குடும்பத்திற்கு ஒரு இலவச வீடு என்ற திட்டத்தை அறிவித்தீர்கள். நல்ல திட்டம். ஆனால், இதுவரை அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. செயல்படுத்துவது குறித்துக் குறிப்பிடவும் இல்லை. எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் மட்டும் ஏழையெளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சிறுபான்மை மக்கள் 25 ஆண்டு காலமாகக் குடியிருக்கின்றார்கள். அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா



கிடைக்கவில்லை என்பதைத் தங்களின் வாயிலாக இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல வால்பாறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். முடித்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிடம். முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். Last page. அதேபோல, வால்பாறையிலே சமீபத்தில் பெய்த மழையால் 13–வது வளைவு இடிந்துவிட்டது. அது ஒரே பாதைதான். அந்தப் பாதை இடிந்துவிட்டது. இரண்டு நாட்கள் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறைக்கு ஒரு மாற்று வழியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. ஆறுமுகம். (குறுக்கீடு) ஆறுமுகம். (குறுக்கீடு) ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். மற்றது அப்புறம் பேசலாம். (குறுக்கீடு) ஆறுமுகம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் போனஸ் மற்றும் பல்வேறு கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலையைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம். ஆறுமுகம், நீங்கள் பேச ஆரம்பியுங்கள். பேச ஆரம்பியுங்கள். (குறுக்கீடு) நன்றியை அறையிலே வந்து சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு உட்கார்ந்து படிக்க பெஞ்சுகள், அடிப்படை வசதிகளைச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, வால்பாறை அரசு மருத்துவமனை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைகளுக்கு, ஆழியார் நகர், பெத்தநாயக்கனூர் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த என்னுடைய குடும்பத் தலைவர் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னைப் பேச அழைத்தமைக்கு தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைப் புலப்படுத்தி, மேதகு ஆளுநர் அவர்கள் தமிழர் திருநாள் தொடக்க நாளான போகிப் பண்டிகை அன்று உவந்தளித்த இப்பேருரையினைப் படித்துப் பார்த்தேன். மேதகு ஆளுநர் அவர்கள் 54 பக்க உரையிலே 57 பத்திகளிலே அரசின் செயல்பாடுகள் குறித்து உரையாற்றியிருக்கிறார்கள். இந்த ஆண்டு தொடர்ந்து பொழிந்த பலத்த மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண நிதியைக் காட்டிலும் மக்கள் மத்தியிலே பேசப்படுகிற ஒரு செய்தி, சென்னை எம்.ஜி.ஆர். நகரிலே நிவாரண நிதி வாங்கச் சென்றவர்கள் இறந்த செய்திதான் மிகத் துக்ககரமான செய்தியாக இன்றளவிலும் இருந்துகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், மக்கள் மத்தியிலே பேசப்படுவதும், எதிர்க்கட்சிகளும், சமூக ஆர்வலர்களும் பேசுகின்ற ஒரு கருத்து, அனைத்துக் கட்சிகளுடைய அமைப்பையும் ஏற்படுத்தி அங்கேயிருக்கின்ற சமூக ஆர்வலர்களையும்· அழைத்து, அதேபோன்று அனைத்துக் கட்சிகளுடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளையும் அழைத்து ஒரு குழு அமைத்துச் செயல்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்ற செய்தி தொடர்ந்து மக்கள் மத்தியிலே இருந்து வருகிறது. இந்தக் குழப்பமான நிலையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முனைப்போடு செயலாற்றாததை நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2005 ஆம் ஆண்டு வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் முனைப்பான பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது. இதுவரை 32 இலட்சம் பேருக்கு மேல் வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவிகளைப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்ற நிரந்தர மறுவாழ்வுப்





பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுத்திட வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடனும் நிவாரணம் வழங்குவது குறித்து அவ்வப்போது ஆலோசனைகள் வழங்க ஆலோசனைக் குழுக்களை அமைத்திட நான் ஆணையிட்டேன். அதன் அடிப்படையில், 12–12–2005 ஆம் நாளிட்ட அரசாணையின்படி வெள்ளம் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட அளவிலும், ஊராட்சி மற்றும் வார்டு அளவிலும் வெள்ள நிவாரண ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான வெள்ள நிவாரணக் குழு. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான வெள்ள நிவாரண ஆலோசனைக் குழுக்கள் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சித் தலைவர் | : தலைவர் |
| பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் | : உறுப்பினர்கள் |
| பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் | : உறுப்பினர்கள் |
| மாவட்ட ஊராட்சித் தலைவர் | : உறுப்பினர் |
| மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் | : உறுப்பினர் |
| பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் | : உறுப்பினர் |
| மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவு செய்யப்படும் இரண்டு அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் | : உறுப்பினர்கள் |
| சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அதிகாரிகள் | : உறுப்பினர்கள் |

ஊராட்சி வார்டு அளவிலான வெள்ள நிவாரணக் குழு. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும், நகர்ப்புறப் பகுதியாக இருப்பின் ஒவ்வொரு வார்டிலும் ஊராட்சி அல்லது வார்டு அளவிலான வெள்ள

நிவாரணக் குழுக்கள் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது வார்டு உறுப்பினர் | : தலைவர் |
| வருவாய் ஆய்வாளர் | : உறுப்பினர் |
| கிராம நிர்வாக அலுவலர் | : உறுப்பினர் |
| மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவு செய்யப்படும் அப்பகுதிகளில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் | : உறுப்பினர்கள் |

இந்தக் குழுக்கள் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதைக் கண்காணித்து வருகின்றன. பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களிலும்,. மாவட்ட அளவிலும், ஊராட்சி அல்லது வார்டு அளவிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, அனைத்துக் கட்சிக் கண்காணிப்புக் குழு என்று தனியே ஒரு குழுவை அமைப்பது அவசியமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில், *32* இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். ஆனால், ஆளுநர் உரையில் *31* இலட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு இலட்சம் வேறுபாடு.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையைத் தயாரிக்கின்ற வரையில் கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறோம். அதன் பின்னரும், வெள்ள நிவாரண உதவிகள் வழங்குகின்ற பணி தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதுவரையில் உள்ள எண்ணிக்கையை இப்போது நான் குறிப்பிட்டேன்.



*பிற்பகல் 1–10*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தவிர கண்காணிப்புக் குழு அமைப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு முறையாகச் செயல்படவில்லை. அந்தக் குழுவும் ஆரம்ப காலத்திலேயே அமைக்கப்படவில்லை. நீண்ட காலம் கழித்து, பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் எழுந்த பிறகுதான் அமைக்கப்பட்டது. இதை முன்பே அமைத்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. இது காலதாமதமாக அமைக்கப்பட்டது. எல்லா இடங்களிலும் இந்தக் குழு முறையாக இயங்கவில்லை என்பதுதான் பொது மக்கள் மத்தியிலே இருக்கிற மிகப் பெரிய அதிருப்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மழை அதிகமாகப் பெய்து விவசாயம் மேலும் வளர்ச்சி பெறுகின்ற நிலையிலே அரசாங்கம் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. ஆனால் விவசாயி இன்னும் உழுவதற்குத் தயாராகவில்லை. ஏனென்று கேட்டால், இட்ட பயிரே இன்றைக்கு அழிந்துவிட்டது. மீண்டும் உழுவதற்குச் செல்ல வேண்டும் என்றால், ஏற்பட்ட வெள்ளத்தினாலே நிலங்கள் மண்மேடாகிக் கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நீக்குவதற்குத் தமிழக அரசாங்கம் உடனடியாக நிவாரணம் அளித்தால்தான் விவசாய உற்பத்தி அதிகமாகும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2005* ஆம் ஆண்டில் பெய்த அதிகப்படியான மழை தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையை வேளாண் பெருமக்களுக்கு ஏற்படுத்தியுள்ளபோதிலும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அடுத்தடுத்துப் பெய்த தொடர் மழை மற்றும் வெள்ளத்தினால் தமிழகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்பதை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இவ்வாறு மழை, வெள்ளத்தின் காரணமாகப் பாதிப்புக்கு உள்ளான 22 மாவட்டங்களில் வாழ்ந்து வரும் பொது மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளானதோடு விவசாயப் பயிர்களும் சேதம் அடைந்தன. எனது

ஆணையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் புல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்கெடுப்பின்படி 10.13 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களும், 2.27 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட கரும்பு, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், பருத்தி, தென்னை, வாழை மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களும் இந்த மழை, வெள்ளத்தால் சேதம் அடைந்துள்ளன. மேலும், 10,967 ஏக்கர் பரப்புடைய விவசாய நிலங்களில் மணல் மற்றும் சிறு கற்கள் படிந்துள்ளன. இதுவன்றி, 6,985 விவசாயிகளின் மின் மற்றும் டீசல் பம்ப்செட்டுகள் பழுதடைந்துள்ளன.

தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளின்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதமும், மானாவாரிப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதமும், பல்லாண்டுப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,600 ரூபாய் வீதமும் மட்டுமே நிவாரணத் தொகையாக வழங்க இயலும். தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளின்படியான இந்த நிவாரணம் விவசாயிகளின் பாதிப்புக்கு எவ்வகையிலும் ஈடு காணாது என்பதால் மத்திய அரசுக்கு எனது அரசால் அனுப்பப்பட்ட கோரிக்கை மனுவில், வெள்ளத்தால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு நெற்பயிருக்கு 8 ஆயிரம் ரூபாய், கரும்புப் பயிருக்கு 10 ஆயிரம் ரூபாய், வாழைப் பயிருக்கு 10 ஆயிரம் ரூபாய், எண்ணெய் வித்துக்களுக்கு 4 ஆயிரம் ரூபாய், சிறு தானியங்களுக்கு 4 ஆயிரம் ரூபாய், மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணம் வழங்கும் வகையில் நிதியுதவி வழங்க வேண்டுமென்று மத்திய அரசை எனது அரசு கேட்டுக்கொண்டது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 16-12-2005 அன்று நான் நேரில் சந்தித்தபோதும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினேன். தற்போதுள்ள தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகள் மாற்றம் குறித்துப் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆயினும், மத்திய அரசிடமிருந்து இது தொடர்பாக எந்த ஒரு தகவலும் இதுவரை வரப்பெறவில்லை. மைய அரசு பயிர்ச் சேதங்களுக்காக வழங்கப்படும் நிவாரணத் தொகையைத் திருத்தி அமைப்பது தொடர்பாக எந்த ஒரு உத்தரவும் இதுவரை பிறப்பிக்காததால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளாண்



பெருங்குடி மக்களுக்கு நிவாரண உதவிகளை இன்னமும் வழங்க இயலவில்லை. விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள எனது அரசு, பயிர்ச் சேதங்களுக்கான நிவாரண உதவிகளை விரைவில் அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது, அதுவும் நெற்பயிர் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே ஆரம்பிக்கப்பட்டு, 3 மாதம் அல்லது மூன்றரை மாதங்களில் முடிகின்ற ஒரு பயிர். அதுவும் அதற்குப் பருவம் உண்டு. இப்போது சம்பா பருவம். இப்போது விட்டுவிட்டால் அப்புறம் அருவாள் எடுத்துப் போனால், அங்கே எதுவும் இருக்காது. எனவே, கொடுக்க வேண்டிய நிவாரணத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் தெளிவாகச் சொன்னேன். மத்திய அரசு, பேரிடர் சமயத்தில் பாதிக்கப்படுகின்ற விவசாயப் பயிர்களுக்கு எவ்வளவு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று சில வழிமுறைகளை வைத்திருக்கின்றது. அதன்படி நெற்பயிரிட்டவர்களுக்கு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்தான் கொடுப்பதற்கு அனுமதி உள்ளது. அது விவசாயிகளுக்குப் போதாது. ஆகவே, நெற்பயிருக்கு ஏக்கருக்கு 8,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று, அதற்காக அந்த வழிமுறைகளைத் தளர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நான் பாரதப் பிரதமரிடமும் பேசியிருக்கிறேன். மத்திய உணவு அமைச்சர், வேளாண் துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களிடமும் பேசியிருக்கிறேன். இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்களே தவிர, இதுவரை மத்திய அரசு இதற்கான எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. எந்த முடிவையும் தெரிவிக்கவில்லை. ஆகவே, இத்தனை காலம் மத்திய அரசு இந்த விதிமுறைகளை, வழிமுறைகளைத் தளர்த்தி அறிவிப்பை வெளியிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆனால் மத்திய அரசிடமிருந்து எந்தத் தகவலும் இதுவரை வரவில்லை. ஆகவே, நாங்களே இப்போது ஒரு முடிவெடுத்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள் அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே. ஆறுமுகம்:** வெள்ள நிவாரணம் வழங்குவதிலே சென்னைக்கு ஒரு மாதிரியும், கிராமப்புறங்களுக்கு ஒரு மாதிரியுமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. சென்னைக்கு 2,000 ரூபாய் அல்ல, 5,000 ரூபாய் கொடுக்கட்டும். அதே 2,000 ரூபாயோ, அல்லது 5,000 ரூபாயோ கிராமப்புற மக்களுக்கும், அங்கே இருக்கிற விவசாயி, குடியானவன்—அந்தக் கிராமத்தில் வாழுகிறவனும், அவன் வைத்திருந்த ஆடு, மாடு, கோழி, அவன் வைத்திருந்த தானியங்கள், அவன் வைத்திருந்த நெல் விதைகள், அவன் பயிரிட்டிருந்த பயிர்கள் அத்தனையும் அழிந்திருக்கின்றன. சென்னைக்கு 2,000 ரூபாய் போதாது, 5,000 ரூபாய் கொடுங்கள். அதே அளவிற்கு கிராமப்புறங்களிலே இருக்கிற, 22 மாவட்டங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் இந்த அரசை நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழக அரசாங்கம் ஆளுநர் உரையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. நுழைவுத் தேர்வை ரத்துச் செய்திருக்கிறோம் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. எங்களுடைய நிறுவனத் தலைவர், தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்கள் 1984–லேயிருந்து தொடர்ந்து வலியுறுத்தி வரும் ஒரு நிகழ்வு. ஆனாலும்கூட, இது முடிவான ஓர் அறிவிப்பாக இல்லை என்று மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் என்று சொன்னால், இன்னும் மத்திய அரசாங்கத்தின் அந்தப் பள்ளிகளிலே படிக்கிறவர்களுக்கு நுழைவுத் தேர்வு என்கிற ஒரு குழப்பமான நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நுழைவுத் தேர்வை ரத்துச் செய்கிற தமிழக அரசாங்கம் முடிவான ஒரு நிலையை, சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு ரத்து, இந்த உதவி செய்வதைப் பற்றி யார் வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி பேசக் கூடாது. அதற்கு என்ன காரணம் என்பதை இப்போது நான் தெரிவிக்கிறேன்.

பொது நுழைவுத் தேர்வின்மூலம் தொழிற்கல்வி பயில நகர்ப்புற மாணவர்களைப்போல் கிராமப்புற மாணவர்கள் போட்டியிட இயலாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு, கிராமப்புற மாணவர்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கும் வண்ணம் பொது நுழைவுத் தேர்வை ரத்துச் செய்து, தொழிற்கல்விக்கான சேர்க்கைக்கு பிளஸ் 2



தேர்வு மதிப்பெண்கள் மட்டுமே அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டுமென எனது தலைமையிலான அரசு தீர்மானித்தது. இதன்படி, 9–6–2005 அன்று இதற்கான அரசாணையை எனது அரசு பிறப்பித்தது. எனினும், இதனை எதிர்த்து சிலர் வழக்குத் தொடுத்தனர். இந்திய மருத்துவக் குழுமம் மற்றும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமம் தொடர்பான மத்திய சட்டங்களில் ஏற்கெனவே பொது நுழைவுத் தேர்வு நடத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது என்ற பிரதான காரணத்தின் அடிப்படையில் பொது நுழைவுத் தேர்வினை நீக்கம் செய்து தமிழக அரசு வெளியிட்ட அரசாணையினை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்து ஆணையிட்டது. எனவே, மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவினைத் தாக்கல் செய்தது. இந்நேர்வில் தடையாணை ஏதும் பிறப்பிக்கப்படாததால், தொழிற்கல்விக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முறை, முந்தைய சேர்க்கை முறையினைப் போன்று, அதாவது, பிளஸ் 2 தேர்வு மதிப்பெண்கள் மற்றும் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சென்ற ஆண்டு செய்யப்பட்டது. தொழிற்கல்விக் கல்லூரிகளில் பொது நுழைவுத் தேர்வு, இனவாரி இட ஒதுக்கீடு மற்றும் கட்டணம் தொடர்பான தெளிவுறுத்தல் போன்றவற்றில் ஆணைகள் கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப் பேராணைகள்—Writ petitions மற்றும் சிறப்பு அனுமதி மனு—S.L.P. ஆகியவற்றின்மீது 12–8–2005 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. சுய நிதி தொழிற்கல்விக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு இடங்கள் இல்லை எனவும், இனவாரி ஒதுக்கீட்டு முறையினைப் பின்பற்ற வேண்டியதில்லை எனவும் இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–20

ஒவ்வொரு சுய நிதிக் கல்வி நிறுவனமும் அதற்கான கட்டண விகிதங்களைத் தாமே உருவாக்கிக் கொள்ளலாம்; இருப்பினும் அந்நிறுவனங்கள் பெருமளவில் ஆதாயம் அடைவதைத் தடுப்பதற்காக, கட்டண விகிதங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், நுழைவு நன்கொடை வசூலிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய Bench அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்வதற்கான மனு ஒன்றினை எனது அரசு தாக்கல் செய்தது. எனினும், மறு ஆய்வு மனுவினை உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட Bench தள்ளுபடி செய்துவிட்டது.

பொது நுழைவுத் தேர்வுமூலமாகவோ, பொது நுழைவுத் தேர்வு இன்றியோ, தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையினை முடிவு செய்வதற்கு ஏதுவாக, இந்திய மருத்துவக் குழுமம் மற்றும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் விதிகளில், உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளுமாறு கோரி, மைய மனித வள மேம்பாட்டுத் துறைச் செயலாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் ஆகியோருக்கு 15–9–2005 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கடிதம் எழுதியுள்ளார். இதற்கு மத்திய அரசிடமிருந்து இதுவரையில் பதில் ஏதும் வராததால் 1–12–2005 அன்று மத்திய அரசிற்கு நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இது தொடர்பாக மத்திய அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

இதில் குறிப்பிட வேண்டிய விஷயம், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக, பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் இருக்கிறார். அவர் மனது வைத்திருந்தால், அந்த விதிமுறைகளில் ஒரு சிறு திருத்தம் செய்திருந்தால், இந்தப் பிரச்சினையே இருந்திருக்காது. தமிழக அரசு கொண்டுவந்த சட்டம் நிலைநிறுத்தப்பட்டிருக்கும். ஆனால், இங்கிருந்து பல முறை கோரியும்கூட, அங்கிருந்து பதில்கூட வரவில்லை. மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள்.

உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் Bench அளித்த தீர்ப்பு சுய நிதி நிறுவனங்களின்மீது அரசுக்கு இருந்த அதிகாரத்தினை எடுத்துவிட்டதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் நலனைக் காப்பதற்காக, மாணவர் சேர்க்கைக்கான வழிமுறைகளை வகுத்துக்கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், மைய சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கடிதம் வாயிலாக நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மத்திய அரசால் புது டெல்லியில் 27–8–2005 அன்று நடத்தப்பட்ட மாநிலக் கல்வி அமைச்சர்கள் கூட்டத்தில், மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஏற்கெனவே மாநில அரசுகளுக்குச் சுற்றனுப்பப்பட்ட வரைவுச் சட்டமுன்வடிவைப் பொருட்படுத்த வேண்டாம் எனவும், மத்திய அரசு ஒரு திருத்திய வரைவுச் சட்டமுன்வடிவினைத் தயாரித்து, அதனைப் பாராளுமன்றத்தில்



அறிமுகப்படுத்தும் முன்னர், மாநில அரசுகளுக்கு அனுப்பும் எனவும் உறுதியளித்தார். ஆனால், மத்திய அரசிடமிருந்து திருத்திய வரைவுச் சட்டமுன்வடிவு வரப்பெறவில்லை.

இதற்கிடையில், மத்திய அரசு 20–12–2005 அன்று 104–வது அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தியது. சிறுபான்மையினர் அல்லாத சுய நிதி தொழிற்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்வதையே நோக்கமாகக் கொண்டு இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை தொடர்பாக 7 நீதிபதிகள் குழு வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ள பிற அம்சங்கள் எதுவும் 104–வது அரசமைப்புத் திருத்தச் சட்ட மசோதாவில் இடம் பெறவில்லை.

பொது நுழைவுத் தேர்வை ரத்துச் செய்து, 9–6–2005 அன்று அரசு பிறப்பித்த ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில், தன்னையும் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த சிலர் உயர் நீதிமன்றத்தில் மனுக் கொடுத்தனர். (குறுக்கீடு) இதைக் கவனியுங்கள். ஆனால், இந்த வழக்குகளில் தனியாக எதிர் மனு எதையும் இவர்கள் தாக்கல் செய்யவில்லை.

மேலும், இந்த வழக்குகளில் பொது நுழைவுத் தேர்வினை ரத்துச் செய்து உயர் நீதிமன்றம் 27–6–2005 அன்று பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு மட்டுமே சிறப்பு அனுமதி மனு ஒன்றினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. பாட்டாளி மக்கள் கட்சி உட்பட வேறு எவரும் இத்தகைய சிறப்பு அனுமதி மனு எதையும் தாக்கல் செய்யவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நுழைவுத் தேர்வைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். தமிழக அரசு இதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதை எதிர்த்து இங்கே சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அப்போது பாட்டாளி மக்கள் கட்சி இந்தப் பிரச்சினையில் மிகவும் அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகத் தன்னையும் அந்த வழக்கில் implead செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. ஆனால், இங்கே அந்தச் சட்டமே ரத்துச் செய்யப்பட்டபோது, உச்ச நீதிமன்றத்திற்கு நாங்கள் சென்றபோது, பாட்டாளி மக்கள் கட்சி உச்ச நீதிமன்றத்தில் appeal தாக்கல்

செய்யவில்லையே, ஏன்? ஆகவே இது எல்லாம் வெறும் நடிப்புதானே தவிர, உண்மையான அக்கறை இல்லை என்பதை இங்கே தோலுரித்துக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–25*

தொழிற்கல்வி, இளநிலை பட்டப் படிப்புச் சேர்க்கைக்கான மாணவர்களின் தர நிலையை நிர்ணயிப்பதற்கு மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலை வகுப்புத் தேர்வின் மதிப்பெண்களே பொதுவான அடிப்படையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டைப் பின்பற்ற எனது அரசு முடிவு செய்து, அதனை ஆளுநர் உரையில் அறிவித்துள்ளோம். மாநிலப் பாடத் திட்டத்தில் மேல்நிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களே மாணவர் சேர்க்கைக்குப் பொதுவான அடிப்படையாகக் கருதப்பட்டு, ஏனைய பாடத் திட்டங்களின்கீழ் பயிலும் மாணவர்களை மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத் தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டு வரும் வகையில் அவர்களுக்கு மட்டுமென ஒரு பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும். மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தேர்வு எழுதும் மாணவர்கள் இந்தத் தேர்வை எழுத வேண்டிய அவசியம் இல்லை. மேலும், தமிழக அரசால் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் வகுப்புவாரியான இட ஒதுக்கீட்டுக்கும் வழிவகை செய்யப்படும். இவற்றுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்குத் தேவையான சட்டம் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இயற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் சொல்கிறேன், இந்த நுழைவுத் தேர்வு ரத்து பற்றி யார் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சி பேசக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அமைச்சர்— பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் இன்றைக்கு மத்தியிலே, மத்திய அரசில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கிறார். Medical Council of India இயற்றியுள்ள சில விதிமுறைகளில் ஒரேயொரு சின்னத் திருத்தம் செய்ய வேண்டும். ஏனென்றால், Medical Council of India விதிமுறையில் நுழைவுத் தேர்வு வேண்டும், இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒரு சட்டத் திருத்தம் செய்து அந்தச் சட்டத்தை உங்கள் அமைச்சர் எடுத்திருந்தால், டாக்டர் அன்புமணி இராமதாஸ் நீக்கிவிட்டிருந்தால் பிரச்சினையே இருந்திருக்காது. நுழைவுத் தேர்வே இருந்திருக்காது. தமிழக அரசு கொண்டு வந்த



சட்டமும் செல்லுபடியாகும். நீங்கள் அங்கே மத்திய அரசில் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. இங்கே நாங்கள் ஒரு சட்டம் கொண்டு வந்தோம், அதை இங்கே உயர் நீதிமன்றத்தில் எதிர்த்தார்கள். அப்போது நீங்கள் ஏதோ மக்களுக்காக, மாணவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பதுபோல், நீங்களும் உங்களை வந்து அந்த வழக்கில் implead செய்துகொண்டீர்கள். உங்கள் அமைச்சரே அங்கே மத்திய அரசில் செய்ய வேண்டிய ஒரு சட்டத் திருத்தத்தைச் செய்யாமல், இங்கே மாநிலத்தில் நீங்கள் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் உங்களை இணைத்துக்கொண்டீர்கள். எதிரான தீர்ப்பு இங்கே வந்தது. இந்தச் சட்டத்தையே ரத்துச் செய்தது உயர் நீதிமன்றம். அதற்காக உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் appeal செய்தோம். ஆனால், இங்கே பாசாங்கு செய்து, இரட்டை வேடம் போட்ட பாட்டாளி மக்கள் கட்சி உச்ச நீதிமன்றத்தில் appeal கூட தாக்கல் செய்யவில்லை. ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் இரட்டை வேடத்தை இங்கே தோலுரித்துக் காட்டிவிட்டேன். இனிமேல் மாணவர்கள் உங்களை நம்பமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) தலைவரே, இது சட்டசபைதானா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பாட்டாளி மக்கள் கட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உணர்ச்சிவசப்படுவதே இல்லை; ஆணித்தரமான உண்மைகளைத்தான், விவரங்களைத்தான் இங்கே நான் பேசியிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு விஷயத்தில் தொடர்ந்து குரல் கொடுத்து, அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற கட்சி பாட்டாளி மக்கள் கட்சி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் இவ்வளவு சிரமப்பட்டு இங்கே குரல் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. மத்தியிலே அவர்களுடைய அமைச்சர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் உட்கார்ந்திருக்கிறார். ஒரேயொரு கையெழுத்துப் போட்டால் போதும்; ஒரு சட்டத் திருத்தம் செய்தால் போதும்; அவருக்கே அந்த அதிகாரம் இருக்கிறது. நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று வந்துவிடும். அதை ஏன் செய்யவில்லை?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வருகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விளக்கம் சொல்வதற்கு எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். இடையிலே சப்தம் போடுவது, மறுத்துவிட்டால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அது ஏற்புடையதாக இருக்காது. அதை நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முன்னாலேயே சொல்லிவிட்டுத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பேச அனுமதித்ததே, அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லத்தான்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இட ஒதுக்கீடு...

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வைப் பொறுத்தவரையிலே—அதே நேரத்தில், தனியார் சுய நிதி மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் ஏற்பட்டிருக்கிற இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குப் பாட்டாளி மக்கள் கட்சி குரல் கொடுப்பதைக் கொச்சைப்படுத்தினார்கள். இல்லையென்று சொல்லவில்லை. இன்னொன்றுகூட...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் அதற்கு என்னவென்று பதில் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சொல்லிவிடுகிறேன், சொல்லிவிடுகிறேன். நான் சொல்ல வருகிறேன். பேசுவதற்கு அருகதை இல்லை என்று சொல்வதெல்லாம், (குறுக்கீடு) அப்புறம் அருகதை இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லிவிடட்டும். அவர் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்தியிலே இருக்கிற உங்களுடைய (குறுக்கீடு) அதற்குத்தான் விளக்கம் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே?

**திரு. ஜி.கே. மணி:** சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்றைக்குச் சொல்லப் போகிறீர்கள்? விளக்கம் எப்போது சொல்லப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** பாட்டாளி மக்கள் கட்சியினர் நுழைவுத் தேர்வுசம்பந்தமாக இரட்டை வேடம் போடுகிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம், உயர் நீதிமன்றத்திலே தமிழக அரசு ஒரு மனுச் செய்தபோது, தங்களையும் அதிலே impleading petitioner–ஆகப் பாட்டாளி மக்கள் கட்சியினர் சேர்த்துக்கொண்டார்கள். ஆனால், அந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்தபோது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அந்த வழக்கறிஞர் நீதிமன்றத்திலே ஆஜராகி வழக்காடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அளவுக்கு—மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், பேப்பரிலே அந்த நுழைவுத் தேர்வை ரத்துச் செய்வதற்கு நாங்களும் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டோம்

என்பதைக் காட்டுவதற்காகத்தான் அவர்கள் போட்டார்களே தவிர, உண்மையிலேயே அவர்களுக்கு அக்கறை இல்லை; அக்கறை இருந்தால் அவர்களுடைய அமைச்சரிடம் சொல்லி, அம்மா அவர்கள் சொல்லியதுபோல, M.C.I.-இலே ஒரு திருத்தம் செய்திருந்தாலே போதும். இந்தப் போராட்டம் தேவையேயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அக்கறை இருந்த காரணத்தினாலேதான் பாட்டாளி மக்கள் கட்சி, மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றதனாலும், இன்னும் எங்கள் தோழமைக் கட்சிகள் எல்லாம் மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்த காரணத்தினாலேயும்தான், நாடாளுமன்றத்தில் இட ஒதுக்கீட்டிற்காக தந்தை பெரியார் காலத்திலேயிருந்து··· *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை இட ஒதுக்கீடு அல்ல. பிரச்சினை என்பது இட ஒதுக்கீடு பற்றியதல்ல. பிரச்சினை என்பது நுழைவுத் தேர்வு பற்றியது. அது சம்பந்தமாக நீங்கள் பதில் சொல்லுங்கள். இட ஒதுக்கீடு என்று எங்கெங்கேயோ போகிறீர்கள் நீங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்ல முடியாததால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பிரச்சினையைத் திசை திருப்ப முயலுகிறார். இதை அனுமதிக்க முடியாது. நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் உங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். இந்திய மருத்துவக் குழுமம் சம்பந்தப்பட்ட, தொடர்பான மத்திய சட்டத்தில் ஏற்கெனவே நுழைவுத் தேர்வு அவசியம் நடத்தியாக வேண்டும் என்றிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்தை, இங்கே உயர் நீதிமன்றம் ரத்துச் செய்துவிட்டது. அங்கே வேண்டியது ஒரு சட்டத் திருத்தம். உங்கள் அமைச்சர் நினைத்தால் ஒரு நொடிப்பொழுதில் அதைச் செய்ய முடியும். அதை ஏன் செய்யவில்லை?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லவிடாமல், என்னைப் பேசவிடாமல் நீங்களே பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பதில் சொல்லுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** பிரச்சினையைத் திசை திருப்பக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலே சொல்ல மாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடு) நுழைவுத் தேர்வு தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லலாம், சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைத்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேசுவதற்கு விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டிற்காகத்தான், (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை இட ஒதுக்கீடு அல்ல. மணி, பிரச்சினை இட ஒதுக்கீடு அல்ல. நுழைவுத் தேர்வு. (குறுக்கீடு) அதைப் பற்றிச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வுப் பிரச்சினையிலே இங்கே நாங்களும், பாட்டாளி மக்கள் கட்சியும் வழக்கிலே எங்களைச் சேர்த்துக்கொண்டோம். வழக்குப் போட்டு, வழக்கிலே சேர்த்துக்கொண்டோம். இங்கே உயர் நீதிமன்றம் நிராகரித்த காரணத்தினாலே, உச்ச நீதிமன்றத்திலே தமிழக அரசு மேல் முறையீடு செய்தது. இந்த நேரத்திலே இட ஒதுக்கீட்டிற்கு மிகப் பெரிய சோதனை வந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் இப்போதுதான் மேலும் விளக்கினார். இங்கே உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், பாட்டாளி மக்கள் கட்சி தன்னையும் இணைத்துக்கொண்டது. ஆனால், இறுதிக் கட்டத்தில் வாதங்கள் நடைபெற்றபோது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வழக்கறிஞர்கூட நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இங்கே சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பின்னர் நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்கு appeal செய்தோம். அங்கேயும் பாட்டாளி மக்கள் கட்சி appeal செய்யவில்லை. இதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாமல், ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சரிடத்தில்...

**திரு. ஜி.கே. மணி:** பதில் சொல்ல முடியாமல் இல்லை. பேசவே விடாமல்...

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரிடத்தில் ஒரு விளக்கம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, யார்? துரைமுருகன் பேசுகிறீர்களா? பேசுங்கள். *(குறுக்கீடு)* பேச விடமாட்டேன் என்கிறாரே அவர்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு விளக்கம். இப்போது அவர்கள் படித்த அறிக்கையில் இருந்தும், கவர்னர் அவர்களுடைய உரையிலேயிருந்தும் என்ன தெரிகிறது என்றால், Central Board Syllabus–ல் படித்துவிட்டு வரும் மாணவர்களுக்கு இந்த Entrance examination உண்டு, State Board–க்கு இல்லை என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். Am I correct?

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் முழு விவரம். State Board–ல் *ப்ளஸ் 2* படித்தவர்களுக்கு நுழைவுத் தேர்வு கிடையாது. ஆனால், பிற Board–களுக்கு—வேறு சில Board–கள் உள்ளன—அவர்களுக்கெல்லாம், அவர்களுக்கு மட்டும் ஒரு Common Entrance Test வைத்து, அதை ப்ளஸ் 2–Board–ல் பெற்ற மதிப்பெண்களோடு ஒப்பிட்டு, அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

**திரு. துரைமுருகன்:** அப்படியானால் அதிலே சிலர் எங்களுக்குப் பாரபட்சம் இருக்கிறது, அந்த Central Board–க்கு மட்டும் வைத்தால் State Board–க்கு இல்லாமல் இருக்கிறது என்று சில பேர் கோர்ட்டுக்குப் போகமாட்டார்களா? *(குறுக்கீடு)* சூழ்நிலை. இது natural. கோர்ட்டுக்குப் போனால், அதற்கு வழக்கு மன்றத்திற்குப் போனால், அதைச் சந்திப்பதற்கு அரசு மாற்று ஏற்பாடு என்ன வைத்திருக்கிறது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடு மத்திய அரசால்தான் செய்ய முடியும். ஏற்கெனவே சொல்லி விட்டேன். இப்போதும் உங்கள் கூட்டணி அரசுதான் மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிறது. மத்தியிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் Medical Council of



India–வின் வழிமுறைகளில், விதிமுறைகளில் ஒரே ஒரு சிறிய திருத்தம் செய்தால் இந்த நுழைவுத் தேர்வுப் பிரச்சினையே இல்லாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** Speaker Sir, Point of order.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடித்த பின்னால்...

**டாக்டர் க. பொன்முடி:** Speaker Sir, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேசுங்கள். நீங்கள் பதில் சொல்லுங்கள், அவ்வளவுதான்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வுப் பிரச்சினையில் நாங்களும் உயர் நீதிமன்றத்தில் வழக்கிலே இணைத்துக் கொண்டோம். அன்றைக்கு, விசாரணை அன்று எங்களுடைய வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள். ஆனால், அரசுத் தரப்பிலே சென்றவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, உங்கள் கருத்துகளைத்தான் அரசு வழக்கறிஞர் சொல்கிறார், அரசுத் தரப்பிலே சொல்லப்படுகிறது, நீங்கள் பேச வேண்டியது இல்லையென்று சொன்ன காரணத்தினாலே எங்கள் வழக்கறிஞர்கள் அங்கே வாதாடவில்லை. இதுதான் உண்மை. தவறாகச் சொல்லக் கூடாது. *(குறுக்கீடு)* தவறாகச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் வழக்கறிஞர் வாதாடவில்லை, சரி.

**திரு. ஜி.கே. மணி:** எங்கள் வழக்கறிஞர் இருவர் அங்கே ஆஜர் ஆனார்கள் என்பது உண்மை. அதே நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பிரச்சினை வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** எங்களுடைய அமைச்சர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு இவ்வளவு சட்டத் திருத்தங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இன்னுமொன்று நான் சொல்கிறேன். *(குறுக்கீடு)* சொல்வதற்கு முன்பு ஏன் பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர் மத்திய அமைச்சராக இருக்கின்ற காரணத்தால்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததாகச் சொல்கின்றார்கள். அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிலே அந்த இட ஒதுக்கீட்டிற்கு மட்டும்தான் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கின்றதே தவிர, அதில் பிற அம்சங்களான நுழைவுத் தேர்வு பற்றியோ, அரசாங்கத்திற்கான ஒதுக்கீட்டு இடங்களைப் பற்றியோ, எதைப் பற்றியுமே பேசவில்லை. ஒரு ஓட்டு வங்கியை மனதில் வைத்துக் கொண்டு ஏதோ ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்கின்ற எண்ணத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே உச்ச நீதிமன்றம் கொடுத்து இருக்கின்ற தீர்ப்பில் இருக்கின்ற அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவில்லை. அப்படி அவர்கள் கொண்டு வந்திருந்தால், அந்த நுழைவுத் தேர்வு சம்பந்தப்பட்டதை நீக்கி அந்த அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருந்தால் இங்கே இந்த விவாதத்திற்கே இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அன்புமணி இராமதாஸ் அவர்கள் அங்கேயிருந்து கொண்டு, மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, நுழைவுத் தேர்வுப் பிரச்சினையிலேயும்—தனியார் கல்லூரிகளிலேயும் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகுக்க வேண்டும்; நுழைவுத் தேர்வை ரத்துச் செய்ய வேண்டும்; அதற்குண்டான காரியங்களில் ஈடுபட வேண்டும் என்று சொல்லி, அங்கே மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களிடத்திலே சொல்லியும், இந்திய மருத்துவக் கழகத்திலேயும் தகுந்த மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான திட்டங்களை எல்லாம் தீட்டி, அரசமைப்புச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியும் அவர், அன்புமணி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினாலேதான் இந்தக் காரியங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் காரியம்?



**திரு. ஜி.கே. மணி:** இதற்கு எந்தெந்த வகையிலே பண்ணினார்கள் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ திரு. மணி அவர்கள் ஒரு உண்மையை இங்கே சொல்லி விட்டார். இந்தச் சட்டத் திருத்தத்தை இன்றைக்குத் தமிழக அரசு கொண்டு வருகிறது என்றால், அதற்குக் காரணம் அவர்களுடைய மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் என்றார். உண்மைதான்; ஒரு வகையில் உண்மை. ஏனென்றால், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அன்புமணி இராமதாஸ் அந்தப் பதவியில் உட்கார்ந்து கொண்டு அவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல், Medical Council of India rule–களில் amendment கொண்டு வராமல், நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று அவர் அந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்யாததால்தான் இன்றைக்கு இவ்வளவு பிரச்சினை. Medical Council of India rule படி, ஏதோ ஒரு ரூபத்தில் நுழைவுத் தேர்வு இருக்க வேண்டும். அதற்காகத்தான் இப்போது சுற்றி வளைத்து, State Board–க்கு நுழைவுத் தேர்வு கிடையாது, மற்ற Board-களுக்கு ஒரு Common entrance test உண்டு என்று சொல்லி, நாங்கள் செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இதற்கெல்லாம் வழிவிட்டு, இதையெல்லாம் ஒதுக்கிவிட்டு. அந்தச் சட்டத் திருத்தத்தை இப்போதாவது டாக்டர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் கொண்டு வந்தால், இந்தச் சட்டத் திருத்தத்திற்கு இங்கே தேவையே இருக்காது. ஆகவே, சுற்றி வளைத்து விதண்டாவாதம் செய்வதற்குப் பதிலாக, அவர்கள் பதில் சொல்ல முடியாமல் ஏதேதோ பேசுவதற்குப் பதிலாக, நடந்த தவறை ஒப்புக்கொண்டு, நாங்கள் மத்தியில் எங்கள் அமைச்சரிடம் சொல்கிறோம், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரச் சொல்கிறோம் என்று சொன்னால், பிரச்சினை அதோடு முடிந்துவிட்டது.

பிற்பகல் 1–40

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, கொண்டு வரச் சொல்கிறேன் என்றே சொல்லவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டு வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள், ஒவ்வொரு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மாநிலங்கள் முழுவதிலும் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டும். அந்தக் கருத்தொற்றுமையை உருவாக்குவதற்காகவும், அதே நேரத்தில்,

சட்டத் திருத்தம் 104-லே சொல்லப்பட்டிருப்பது, "அந்த மாநிலங்கள் விருப்பத்திற்கேற்ப அமைத்துக்கொள்ளலாம்" என்பது அதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு வந்த பிறகு, கருத்தொற்றுமையை உருவாக்கி, இந்த நிலையை ஏற்படுத்தக்கூடியவர்தான் சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு அன்புமணி அவர்கள் என்பதைச் சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது சொல்கிறீர்களா?

**திரு. ஜி.கே. மணி:** இந்தச் சட்டத் திருத்தத்திற்கும், இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கும், நுழைவுத் தேர்விற்கும் காரணமே அவர்தான் என்பதை என்னாலே அடித்துச் சொல்ல முடியும்; மத்திய அமைச்சர் அவர்கள் இருப்பதனாலேதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வேளையாக நம் தமிழ்நாட்டு மக்களும், குறிப்பாகத் தமிழ்நாட்டு மாணவ, மாணவியரும் மிகவும் புத்திசாலிகள். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் இரட்டை வேடத்தை நன்றாகப் புரிந்துகொள்வார்கள். திரு. ஜி.கே. மணி அவர்கள் என்ன பேசினாலும் மாணவச் சமுதாயம் நம்பாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வு ரத்து (குறுக்கீடுகள்) ஏன் சட்டப் பாதுகாப்பு கடந்த ஆண்டு கொண்டு வரவில்லை? உண்மையில் நீங்கள்தான் இதைச் செய்யவேண்டும். கடந்த ஆண்டு கொண்டு வந்திருந்தால் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் குழப்பமே வந்திருக்காது. நுழைவுத் தேர்வு ரத்து என்பதற்குச் சட்டப் பாதுகாப்பு கொண்டு வந்திருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர், சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு Point of order, அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி, எங்களுடைய அமைச்சர் மத்தியில் இருப்பதனால்தான் இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தையே எடுத்து வர முடிந்தது என்று சொல்கின்றார். அவர் எந்த அளவிற்கு இதில் அக்கறையாக இருக்கின்றார் என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்கின்றோம். எப்படி உயர் நீதிமன்றத்திலே கபட நாடகம் ஆடுவதுபோல் ஒரு மனுவைப் போட்டுவிட்டு, வழக்கறிஞர் ஆஜராகாமல் விட்டுவிட்டார்களோ, அதேபோன்று--மத்திய அரசாங்கத்தின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் 27-8-2005 அன்று ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். இந்தியா முழுவதும் இருக்கின்ற அனைத்துக் கல்வி அமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அதிலே மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும் அழைத்திருந்தார்கள். ஆனால், அவருக்கு அக்கறை இல்லை, இந்த மக்கள்மீது அக்கறை இல்லாத அவர் அந்தக் கூட்டத்திலேகூட கலந்துகொள்ளவில்லை என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பதில் சொல்லக் கூடாது. இப்போது இந்த ஆண்டுகூட நுழைவுத் தேர்வு ரத்து என்று சொல்லி, மீண்டும் ஒரு குழப்பத்திற்குத்தான் வழி வகுத்திருக்கிறீர்கள். இது ஒன்றும் நிரந்தரப் பாதுகாப்பாக இருக்காது. அது மட்டுமல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லை. திரு. ஆறுமுகம்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு Point of order.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கு விளக்கமான ஒரு நல்ல உரையை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் கேட்பது, பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கின்ற அந்த மத்திய அரசு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நுழைவுத் தேர்வு தேவையில்லை என்ற சட்டத் திருத்தத்தை உங்களால் கொண்டு வர முடியுமா, முடியாதா?

**திரு. கே. ஆறுமுகம்:** அதற்காக இல்லை, சார். அது அரசமைப்பு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் அந்தச் சட்டத் திருத்தத்திலே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்தந்த மாநிலங்களில்...

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் அந்தச் சட்டத் திருத்தத்திலே சொல்லியிருக்கிறார்கள். அந்த மாநிலங்கள் விருப்பத்திற்கேற்ப அதை அமைத்துக்கொள்ளலாம். நமக்கு விருப்பம் இருக்கிறது, கட்டாயம் செய்துகொள்ளலாம். அதிலே குறை சொல்லக் கூடாது. அது மட்டுமல்ல, இன்னொன்று. நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்காக நாங்கள் ஒரு சட்டமுன்வடிவைத் தயாரித்து மத்திய அரசுக்குக்கூட



கொடுத்தோம். அதை ஏற்றுக்கொண்டுதான் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்கள் நிறைவேற்றினார்கள். அது பத்திரிகைகளிலேகூட அங்கெல்லாம் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முதலமைச்சர் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொன்னார்கள். அதற்கு உங்களுடைய பதில் வரவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பதில் எல்லாம் சொல்லியாயிற்று. பதில் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுடைய பேச்சுக்கு முறையான விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நீங்கள் சபாநாயகர், ஒருதலைப்பட்சமாகச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

*பிற்பகல் 1–45*

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கம் செய்தால்தான் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், சென்ற ஆண்டு வருகிறபோதும் தேர்வு நேரத்திலே கொண்டு வரப்பட்டு, அதிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. இந்த ஆண்டும் அதுபோல்தான் தேர்வு வருகின்ற நேரத்திலே இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசாங்கம் செய்தால்தான் என்று. எல்லாக் கட்சிகளுமே இதிலே ஒத்த கருத்தோடு இருக்கிற காரணத்தால், கலைஞர் அவர்களும்

சொல்லியிருக்கிறார்; இதிலே கல்வித் துறையிலே சிறந்தவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, அனைத்துத் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, இதிலே சுமுகமான முடிவை எடுக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆகவே, நாங்கள் போடுகிற மாதிரிப் போடுகிறோம், கோர்ட்டிற்குப் போய் எவனாவது ஒருத்தன் வழக்குப் போடுங்கள் என்பது மாதிரியெல்லாம் இல்லாமல்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுமுகமான முடிவு இல்லை. (குறுக்கீடு) சுமுகமான முடிவு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய நிலையை விளக்கியிருக்கிறார்கள், தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மத்திய மருத்துவத் துறை அமைச்சர் இதிலே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதைப் பற்றி திரு. ஜி.கே. மணி பதிலே சொல்ல மறுக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். Point of order முடிந்தது, உட்காருங்கள், உட்காருங்கள். சிறப்புச் சொற்பொழிவெல்லாம் ஆற்றாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகு, மத்திய அரசாங்கம் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று தமிழக அரசு சார்பிலே அம்மா அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையுடன் ஒரு Draft Bill-ஐ நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தோம். அந்த Draft Bill-லிலும் நுழைவுத் தேர்வு ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். அதுமட்டுமல்ல; இங்கே தலைமைச் செயலாளர் அவர்கள் இரண்டு முறை நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கடிதங்களிலேயும் நுழைவுத் தேர்வு கண்டிப்பாக ரத்துச் செய்யப்பட வேண்டும், நீங்கள் கொண்டு வரவிருக்கின்ற அந்தச் சட்டத் திருத்தத்திலே நுழைவுத் தேர்வை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம். ஆனால், மத்திய அரசாங்கம் அதைப் பற்றியெல்லாம் சிந்தனை



செய்யாமல், ஓட்டைப் பெறுவதை மனதில் வைத்துக்கொண்டு, வெறும் இட ஒதுக்கீட்டை மட்டும் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்களே தவிர, நுழைவுத் தேர்வைப் பற்றியோ, அல்லது அரசாங்க ஒதுக்கீட்டை எடுத்ததைப் பற்றியோ, வேறு எந்த அம்சங்களைப் பற்றியோ அந்தச் சட்டத் திருத்தத்திலே அவர்கள் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம். (குறுக்கீடு) இல்லை, பல முறை திரு. ஜி.கே. மணிக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுவிட்டது. அவர் இந்தப் பிரச்சினையைக் குழப்புகிறாரே தவிர, நேரடியான பதிலைச் சொல்லவில்லை. திரு. ஆறுமுகம், பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) திரு. ஆறுமுகத்தினுடைய வாய்ப்பு முடிந்துவிட்டது. (குறுக்கீடு)

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை, இல்லை. இதோ பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். திரு. ஆறுமுகம், பேச்சை நிறைவு செய்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், பேச்சை நிறைவு செய்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற அந்தச் சட்டத் திருத்தத்திலே, மாநில அரசாங்கம் தன்னுடைய நிலைக்கேற்ப, அந்தச் சூழ்நிலைக்கேற்ப இந்த விதிகளைத் தளர்த்திக்கொள்ளலாம் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதைப் பயன்படுத்தி தமிழக அரசாங்கம் செய்ய வேண்டுமென்றால் செய்யலாம். ஆனால், செய்யக் கூடாது என்பதற்காகவே தமிழக அரசாங்கம் இதைக் குழப்பிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். மத்திய அரசு கொண்டு வந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில், நுழைவுத் தேர்வு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுழைவுத் தேர்வு நடத்தப்பட வேண்டுமென்று—கண்டிப்பாக நுழைவுத் தேர்வு நடத்தப்பட வேண்டுமென்பது உச்ச நீதிமன்றம் கொடுத்திருக்கிற தீர்ப்பு, இன்றைக்கும் அது அமலில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப் பற்றி அந்தச் சட்டத் திருத்த மசோதாவிலே, அரசமைப்புச் சட்டத் திருத்தத்திலே எதுவும் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், பேசி முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நம்முடைய மாணவர்கள் நலன் கருதி இங்கே பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகப் பேசுகின்றேன். ஆனால், இதிலே அரசியலாக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இதை நாடகமாடுவதாகச் சொல்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–1–2006) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



# 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்குத் தலைவரை நியமித்தது குறித்து வணிக வரிகள் (E2) துறையின் 9–8–2005 ஆம் நாளிட்ட 28 (3D) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*2. 1989 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–III) துறையின் 13–2–2004 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*3. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 14–7–2005 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*4. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்–செயலாளருக்குச் சொந்தமான* MA KGD 851 G 5N 221985 *ஆம் எண் அடிச்சட்டம் மற்றும்* L15A 30055698 *ஆம் எண் என்ஜின் கொண்ட சீர்வளி வசதி செய்யப்பட்ட ஹோண்டா சிட்டி காருக்கு ஆயுட்கால வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து உள் (போக்குவரத்து–I) துறையின் 21–9–2005 ஆம் நாளிட்ட 836 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

[2006 ஜனவரி 17

5. "புளூ கிராஸ்" இந்தியா நிறுவனத்துக்குச் சொந்தமான (1) ட்டிஎன்.07 ஜே 8196, (2) ட்டிஎன்.07 எம். 8184, (3) ட்டிஎன்.07 ப்பி 88.54 மற்றும் (4) ட்டிஎன்.07 ஏபி 3902 ஆகிய பதிவெண்களைக் கொண்ட கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை வண்டிகள் நான்கிற்கும் அவை வாடகைக்கு அல்லது விருப்பூதியத்திற்குப் பயன்படுத்தாமல் விலங்குகளின் நலன்களுக்காக சேவை நோக்குடன் பயன்படுத்தப்படும் வரையில் 5 ஆண்டு கால அளவுக்கு அவற்றின்மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை 50 சதவீதமாகக் குறைத்து உள் (போக்குவரத்து–I) துறையின் 22–9–2005 ஆம் நாளிட்ட 841 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. அறிவிக்கையின் இணைப்பில் உள்ள அட்டவணையின் இரண்டாவது நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடங்களில் இயக்கப்படும் சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) பயணிகள் பேருந்துகளைப் பொறுத்தமட்டில், அந்த அட்டவணையின் 8–வது நெடும் பத்தியில் அவற்றிற்கிணையான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும், செலுத்தத்தக்க கட்டணங்களை அறிவிக்கப்பட்ட சென்னை பெருநகர்ப் பகுதிக்கு அப்பால் 10 கிலோ மீட்டர் சுற்றெல்லைகளுக்கு இயக்கப்படுபவை 31–3–2003 வரை ஒரு இருக்கைக்கு ஒரு காலாண்டிற்கு ரூ.275/– என்பதிலிருந்து ரூ.60/– ஆகவும், 1–4–2003 ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் ஒரு இருக்கைக்கு ஒரு காலாண்டிற்கு ரூ.325/– என்பதிலிருந்து ரூ.80/– ஆகவும் குறைத்து உள் (போக்குவரத்து–I) துறையின் 22–9–2005 ஆம் நாளிட்ட 843 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. சென்னையில் உள்ள ராஜயோகா கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உபயோகத்தில் உள்ள ட்டி என்.63 0123 ஆம் பதிவு எண் கொண்ட தனியார் சேவை வண்டி வாடகைக்கு அல்லது



2006 ஜனவரி 17]

வெகுமதிக்காக விடப்படாமல் அவ்வண்டிக்கு செலுத்தத்தக்க வரிவீதத்தை ஐந்து ஆண்டு கால அளவிற்கு அல்லது மேற்சொன்ன நிறுவனத்தோடு தொடர்புடைய தொண்டுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிற வரையில் இவற்றில் எது முந்தையதோ அக்கால அளவிற்கு இயல்பான வரி வீதத்தில் 50 சதவீதமாகக் குறைத்து உள் (போக்குவரத்து–I) துறையின் 29–9–2005 ஆம் நாளிட்ட 923 (1D) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. சென்னை, எண்ணூரில் உள்ள மிஷினரி ஆஃப் சாரிட்டி நிறுவனத்துக்குச் சொந்தமான ட்டிஎன். 20/ எஇசட் 2540 என்கிற பதிவெண்ணைக் கொண்ட அவசர சிகிச்சை வண்டியினைப் பொறுத்தமட்டில் அது வாடகைக்காக அல்லது ஊதியத்திற்காகப் பயன்படுத்தாத நிலையில் அந்நிறுவனத்தின் சேவை பணி நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வரையில் அல்லது ஐந்தாண்டு கால அளவிற்கு இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் அந்த வண்டியின் மீது செலுத்தத்தக்க இயல்பான வரியினை 50% குறைத்தும், 16–3–1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.10–ல் பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட 16–3–1994 ஆம் நாளிட்ட II (2)/ உள் துறை/942/92 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையினை ரத்து செய்தும் உள் (போக்குவரத்து–I) துறையின் 7–10–2005 ஆம் நாளிட்ட 964 (1டி) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 8–7–2005 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச்

சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 11–7–2005 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20–10–2005 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



12. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

13. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

14. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

15. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

3. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

4. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

# இணைப்பு

(166 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

***Honourable Members of the Legislative Assembly***

It gives me great pleasure to address the first session of the Tamil Nadu Legislative Assembly for the year 2006. I extend my heartfelt New Year and Pongal greetings to all of you. This is the concluding session of the Twelfth Legislative Assembly. I take this opportunity to thank the Hon'ble Members of this August House for the invaluable contribution made by them as elected representatives of the people. The Government, under the leadership of the Hon'ble Chief Minister, has strained every nerve to fulfil the profound faith reposed by the people in the Government, overcoming insurmountable challenges.

2. The Hon'ble Chief Minister had set out the far sighted vision aimed at making Tamil Nadu the numero uno State in the country. An action-plan for realizing the vision was outlined in the Hon'ble Chief Minister's 15-Point Programme. Today, Tamil Nadu has made rapid strides and has in fact reached the numero uno position in various sectors. This is reflected in most independent surveys ranking Tamil Nadu at the top in all aspects whether it be as an investment destination, public services, social sectors or in the maintenance of law and order.

3. While the record rainfall in 2005 has solved the drinking water problem in the chronically affected areas and does hold out the promise of good crops for farmers in the coming season, Hon'ble Members are aware that Tamil Nadu was badly battered by incessant heavy rains and floods during October-December 2005. The recurrent deluge resulted in loss of precious lives, damage to standing crops and extensive damage to public infrastructure and property. Normal life was disrupted in 22 affected districts. The Hon'ble Chief Minister personally toured the affected areas on several occasions to assess the impact of the floods and organize relief and rehabilitation effort. The entire administrative machinery was galvanized into action. Lakhs of people were evacuated and accommodated in temporary flood relief centres and provided with food, water and medicine. A comprehensive flood relief plan was put into operation, which was supervised by the Hon'ble Ministers of the Government and senior IAS officers.

4. A detailed Memorandum seeking assistance from the Government of India was first presented on 3rd November 2005. Thereafter two more memoranda were presented. This Government has sought a total assistance of Rs.13,685 crores, 2.58 lakh tonnes of rice and 43,200 kilolitres of kerosene to organize the relief, rehabilitation, and restoration operations. The Hon'ble Chief Minister, Selvi J Jayalalithaa called on the Hon'ble Prime Minister on 16th December 2005 and made a detailed presentation on the extent of damage, the relief operations undertaken and the assistance required. With this forceful plea, the Government of India has so far released a total amount of Rs.1,000 crores and 21,000 kilolitres of kerosene for undertaking flood relief and restoration operations.

5. Given the recurrent floods and inundation, the Government announced and implemented a well-structured and liberal relief package reaching out to all those who were affected. The relief operations have been undertaken on a mammoth scale covering lakhs and lakhs of families. The relief package provided each affected family with cash assistance of Rs.2,000 (for fully damaged huts) and Rs.1,000 (for partly damaged huts) apart from 10-Kgs of rice and 1 litre of kerosene, a saree and a dhoti. For flood affected households in Chennai and adjoining areas, the quantum of cash relief was fixed at Rs.2,000 per family, 10-Kgs of rice, 1 litre of kerosene, a saree and a dhoti. A simplified system of identification of affected streets in Chennai and adjoining areas as also affected wards and habitations in other areas has enabled minimizing the usual problems associated with enumeration. It has helped in quick disbursal of the relief package to the affected families.

6. This Government has already sanctioned a total sum of Rs.1,079 crores for the flood relief and rehabilitation operations. This includes the allotment for providing an immediate relief package at a cost of Rs.566 crores. This has been provided to 31 lakh families so far in Tamil Nadu. In Chennai alone, over 6 lakh households have received assistance from the Government. Never has such a massive operation been ever undertaken. A major programme to repair and restore damaged public infrastructure such as roads, bridges, culverts, tanks, irrigation systems, buildings etc., has also been taken up for implementation at an outlay of Rs.513 crores. This Government hopes that the Government of India will sanction further allotments for undertaking relief for farmers and permanent restoration and reconstruction works. I take this opportunity to gratefully acknowledge the wholehearted support received from



well meaning organizations and public spirited citizens who responded to the call by the Hon'ble Chief Minister and contributed generously to the Chief Minister's Public Relief Fund, to provide assistance to the affected families.

7. It has been little over a year since the devastating Tsunami killer waves hit the Tamil Nadu coastline leaving behind a trail of death, shattered lives and destruction. Thanks to the clear vision and policy directions of the Hon'ble Chief Minister, this Government completed the first phase of search, rescue, burial/cremation of the dead and immediate relief in record time earning universal appreciation. The compassion of this Government which cares is highlighted by the decision of the Hon'ble Chief Minister to fully meet the cost of recanalisation surgery for all those mothers who had undergone tubectomy earlier and lost their children during the Tsunami tragedy. Now a massive long-term reconstruction and rehabilitation programme is under implementation. While the Government of India has so far released only Rs.812 crores for Tsunami relief and rehabilitation to Tamil Nadu, this Government has sanctioned Rs. 1,136 crores for relief and rehabilitation. In addition, this Government has secured financial assistance of Rs. 2,618 crores from various multilateral institutions for the long term reconstruction and rehabilitation programme. While the assistance from the World Bank of Rs.1903.50 crores is entirely in the form of a loan, the assistance from the Asian Development Bank consists of loan component of Rs.304 crores and grant of Rs.343 crores. The assistance from the International Fund for Agricultural Development is Rs.67.50 crores as loan. These loans are to be repaid entirely by the State Government. Under these externally-aided projects, this Government has already sanctioned Rs.832 crores towards reconstruction and livelihood support.

8. The single minded devotion and determination with which the relief operations were taken up and rehabilitation efforts handled has earned international acclaim for Tamil Nadu. A recent study by Fritz Institute, a United States-based international non-profit organization, has hailed the critical role played by the Government in coordinating rescue and relief efforts during the Tsunami disaster in Tamil Nadu.

9. This Government's overriding emphasis on the perfect maintenance of law and order has transformed Tamil Nadu into a haven of peace and tranquillity. Strict vigil, firm and deterrent action, constant monitoring and a coordinated approach to the maintenance of law and order by all Government agencies have helped eradicate extremism in all its forms. The elimination of

the dreaded forest brigand Veerappan, who remained beyond the dragnet of law for nearly two decades, defying State authority with impunity, is indeed the most significant triumph of this Government. The threat posed by Naxalites in the border districts adjoining Andhra Pradesh and Karnataka has been handled successfully.

10. Hon'ble Members would agree that Tamil Nadu's return to the rule of law during the last five years would not have been possible without the grit and determination displayed by the Hon'ble Chief Minister. The Tamil Nadu Police has been transformed into the most professional law enforcement machinery in the country. A comprehensive programme for modernization of the Tamil Nadu Police has been implemented with an expenditure of Rs.479 crores since 2001. The State Police has been provided with the latest communication equipment, vehicles, modern arms and ammunition and latest facilities for aiding speedy investigations. Thanks to the generous support of the Hon'ble Chief Minister for the modernization of the Police Force, crime detection rate in Tamil Nadu, which was 71% in 2001, has improved to 86% in 2005. Construction of 10,000 houses for police personnel of different ranks at a cost of Rs.416 crores since 2001 has helped the State attain a high rate of housing satisfaction amongst police personnel in the country. The creation of the new Greater Chennai Police Commissionerate is a boon for meeting the security needs of this growing metropolis. Recruitment of women police personnel and establishment of 196 All Women Police Stations has enhanced the gender-sensitive image of Tamil Nadu Police in the country.

11. This Government's modernization programme for upgrading the infrastructure of Fire and Rescue Services and the Prisons Departments implemented at an outlay of Rs.25 crores and Rs.48 crores, respectively, has been extremely well received. The tele-justice system launched in Tamil Nadu is the country's largest video-conferencing system connecting the Prisons and Court Complexes in the State. India's most modern prison complex at Puzhal near Chennai, being constructed at a total of cost of Rs.77 crores will be completed shortly.

12. Hon'ble Members will recall that Tamil Nadu had entered the New Millennium with serious doubts about its macro-economic growth prospects, a debilitating fiscal situation and a paralyzed development administration. In a short span of less than five years, the State has made a spectacular turnaround. The growth momentum in the critical sectors of the economy has been restored.



Despite the challenges posed by a devastating Tsunami and unprecedented floods, Tamil Nadu is likely to record an economic growth rate in excess of 8% in 2005-2006 as per preliminary estimates. The economic boom the State is witnessing is exemplified by the new investments flowing into the State.

13. This Government deserves the distinction for having successfully synchronized the State's reform priorities with its development imperatives. Tamil Nadu is well poised to achieve the 'Millennium Development Goals' well before the target year 2015. The State's Development Plan outlay has vaulted from Rs.5,200 crores in 2001-2002 to Rs.9,100 crores in 2005-2006 representing an increase of 75% and the State is set to outperform its ambitious Tenth Plan outlay for 2002-2007 of Rs.40,000 crores. The State's capital outlay for creating productive infrastructure and community assets has almost trebled from Rs.1,778 crores in 2001-2002 to Rs.4,792 crores in the Budget 2005-2006. The provision for maintenance of the existing public infrastructure has gone up from Rs.182 crores in 2001-2002 to Rs.754 crores in 2005-2006.

14. Tamil Nadu's development and reform efforts have enthused multilateral funding agencies to return to the State and finance its development projects. Hon'ble Members would be pleased to know that Tamil Nadu's externally-aided project portfolio has grown to a record level of Rs.8,550 crores (US $ 1.90 billion) in 2005-2006. These include among others, the prestigious Tamil Nadu Road Sector Project (Rs.2160 crores), the Tamil Nadu Health Systems Project (Rs.597 crores), Tamil Nadu Urban Development Project-III (Rs.1,957 crores), the Pudhu Vazhvu Project (Rs.717 crores) and the Tamil Nadu Afforestation Project (Rs. 567 crores) which are currently under implementation. The credit for Tamil Nadu's reversal of fortunes in such a short time span without any adverse reform effects on the poor and the needy legitimately goes to the Hon'ble Chief Minister, Selvi J Jayalalithaa.

15. This Government has launched a pioneering programme to secure comprehensive social security for farmers and agricultural labourers through the Hon'ble Chief Minister's Farmers Security Scheme. It has received wide acclaim for its remarkable breadth and scope. This revolutionary scheme covers an estimated 1.37 crore agricultural labourers and small and marginal farmers in Tamil Nadu and addresses their lifetime cradle to grave concerns. It envisions State support for meeting expenses on marriage, maternity, quality education, pension during old age and relief in the event of death/ accidental disability.

frontline milk producing State in the country. A Special Livestock Protection Programme for providing veterinary health care facilities in remote areas is currently under implementation and so far, 24,051 camps have been conducted at a cost of Rs.10 crores. A total of 234 veterinary sub-centres have been upgraded as full fledged veterinary dispensaries.

24. This Government is deeply concerned about the recurrent incidents of violence against fishermen from Tamil Nadu in the Palk Bay around Kachatheevu Island. The Hon'ble Chief Minister has written to the Hon'ble Prime Minister requesting that the Kachatheevu Island may be taken on lease in perpetuity by the Union Government so that the traditional fishing rights and privileges of Indian fishermen to carry out normal fishing activities in the area are protected.

25. To mitigate the sufferings of the fisherfolk on account of the Tsunami, this Government has distributed relief assistance of Rs.146 crores towards repair and replacement of damaged boats and nets. An amount of Rs.103 crores has also been sanctioned for upgrading existing infrastructure in the fisheries sector to international standards. An estimated 10.36 lakh fisherfolk have benefited under the Savings-*cum*-Relief Scheme for fishermen at an outlay of Rs.108 crores. The Government has provided 100% Sales Tax exemption on purchase of diesel by fishermen for fishing activities in order to contain the prices following the recurrent hike in petroleum prices by the Union Government, even though this involves an estimated annual loss of revenue of Rs.63 crores to the State.

26. The Hon'ble Chief Minister has always maintained that while empowerment is the key instrument in our poverty reduction strategy, addressing livelihood concerns amongst the poor and the deprived has to be accorded a high priority. Tamil Nadu has taken the lead in conceptualizing and putting into action two significant new poverty reduction programmes that will make a major difference to the quality of life of the poor in Tamil Nadu. The first is the ambitious Pudhu Vazhvu Project launched recently to cover 15 districts with an outlay of Rs.717 crores. The second poverty reduction programme for the ultra poor seeks to reach out to 3 lakh poorest of the poor households with the objective of creating opportunities and building social capital amongst the poor to enable them to rise above a life of destitution and misery.





27. In pursuance of its avowed commitment of ensuring 'food security for all' in Tamil Nadu, this Government has undertaken a mammoth exercise to streamline and restructure the Public Distribution System so that it provides an effective safety net. The Hon'ble Chief Minister has ensured that every family obtains a ration card. With the renewal of cards and issue of fresh cards to all eligible families, the total number of cards has now reached 1.88 crores. The Public Distribution System in Tamil Nadu has been rated the best by an independent agency.

28. In no other State except Tamil Nadu, is rice provided to all families requiring it at Rs.3.50 per Kg. This has imposed a very heavy annual financial burden of Rs.1,200 crores as subsidy. When this is the situation, this Government is dismayed at the Union Government's decision to increase the Central Issue Price of rice for the Above Poverty Line category from Rs.8.30 per Kg to Rs.9.15 per Kg. The per card allotment has also been reduced for all categories resulting in an increase in the quantity of high priced Above Poverty Line rice that the State will have to take from the Central Pool. This imposes a very heavy additional subsidy burden on the State. The Hon'ble Chief Minister has already announced that despite the major increase in cost, the rice price will be maintained at Rs.3.50 per Kg. This measure taken to protect the poor and the needy will result in an additional food subsidy burden of Rs.300 crores per year increasing the total annual food subsidy from Rs.1,200 crores to Rs.1,500 crores.

29. I am glad to announce that an ambitious Basic Amenities Programme for Rural and Urban Areas has just been launched with an outlay of Rs.250 crores with the aim of bridging the infrastructure gaps in rural and urban areas in all districts. This omnibus programme, giving flexibility to the district administration for taking up works to provide water-supply, storm water drainage, repairs to noon meal centres, schools, pathways to burial grounds, approach road to habitation etc., will meet all the felt needs.

30. Fostering housing security for the rural poor has received an unmatched attention from this Government. Requisite funds have been earmarked under the Basic Amenities Programme for repair of about 65,000 tiled houses constructed prior to 1991 in rural areas and the Special Village Panchayats. A major programme to upgrade 1.5 lakh kutcha houses into pucca houses has been taken up at an outlay of Rs.37.50 crores during 2005-2006.

31. Hon'ble Members would be pleased to know that the laudable 'Namadhu Gramam' Scheme has become a social movement in the State. This revolutionary programme has set the stage for a healthy competition amongst Village Panchayats which are striving to achieve 100% enrolment of children in schools, poverty reduction, reduction of infant mortality, elimination of female foeticide/infanticide, and improved village sanitation.

32. This Government has placed the highest emphasis on providing safe drinking water supply. A total of 318 Combined Water Supply Schemes have been taken up for implementation during 2001-2006 to provide drinking water supply to 1.5 crore people living in 18,951 rural habitations and 150 towns at an estimated cost of Rs.2,423 crores. Hon'ble Members will be glad to know that 223 Combined Water Supply Schemes have already been completed, thus assuring protected water supply to 10,043 rural habitations and 91 urban towns. A total of 22,069 rural habitations have been provided with protected water supply through individual power pumps at an estimated cost of Rs.993 crores. An estimated 39,796 hand pumps have been converted into mini-power pumps at a total cost of Rs.239 crores. It is an acknowledged fact today that the drinking water supply situation in Tamil Nadu has improved vastly with the strenuous and systematic efforts of this Government.

33. Tamil Nadu has made rapid strides in rural sanitation, the coverage going up from 15% in 2001 to 57% in 2005, through the provision of individual household latrines and toilets in schools and anganwadis. It is a matter of satisfaction that all Village Panchayats across the State have an Integrated Sanitary Complex for Women built at a total cost of Rs.278 crores. These are now being fitted with Bio-gas plants to make them even more efficient.

34. Another major thrust is the launch of the Tamil Nadu Urban Development Project-III with a total project outlay of Rs.1,957 crores. Under this project, comprehensive underground sewerage facilities will be provided in 24 district headquarters and 13 other towns. In addition, road networks in the Chennai Metropolitan Area will be improved with provision of Railway Over-bridges (ROBs), Railway Under-bridges (RUBs) and grade separators. This will ensure that the traffic congestion in the Chennai Metropolitan Area is tackled effectively.

35. This Government, which stands for the poor, has accorded the highest priority to the problems confronting the urban poor. Affordable housing for



them has been a priority. So far with an outlay of Rs.250 crores, nearly 30,000 families have been provided with houses. An action plan for urban slum housing development with an outlay of Rs.250 crores during 2005-2010 has been launched.

36. This Government has accorded a tremendous fillip to upgrading road connectivity across the State. The Capital Budget for roads and bridges has gone up more than eight times from Rs.257 crores in 2001-2002 to Rs.2,081 crores in 2005-2006. Panchayat and Panchayat Union Roads are being upgraded with an outlay of Rs.400 crores in 2005-2006. In addition, a special renewal package for roads in Special Village Panchayats is being taken up with an outlay of Rs.100 crores. The roads in urban local bodies are set to get a facelift in 2005-2006 with the sanction of works at an estimated outlay of Rs.401 crores. The Government has taken up on a war footing the restoration of roads damaged in the recent floods. Never has a Government invested so much in providing basic infrastructure, namely, the road network. This will contribute greatly to further economic growth.

37. It goes to the credit of this Government that despite repeated increases in diesel prices, the public bus transport system has been modernized and a comprehensive and liberal pay revision package for employees of the State Transport Undertakings implemented, while keeping the bus fares lowest in the country. The State Transport Undertakings have also bagged three awards for efficient performance.

38. The Tamil Nadu Electricity Board which was on the verge of financial collapse with a huge revenue gap of Rs.5,000 crores when this Government assumed office in May 2001 has been restored back to health. We can justifiably be proud that the Tamil Nadu Electricity Board has maintained quality power supply to all its consumers without any power cut since 2001 despite 14% reduction in coal linkage to thermal power stations of the Tamil Nadu Electricity Board in 2005 by the Union Government and will continue to do so in the coming years. This Government has taken steps to ensure that new generation capacity is added in the State during 2005-2010. So far, projects to produce 4,000 MW have been initiated. The Neyveli Lignite Corporation will implement a new 1,000 MW plant at Jayankondam in Perambalur district. This will bring the total new capacity additions planned to 5,000 MW. This Government's continued thrust on renewable energy through requisite enabling measures has helped Tamil Nadu attain the numero uno position in renewable energy in the

country. The installed wind energy capacity in the State at 2,433 MW *constitutes 58% of the all-India capacity, making Tamil Nadu a clear winner.*

39. Hon'ble members will acknowledge that with the attention paid to the infrastructure, ambience and facilities in the city, Chennai metropolis has now become the 'Jewel of the East'. The 10-year 'Chennai Metropolitan Development Plan', currently under implementation with an investment outlay of Rs.18,000 crores has made impressive headway in refurbishing and upgrading infrastructure in sectors such as power supply, water supply, drainage, traffic management, transportation, housing etc. The Hon'ble Chief Minister's drive to establish parks and walkways in Chennai have added to the beauty of this city. It redounds to the credit of this Government under the leadership of the Hon'ble Chief Minister for solving Chennai's chronic water supply problem. The 180 MLD New Veeranam Project completed in record time has brought in much needed stability to the city's water supply position. The 100 MLD Desalination Project will be built overcoming all obstacles. This House urges the Union Government to accord immediate environmental clearance so that this project benefiting the citizens of Chennai can be taken up at once. Citizens of Chennai will always remember these proactive steps taken by this Government to provide assured water supply to Chennai city.

40. Recognizing that traffic management in Chennai requires radical solutions, this Government has decided to implement the Monorail system in 300 Kms of high-density traffic corridors of Chennai Metropolitan Area on public-private partnership mode. I am confident that this landmark initiative will make travel within Chennai metropolis a pleasurable experience.

41. The Hon'ble Chief Minister's proactive 'New Industrial Policy-2003' has helped Tamil Nadu to consolidate its core competence in the manufacturing sector to emerge as the most preferred destination for foreign and domestic investors. Hon'ble Members would be pleased to know that Tamil Nadu has been chosen as 'Overall Winner – Asian Region of the Future 2005-2006' and adjudged as 'Best FDI Potential' destination by the FDI magazine, which is a part of the Financial Times. Tamil Nadu has attained the top rank and has been adjudged the best State for the ease of doing business and in terms of composite Economic Freedom Index-2005 among Indian States. The fact that Multinational Companies (MNCs) such as Nokia, Flextronics, BMW etc., have signed up to locate their plants in Tamil Nadu is a testimony to the untiring



efforts of the Hon'ble Chief Minister in making Tamil Nadu the numero uno investment destination in India.

42. This Government's proactive measures to enable Tamil Nadu to be a major player in the services sector, particularly IT and IT-enabled services, have borne fruit. Tamil Nadu has been judged as a leader in e-readiness by independent analysts. During 2004-2005 alone, a total of 400 new IT companies have set up base in Tamil Nadu – in other words, at least one IT company has located base in Tamil Nadu everyday. The software exports from the State have trebled to touch a staggering Rs.10,730 crores in 2004-2005 representing an impressive growth of over 40% compared to the previous year. IT for e-Governance for improved administrative efficiency and quality service delivery has received an impressive thrust from the Government. A massive programme to provide broadband connectivity up to the Taluk and Block level is currently underway through the Tamil Nadu State Wide Area Network (TNSWAN). This Government's efforts in computerizing all the Village Panchayats will serve as a trigger for expansion of knowledge and opportunities in the rural areas.

43. This Government's concerted efforts in tapping the tourism potential for its role in promoting the services sector and generating local employment have helped Tamil Nadu emerge as the location premiere for holidaying in India. The years 2001-2006 have seen an unprecedented step up in Budget outlay on tourism with focus on development of specific tourism circuits, infrastructure facilities and marketing Tamil Nadu as the best holiday destination in India. Hon'ble Members would be pleased to know that Tamil Nadu has received the prestigious international award for promoting Chettinad heritage Tourism from the Pacific Area Travel Writers Association.

44. The accomplishments of this Government in extending quality and affordable healthcare to the poor and transforming Tamil Nadu into the 'Medical Capital of India' are indeed noteworthy. During the past five years, 106 Primary Health Centres (PHCs) have been upgraded into 30-bed hospitals with all requisite facilities. This Government has established seven regional diagnostic centres at a cost of Rs.21 crores to upgrade the diagnostic services in far flung areas. New 300-bed Government Medical College hospitals have been set up in Theni, Kanyakumari and Vellore. An Ayurveda College is being established at Nagercoil in Kanyakumari District at an estimated cost of Rs.3 crores. 11 new Nursing Schools have been started to improve the quality and

availability of paramedical staff. Another shining example of caring governance is the unique programme launched by the Hon'ble Chief Minister to correct problems of cleft lip and cleft palate among children. All such children needing assistance have been reached and assistance provided. The pioneering Tamil Nadu Health Systems Project being implemented at an outlay of Rs.597 crores is a landmark intervention in improving the quality of services in secondary health care institutions in the State. Under this scheme, 62 Government hospitals are being equipped to provide round-the-clock comprehensive emergency obstetrics and new born care.

45. This Government can legitimately be proud of its performance in family welfare brought about by its comprehensive health intervention programmes. There has been a significant improvement in vital health indicators during the past five years. Institutional deliveries have improved from 87.9% in 2001 to 94.3% in 2005, infant mortality rates have declined from 49 per 1000 live births in 2001 to 43 per thousand live births in 2003. Maternal deaths in Tamil Nadu have also declined by 25% during the period 2001-2004.

46. The Hon'ble Chief Minister has always believed that quality education and skill acquisition by the people not only determine the pace of economic growth but also hold the key for empowering and enabling them to lead the kind of life they value. The Government has accorded an unmatched attention towards opening new schools and upgrading existing educational infrastructure since 2001. A total of 1,274 new Primary Schools have been opened while 2,790 existing primary schools have been upgraded as Middle Schools. 394 Middle Schools have been upgraded as High Schools while 406 High Schools have been upgraded as Higher Secondary Schools. The Government has filled up 58,282 vacancies in teacher posts. The decision to supply free textbooks to all children enrolled in Government and Aided-Schools up to Class XII has been widely welcomed. The Hon'ble Chief Minister's decision to extend the scheme for free supply of bicycles to all students studying in Classes XI and XII in Government and Aided Higher Secondary Schools is a landmark step in facilitating access to quality education in Tamil Nadu. This Government's scheme to provide an assistance of Rs.50,000 to students in Government and Aided Schools in the unfortunate event of loss or permanent incapacitation of their earning parents due to accidents has been widely welcomed.

47. This Government had abolished the Common Entrance Test for admission to Undergraduate Professional Courses in June 2005 considering



the fact that this test had become a burden and traumatic experience, especially for students from the rural areas. While the decision of the Government to abolish the Common Entrance Test was widely welcomed, this could not be implemented because of certain Regulations of the Medical Council of India and All India Council for Technical Education. This Government requested the Union Government to amend these Regulations. Parents and students have expressed a request that the prevailing uncertainty should be removed and a clear scheme based on the Plus Two marks of the State Board should be evolved. This Government has decided to follow the basic principle, namely, the Plus Two marks of the State Board will be the common platform for evaluation. The Plus Two marks obtained in the State Board examination will be the basic platform and there will be a common entrance examination for students of all other Boards so that they are brought on a comparable basis to the State Board Plus Two marks. This will achieve both the objectives of less burden and trauma for the bulk of the students who take the State Board examination as also the provision of a correct method to bring all other Board examinations on to a comparable platform to the State Board Plus Two marks. Necessary legislation to give effect to these changes will be introduced.

48. Tamil Nadu has emerged as one of the largest providers of quality technical manpower in the world. The State's wide network of 237 engineering colleges and 230 polytechnics has opened up new opportunities for accessing quality technical education. A scheme for improving the quality of technical education to world class standards in the Engineering and Polytechnic Colleges is under implementation at an outlay of Rs.96 crores.

49. This Government's encouragement to sports and sportspersons has been a positive contribution towards developing a healthy mind and body among children and youth in Tamil Nadu. The 'World Beaters Talent Spotting Scheme' has been successfully implemented in schools. This Government's cash incentive programme to encourage sportspersons who achieve laurels at national and international sporting events has been widely welcomed.

50. Empowerment of women has always received precedence in the framing of policies and actions of this Government. The Hon'ble Chief Minister, who initiated the Women Self Help Group movement in Tamil Nadu, has seen it blossom into a spectacular social revolution. Today, it is truly a mass social movement for empowerment of women with nearly 50 lakh women members enrolled in three lakh self help groups with savings and credit linkage in excess

of Rs.889 crores and Rs.1,563 crores, respectively. The unique 'Cradle Baby Scheme' and the 'Girl Child Protection Scheme' have played a major role in protecting the life and improving the social status of the girl child. This Government deserves the credit for ensuring the most comprehensive and quality supplementary nutrition coverage among children, expectant mothers and the elderly in Tamil Nadu. This Government urges the Union Government to take expeditious action to enact a law enabling 33% reservation for women in Parliament and State Legislatures.

51. It has been this Government's constant endeavour to foster the social, economic and educational empowerment of people belonging to the Adi Dravidar and Tribal communities. The innovative Land Purchase Scheme for Women belonging to the SC/ST communities will usher in a social revolution through asset empowerment. This Government had promised in 2001 that all the 493 Adi Dravidar Welfare Hostels functioning from rented premises will be provided with own buildings. This promise has been fulfilled and this Government has sanctioned the construction works at an outlay of Rs. 155 crores. This Government will open 108 more new hostels at an outlay of Rs. 4 crores. A major programme for the provision of basic infrastructure facilities such as approach road, drinking water supply, pathway to burial ground, street lighting etc., will be implemented in all Adi Dravidar habitations in a phased manner. To begin with, this Government is taking up the first phase of works at an outlay of Rs.71 crores.

52. This Government has always worked for protecting and furthering the interests of people belonging to the Backward Classes, Most Backward Classes, Denotified Communities and the Minorities. The Hon'ble Chief Minister had promised that new buildings will be constructed for all the 761 hostels functioning from rented buildings for students from these communities. I am happy to inform the Hon'ble Members that this Government has sanctioned the construction of 761 new hostel buildings at an outlay of Rs.235 crores.

53. Welfare of the weavers has always been a high priority for this Government. This Government will distribute free 1.64 crore sarees and 1.64 crore dhotis to 3.28 crore beneficiaries during Pongal this year at a total cost of Rs.256 crores. Apart from providing clothing security, this scheme continues to provide continuous employment to the weavers in the State. A new Health



Insurance Scheme for two lakh weavers is being taken up for implementation. The annual premium payment commitment to be borne by the weavers at Rs.200 per weaver per annum will be paid by this Government on their behalf at a total cost of Rs.4 crores.

54. Promotion of Tamil language, art and culture and preservation of the State's rich cultural heritage has received the due attention of the Government. Scientific Tamil has been introduced in all categories of schools from LKG to Class XII and students have been provided with textbooks on Scientific Tamil free of cost. The 'Annadhanam Scheme', the brainchild of the Hon'ble Chief Minister, has been a great success and has been hailed as a landmark intervention in securing nutrition security for the poor. This Government has evolved a new pension scheme whereby permanent employees of temples with sufficient income will receive a pension of not less than Rs.750 per month through the Employee Provident Fund Scheme. In respect of staff employed in temples with low income including those due to retire within the next ten years, a separate pension scheme is being taken up for implementation by setting up a Corpus Fund by pooling funds from surplus temples. These employees will also receive a pension of Rs.750 per month. An estimated 10,000 employees working in various temples in the State will benefit under the scheme.

55. This Government values the contribution of dedicated employees in realizing the development goals for the benefit of the people of Tamil Nadu. The enormity of the fiscal crisis that this Government had to contend with had made it difficult to make payment of each instalment of Dearness Allowance announced by the Government of India for its employees. With the strenuous effort undertaken, this Government has set right the financial position and ensured that the Dearness Allowance instalments are paid with progressively less time lag. This Government has decided to increase the Dearness Allowance for the State Government employees and pensioners from 67% of the Basic Pay to 71% with effect from 1st January 2006. This involves an additional cost of Rs.282 crores per annum. While ensuring that the Government employees have a better quality of life so as to serve the people better, it is also to be borne in mind that the benefits of proper fiscal management reach the poor. It is this fine balance that this Government has successfully achieved.

[2006 ஜனவரி 17

56. Hon'ble Members are well aware of the measures taken by this Government to promote clean, participatory, transparent and responsive governance in Tamil Nadu. I am also pleased to inform this House that the Government has notified the constitution of the State Information Commission and has also framed the relevant rules as required under the Right to Information Act, 2005.

57. I have outlined in detail the policies and programmes of this Government. The State has marched forward with its head held high with unequalled accomplishments in all the sectors. The inspiring leadership and caring governance of the Hon'ble Chief Minister deserves full appreciation. I conclude my address with the fervent hope that Tamil Nadu will continue to excel in all fronts in the future as well.

Vanakkam

Jai Hind



2006 ஜனவரி 17]

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

*2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது பன்னிரண்டாவது சட்டப் பேரவையின் நிறைவுக் கூட்டத் தொடர் ஆகும். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மாண்பமை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஆற்றியுள்ள அரும்பணிக்கு இத்தருணத்தில் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மக்கள் இவ்வரசின்மீது வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையை நிறைவு செய்ய, வெல்லுதற்கரிய சவால்கள் அனைத்தையும் முறியடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.*

*2. தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தை நாட்டிலுள்ள மாநிலங்களுள் முதன்மை மாநிலமாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைந்தார்கள். இந்நிலையை அடைவதற்கான செயல் திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டது. இன்று தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறி, பல துறைகளில் முதன்மை மாநிலமாகவே திகழ்கிறது. முதலீடுகளுக்கு உகந்த இடம், பொதுச் சேவைகள், சமூக நலத் துறைகள், சட்டம்-ஒழுங்குப் பராமரிப்பு போன்ற அனைத்துக் கூறுகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக இருப்பதாகப் பெரும்பான்மையான நடுநிலை ஆய்வுகள் மதிப்பீடு செய்துள்ளதில் இச்சாதனை பிரதிபலிக்கப்படுகிறது.*

*3. கடந்த 2005 ஆம் ஆண்டு பெய்த அதிகப்படியான மழை, மாநிலத்தின் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து, உழவர்களுக்கு அடுத்த பருவ காலத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளபோதிலும், அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை தமிழகம் தொடர் மழை மற்றும் வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இதனால் பல முறை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் உயிர்ச் சேதமும், பயிர்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகளுக்குப் பெருமளவில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளன. வெள்ளம் பாதித்த 22 மாவட்டங்களிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வெள்ளத்தின் பாதிப்பை*

மதிப்பீடு செய்யவும், நிவாரண மற்றும் சீரமைப்புப் பணிகளை முடுக்கிவிடவும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே பல முறை நேரில் சென்று பார்வையிட்டார். இவ்வெள்ள நிலையைச் சமாளிப்பதற்காக அரசு நிருவாகம் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு, தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருந்துகள் ஆகியன வழங்கப்பட்டன. விரிவான வெள்ள நிவாரணத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின்கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. மத்திய அரசிடமிருந்து உதவி கோரி, 2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள், ஒரு விரிவான கோரிக்கை மனு முதற்கண் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் மேலும் இரண்டு கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன. நிவாரணம், சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, மொத்தம் ரூபாய் 13,685 கோடி நிதியுதவி, 2.58 இலட்சம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை இவ்வரசு கோரியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, சேதத்தின் அளவு, மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் மாநிலத்திற்குத் தேவைப்படும் உதவி ஆகியன குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இவ்வுறுதியான வேண்டுகோளையடுத்து, மத்திய அரசு இதுவரை நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 1,000 கோடி நிதியுதவியும், மற்றும் 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் அளித்துள்ளது.

5. பல முறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையும், நீர் சூழ்ந்ததையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டோர் அனைவரையும் சென்றடையும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் தாராளமான நிவாரணத் திட்டத்தை இவ்வரசு அறிவித்துச் செயல்படுத்தியது. இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு உதவும் வகையில், மாபெரும் அளவில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 2,000 ரொக்கமும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 1,000 ரொக்கமும், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், சேலை மற்றும்



வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 2,000 ரொக்கம், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், சேலை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்ட தெருக்களையும், பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட வார்டுகள் மற்றும் குடியிருப்புகளையும் கண்டறிவதற்காகப் பின்பற்றப்பட்ட எளிமையான முறை, வீடுதோறும் சென்று கணக்கெடுக்கும் முறையில் வழக்கமாக ஏற்படும் சிக்கல்களைப் பெரிதும் குறைத்தது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் விரைவில் வழங்கப்பட இம்முறை உதவியுள்ளது.

6. வெள்ள நிவாரணத்திற்காகவும், புனரமைப்புப் பணிகளுக்காகவும், மொத்தம் ரூபாய் 1,079 கோடியை இவ்வரசு ஒதுக்கியுள்ளது. உடனடி நிவாரண உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 566 கோடியும் இதில் அடங்கும். தமிழ்நாட்டில் இதுவரையில் இந்நிவாரண உதவி 31 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் மட்டுமே, 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசின் நிதி உதவியைப் பெற்றுள்ளன. இத்தகைய பெரும் அளவிலான நிவாரண நடவடிக்கைகள், இதுவரை எப்போதுமே மேற்கொள்ளப்பட்டதில்லை. பாதிக்கப்பட்ட சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், ஏரிகள், பாசனத் திட்டங்கள் மற்றும் கட்டடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளைச் செப்பனிடவும், சீரமைக்கவும் ரூபாய் 513 கோடி ஒதுக்கீட்டில் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், நிரந்தரச் சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கும் மத்திய அரசு மேலும் நிதியை ஒதுக்குமென இவ்வரசு நம்புகிறது. மாண்புமிகு முதல்வரின் வேண்டுகோளை ஏற்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதியுதவி வழங்கிய, நல்லெண்ணம் கொண்ட நிறுவனங்கள் மற்றும் பொது நலத்தில் அக்கறை கொண்ட குடிமக்கள் ஆகியோருக்கு இத்தருணத்தில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. பேரழிவுச் சுனாமிப் பேரலைகள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி பெரும் உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்வை நிலைகுலையச் செய்த துயர நிகழ்வு ஏற்பட்டு ஓராண்டு ஆகிறது. மாண்புமிகு தமிழக

முதல்வர் அவர்களின் தெளிவான அணுகுமுறை மற்றும் சீரிய கொள்கை வழிநடத்துதலினால் இவ்வரசு, தேடுதல், காப்பாற்றுதல், உடல்களைப் புதைத்தல்/எரித்தல் மற்றும் உடனடி உதவிகள் ஆகிய முதல் கட்டப் பணிகளை மிகக் குறுகிய காலத்திலேயே செம்மையாகச் செய்து முடித்து, உலகளாவிய பாராட்டைப் பெற்றது. ஏற்கெனவே கருத்தடை அறுவை செய்திருந்து, இச்சுனாமிப் பேரழிவின்போது தமது குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்மார்கள் மீண்டும் கருத்தரிப்பதற்கான அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு ஆகும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்ற முடிவு, அக்கறை கொண்ட இவ்வரசின் கருணை உள்ளத்தைப் புலப்படுத்துகிறது. தற்போது நீண்ட கால மறு சீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு சுனாமி நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 812 கோடியை மட்டுமே அளித்துள்ளபோதிலும், இவ்வரசு நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 1,136 கோடியை அனுமதித்துள்ளது. இத்துடன், இவ்வரசு பல்வகை பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலச் சீரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 2,618 கோடி அளவிற்கு நிதியுதவியைப் பெற்றுள்ளது. இவ்வுதவியில், உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபாய் 1,903.50 கோடி முழுவதும் கடனாகவும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூபாய் 304 கோடி கடனாகவும், ரூபாய் 343 கோடி மானியமாகவும் பெறப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மை வளர்ச்சிக்கான சர்வதேச நிதியிலிருந்து ரூபாய் 67.50 கோடி கடனாகப் பெறப்பட்டுள்ளது. இக்கடன்கள் முழுவதும் மாநில அரசாலேயே திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ், இவ்வரசு ஏற்கெனவே ரூபாய் 832 கோடி நிதியை சீரமைப்புப் பணிகளுக்கும், வாழ்வாதார உதவிகளுக்கும் அனுமதித்துள்ளது.

8. தீர்க்கமான குறிக்கோளுடனும், உறுதியுடனும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்ட முறை, தமிழகத்திற்கு சர்வதேச அளவில் பெரும் புகழை ஈட்டித் தந்துள்ளது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த, ஆதாய நோக்கில்லாத சர்வதேச அமைப்பான ஃபிரிட்ஸ் நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வு, தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின்போது மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இவ்வரசின் சிறப்பான பங்கினைப் பெரிதும் பாராட்டியுள்ளது.





9. சட்டம்-ஒழுங்கைச் சீரிய முறையில் பேணிப் பாதுகாப்பு
இவ்வரசு அளித்த முக்கியத்துவமானது, தமிழகத்தை ஒரு அமை
பூங்காவாக மாற்றியுள்ளது. சட்டம்-ஒழுங்கில் விழிப்ப
கண்காணிப்பு, உறுதியான நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அ
துறைகளின் தொடர் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணை
அணுகுமுறை ஆகியவற்றால் தீவிரவாதம் முற்றி
ஒழிக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக, சட்டத்தி
புறம்பாகச் செயல்பட்டு, அரசுக்கு மாபெரும் சவாலாக இருந்து
காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்தியது இவ்வரசின்
பெரும் சாதனையாகும். அண்டை மாநிலங்களான ஆந்திரம் ம
கர்நாடகம் ஆகியவற்றை அடுத்துள்ள எல்லை மாவட்டங்க
நக்சலைட்டுகளின் அச்சுறுத்தல் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுள்

10. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் மீண்டும் சட்டத்தின்
நிலைநாட்டப்பட்டதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவ
காட்டிய திட நோக்கும், உறுதியுமே காரணமாகும் என்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். இ
தமிழகக் காவல் துறை நமது நாட்டிலேயே மிகச் சிறப்பாக சட்ட
ஒழுங்கைப் பராமரிக்கும் அமைப்பாக மாறியுள்ளது. தமிழகக் க
துறையை நவீனப்படுத்துவதற்காக, ரூபாய் 479 கோடி ஒதுக்கீ
விரிவான திட்டம் வகுக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு
செயல்படுத்தப்பட்டு வருகிறது. துரிதமான புலனாய்
வழிவகுக்கும் வகையில் நவீன தொலைத் தொடர்பு சாதன
ஊர்திகள், ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் அனைத்து வசதி
காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல் துறைய
நவீனப்படுத்துவதில் தமிழக முதலமைச்சர் காட்டிய தாராள ஆத
பயனாக, 2001 இல் 71 சதவீதமாக இருந்த குற்றக் கண்டுபி
வீதம், 2005 ஆம் ஆண்டில் 86 சதவீதமாக உயர்ந்துள்ளது.
துறையின் பல்வேறு பதவி நிலைகளைச் சேர்ந்த காவலர்களு
2001 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 416 கோடி செலவில் 10,000 வீ
கட்டப்படுவதன் காரணமாக, நாட்டிலேயே தமிழகக் க
துறையினர் வீட்டு வசதி குறித்து அதிகமான மன நிறை
அடைந்துள்ளனர். வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பாதுக
தேவைகளை நிறைவேற்றுவதற்காக சென்னைப் பெருநகரக்
துறை ஆணையரகம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது.
அளவில் பெண்கள் காவல் துறையில் பணியமர்த்தப்பட்டுள்
196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்

தேசிய அளவில் தமிழகக் காவல் துறையின் பாலின நேர்மை உணர்வை மேலும் உயர்த்தியுள்ளது.

11. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைச்சாலைத் துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, முறையே ரூபாய் 2.5 கோடி மற்றும் ரூபாய் 48 கோடி செலவில் இவ்வரசினால் செயல்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் திட்டங்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளன. தமிழகத்தில் தொடங்கப்பட்ட தொலை நீதிமுறைத் திட்டம், சிறைகள் மற்றும் நீதிமன்றங்களை மின்னணு முறையின்மூலம் இணைத்து விசாரணை செய்ய உதவும் வீடியோ கலந்தாய்வுத் திட்டங்களில், இந்தியாவிலேயே மிகப் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை அருகே உள்ள புழலில் அமைக்கப்பட்டு வரும் ரூபாய் 77 கோடி செலவிலான நாட்டிலேயே அதிநவீன சிறைச்சாலை வளாகம் விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது.

12. பொருளாதார வளர்ச்சி குறித்த பெரும் ஐயப்பாடுகள், அச்சுறுத்தும் நிதிநிலைச் சீர்கேடு மற்றும் முடங்கிய நிருவாகம் ஆகியவற்றோடு தமிழகம் இந்தப் புத்தாயிரமாண்டை எதிர்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். ஐந்தாண்டுகளுக்கும் குறைவான இக்குறுகிய காலகட்டத்தில் நமது மாநிலம் மிகச் சீரிய திருப்புமுனையை அடைந்துள்ளது. பொருளாதாரத்தின் முக்கியத் துறைகள் மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்லத் துவங்கியுள்ளன. சுனாமியால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் வரலாறு காணாத வெள்ளத்தால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தும் 2005–2006 ஆம் ஆண்டில், தமிழகம் 8 சதவீதத்திற்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எய்தும் என முதல்கட்ட மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குப் பாய்ந்து வரும் புதிய முதலீடுகளே மாநிலத்தின் பொருளாதார ஏற்றத்திற்குத் தக்க சான்றாகும்.

13. மாநிலத்தின் பொருளாதாரச் சீர்திருத்தத்தையும், வளர்ச்சித் தேவைகளையும் ஒருங்கிணைத்து, இவ்வரசு மாநிலத்தை நடத்திச் சென்ற பாங்கு தனிச் சிறப்பிற்குரியதாகும். இதன் விளைவாக, புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளை, இலக்காண்டான 2015-க்கு வெகு முன்னரே நமது மாநிலம் எய்த உள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த தமிழகத்தின் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீடு, 7.5 சதவீத அளவிற்கு உயர்ந்து, 2005–2006 ஆம்



ஆண்டில் ரூபாய் 9,100 கோடியை எட்டியுள்ளது. மேலும் 2002–2007 ஆண்டுகளுக்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியையும் இவ்வரசு விஞ்சவுள்ளது. பொதுக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்கான மாநிலத்தின் மூலதனச் செலவிற்கான ஒதுக்கீடு, 2001–2002 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 1,778 கோடியிலிருந்து, ஏறக்குறைய மும்மடங்கு உயர்ந்து தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 4,792 கோடியை எட்டியுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 182 கோடியாக இருந்த ஏற்கெனவே அமைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 754 கோடியாக உயர்ந்துள்ளது.

14. தமிழகத்தின் இத்தகைய வளர்ச்சி மற்றும் சீர்திருத்தச் சாதனைகள், சர்வதேச நிதி நிறுவனங்களை மீண்டும் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவிடத் தூண்டியுள்ளன. தமிழகத்தில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மதிப்பு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 8,550 கோடி (1.90 பில்லியன் அமெரிக்க டாலர்) என்ற சாதனை அளவை எட்டியுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவற்றுள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (ரூ.2,160 கோடி), தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.597 கோடி), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III (ரூ.1,957 கோடி), புது வாழ்வுத் திட்டம் (ரூ.717 கோடி) மற்றும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (ரூ.567 கோடி) ஆகியன தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை எளிய மக்களை எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் சீர்திருத்தத் திட்டங்களை இக்குறுகிய காலத்தில் மேற்கொண்டு, மாநிலத்தை மீண்டும் நிலைநிறுத்தியமைக்கான முழுப் பெருமையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சேரும்.

15. விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முன்னோடித் திட்டமாக, மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு துவக்கியுள்ளது. இத்திட்டம் தனது குறிப்பிடத்தக்க விரிவான அமைப்பிற்கும், நல்கும் பயனிற்கும் மிகப் பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது. புரட்சிகரமான இத்திட்டம், தமிழ்நாட்டிலுள்ள 1.37 கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு மற்றும் குறு உழவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அவர்களின் துயர்

நீக்கிப் பாதுகாப்பளிப்பதாக அமைந்துள்ளது. இத்திட்டம், உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் திருமணம், மகப்பேறு மற்றும் தரமான கல்வி ஆகியவற்றிற்கும், உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்திற்கும், மரணம் மற்றும் எதிர்பாராச் செயலிழப்பு ஆகிய நேர்வுகளிலும் அரசு உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

16. ஊரகப் பகுதிகளில் வருவாய் மற்றும் வளவாய்ப்புகளின் பெருக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த தடைகளைத் தகர்த்தெறிந்து, வேளாண்மைத் துறையின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி வந்த சவால்களை வெற்றி காண்பதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துதல், வேளாண்மையில் மதிப்புக் கூட்டுதல், திறம்பட்ட நீர்ப் பயன்பாடு, துல்லிய பண்ணையியல் நடைமுறை, தரிசு நில மீட்பு மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு, சீரமைக்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருவது, வேளாண்மைத் துறையை தொடர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வழிவகுத்துள்ளது.

17. தமிழகத்தின் வேளாண் பொருளாதாரத்திற்கு விரைந்து புத்துயிரூட்டி, வலுப்படுத்த இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. தொடர்ந்து நிலவிய வறட்சி நிலைகளும், வரலாறு காணாத 2005 ஆம் ஆண்டு வெள்ளப் பாதிப்புகளும், ஒருங்கிணைந்த நீர் வள நிருவாகத்தில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. வறட்சி மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கு இழப்பீடு வழங்கியது தவிர, 2000 ஆம் ஆண்டு கரிப் (kharif) பருவம் முதல் 2004–2005 ஆம் ஆண்டு ரபி (Rabi) பருவம் வரை பயிர்க் காப்பீட்டுத் தொகையாக ரூபாய் 98 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு போன்ற நீர் . வளம் குன்றிய மாநிலங்களின் துயர் அகற்ற ஆறுகளின் இணைப்பே சரியான தீர்வாக அமையும். ரூபாய் 3,900 கோடி செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, உலக வங்கி உதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் மற்றும் நீர் வள நிருவாகத் திட்டம், மாநிலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்திட்டத்தை வடிவமைக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

18. ஆந்திரப் பிரதேச மாநில அரசு, பாலாற்றின் குறுக்கே 2,000 மில்லியன் கன அடி (2 டி.எம். கன அடி) உயர் கொள்ளளவு





கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்ட உத்தேசித்திருப்பதாக வெளியாகியுள்ள ஊடகச் செய்திகள் இவ்வரசுக்கு மிகுந்த கவலையை அளிக்கின்றன. இது தமிழ்நாட்டில் பெரும் அச்சத்தையும், ஐயப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த குப்பம் பகுதியில், பாலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான எந்தவொரு திட்டப் பணியையும் மேற்கொள்ளக் கூடாது என மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வரை உடனடியாக வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஏக்கர் பாசனப் பகுதிகளில் வேளாண்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் விவசாயிகள் தங்கள் பாசனத்திற்கு இந்தப் பாலாற்றையே நம்பி இருப்பதாலும், பல நகர்ப் பகுதிகள் மற்றும் கிராமங்களுக்கு இந்நதி ஒன்றே முக்கியக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்வதாலும், பாலாற்றின் நீரைத் தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

19. விவசாயம் சாராத் துறை புத்துயிர் பெறவும் ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ஊக்கம் அளிக்கும் வகையில், இவ்வரசு மேற்கொண்ட முன்னோடித் திட்டமாகிய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நல்ல பயனளித்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 210 வட்டாரங்களில், ரூபாய் 212 கோடி முதலீட்டில் மொத்தம் 330 நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 82 வட்டாரங்களில், ரூபாய் 128 கோடி முதலீட்டில் 227 நிறுவனங்கள் செயல்படத் துவங்குவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன. இவை விரைவில் செயல்படத் துவங்கும்.

20. விவசாயிகளின் நலன் கருதி அவர்களது வேளாண்மை வருவாய் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இவ்வரசு அயராவின்றி நல்கி வருகிறது. கரும்பு பயிரிடுவோருக்கு 9 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான பிழிதிறன் கொண்ட கரும்புக்கு, மெட்ரிக் டன் ஒன்றிற்கு முன்னெப்போதுமிருந்திராத உயரளவாக, ரூபாய் 1,014–ஐ அரசின் குறைந்தபட்சப் பரிந்துரை விலையாக (State Advised Price) நிர்ணயித்ததோடு, 9 சதவீதத்திற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும், மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூபாய் 8.80 ஊக்கத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள். ரூபாய் 28 கோடி செலவிலான, இவ்வரசின் சிறு தேயிலை

பயிரிடுவோர் பாதுகாப்புத் திட்டம், பன்னாட்டளவிலும், உள்நாட்டிலும் ஏற்பட்ட விலைச் சரிவினால் வாடும் நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை பயிரிடுவோருக்குப் பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

21. விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் வண்ணம் திட்டங்களைச் செயல்படுத்தி, விவசாயக் கூட்டுறவுக் கடன்களைச் சீரமைத்த இவ்வரசின் சாதனை என்றென்றும் நினைவில் கொள்ளப்படும். 31-3-2004 அன்றுள்ளபடி, கூட்டுறவு வங்கிகளிடமிருந்து விவசாயிகள் பெற்ற ரூபாய் 2,598 கோடி அளவிலான பயிர்க் கடன்கள், முதல் 2 ஆண்டு காலத்திற்குக் கடன் அசலைத் திருப்பிச் செலுத்துவது நிறுத்தி வைக்கப்பட்ட 5 ஆண்டு காலக் கடன்களாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கடன்களுக்கு, 2006 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை உள்ள வட்டியைத் தள்ளுபடி செய்து ஒரு பெரும் வட்டித் தள்ளுபடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் ரூபாய் 645 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை அரசே திருப்பித் தருவதன்மூலம், கூட்டுறவு நிதி நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

22. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்வது, மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், இவ்வரசின் முக்கியக் குறிக்கோளாகவும் இருந்து வருகிறது. காடு வளர்ப்புத் திட்டங்கள் திறம்படச் செயல்படுத்தப்பட்டமையால், 2001 ஆம் ஆண்டிலிருந்து தென் மாநிலங்களிலேயே மிக அதிகமான அளவில், தமிழ்நாட்டில் வனப் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. துறையின் களப் பணியாளர்களுக்குக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பளித்தும், அனைத்துச் சரக அலுவலர்களுக்கும் (Territorial Rangers) வாகனங்களை வழங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் காடுகளைப் பாதுகாப்பதில் வனத் துறையின் திறனுக்கு அரண் சேர்த்துள்ளார்.

23. ஊரக விவசாயக் குடும்பங்களுக்குத் துணை வருவாயினை அளிக்கும் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீனளம் ஆகியவை முன் எப்போதுமிருந்திராத அளவிற்கு அரசின் உத்வேகத்தைப் பெற்றுள்ளன. அரசின் தீவிர நடவடிக்கைகளின் வாயிலாக, செயற்கை முறை கருத்தரித்தல்மூலம் கால்நடைகளின்



மரபணுத் தன்மை மேம்படுத்தப்பட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியில் நாட்டில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. தொலைதூரப் பகுதிகளில் கால்நடை மருத்துவ வசதிகளை வழங்கிட, சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூபாய் 10 கோடி செலவில் 24,051 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மொத்தம் 234 கால்நடை சுகாதார துணை மையங்கள் முழு வசதியுடன்கூடிய கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

24. கச்சத் தீவைச் சுற்றியுள்ள பாக் ஜலசந்தியில், தமிழ்நாட்டு மீனவர்களுக்கெதிராகத் தொடர்ந்து நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் இந்த அரசுக்கு ஆழ்ந்த கவலை அளிக்கின்றன. கச்சத் தீவுப் பகுதியில் இயல்பான மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதுகாக்க, இந்திய அரசு அத்தீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் பெறவேண்டுமெனக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

25. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயர் நீக்கும் வகையில், சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளைப் பழுதுபார்ப்பதற்கும், முற்றிலும் சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்குப் பதிலாக புதியனவற்றை வாங்கவும், இவ்வரசு ரூபாய் 146 கோடி இடருதவி வழங்கியுள்ளது. மீனளத் துறையில் தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்காக ரூபாய் 103 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 108 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ், 10.36 இலட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மத்திய அரசு பெட்ரோலியப் பொருட்களின் விலையைப் பல முறை உயர்த்தியதிலிருந்து மீனவர்களைப் பாதுகாக்கும் வகையில், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 63 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாது, இவ்வரசு மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் வாங்கும் டீசலுக்கு 100 சதவீதம் விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது.

26. நம்முடைய வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளில் ஆற்றலளித்தல் (empowerment) மிக முக்கியக் கருவியாக விளங்கும் அதே வேளையில், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின்

[2006 ஜனவரி 17

வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் எப்போதும் வாதிட்டு வந்துள்ளார். தமிழ்நாட்டில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க இரு வறுமைக் குறைப்புத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. முதலாவதாக ரூபாய் 717 கோடி செலவில், 15 மாவட்டங்களில் புது வாழ்வுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அடுத்தது, மிக வறியவர்கள் தங்களுடைய வறுமை நிலையிலிருந்து மீளும் வகையில் அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி, சமூக மூலதனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், வறியவர்களிலும் மிக வறிய 3 இலட்சம் குடும்பங்களுக்குப் பயனளிக்கும், மிக வறியோருக்கான வறுமைக் குறைப்புத் திட்டமாகும்.

27. தமிழக மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற இவ்வரசின் உறுதிப்பாட்டின் தொடர்ச்சியாக, பயனுள்ள உணவுப் பாதுகாப்பு வளையத்தை அமைக்கும்வண்ணம், பொது விினியோக முறையைத் திருத்தியமைத்துச் சிரமைக்கும் மாபெரும் பணியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், குடும்ப அட்டை பெறுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார். பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் தகுதியுள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் புதிய குடும்ப அட்டைகளை வழங்குதல் ஆகியவற்றால், மொத்தக் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 1.88 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் பொது விினியோக முறை நாட்டிலேயே மிகச் சிறந்ததென நடுநிலையான நிறுவனம் ஒன்று கணித்துள்ளது.

28. தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த ஒரு மாநிலத்திலும், அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற குறைந்த விலையில், தேவைப்படும் அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படுவதில்லை. இத்திட்டம், ஆண்டொன்றுக்கு மானிய வகையில் ரூபாய் 1,200 கோடி அளவிற்கு அரசுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறிருக்க, மத்திய அரசு, பொது விினியோக முறையின்மூலம் வறுமைக் கோட்டிற்கு மேல் இருப்போர்க்கு வழங்கப்படும் அரிசியின் மத்திய இடு விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 லிருந்து ரூ.9.15 ஆக உயர்த்தியிருப்பது இவ்வரசுக்குக் கடும் அதிருப்தி அளித்துள்ளது. மேலும், அனைத்து இனங்களிலும் குடும்ப அட்டை ஒன்றுக்கான ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. இம்முடிவால், மத்தியத்



2006 ஜனவரி 17]

தொகுப்பிலிருந்து மாநில அரசால் வாங்கப்படும் அதிக விலையுடைய வறுமைக் கோட்டிற்கு மேலிருப்போர்க்கான அரிசியின் அளவும் அதிகரிக்கும். இது மாநிலத்திற்கு மிகப் பெரும் கூடுதல் மானியச் சுமையை ஏற்படுத்தும். இவ்வாறு அரிசியின் விலை மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கும்போதிலும், மாநிலத்தில் அரிசியின் விலை தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே இருக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். ஏழை, எளியவரைப் பாதுகாப்பதற்காக இவ்வரசு மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கைகளின் விளைவாக ஆண்டுதோறும் ஏற்படும் ரூபாய் 300 கோடி கூடுதல் உணவு மானியச் சுமையால், ஓராண்டிற்கான மொத்த உணவு மானியம் ரூபாய் 1,200 கோடியிலிருந்து ரூபாய் 1,500 கோடியாக உயரும்.

29. ரூபாய் 250 கோடி செலவில், அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படை வசதித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பன்னோக்குத் திட்டம், மாநிலம் முழுவதும் குடிநீர் வழங்கல், வெள்ள நீர் வடிகால் அமைத்தல், பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களைப் பழுதுபார்த்தல், தெருக்கள், நடைபாதைகள், அணுகுசாலைகள், இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகள் ஆகியவற்றை அமைத்தல் போன்ற பணிகளைச் செயற்படுத்துவதில் மாவட்ட நிருவாகத்திற்குத் தேவையான நிதியை அளித்து, அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும்.

30. ஊரக ஏழை மக்களுக்கு வீட்டு வசதிப் பாதுகாப்பு அளிப்பது, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இவ்வரசின் உயர் முன்னுரிமையைப் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளிலும் சிறப்பு கிராம ஊராட்சிகளிலும் 1991–க்கு முன்னர் கட்டப்பட்ட சுமார் 65,000 ஓட்டு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1.5 இலட்சம் கூரை வீடுகளை நிரந்தர வீடுகளாக நிலை உயர்த்துவதற்காக, ரூபாய் 37.50 கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

31. அனைவரும் பாராட்டும் "நமது கிராமம்" திட்டம், இம்மாநிலத்தில் ஒரு சமூக இயக்கமாக உருவெடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 100 சதவீத அளவிற்குக்

குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல், வறுமைக் குறைப்பு, சிசு இறப்பைக் குறைத்தல், பெண் கருக்கொலை மற்றும் சிசுக்கொலையை ஒழித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கிராமச் சுகாதாரம் ஆகியவற்றை எய்துவதில், இப்புரட்சிகரமான திட்டம் அனைத்துக் கிராம ஊராட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கியுள்ளது.

32. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. 18,951 ஊரகக் குடியிருப்புகளிலும், 150 நகரங்களிலும் வசிக்கும் 1.5 கோடி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 2,423 கோடி செலவில் 2001–2006 ஆண்டுகளில், மொத்தம் 318 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 223 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், இவற்றின்மூலமாக 10,043 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 91 நகர்ப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். மொத்தம் 22,069 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 993 கோடி செலவில் தனி விசையேற்றங்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 239 கோடி செலவில் 39,796 கைப்பம்புகள் சிறிய விசையேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வரசின் அயராத திட்டமிட்ட தொடர் நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் மிகவும் மேம்பட்டுள்ளது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும்.

33. வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிவறைகள் கட்டியதன்மூலம், 2001 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த ஊரகச் சுகாதார நிலை, 2005 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக அதிகரித்து, தமிழ்நாடு கிராமப்புறச் சுகாதாரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் ரூபாய் 278 கோடி செலவில் மகளிருக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளது மன நிறைவு அளிக்கிறது. இவை மேலும் திறனுடன் செயல்படும் வகையில், இவற்றிற்கு தற்போது கரிம வாயுக் கலன்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

34. ரூபாய் 1,957 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்–III இவ்வரசின் மேலும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இத்திட்டத்தின்கீழ், 24 மாவட்டத்



தலைமையிடங்களிலும், 13 மற்ற நகரங்களிலும் முழு அளவில் பாதாளச் சாக்கடை வசதிகள் ஏற்படுத்தப்படும். இது தவிர, சென்னைப் பெருநகர்ப் பகுதியில் இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள் (grade separators) ஆகியவை அமைக்கப்பட்டு சாலைக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும். சென்னைப் பெருநகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் திறம்படக் கையாளப்படுவதை இத்திட்டம் உறுதி செய்யும்.

35. ஏழைகளின் நலனுக்காகவே செயல்படும் இவ்வரசு, நகர்ப்புற ஏழை, எளியவர் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு மிக உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய வீட்டு வசதிகளை அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதுவரை, ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 30,000 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2010 ஆண்டுகளில் ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் நகர்ப்புறக் குடிசைப் பகுதி வீட்டு வசதி மேம்பாட்டிற்கான செயல் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

36. மாநிலம் முழுவதும் சாலை இணைப்பு வசதிகளை மேம்படுத்த, இவ்வரசு மிகப் பெரும் ஊக்கம் அளித்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 257 கோடியாக இருந்த மூலதனச் செலவு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 2,081 கோடியாக ஏறக்குறைய 8 மடங்கு உயர்ந்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 400 கோடி செலவில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நிலையுயர்த்தப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்புக் கிராம ஊராட்சிகளில் சாலைகளைப் புதுப்பிக்கும் சிறப்புத் திட்டம் ரூபாய் 100 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை தவிர, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 401 கோடி மதிப்பீட்டில் நகராட்சிப் பகுதிகளிலுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைக்கும் பணிகளை, இவ்வரசு போர்க் கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. முக்கிய அடிப்படைக் கட்டமைப்பு வசதியான சாலை இணைப்புகளுக்காக, இதுவரை எந்த ஒரு அரசும் இவ்வளவு அதிக அளவில் முதலீடு செய்ததில்லை. இம்முதலீடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயர வழிவகுக்கும்.

37. மத்திய அரசு டீசல் விலையைப் பல முறை பெருமளவில் உயர்த்திய சூழ்நிலையிலும், அரசுப் பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளை நவீனப்படுத்தி, அரசுப் போக்குவரத்து நிறுவனத்

தொழிலாளர்களுக்குத் தாராளச் சம்பள உயர்வையும் வழங்கி, அதே நேரத்தில் பேருந்துக் கட்டண வீதத்தை நாட்டிலேயே மிகக் குறைவான அளவில் தொடர்ந்து வருவதற்கான பெருமை இந்த அரசையே சாரும். மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களின் சிறந்த பணிகளுக்காக மூன்று விருதுகளையும் பெற்றுள்ளன.

38. இவ்வரசு 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ரூபாய் 5,000 கோடி வருவாய் இழப்புடன் மோசமான நிதி நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த தமிழ்நாடு மின்சார வாரியம், மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் சீரான நிதி நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு வழங்கப்படும் நிலக்கரியின் அளவை 14 சதவீத அளவிற்குக் குறைத்தபோதிலும், 2001 ஆம் ஆண்டு முதல் இவ்வாரியம் மின் வெட்டு எதுவும் இன்றி நுகர்வோர் அனைவருக்கும் தரமான மின்சாரம் வழங்கி வருகிறது என்பதிலும், வருமாண்டுகளிலும் மின் வெட்டின்றி இதே நிலை தொடரும் என்பதிலும் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். 2005–2010 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதை உறுதி செய்ய, இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 4,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட திட்டங்களுக்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்டத்தில், 1,000 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் நிறுவ உள்ளது. இது மாநிலத்தின் மொத்தப் புதிய மின் உற்பத்தித் திறன் அதிகரிப்பை, 5,000 மெகாவாட்டாக உயர்த்தும். இவ்வரசு தேவையான நடவடிக்கைகள் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வருவதால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்தக் காற்றாலைச் சக்தித் திறனில், 58 சதவீத அளவான 2,433 மெகாவாட் திறன் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு இத்துறையில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

39. சென்னை நகரத்தின் உள்கட்டமைப்பு, புறச்சூழல் மற்றும் வசதிகள்மீது இவ்வரசு காட்டிய அக்கறையின் காரணமாக, இன்று சென்னை மாநகரம் "கிழக்கின் அணிகலன்" ஆகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள்.





ரூபாய் 18,000 கோடி ஒதுக்கீட்டுடன் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் பத்தாண்டு கால சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம், மின் வழங்கல், குடிநீர் மற்றும் வடிகால் வசதி, போக்குவரத்து மேலாண்மை மற்றும் பயண வசதிகள், வீட்டு வசதி போன்ற துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பித்து நிலை உயர்த்துவதில் மிகச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. சென்னை மாநகரில் பூங்காக்களையும், நடை பாதைகளையும் ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முயற்சி இம்மாநகரின் அழகிற்கு மெருகூட்டியுள்ளது. சென்னை மாநகரில் நெடுநாட்களாக நிலவி வந்த குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பெருமை மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழான இவ்வரசையே சேரும். குறுகிய கால அளவில் அமைத்து சாதனை படைக்கப்பட்ட, நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய வீராணம் திட்டமானது, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதில் சீரான நிலையைக் கொண்டு வந்துள்ளது. அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை மாநகர மக்களுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் உடன் நிறைவேற்றப்பட, சுற்றுப்புறச் சூழல் அனுமதியை உடனடியாக வழங்குமாறு இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது. சென்னை மாநகருக்கு நிச்சயமான குடிநீர் வழங்கலை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளைச் சென்னை மாநகர மக்கள் என்றென்றும் நினைவில் கொள்வர்.

40. சென்னையின் போக்குவரத்து மேலாண்மைக்கு முற்றிலும் புதுமையான தீர்வுகள் தேவை என்பதை உணர்ந்த இவ்வரசு, சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் மிக அதிகப் போக்குவரத்துச் செறிவு மிகுந்த, 300 கிலோ மீட்டர் நீள அளவிலான வழிப் பாதைகளில், மோனோ இரயில் திட்டத்தை, பொதுத் துறை–தனியார் துறை பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இந்தத் திருப்புமுனையான முன் முயற்சி, சென்னைப் பெருநகரில் பயணம் செய்வதை ஓர் மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றும் என நான் நம்புகிறேன்.

41. மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு கொண்ட, 'புதிய தொழில் கொள்கை–2003', தமிழ்நாடு தொழில் துறையில் தனக்குள்ள அடிப்படைத் திறன்களை மேலும் வலுப்படுத்தி,

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய மிகவும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக உருவெடுப்பதற்குப் பெரிதும் உதவியுள்ளது. தமிழ்நாடு, 2005–2006 ஆம் ஆண்டில் "வருங்கால ஆசியாவின் சாதனையாளர்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஃபைனான்சியல் டைம்ஸ் நாளிதழின் ஓர் அங்கமான "எஃப்டிஐ" பத்திரிகையால் (fDi magazine) "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திறன்கொண்ட மிகச் சிறந்த இடமாகத்" தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இந்திய மாநிலங்களிடையே, பொருளாதார சுதந்திரக் குறியீடு 2005-ன் அடிப்படையில், மிக எளிதில் தொழில் புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்கு ஏற்ற இடங்களில், தமிழ்நாட்டை முதன்மை நிலைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த தளர்வில்லாத முயற்சிகளே காரணம் என்பதற்கு, நோக்கியா, ஃபிளெக்ஸ்டிரானிக்ஸ், பிஎம்டபிள்யூ போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முடிவு செய்திருப்பதே தக்க சான்றாகும்.

42. சேவைத் துறையில், குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளில், தமிழ்நாடு பெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்துள்ள முனைப்பான நடவடிக்கைகள் நற்பலனை அளித்துள்ளன. மின்–ஆளுமைக்கான ஆயத்த நிலையில், தமிழகம் முன்னிலை வகிப்பதாக நடுநிலை ஆய்வாளர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் மட்டும், தமிழ்நாட்டில் புதிதாக மொத்தம் 400 தகவல்–தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, தமிழ்நாட்டில் நாள்தோறும் குறைந்தது ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்து ரூபாய் 10,730 கோடி அளவை எட்டியுள்ளது. இது சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் மெச்சத்தக்கதான 40 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. நிருவாகத் திறனை மேம்படுத்துவதற்கும், தரமான சேவையை வழங்குவதற்கும் தேவையான மின்–ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்பத்திற்கு இந்த அரசு முனைப்பான ஊக்கம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மாநில அளவிலான பரப்பு வலை அமைப்பின் (TNSWAN) மூலம், வட்டம்





மற்றும் வட்டார அளவில் தகவல் பரிமாற்றத்திற்கு வகை செய்யும் பரந்த அலை இணைய வசதிகளை வழங்கும் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம ஊராட்சிகள் அனைத்தையும் கணினிமயமாக்கும் அரசின் இந்த முயற்சி, ஊரகப் பகுதிகளில் அறிவாற்றலையும், வளவாய்ப்புகளையும் விரிவுபடுத்துவதற்கு ஏற்றதொரு தூண்டு விசையாக அமையும்.

43. சேவைத் துறையை மேம்படுத்துவதிலும், உள்ளூர் வேலைவாய்ப்பைப் பெருக்குவதிலும், அதிக வாய்ப்புகள் உள்ள சுற்றுலாத் துறையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள ஒருங்கிணைந்த முயற்சிகள், இந்தியாவில் விடுமுறையைக் கழிப்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாகத் தமிழ்நாடு உருவாகத் துணை புரிந்துள்ளன. 2001–2006 ஆண்டுகளில் எப்போதுமிராத அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு குறிப்பிட்ட சுற்றுலா சுற்றுப் பாதைகள் வகுக்கவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே விடுமுறையைக் கழிக்க மிகச் சிறந்த இடமாக உருவாக்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. செட்டிநாடு பாரம்பரியச் சுற்றுலாவை மேம்படுத்தியமைக்காக, பசிபிக் பகுதி சுற்றுப் பயண எழுத்தாளர்கள் சங்கத்திடமிருந்து, தமிழ்நாடு மதிப்பு மிக்க சர்வதேச விருதைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவதில் மகிழ்ச்சி அடைவார்கள்.

44. ஏழை மக்களுக்குச் சுகாதார வசதிகளைத் தரமானதாகவும், இயலும் வகையிலும் அளித்து, தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவத் தலைநகராக மாற்றியதில் இந்த அரசின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவையாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில், 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs) அனைத்து வசதிகளுடன்கூடிய 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசு தொலைதூரப் பகுதிகளிலும் நோய்க் குறி அறியும் பணிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 21 கோடி செலவில், ஏழு வட்டார நோய்க் குறி அறியும் மையங்களை ஏற்படுத்தியுள்ளது. தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய இடங்களில் 300 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 3 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டு வருகிறது. துணை மருத்துவப் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும்,

அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், புதிதாக 11 செவிலியர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. குழந்தைகளிடையே காணப்படும் "உதட்டுப் பிளவு" மற்றும் "மேலண்ணப் பிளவு" ஆகிய உடலுறுப்புப் பிரச்சினைகளைச் சரி செய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த தனிச் சிறப்புத் திட்டம், இந்த அரசின் அக்கறை கொண்ட நிருவாகத்திற்கு மற்றோர் ஒளிரும் எடுத்துக்காட்டாகும். இவ்வுதவி தேவைப்படும் அனைத்துக் குழந்தைகளும் கண்டறியப்பட்டு, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 597 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டமான தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம், மாநிலம் முழுவதிலும் உள்ள இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது. இத்திட்டத்தின்கீழ் 62 அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசர கால மகப்பேறு மருத்துவச் சிகிச்சை மற்றும் பிறந்த குழந்தைகளைப் பேணும் பணிகளை வழங்கத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

45. இந்த அரசு, தான் செயல்படுத்திய முழுமையான சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் குடும்ப நலத் துறையில் பெரும் சாதனைகள் படைக்கப்பட்டிருப்பது குறித்துப் பெருமிதம் கொள்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில், முக்கிய சுகாதாரக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் 87.9 சதவீதமாக இருந்த மருத்துவமனை மகப்பேறுகள், 2005 ஆம் ஆண்டில் 94.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டில், உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளில் சிசு மரணம் 49 ஆக இருந்தது. இது 2003 ஆம் ஆண்டில் 43 ஆகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் மகப்பேற்றின்போது இறந்த தாய்மார்களின் எண்ணிக்கை, 2001–2004 ஆம் ஆண்டுகளில், 25 சதவீதம் குறைந்துள்ளது.

46. மக்கள் தரமான கல்வியைப் பெறுவதும், திறமைகளை பெருக்கிக் கொள்வதும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதோடு, அவர்கள் வாழ விரும்பும் வாழ்க்கைக்குத் தேவையான தகுதிகளைப் பெறச் செய்யும் வல்லமையும் படைத்தவை என்று மாண்புமிகு முதலமைச்சர் எப்போதுமே கருதி வந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதிலும், தற்போதுள்ள கல்வி நிறுவனங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதிலும், அரசு ஈடு இணையற்ற



கவனம் செலுத்தி வருகிறது. புதிதாக 1,274 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. காலியாக இருந்த 58,282 ஆசிரியர் பணியிடங்களை அரசு நிரப்பியுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்க அரசு எடுத்துள்ள முடிவு பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டத்தை நீட்டித்த மாண்புமிகு முதலமைச்சரின் முடிவு, தமிழ்நாட்டில் தரமான கல்வியை அனைவரும் பெற வழிவகுக்கும் ஒரு திருப்புமுனை நடவடிக்கையாகும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர், துரதிருஷ்டவசமாக, விபத்துகள் காரணமாக உயிரிழக்க அல்லது நிரந்தரச் செயலிழப்புக்குள்ளாக நேரிடின், அத்தகைய மாணவர்களுக்கு ரூபாய் 50,000 உதவித் தொகை வழங்கும் இவ்வரசின் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

47. தொழிற்கல்வி இளநிலைப் பட்டப் படிப்புச் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு, மாணவர்களுக்கு, குறிப்பாக ஊரக மாணவர்களுக்குப் பெரும் சுமையாகவும், மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்று கருதி, இத்தேர்வு முறையை இவ்வரசு 2005 ஜூன் திங்களில் ரத்துச் செய்தது. பொது நுழைவுத் தேர்வை ரத்துச் செய்யும் அரசின் இம்முடிவு பரவலாக வரவேற்கப்பட்டபோதிலும், இந்திய மருத்துவக் கழகம் மற்றும் அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சில விதிமுறைகள் காரணமாக இதனைச் செயல்படுத்த இயலவில்லை. ஆகவே, இவ்விதிமுறைகளைத் திருத்தியமைக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. தற்போது நிலவும் நிச்சயமற்ற நிலையைப் போக்கி, மாநிலப் பாடத் திட்ட மேல்நிலைத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், மாணவர் சேர்க்கை குறித்த தெளிவானதொரு திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று பெற்றோர்களும், மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாணவர்களின் தர நிலையை நிர்ணயிப்பதற்கு மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலை வகுப்புத் தேர்வு மதிப்பெண்களே பொதுவான அடிப்படையாக இருக்க

வேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களே மாணவர் சேர்க்கைக்குப் பொதுவான அடிப்படையாகக் கருதப்பட்டு, ஏனைய பாடத் திட்டங்களின்கீழ்ப் பயிலும் மாணவர்களை மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத் தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டு வரும் வகையில், அவர்களுக்கென ஒரு பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும். இதன் வாயிலாக, மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தேர்வு எழுதும் பெரும்பாலான மாணவர்களின் சுமையையும், மன உளைச்சலையும் குறைப்பது, ஏனைய அனைத்துப் பாடத் திட்டத் தேர்வு மதிப்பெண்களையும் மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத் தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டு வரும் சரியான முறை ஒன்றை வகுப்பது ஆகிய இரு நோக்கங்களும் நிறைவேறும். இம்மாற்றங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்குத் தேவையான சட்டம் இயற்றப்படும்.

48. உலக அளவில் தரமான தொழில்நுட்ப மனித ஆற்றலைப் பெருமளவில் வழங்கும் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகியுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள 237 பொறியியல் கல்லூரிகளும், 230 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் தரமான தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்குரிய புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளன. பொறியியல் மற்றும் பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ரூபாய் 96 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

49. போட்டி விளையாட்டுக்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இவ்வரசு அளிக்கும் ஊக்கமானது, தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே ஆரோக்கியமான மனம் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஒரு காரணியாக இருந்து வந்துள்ளது. "சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டம்" பள்ளிகளில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விருது பெறும் வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இவ்வரசு அளிக்கும் ரொக்க ஊக்கத் தொகைத் திட்டம் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளது.



50. இந்த அரசு கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களை வகுக்கும்போது, மகளிருக்கு ஆற்றல் அளிப்பதற்கு (empowerment) எப்போதுமே முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்திற்கு வித்திட்ட மாண்புமிகு முதல்வர், இன்று அவ்வியக்கம் ஒரு கண்கவர் சமூகப் புரட்சி மலராகப் பூத்துக் குலுங்கக் காண்கிறார். முறையே ரூபாய் 889 கோடி மற்றும் ரூபாய் 1,563 கோடிக்கும் அதிகமான சேமிப்பு மற்றும் கடன் வசதியுடன், 3 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில், ஏறக்குறைய 50 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, இன்று தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் உண்மையில் ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக வளர்ந்துள்ளது. "தொட்டில் குழந்தை திட்டம்" மற்றும் "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஆகிய தனிச் சிறப்பு வாய்ந்த திட்டங்கள், பெண் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதுகாப்பதிலும், சமூக அந்தஸ்தை உயர்த்துவதிலும் முக்கியப் பங்காற்றியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், முதியோர் ஆகியோருக்கு முழுமையான அளவில் தரமான துணை சத்துணவு அளிக்கப்படுவதை உறுதி செய்த இந்த அரசு பாராட்டிற்குரியது. நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டப் பேரவையிலும் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

51. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் கல்வி உரிமைகளை அளித்து, அவர்களைப் பேணிக் காப்பதே இந்த அரசின் இடையறா முயற்சியாக இருந்து வந்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காகச் செயல்படுத்தப்படும் புதுமையான நிலம் வாங்கி அளிக்கும் திட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை அளித்து, சமூகப் புரட்சியை ஏற்படுத்தும். வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்று 2001 ஆம் ஆண்டில் இவ்வரசு உறுதி அளித்தது. ரூபாய் 155 கோடி செலவில் 493 மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு இவ்வுறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூபாய் 4 கோடி செலவில் மேலும் 108 புதிய மாணவரில்லங்களையும் இந்த அரசு தொடங்கும். அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் அணுகுச் சாலை,

[2006 ஜனவரி 17

குடிநீர் வசதி, இடுகாட்டுப் பாதை, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை அமைப்பதற்கான பெருந்திட்டம் வகுக்கப்பட்டு, படிப்படியாகச் செயல்படுத்தப்படும். ரூபாய் 71 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

52. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரைப் பாதுகாப்பதிலும், அவர்களுடைய நலனைப் பேணுவதிலும், இவ்வரசு எப்போதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. இவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 761 மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். இவ்வரசு உறுதியளித்தவாறே ரூபாய் 235 கோடி செலவில் 761 புதிய மாணவரில்லங்களைக் கட்ட அனுமதி அளித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

53. நெசவாளர்களின் நலனுக்கு இவ்வரசு எப்போதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது, 1.64 கோடி சேலைகளையும், 1.64 கோடி வேட்டிகளையும், 3.28 கோடி பயனாளிகளுக்கு, ரூபாய் 256 கோடி செலவில் இவ்வரசு வழங்கும். ஏழை, எளிய மக்களுக்கு உடைப் பாதுகாப்பு அளிப்பதுடன், இத்திட்டம் இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிக்கும். 2 இலட்சம் நெசவாளர்கள் பயனடையும் வகையில் புதிய சுகாதார ஈட்டுறுதித் திட்டத்தைச் செயற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இதன்கீழ் ஒவ்வொரு நெசவாளரும் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய ஆண்டுக் காப்பீட்டுத் தொகையான ரூபாய் 200—ஐச் செலுத்தும் பொறுப்பையும் அரசே ஏற்று, இதற்காக ரூபாய் 4 கோடியை ஒதுக்கியுள்ளது.

54. தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பேணுவதிலும், மாநிலத்தின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் இவ்வரசு எப்போதுமே கவனம் செலுத்தி வந்துள்ளது. அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு இலவசமாக



2006 ஜனவரி 17]

அறிவியல் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தையில் உதித்த "அன்னதானத் திட்டம்" பெரும் வெற்றி பெற்று, ஏழை மக்கள் உணவுப் பாதுகாப்பு பெறும் தலைசிறந்த திட்டமாகப் பாராட்டப் பெற்றுள்ளது. போதுமான வருமானமுள்ள கோயில்களின் நிரந்தரப் பணியாளர்கள், பணியாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம்மூலம் மாதமொன்றுக்கு ரூபாய் 750—க்குக் குறையாமல் ஓய்வூதியம் பெறும் வகையில் இவ்வரசு புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. குறைந்த வருமானமுள்ள கோயில்களைப் பொறுத்தவரையில், உபரி நிதி உள்ள கோயில்களிலிருந்து நிதியைத் திரட்டி, அந்நிதியிலிருந்து மூல நிதியம் ஒன்றை ஏற்படுத்தி, அடுத்த பத்தாண்டுகளில் ஓய்வு பெறவுள்ள பணியாளர்கள் உட்பட, அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் ஒரு தனி ஓய்வூதியத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களும் மாதமொன்றுக்கு ரூபாய் 750 ஓய்வூதியமாகப் பெறுவர். மாநிலத்தின் பல்வேறு கோயில்களில் பணிபுரியும் சுமார் 10,000 பணியாளர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைவர்.

55. தமிழக மக்களின் பயனுக்கான வளர்ச்சி இலக்குகளை எய்துவதில் அர்ப்பணிப்பு உணர்வு மிக்க அரசுப் பணியாளர்களின் பங்களிப்பை இவ்வரசு மிகவும் மதிக்கிறது. மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி உயர்வுத் தவணைகளை, இவ்வரசு சந்திக்க வேண்டியிருந்த நிதி நெருக்கடியின் காரணமாக உடனுக்குடன் வழங்க இயலாமற் போயிற்று. பின்னர் இவ்வரசு அயராத பெரும் முயற்சிகளை மேற்கொண்டு நிதி நிலையைச் சரிசெய்து, அகவிலைப்படி உயர்வுகள் படிப்படியாகக் குறைந்த கால இடைவெளியுடன் அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. தற்போது, மாநில அரசுப் பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியை 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளத்தின் 67 சதவீதத்திலிருந்து 71 சதவீதமாக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 282 கோடி கூடுதல் செலவு ஆகும். அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை புரிந்திடுவதற்கு ஏற்ற வகையில், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய அதே வேளையில், சரியான நிதிநிலை நிர்வாகத்தின் பயன்கள், ஏழை, எளிய மக்களைச் சென்றடைய வேண்டியதன் அவசியத்தையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நேர்த்தியான சமன்பாட்டைத்தான் இவ்வரசு வெற்றிகரமாக எய்தியுள்ளது.

*56.* தமிழ்நாட்டில் ஊழலற்ற, மக்கள் பங்கேற்கும், ஒளிவு மறைவில்லாத, பொறுப்புணர்வு மிக்க நிருவாகத்தை அளிக்க, இவ்வரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். அரசு மாநிலத் தகவல் ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது குறித்த அறிவிக்கையை வெளியிட்டிருப்பதோடு, *2005* ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தேவையான விதிகளையும் இயற்றியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

*57.* இவ்வரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும், ஈடு இணையற்ற சாதனைகளுடன் முன்னேறி, தலைநிமிர்ந்து பீடுநடை போடுகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் எழுச்சியூட்டும் தலைமைப் பண்பும், மனித நேயம் மிக்க நிருவாகமும் முழுப் பாராட்டுதலுக்கு உரியவையாகும். எதிர்காலத்திலும் தமிழ்நாடு தொடர்ந்து அனைத்துத் துறைகளிலும் முதன்மை நிலையை எய்தும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

ஜெய் ஹிந்த்

•••••

D
V 211,31/06
106.87.2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227001.
சென்னை-600 008
நூலகம்